முதலீட்டினால்
மாறுபடும்

# வாழ்க்கை

வருடாந்த அறிக்கை 2019



ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank




நிதிச் சவால்களுக்கு முகம் கொடுத்து வருபவர்களை முன்னேற்றுவது மட்டுமன்றி, தமது சொந்த வெற்றியை அடைந்து கொள்வதற்காக, அனைத்து வகையான உள்ளூர் முயற்சியாளர்களுக்கும், பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய நாம், நிதி உதவிகளையும், ஆலோசனைசார் சேவைகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றோம். நாம் சேவையாற்றும் சமூகங்களில் நிதித் தூண் ஒன்றாக இருக்கும் பிரதேச அபிவிருத்தி வங்கி, நாட்டில் 34 வருடங்களுக்கும் மேற்பட்ட சேவையை வழங்கி, நம்பிக்கை, முதிர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில், எந்தவிதமான பாரபட்சமும் இன்றி, தனிப்பட்ட நபர்களுக்குத் தீர்வுகளை வழங்குவதன் மூலம், தனிப்பட்ட மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கிறது.

எமது நாட்டின் பொருளாதார உயிர் பாதையில் கூட்டாக உள்ளடங்குகின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை உரிமையாளர்களுக்கும், மகளிர் முயற்சியாளர்களுக்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேலோங்கச் செய்ய பிரதேச அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் சேவையாற்றி வருகிறது. வாழ்க்கையை மாற்றுவதற்கான வழிமுறைகளில் முதலீடு செய்வதன் மூலம், எமது பங்களிப்புகள், எமது வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் நிதி வளர்ச்சி மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றில் நேரடியாகத் தாக்கம் செலுத்துவதோடு, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு தொலைநோக்கு தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதில் நாம் பெருமையடைகிறோம்.

# உள்ளடக்கம்

## எம்மைப் பற்றி


3 நோக்கு, பணி நோக்கு, RDB பற்றி
4 எமது பயணம் / மைல்கற்கள்
6 நிதிச் சிறப்பம்சங்கள்
8 தலைவரின் செய்தி
10 பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு


## பணியாட்கள்


14 பணிப்பாளர்கள் சபை
18 கூட்டுறவு முகாமைத்துவ அணி
20 பிராந்திய பொது முகாமையாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்
22 உதவி பொதுமுகாமையாளர்கள் / துறைத் தலைவர்கள்


## முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு


26 நிதி மீளாய்வு
29 வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு
32 சந்தைப்படுத்தல் மீளாய்வு
37 சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு
39 பணியாட்கள் மீளாய்வு
42 விசேட நிகழ்வுகள்
49 இடர் முகாமைத்துவம்


## கூட்டுறவு ஆளுகை


66 கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
67 கூட்டுறவு ஆளுகை
88 சபை மற்றும் சபைக் குழுக்களுக்கான சமூகம்
89 பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை
95 சபை கணக்காய்வுக் குழுவின் (BAC) அறிக்கை
97 சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC) சபைத் தெரிவுக்குழு (BNC) அறிக்கை
99 சபை தகவல் தொழில்நுட்ப செயற்குழு (BITSC) அறிக்கை
100 ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை
102 பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புக் கூற்று
103 நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளரின் பொறுப்பு
104 உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
106 உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் கூற்று


## நிதி அறிக்கைகள்


108 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
113 வருமானக் கூற்று
114 விரிவான வருமானக் கூற்று
115 நிதி நிலைமைக் கூற்று
116 நிதிப் பாய்ச்சல் கூற்று
117 ஒப்புரவு மாற்றம் பற்றிய கூற்று
118 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்


## துணைநிலைத் தகவல்கள்


196 மூன்று வருட சாராம்சம்
198 முதலீட்டாளர் தகவல்
200 கிளைகளின் புவியியல்சார் பங்கீடு
203 குறிப்புகள்
உள் பின் அட்டை - கூட்டுறவுத் தகவல்

# நோக்கு, பணி நோக்கு மற்றும் RDB பற்றி

## நோக்கு

எமது நாட்டின் சமூக, பொருளாதார செழுமைக்கு
உந்துதலாக அமையும் தொழில் முனைவோரை மேம்படுத்துதல்.

## பணி நோக்கு

பிராந்தியங்களின் சமூக, பொருளாதாரச் செழிப்பை வினைத்திறனாக உயர்த்தும் நோக்குடன், திறன்வாய்ந்த, அர்ப்பணிப்புடன் செயலாற்றும், தொழில் வல்லுநர்களைக் கொண்ட அணி ஊடாக பொருளாதார மற்றும் ஆலோசனைசார் சேவைகளை நாம் வழங்குகிறோம்.

## **RDB** பற்றி

1985 ஆம் ஆண்டு, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்ற வகையின் கீழ் மாவட்ட மட்டத்தில் வங்கிகள் உருவாகத் தொடங்கிய காலகட்டத்திலேயே "பிரதேச அபிவிருத்தி வங்கி" (RDB) யின் செயற்பாடு ஆரம்பித்தது.

1997 இல் அத்தகைய 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு, 06 மாகாண மட்ட வங்கிகளாக உருவாக்கப்பட்டன. அவையாவன - ரஜரட்டை, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி என்பனவாகும்.

இந்த 06 மாகாண மட்ட வங்கிகளும், 2010 மே மாதத்தில் ஒரு தேசிய மட்ட அபிவிருத்தி வங்கியாக மேலும் இணைக்கப்பட்டதுடன், பிரதேச அபிவிருத்தி (பிரதேச அபிவிருத்தி வங்கி அல்லது RDB) வங்கி எனப் பெயரிடப்பட்டது. கிராமியப் பொருளாதாரத்தை மேம்படச் செய்ய பங்களிப்பு வழங்கும் வகையில் அணுகக்கூடிய மற்றும் தம்மால் தாங்கக்கூடிய நிதிச் சேவைகளை கிராமிய மக்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நீண்டகாலக் குறிக்கோள்களுடன் RDB 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் முழுமையாக அரசு உரிமை கொள்ளப்பட்ட தேசிய மட்ட வங்கியாக ஸ்தாபிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் "வெற்றுக் காலுடன் கூடிய வங்கிக் கோட்பாடு" (Barefoot banking concept) என்பதன் அடிப்படையில் செயற்படத் தொடங்கிய வங்கி, புதுமையான, இலகுவான மற்றும் வினைத்திறனான நிதிக் கருவிகளை (பிரதானமாக, சேமிப்பு அணி திரட்டல் மற்றும் கடன்) நடுத்தர மற்றும் கீழ்மட்ட வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கி வருகிறது. வங்கி, அதன் வாடிக்கையாளர்களை நுண், சிறிய மற்றும் நடுத்தர மட்ட கைத்தொழில் துறைகள், மகளிர் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயம், கால்நடை, மீன்பிடி, மற்றும் ஏனைய சிறு கைத்தொழில் துறை என்பவற்றில் ஊக்குவிப்பதில் அக்கறை செலுத்துவதுடன், இவை அனைத்தும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும். வங்கி, சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகளுக்கு அதி உயர் தொகைகளை வழங்குவதன் மூலம், கிராமிய மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்துள்ளது.


இன்று, 276 கிளைகளையும், 2,735 க்கும் மேற்பட்ட தொழில் வல்லுமை சார்ந்த நிரந்தர பணியாளர்களையும் கொண்டு ஆறு மில்லியன் நம்பிக்கையான கணக்கு வைப்பாளர்களுக்கு சேவை வழங்கி வரும் RDB, எமது நாட்டின் சமூக, பொருளாதார செழுமைக்கு உந்துதலாக அமையும் தொழில் முனைவோரை வளர்த்தல் என்ற தனது நோக்கை அழுல்படுத்தக்கூடிய வகையில் அனைத்தையும் கொண்டுள்ளது.

# எமது பயணம்/மைல்கற்கள்

## ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளையும் ஒரு தேசிய மட்ட பிரதேச அபிவிருத்தி வங்கியாக ஒன்றிணைத்த பின்னர் அடைந்த வெற்றி

“RDB சுமார் இ.ரூ. 200 பில்லியனை அடைந்தது. RDB 2010 இல் ஒன்றிணைத்த பின் + 09 வருடங்களுக்குள் மொத்த சொத்துக்கள்

| | |
|---|---|
| செயற்பாட்டு இலாப வளர்ச்சி இ.ரூ 371 மில். - இ.ரூ 2,960 மில். | 698% |
| மொத்தப் பங்குகளின் வளர்ச்சி இ.ரூ 3 பில். - இ.ரூ 15 பில். | 400% |
| மொத்த சொத்துக்களின் வளர்ச்சி இ.ரூ 41 பில். - இ.ரூ 200 பில். | 388% |
| மொத்த வைப்பு வளர்ச்சி இ.ரு 32 பில். - இ.ரூ 150 பில். | 369% |
| மொத்த கடன்கள் மற்றும் முற்பண வளர்ச்சி இ.ரூ 30 பில். இ.ரூ. 145 பில். | 383% |



1985 - 2009 வரையான 24 வருட காலப் பகுதியில், மாகாண அபிவிருத்தி வங்கிகள் (ரஜரட்டை, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கிகள்) அடைந்த பெறுபேறுகள், 2010 ஆம் ஆண்டில் அனைத்து மாகாண வங்கிகளும் ஒன்றிணைக்கப்பட்டு, பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் 9 + வருடங்களுக்குள் (2010 - 2019) துரிதமாக அதிகரித்தது.

## 2019 மே முதல் 2019 டிசம்பர் வரை

**RDB யின் மொத்த வைப்புகள் இ.ரூ 117 பில்., இ.ரூ 32,350 மில்லியனில் இருந்து இ.ரூ 149,600 மில்லியனாக அதிகரித்தது.**

**RDB யின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் இ.ரூ 114 பில்., இ.ரூ 30,311 மில். - இ.ரூ 144,694 மில். அதிகரித்தது.**

**RDB யின் மொத்த சொத்துக்கள் இ.ரூ 159 பில்., இ.ரூ 41,018 மில். - இ.ரூ 199,979 மில். அதிகரித்தது.**

## RDB யின் வரலாறு

RDB யின் வரலாறு, 1985 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ், "பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்" என்ற வகையின் கீழ் மாவட்ட மட்டத்திலான வங்கிகள் உருவாக்கப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கிறது. இதனையடுத்து, 1997 இல், 1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், 06 மாகாண வங்கிகளாக ஒன்றிணைக்கப்பட்டன. (அவையாவன, ரஜரட்டை, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி) 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட 06 வங்கிகளும் 2010 மே 01 இல் பிரதேச அபிவிருத்தி வங்கி (பிரதேச அபிவிருத்தி வங்கி) என தேசிய நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது. தேசிய மட்ட அரசாங்க உரிமை கொள்ளப்பட்ட அபிவிருத்தி வங்கியாக உள்ள RDB யின் இலக்குகளாவன, விவசாயம், கைத்தொழில் துறை, வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி மற்றும் மகளிர் மேம்பாடு என்பவற்றை ஊக்குவிப்பதற்கு, நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களுக்கு நிதியுதவி அளிப்பதாகும்.

## நிதிச் சிறப்பம்சங்கள்

- வங்கித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நிதி நிறுவனம் என்ற அடிப்படையில், RDB நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றுவதில் முக்கியமான பங்கை வகிக்கிறது. ஒரு நிதி வழங்குநர் என்ற அடிப்படையில், நாட்டில் அனைத்து பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களிலும் எமது வங்கி முன்னணி வகிக்கிறது. வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக, நாடு பூராகவும் பரந்துள்ள 06 மில்லியனுக்கும் மேற்பட்ட எமது வாடிக்கையாளர் தளம், எமது முக்கியமான சொத்தாகும். நாட்டையும், நாட்டு மக்களையும் அபிவிருத்தி செய்வதிலும் வங்கி பிரதான கவனம் செலுத்தி வருகிறது. எனவே, நாட்டு மக்களை முன்னேற்றுவதற்கு வங்கி கடமைப்பட்டிருப்பதன் மூலம் நாடு பூராகவும் பரந்துள்ள 276 கிளைகளின் வலையமைப்பு ஊடாக நாட்டை விருத்தி செய்கிறது.
- கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வங்கியின் மொத்த வருமானம் 6% ஆல் அதிகரித்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் செயற்படு இலாபம் இ.ரூ 2,960 மில்லியனாகக் குறைவடைந்தது. இது, 2018 இல் பதிவு செய்யப்பட்ட இ.ரூ 3,606 மில்லியன் செயற்படு மூலதனத்தைவிட 18% குறைவாகும். வரிக்கு முன்னரான சொத்துகள் மீதான திரும்பல் (ROA) 1.6% ஆக பதிவு செய்யப்பட்டது. 2018 இல் ROA 2.1% ஆகும்.

## எமது வாடிக்கையாளர்களுக்கான துணைநிலைச் சேவைகள்

- NDB யுடன் வெஸ்டர்ன் யூனியன் - வெஸ்டர்ன் யூனியன் ஊடாக எந்த ஒரு வெளிநாட்டில் இருந்தும் எமது நாட்டிற்கு முழுமையான பாதுகாப்புடன், இலகுவாகவும், துரிதமாகவும் பணத்தை அனுப்ப முடியும். இவ்வாறு அனுப்பப்படும் பணத்தை, வாடிக்கையாளர்கள் கிராமிய மற்றும் நகரங்களுக்கு இடையிலான பிரதேசங்களில் பரந்துள்ள எமது RDB கிளைகள் ஊடாக பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.


- DFCC உடன் லங்கா மணி டிரான்ஸ்பர் (LMT) - லங்கா மணி டிரான்ஸ்பர், செயலற்ற நேரம் இன்றி, வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகவும், உடனடியாகவும் பணத்தை வைப்புச் செய்கிறது. லங்கா மணி டிரான்ஸ்பர் 275 க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள ஒரு பரந்த சர்வதேச வலையமைப்பாகும். இது நாடு பூராகவும் 276 RDB கிளைகளில் மேற்கொள்ளப்படுகிறது.
- ஸ்ரீலங்கா டெலிகொம், இலங்கை மின்சார சபை (CEB) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) என்பனவற்றுடனான பயன்பாட்டுப் பட்டியல் கட்டணங்களைச் செலுத்தும் சேவை.
- RDB ATM மற்றும் LankaPay ATM வசதி - எமது வாடிக்கையாளர்கள் தற்போது நாடு பூராகவுமுள்ள 4,000 க்கும் மேற்பட்ட ATM களில் இருந்து அவர்களது பணத்தை மீளப் பெற முடியும். எமது வாடிக்கையாளர்களுக்கு சுமார் 200,000 ATM அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- பொது இலத்திரனியல் நிதி மாற்ற முறைமை (CEFTS) - வங்கிகளுக்கிடையிலான பணப் பரிமாற்ற வசதிகள் எமது வாடிக்கையாளர்களுக்கும் உள்ளது.
- பண வைப்பு இயந்திரங்கள் (CDM) - தெரிவு செய்யப்பட்ட சில கிளைகளில் மாத்திரம் உள்ளது.

# நிதிச் சிறப்பம்சங்கள்


| | 2019<br>இ.ரூ '000 | 2018<br>இ.ரூ '000 | மாற்றம்<br>% |
|---|---|---|---|
| **இவ்வருடத்திற்கான செயற்பாட்டுப் பெறுபேறுகள்** | | | |
| மொத்த வருமானம் | **27,507,821** | 26,070,611 | 6 |
| VAT வரிக்கு முன்னரான செயற்படு இலாபம் | **2,960,258** | 3,606,330 | -18 |
| வரி விதிப்பு | **2,461,663** | 2,532,744 | -3 |
| வரிக்குப் பிந்திய இலாபம் | **498,595** | 1,073,586 | -54 |
| பங்குதாரர்களுக்கு வழங்க வேண்டிய இலாபம் | **418,126** | 993,559 | -58 |
| **சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | |
| வாடிக்கையாளர் வைப்புகள் | **149,599,829** | 141,559,974 | 6 |
| கடன்கள் மற்றும் வரவுகள் | **144,693,551** | 137,769,683 | 5 |
| மொத்த சொத்துக்கள் | **199,978,929** | 176,937,319 | 13 |
| மொத்தப் பொறுப்புகள் | **185,013,608** | 162,227,205 | 14 |
| பங்குதாரர்களின் நிதியம் | **14,965,322** | 14,710,115 | 2 |
| **இலாபத்தன்மை** | | | |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (செயற்படு இலாபங்கள்) | **1.6%** | 2.1% | |
| ஒப்புரவு மீதான திரும்பல் | **3.4%** | 10.7% | |
| செயற்திறனற்ற கடன் விகிதம் | **9.6%** | 5.4% | |

## ஒழுங்குபடுத்தல் விகிதங்கள்


| மூலதன போதுமான விகிதங்கள் (பாசல் III இன்படி) | 2019<br>% | குறைந்தபட்ச தேவைப்பாடு<br>% | 2018<br>% | குறைந்தபட்ச தேவைப்பாடு<br>% |
|---|---|---|---|---|
| பொது ஒப்புரவு அடுக்கு 1 மூலதன விகிதம் | **10.90** | **7.00** | 11.58 | 7.00 |
| மொத்த அடுக்கு 1 மூலதன விகிதம் | **10.90** | **8.50** | 11.58 | 8.50 |
| மொத்த மூலதன விகிதம் | **16.27** | **12.50** | 13.61 | 12.50 |
| நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் | **32.38** | **20.00** | 24.27 | 20.00 |




வரிக்கு முந்திய செயற்படு இலாபம் (இ.ரூ மில்.)





வரிக்கு முந்திய செயற்படு இலாபம் (இ.ரூ மில்.)





வரிக்குப் பிந்திய இலாபம் (இ.ரூ மில்.)




வாடிக்கையாளர் வைப்புகள் (இ.ரூ மில்.)




கடன்களும் வரவுகளும் (இ.ரூ மில்.)




பங்குதாரர்களின் ஒப்புரவு (இ.ரூ மில்.)

# தலைவரின் செய்தி



அரசாங்கத்தின் நோக்கு மற்றும் பணி நோக்கான "சுபீட்சத்தின் நோக்கு" என்பதுடன். இணைந்து செல்லக்கூடிய வகையில், எமது வங்கி, இலங்கையின் உள்நாட்டு மொத்த உற்பத்தியை அதிகரிக்கும் இலக்குடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களையும், கிராமிய விவசாயத் திட்டங்களையும் ஊக்குவிக்கவும் வளர்க்கவும் பங்களிப்புச் செய்யும்.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவராக 2020 ஜனவரி 01 ஆந் திகதியில் இருந்து செயலாற்றுகின்ற சிறப்புரிமையைப் பெற்ற நான், வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நாம் பெற்ற வெற்றிகளை அங்கீகரிப்பதற்கும், 2020 ஆம் ஆண்டின் மேம்படுத்த வேண்டிய எமது கவனத்தைப் புதுப்பிக்கவும், கடந்த வருட செயற்திறனைத் திரும்பிப் பார்ப்பதற்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும் என நான் கருதுகிறேன்.

நிதி வசதிகள் ஊடாக குறைந்த வருமானம் பெறும் துறைகளை மேம்படுத்துவதும், நுண், சிறிய மற்றும் நடுத்தர மட்ட கைத்தொழில் துறைகளை (MSMEs) மற்றும் கிராமிய விவசாயத்துறை என்பவற்றுக்கு ஏனைய பொருத்தமான உதவிகளை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருப்பது எப்போதும் RDB யின் பிரதான குறிக்கோளாகும்.

கடந்த வருடத்தைத் திரும்பிப் பார்க்கும் போது, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி (LDB) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) என்பனவற்றிலிருந்து கடன் வசதி பெற்றதும் முக்கியமான சிறப்பம்சங்களாகும். 2019 ஏப்ரல் மாத காலப்பகுதியில் முடிவடைந்த LDB யின் கையகப்படுத்தல் இலங்கை மத்திய வங்கியினால் பாசல் III இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட அடைவு மட்டத்தைவிடக் கூடிய வகையில் எமது அடுக்கு 1 மூலதன போதுமான தன்மையை வலுப்படுத்தக்கூடியதாக இருந்தது.

கடந்த வருடம் எமது நாட்டின் அண்மைக்கால வரலாறு ஒரு இருண்ட வருடமாகும். ஏனெனில், மோசமான உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த சாதகமற்ற அரசியல் சூழ்நிலை என்பன நாட்டை இடர்பாட்டிற்கு இட்டுச் சென்றதுடன், அனைத்து வங்கி நடவடிக்கைகளையும் முக்கியமாகப் பாதித்தது. இத்தகைய துரதிஷ்டவசமான நிகழ்வுகள் காரணமாக, விசேடமாக உல்லாசப் பிரயாணக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் ஏனைய அதனுடன் இணைந்த துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களை விருத்தி செய்யும் எமது ஆணை எதிர்பார்த்த ஒரு மட்டத்தை அடையவில்லை.

இதற்கான காரணங்கள் மற்றும் வங்கியை நிலையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்லக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகள் என்பவற்றை ஸ்தாபிப்பதற்கு தற்போது ஆழமான பகுப்பாய்வு ஒன்று நடைபெறுவதுடன், திட்டம் ஒன்றும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, பணியாட்கள் பயிற்சி நெறி, ஊக்குவிப்பு நிகழ்சித் திட்டங்கள், உயரிய வெளிப்படைத்தன்மை என்பவற்றுக்கு முதலிடம் வழங்கப்படும்.

அரசாங்கத்தின் நோக்கு மற்றும் பணி நோக்கான "சுபீட்சத்தின் நோக்கு" என்பதுடன். இணைந்து செல்லக்கூடிய வகையில், எமது வங்கி, இலங்கையின் உள்நாட்டு மொத்த உற்பத்தியை அதிகரிக்கும் இலக்குடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களையும், கிராமிய விவசாயத் திட்டங்களையும் ஊக்குவிக்கவும் வளர்க்கவும் பங்களிப்புச் செய்யும்.

புதிய அரசாங்கத்தின் கீழ் உருவாகியுள்ள புதிய சகாப்தம், எமது வங்கியின் முக்கியமான குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு எமது வங்கி வணிகத்துறையை மீள் வரையறை செய்யவும், மீள் இயக்கவும் ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. 2020 ஆம் ஆண்டில் ஆரம்பமாகும் எமது புதிய பயணத்தில், ஒரு புதிய வியாபார மாதிரியுடன் நாட்டின் SME துறைக்கு வங்கியை மீள் நிலைப்படுத்தி, சேவை வழங்குவது எமது திட்டமாகும். இவ்வாறு மேற்கொள்ளப்படும் மறுவடிவமைக்கப்பட்ட வியாபார மூலோபயம், தற்போது நிலவுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மற்றும் ஏனைய சவால்களுடன் தாக்குப்பிடிக்கப் போதுமானதாக அமையும்.

அனைத்துப் பங்குதாரர்களின் உதவியுடன் இந்தப் புதிய கூட்டுறவு வணிகத் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம், வங்கி சவால்களை எதிர்நோக்க முடியுமென நான் நம்புகிறேன். ஸ்திரமான அரசியல் சூழல் நிலவுகின்ற இக்காலகட்டத்தில் எமது வங்கியை, வங்கிச் சேவைகளில் உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்வது எனது இலக்காகும். முடிவாக, எமது பணிப்பாளர் சபை சார்பாக எமது வங்கியில் தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்து, எம்மோடு கைகோர்த்துள்ள மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுக்கும், ஏனைய பங்குதாரர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கொந்தழிப்பான பொருளாதார சூழ்நிலைகளில் வங்கியைப் பாதுகாப்பதற்கு பாரிய பங்களிப்புச் செய்த முகாமைத்துவப் பணியாட்களுக்கும் RDB யின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புதிய நிதி வருடத்திலும், ஒரு புதிய சகாப்தத்திலும் காலடி எடுத்து வைத்துள்ள இவ்வேளையில், வங்கி, அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராகவும், எதிர்வரும் வருடங்களில் முன்னோக்கிச் செல்லவும் தயாராக உள்ளது என்பதில் நான் நம்பிக்கை அடைகிறேன்.



மஹிந்த சாலிய
தலைவர்

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



சவால் மிக்க செயற்பாட்டுச் சூழல் ஒன்று இருந்த போதிலும், வங்கி, சொத்து தளத்தில் இ.ரூ 176.94 பில். இருந்து 13% வருட வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2018 இல் இது இ.ரூ 199.98 பில்லியனாகும். 2019 ஆம் ஆண்டு ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட, அதிகமான மூலதன போதுமான விகிதங்களைக் காட்டி ஒரு வலுவான ஐந்தொகையைப் பிரதிபலித்தது. 2019 ஆம் ஆண்டு இ.ரூ 144.69 பில். கடன் போட்போலியோ வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. இதன் வளர்ச்சி வீதம் 5.03% ஆகும். இத்துடன், வைப்பு போட்போலியோ இ.ரூ 149.6 பில்லியனாக அதிகரித்தது. இது 5.68% வளர்ச்சியாகும்.

34 வருடகால வரலாற்றைக் கொண்ட பிரதேச அபிவிருத்தி வங்கி, அதாவது பொதுவாக RDB என அறியப்பட்ட வங்கி, அதன் பிரதேச மட்டத் தோற்றத்திலிருந்து தேசிய மட்ட வங்கி என்ற அடிப்படையில் 9 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. வங்கியின் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில், இரண்டாவது வருடமாக செயலாற்றுகின்ற நான் வருடாந்த அறிக்கையில் செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த சில வருடங்களாக நிலுவையில் இருந்த ஒரு விடயமான மூலதன போதுமான தன்மை விடயத்திற்கு இவ்வருடம் மூலோபாய கவனம் மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் ஊடாக, வங்கி எதிர்காலத்தில் மாற்றம் ஒன்றை உருவாக்க எண்ணியுள்ளதனால், 2019 ஆம் ஆண்டு ஒரு முக்கியமான வருடமாகும்.

எனினும், 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது வங்கி, அதிகரித்த செயற்திறனற்ற முற்பணங்கள் (NPA) போட்போலியோவை எதிர்கொண்டது. எனது கருத்தில், எமது வெற்றியின் அளவை மதிப்பிடுவதற்கு நிதியிடப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை அல்லது கடன் தொகுதிகள் மற்றும் NPA போட்போலியோ என்பவற்றில் மாத்திரம் கவனம் செலுத்தாது, ஆயின், நாம் பங்குதாரர்களாக செயற்படுகின்ற திட்டங்கள் மற்றும் அரச உரிமை கொள்ளப்பட்ட அபிவிருத்தி என்ற அடிப்படையில் பொருளாதாரத் துறைக்கு உதவுதல் மற்றும் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டு அடையக் கருதிய இலக்குகளுக்கு வங்கி எந்தளவு பங்களிப்புச் செய்துள்ளது என்பனவற்றினாலும் கவனம் செலுத்த வேண்டும்.

பிரசுரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி, 2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 3.6% ஆன உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, 2019 ஆம் ஆண்டில் 2.9% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தில் குறை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளுள் இதுவும் ஒன்றாகக் கருதப்படலாம். மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், உல்லாசப் பிரயாணத் துறையை பெருமளவில் பாதித்துள்ளமையால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் பாதிக்கப்பட்டது. இத்தகைய பாதிப்பினால் உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலுக்கு ஏற்பட்ட விளைவுகள், பொருளாதாரத்தின் ஏனைய துறைகள், விசேடமாக, RDB வங்கியின் வாடிக்கையாளர் தளத்தின் ஒரு கணிசமான பகுதியைப் பிரதிபலிக்கின்றன. கைத்தொழில் துறையின் விநியோக சங்கிலிகளும் பாதிக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் ஒரு வைப்பு விகித அளவு அறிமுகப்படுத்தப்பட்ட சூழலில், வங்கித் தொழிற்துறை செயற்பட்டது. இந்த வைப்பு விகித அளவு பின்னர் கடன் விகித அளவினால் பதிலீடு செய்யப்பட்டது. வட்டி வருமானம் RDB வங்கியின் பிரதான வருமான மூலமாக அமைந்ததால், மேலே அறிமுகப்படுத்தப்பட்ட கடன் விகித அளவு வங்கியின் மந்தமான வளர்ச்சிக்கு இன்னுமொரு காரணமாகக் கருதப்படலாம்.

2019 ஏப்ரல் மாதம் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின் (LDB) செயற்பாடுகள் RDB வங்கியினால் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) குறித்துரைக்கப்பட்ட மொத்த கையகப்படுத்தல் நடைமுறையைப் பூர்த்தியாக்குவதன் மூலமும், நடவடிக்கை நெறிப்படுத்தல் மூலமும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) பேச்சுவார்த்தை மூலம் உறுதி செய்யப்பட்ட 50.0 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உடன்படிக்கையும், 2019 ஜூன் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. மேலும், 2019 ஆம் வருட முடிவில் உள்ளவாறு RDB அமெரிக்க டொலர் கடன் வசதியில் இருந்து 25.0 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிக்கு நிதிகளை குறைத்தது. ADB தன்னுடைய 1.0 மில்லியன் அமெரிக்க டொலர் தொழில்நுட்ப உதவித் தொகை திட்டத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசகர்களின் தலையீட்டுடன் ஆலோசனைசார் ஏற்பாடுகளை வழங்குவதன் மூலம் வங்கிக்கு தொழில்நுட்ப உதவியை வழங்க ஆரம்பித்தது

வங்கி முறைமையின் உட்கட்டமைப்பு மேம்படுத்தல் கொள் முதலையும் வங்கி பூர்த்தி செய்துள்ளது. இது 2019 ஆம் ஆண்டில் வங்கி அடைந்த குறிப்பிடத்தக்க ஒரு வெற்றியாகும்.

2019 இல் வங்கி போட்டிமிக்க குறைந்த வட்டி வீத்தில் RDB குத்தகையை சந்தையில் அறிமுகப்படுத்தியது. LDB கையேற்புடன் இவ்விடயம் சாத்தியமாக அமைந்தது. மகளிர் முயற்சியாளர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வைப்புத் தயாரிப்பான RDB லிய சவிய பிளஸ் என்ற முதலீட்டுச் சேமிப்புக் கணக்கு 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர், புதிய அரசாங்கம் 2019 டிசம்பரில் வரி வெட்டுகள் - 15% - 8% ஆகக் குறைக்கப்பட்ட VAT விகிதம் உள்ளடங்கலாக, வருடாந்த VAT பதிவு தொடக்க நிலை மட்டத்தை அதிகரித்து, புதிய சிவில் நிர்வாக சேவையில் உள்ளோரை வேலைக்கு அமர்த்தி மற்றும் சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கு நடுத்தர காலப்பகுதியில் வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கில் கடன் நிவாரணம் ஒன்றை அளித்து ஒரு வளர்ச்சியைத் தூண்டும் பொதி ஒன்றை அறிமுகப்படுத்தியது. எனினும், COVID-19 தொற்று உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் பொருளாதாரத்தை தீவிரமாகப் பாதித்தமையினால் நடுத்தர காலப்பகுதியில் எதிர்பார்த்த வளர்ச்சியைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

சவால் மிக்க செயற்பாட்டுச் சூழல் ஒன்று இருந்த போதிலும், வங்கி, சொத்து தளத்தில் ரூபா 176.94 பில்லியனில் இருந்து 13% வருட வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2018 இல் இதன் தொகை ரூபா 199.98 பில்லியனாகும். 2019 ஆம் ஆண்டு ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டைவிட அதிகமான மூலதனப் போதுமான விகிதங்களைக் காட்டி ஒரு வலுவான ஐந்தொகையை பிரதிபலித்தது. 2019 ஆம் ஆண்டு ரூபா 144.69 பில்லியன் கடன் போட்போலியோ வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. இதன் வளர்ச்சி வீதம் 5.03% ஆகும். இத்துடன், வைப்பு போட்போலியோ ரூபா 149.6 பில்லியனாக அதிகரித்தது. இது 5.68% வளர்ச்சியாகும்.

செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் வலுக்குறைப்புக் கட்டணங்கள் முறையே ரூபா 7.96 பில்லியன் மற்றும் ரூபா 2.41 பில்லியனாக அமைந்தமை இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணங்களாகும். 2019 இல் வங்கியிலுள்ள நிகர வட்டி வருமானம் 4.6% வளர்ச்சியை பதிவு செய்து, ரூபா 12.45 பில்லியன் பெறுமதியைக் காட்டியது. இதேவேளை, செயற்படு இலாபம் (ரூபா 2.96 பில்லியன்) மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா 498.59 மில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டு முறையே 17.91% மற்றும் 53.56% எனப் பதிவு செய்யப்பட்டது. இந்த வீழ்ச்சிகளுக்கு பிரதான காரணமாக

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

அமைந்தவையாகும். NPA போட்போலியோ (ரூபா 13.71 பில்லியன்) NPA போட்போலியோவில் கணிசமாக அதிகரிப்புக் காரணமாக, 2018 உடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டுக்கான வலுக்குறைப்புக் கட்டணங்கள் 71% ஆல் அதிகரித்தது. NPA போட்போலியோ அதிகரிப்பு நாட்டின் குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தது. அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஒப்பீட்டு அளவில் குறைந்த தரத்திலான கடன் என்பன 2017 ஆம் ஆண்டில் வங்கியின் கடன் வளர்ச்சி விகிதத்தை அதிகரித்தது. வங்கியின் மொத்த NPA விகிதம் 2019 இல் 9.63 ஆகவும் 2018 இல் 5.4% ஆகவும் அமைந்துள்ளது.


COVID-19 தொற்று உலகளாவிய ரீதியில் தோன்றியிருக்காவிட்டால் 2021 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உண்மையான பொருளாதார வளர்ச்சி மீட்பு ஆரம்பித்திருக்கலாம் என நாம் நியாயமாக அனுமானிக்கலாம். எனினும், COVID-19 தொற்று நோய் காரணமாக, நாட்டின் வணிக நடவடிக்கைகளுக்கான பாதை அரசின் உதவியுடன் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்திய கிராமிய அடிப்படையிலான பொருளாதாரத்திற்கு விசேடமாக பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய அடிப்படையிலான உற்பத்திக் கைத்தொழில்கள் மற்றும் சேவைகளுக்கு நிலைமாற்றம் அடைவதைக் காணலாம். மேலே குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்ற விதமாக எம்மை முன் நிலைப்படுத்திக் கொண்டு வங்கியின் NPA போட்போலியோ வளர்ச்சியை நிறுத்தினால் RDB வங்கியாகிய நாம் மேலே குறிப்பிட்ட இம்மாற்றம் எதிர்வரும் வருடங்களில் சில சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என நியாயமாக எதிர்பார்க்கலாம்.

சவால் மிக்க 2019 ஆம் வருடத்தில், வங்கியின் வெளிப்படுத்தப்பட்ட கலப்புப் பெறுபேறுகள் பிரதேச அபிவிருத்தி வங்கியின் முழுப் பணியாட்களின் முயற்சியினாலும், வங்கியின் முகாமைத்துவத்தினாலும், ஏற்கனவே உருவாக்கப்பட்ட திட்டங்கள் முறையாக உரிய நேரத்தில் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் பெற்ற வெற்றியாகும்.

COVID-19 தொற்று காரணமாக, சொத்து தரத்தில் சீர்கேடு மற்றும் இதன் விளைவாக வலுக்குறைப்புக் கட்டணங்களில் ஏற்படும் அதிகரிப்பு என்பனவற்றை 2020 இல் நாம் எதிர்பார்க்கின்றோம். எமது வாடிக்கையாளர் தளத்தில் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் தீவிரமானதாகும். வங்கி, கடன் தவணை தள்ளுபடிக் காலத்தில் இதனை எதிர்கொண்டது. இங்கு சுமார் 62% ஆன எமது வாடிக்கையாளர்கள் விட்டுக் கொடுப்பை வேண்டி நின்றனர். எனினும், அரசு உரிமை கொள்ளப்பட்ட அபிவிருத்தி வங்கியின் ஒரு அணி என்ற அடிப்படையில், எமது வாடிக்கையாளர் தளத்திற்கு, வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் சேவை வழங்குவதன் மூலம், எமது வங்கியின் இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு, எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களைச் சாதகமாக எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

முடிவாக, எமது அனைத்து நம்பிக்கையான வாடிக்கையாளர்கள் வழங்குகின்ற தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதோடு, தற்போதைய மற்றும் முன்னாள் தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் ஆகியோர் இக்காலப்பகுதியில் எனக்கு வழங்கிய வழிகாட்டலுக்கும், ஊக்குவிப்புக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும். 2019 ஆம் ஆண்டின் எமது செயற்திறன் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து பிரதேச அபிவிருத்தி வங்கி ஊழியர்களுக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன்.

வங்கியின் பங்குதாரர்கள், இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள், நிதியமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கிய ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ரி. குகன்
பொது முகாமையாளர் /
பிரதம நிறைவேற்று அதிகாரி

# பணியாட்கள்


14 பணிப்பாளர்கள் சபை
18 கூட்டுறவு முகாமைத்துவ அணி
20 பிராந்தியப் பொது முகாமையாளர் / சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்
22 உதவிப் பொது முகாமையாளர்கள் / துறைத் தலைவர்கள்

# பணிப்பாளர்கள் சபை



திரு. மஹிந்த சாலிய
தலைவர்

திரு. எம்.ஏ.பீ. சில்வா
பணிப்பாளர்

திரு. கே.பீ. விஜயரத்ன
பணிப்பாளர்

திரு. ஏ.கே. செனவிரத்ன
பணிப்பாளர்

திரு. டப்ளியூ.எம். கருணாரத்ன
பணிப்பாளர்



திரு. எம்.எஸ்.டீ. ரத்னசிரி
பணிப்பாளர்

பேராசிரியர் எச்.எம்.டப்ளியூ.
ஆரியரத்ன ஹேரத்
பணிப்பாளர்

டொக்டர் நிர்மல் டி சில்வா
பணிப்பாளர்

திரு. லலித்
அபேசிறிவர்தன
பணிப்பாளர்

திரு. கே.ஏ.டீ. சுமனசிரி
பணிப்பாளர்

# பணிப்பாளர்கள் சபை

## திரு. மஹிந்த சாலிய

தலைவர்

திரு. மஹிந்த சாலிய, களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தகத்துறை (விசேட) பட்டதாரியாவார். இவர், பிஸ்கால் கொள்கை, அரசாங்க நிதி, புள்ளிவிபரவியல் ஆகியவற்றிலும், வருடாந்த அரச வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதிலும் நன்கு அனுபவம் வாய்ந்தவர்.

இவர் அரச துறையில் 34 வருடங்கள் பணி புரிந்துள்ளார். இக்காலப் பகுதியில் இவர் இலங்கை மத்திய வங்கியில் ஒரு சிரேஷ்ட உதவிப் பணிப்பாளராகவும், பிராந்திய முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார். மேலும், அரசாங்க திறைசேரியில் இவர், பிரதிப் பணிப்பாளர், பிரதி வரவு செலவுத் திட்ட மற்றும் அரசாங்கக் கணக்குள் துறையின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் திறைசேரியின் பிரதிநிதியாக பல எண்ணிக்கையான அரசாங்க நிறுவனங்களில் பணிப்பாளர் சபையைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

ரஜரட்டை அபிவிருத்தி வங்கி, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், பாதுகாப்பு சேவைக் கட்டளை மற்றும் பணியாட்கள் கல்லூரி, ரக்னாலங்கா பாதுகாப்பு நிறுவகம், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், டவர் மண்டப திரையரங்கு நிலையம் மற்றும் செலிசினி தொலைக்காட்சி ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் திரு. சாலிய ஒரு உறுப்பினராக பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

## திரு. எம்.ஏ.பீ சில்வா

பணிப்பாளர் (2020 மார்ச் 04 வரை)

திரு. சில்வா மக்கள் வங்கியின் வங்கிசார் செயற்பாடுகள் துறையின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராவார்.

திரு. சில்வா, 1987 ஆம் ஆண்டு வங்கியில் இணைந்து கொண்டார். இவருக்கு வங்கித்துறை நடவடிக்கைகளில் 31 வருடங்களுக்கும் மேற்பட்ட ஆழமாக வேரூன்றிய அறிவு மற்றும் அனுபவம் உள்ளது. வங்கி நடவடிக்கைகள் துறையின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராக பணியாற்றி வரும் திரு. சில்வா, கிளை வலையமைப்பை ஒழுங்குபடுத்தும் பிரிவாக செயற்படும் ஊடக முகாமைத்துவப் பிரிவு மற்றும் ATMகள், CDMகள் மற்றும் Kiosks, சந்தைப்படுத்தல், மக்கள் வங்கியின் தகவல் தொழில்நுட்பம், வங்கி துணைச் சேவைகள் பிரிவு என்பனவற்றை உள்ளடக்கிய துணை வலையமைப்பு ஆகியவற்றைப் பொறுப்பாகக் கொண்டு நடத்தும் நான்கு பிரதான பிரிவுகளை மேற்பார்வை செய்து வருகிறார்.

திரு. சில்வா, பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியாவார். இவர், AIB ஸ்ரீலங்கா நிறுவனத்தில் இருந்து தொழில்முறைசார் வங்கியியல் தகைமையையும் பெற்றுள்ளார். இவரது விசேட துறையில் இவருக்கு விரிவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியும் உள்ளது. மேலும், இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஒரு சக உறுப்பினருமாவார்.

## திரு.கே.பி.விஜயரத்ன

பணிப்பாளர்

தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராக செயற்பட்டு வரும் திரு. கித்சிரி பி விஜயரத்ன, நிதி மற்றும் திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, முதிர் ஓய்வு முறை மற்றும் திறைசேரி பின் அலவலகம் ஆகியவற்றை மேற்பார்வை செய்து வருகிறார். காப்புறுதி மற்றும் வங்கித் துறைகளில் பரந்த அனுபவத்துடன், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முதன்மை நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள், கணக்காய்வு மற்றும் நிதித்துறைச் சேவைகளில் 35 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார்

இவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (FCA), இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் (FCMA) ஆகியவற்றின் சக உறுப்பினராகவும், இலங்கை கணக்கியல் தொழில் நுட்பவியலாளர்கள் அமைப்பின் (FMAAT) சிரேஷ்ட உறுப்பினராகவும், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் (IBSL) சக உறுப்பினராகவும் மற்றும் தொழில்முறை அமைப்பு நிறுவனம் (OPA) உறுப்பினராகவும் இருக்கின்றார்.

திரு. விஜயரத்ன, வணிக நிருவாகத் துறையில் BSc கௌரவப் பட்டத்தை இரண்டாம் வகுப்புடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். மேலும், இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் (SLIDA) பொது நிதி மற்றும் முகாமைத்துவத் துறையில் DPFM துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றுளார்.

## திரு. ஏ.கே.செனவிரத்ன

பணிப்பாளர்

திரு. ஆனந்த கித்சிரி செனவிரத்ன, இலங்கை நிர்வாக சேவையில் (SLAS) ஒரு விசேட தர அதிகாரியாவார்.

திரு. செனவிரத்ன, களனி பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் துறையில் விசேட கௌரவப் பட்டம் பெற்றுள்ளார். மேலும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் வணிக மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப் பின் டிப்ளோமாவையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் 1995 இல் இலங்கை நிர்வாகத் துறையில் இணைந்து கொண்டார். தேவையான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பின்னர், 1996 ஆம் ஆண்டில் நிதியமைச்சில் நிதிக் கொள்கை திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2006 ஆம் ஆண்டு அதே அமைச்சில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தில் பணிப்பாளராகப் பதவியேற்றார். 2015 ஆம் ஆண்டு நிதிக் கொள்கை திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்தார். 2018 ஜனவரியில் இருந்து திரு.செனவிரத்ன, 2018 பெப்ரவரியில் திறைசேரிக்கு பிரதி செயலாளராக நியமிக்கப்படும் வரை, தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றினார். திரு. செனவிரத்ன, பல அரச உரிமை பெற்ற நிறுவனங்களில் சபைப் பணிப்பாளராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

## திரு. டப்ளியூ.எம்.கருணாரத்ன

பணிப்பாளர்

திரு. டப்ளியூ.எம்.கருணாரத்ன பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு சுயாதீன / நிர்வாகம் சாராத பணிப்பாளராக பணிப்பாளர் சபைக்கு 03.01.2020 இல் நியமிக்கப்பட்டார். திரு. கருணாரத்ன, இலங்கை மத்திய வங்கியில் இருந்து ஓய்வு பெற்ற ஒரு உதவி ஆளுநர் ஆவார். இவருக்கு வங்கித் துறையில் 30 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உண்டு. இவர், நிதியமைச்சில் உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட "பண்டகசாலை வரவுகள் நிதி திட்டம்" என்ற திட்டத்தில் ஆலோசகராகப் பணிபுரிந்தார். இவர், அநுராதபுரம் RRDB யின் தலைவர் / பி.நி.அ ஆகவும் இருந்தார். மேலும், ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இவர் இரண்டு புத்தகங்களைப் பிரசுரித்தார். அவை வறுமை மற்றும் கிராமிய சேமிப்புகள் அணி திரட்டல் பற்றியதாகும். அத்துடன், வறுமை கடன், SME நிதியிடல், இறைப்பு பாசனம், வீட்டுத் தோட்டம், பால் உற்பத்தி, நிதிசார் கல்வி ஆகிய விடயங்கள் தொடர்பாக 6 புத்தகங்களையும், பண்டகசாலை வரவுகள் நிதியிடல் சம்பந்தமாக ஒரு நூலையும் வெளியிட்டுள்ளார்.

திரு. கருணாரத்ன, பேராதனை பல்கலைக் கழகத்தில் சமூக விஞ்ஞான கௌரவப் பட்டம் பெற்றுள்ளார். அத்துடன், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டமாணி கௌரவப் பட்டம் பெற்றுள்ளார். மேலும், 2002 ஆம் ஆண்டில் இருந்து சட்டத்தரணியாகவும் கடமையாற்றுகின்றார்.

## திரு. எம்.எஸ்.டீ. ரணசிரி

பணிப்பாளர்

திரு. எம்.எஸ்.டீ. ரணசிரி பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு சுயாதீன / நிர்வாகம் சாராத பணிப்பாளராக பணிப்பாளர் சபைக்கு 03.01.2020 இல் நியமிக்கப்பட்டார். திரு. ரணசிரி நிதி அமைச்சின் முன்னாள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகத் துறையில் (விசேட) பட்டம் பெற்றுள்ளார். இவருக்கு அரச துறையில் 30 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உண்டு. திரு. ரணசிரி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராகவும், அபிவிருத்தி லொத்தர் சபையின் பொதுத் திறைசேரி பிரதிநிதியாகவும் கடமையாற்றினார்.

## பேராசிரியர் எச்.எம்.டப்ளியூ.ஆரியரத்ன ஹேரத்

பணிப்பாளர்

பேராசிரியர் எச்.எம்.டப்ளியூ.ஆரியரத்ன ஹேரத், பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் கலைமாணி (விசேட) பட்டம் பெற்றுள்ளார். அதே பல்கலைக்கழகத்தில் இருந்து பொருளியல் துறையில் எம்பில் பட்டத்தையும் பெற்றார். மேலும், நோர்வேஜியன் உயிரியல் விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி மற்றும் வள பொருளியல் துறையில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் விவசாய நிறுவனத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர், அபிவிருத்தி பொருளியல், நிதி மற்றும் வங்கி, திட்டப் பகுப்பாய்வு,

நுண் நிதி மற்றும் வறுமைப் பகுப்பாய்வு ஆகிய துறைகளில் முதன்மையான கல்வியாளராகவும், ஆய்வாளராகவும் திகழ்ந்து வருகிறார்.

இவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராக, பேராசிரியராக 26 வருடங்களாகக் கடமையாற்றி வருகிறார். இக்காலப்பகுதியின் போது கூட்டுறவு அபிவிருத்தி தேசிய நிறுவனம் பொல்கொல்லவில் பணிப்பாளர் தகைமையில் கடமையாற்றினார். மேலும், பேராதனை பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மத்திய நிலையத்தில் பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். தற்போது இவர், பேராதனை பல்கலைக்கத்தில் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் துறை தலைவராக பதவி வகிக்கிறார்.

பேராசிரியர் எச்.எம்.டப்ளியூ.ஆரியரத்ன ஹேரத், கொழும்பு, பாத்பைன்டர் மன்றம், திட்ட சர்வதேச ஸ்ரீ லங்கா, IFAD, தபால் தொலைத்தொடர்பு அமைச்சு, உடரட்ட அபிவிருத்தி, வட மத்திய மாகாண சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, UNDP மற்றும் மத்திய மாகாண சபை ஆகிய பல தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் ஆலோசகராகப் பணி புரிந்து பல அறிக்கைகளைத் தயாரித்துள்ளார்.

இவர், பல துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு பல்வேறு நூல்களையும் பிரசுரித்துள்ளார். கோட்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் மதிப்பீடு, நுண் நிதி, கொள்கை மற்றும் நடைமுறை, இலங்கையின் வரவு செலவுத் திட்ட செயன் முறையில் பால் நிலை பதில் ஆகியன இந்த நூல்களில் சிலவாகும். அத்துடன், இவர், சர்வதேச நடுவர் சஞ்சிகைகளில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் பிரசுரித்துள்ளார்.

## கலாநிதி நிர்மால் டி சில்வா

பணிப்பாளர்

டொக்டர் நிர்மால் டி சில்வா, வணிக தொழில் முறையில் விருது பெற்ற ஒரு தொழில்முனைவோர் ஆவார். இவருக்கு சுமார் இரண்டு தசாப்த "C மட்ட" அனுபவம் உள்ளது. இவர், பல்வேறு பல்தேசிய மற்றும் செல்வ வளம் பொருந்திய 500 கம்பனிகளுக்குத் தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். கடந்த சில வருடங்களாக இவர், மெய்ச்சொத்து கைத்தொழில்துறை, மூலோபாய ஆலோசனை மற்றும் Start-ups என்பவற்றில் கவனம் செலுத்தி வருகிறார்.

டொக்டர் டி சில்வா, தற்போது Paramount Realty யின் இணை தோற்றுனர் / பிநிஅ ஆக கடமையாற்றி வருகிறார். மேலும், TYNA கன்சல்டிங் கம்பனியை இவர் நிறுவினார். இக்கம்பனி மூலோபாயம், தலைமைத்துவம், தாக்க முதலீடு, மூலோபாய அதிகாரம், செயற்பாடு மற்றும் நிலைமாற்றத் தலையீடுகள் (விசேடமாக SME களுக்கு) மற்றும் சமூக தொழில் முனைவு ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகின்ற ஒரு சிறு தரகு நிறுவனமாகும். இவர், விவசாயம், உணவு மற்றும் பானம், தொழில்நுட்பம், கைவினைப் பொருட்கள், கல்வி, கற்கை மற்றும் அபிவிருத்தி, வசதிகள் முகாமைத்துவம், போட்போலியோ முதலீடு, தொழில்முறைச் சேவைகள், டிஜிட்டல் பொழுதுபோக்கு, நுகர்வோர் பொருட்கள் மற்றும் வாழ்க்கை முறைச் சேவைகள் ஆகிய கைத்தொழில் துறைகளைச் சார்ந்த பல எண்ணிக்கையான கம்பனிகளில் சபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகிறார்.

இவர், ஒரு சிறந்த மரியாதைக்குரிய சிந்தனைத் தலைவர் மாத்திரமன்றி, start-up ன் ஆசானாக உருவாகிய பின், இவர் பற்றி அதிகம் பேசப்படுகிறது. மேலும், இவர், தாக்க முதலீட்டாளராகவும், ஒரு பொது மேடைப் பேச்சாளராகவும் இருக்கின்றார். அத்துடன், நாட்டின் start-up மற்றும் சமூக நிறுவன சூழல் முறைமையை வடிவமைப்பதில் முக்கிய செல்வாக்குப் பொருந்தியவராவார்.

டொக்டர் டி சில்வா, ஒரு இணை பேராசிரியராகவும், வருகைதரு விரிவுரையாளராகவும் கலாநிதி மட்ட ஆய்வு மேற்பார்வையாளராகவும், பல உள்நாட்டு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் சேவையாற்றி வருகிறார்.

டொக்டர் டி சில்வா கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை தன்னகத்தே கொண்டுள்ளார்.

- வணிக நிருவாகத்தில் (மனித வள முகாமைத்துவ விசேட) கலாநிதி பட்டம்
- வணிக நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் (அவுஸ்திரேலியா)
- வணிக முகாமைத்துவத்தில் பட்டம் (அவுஸ்திரேலியா)
- சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் (அவுஸ்திரேலியா)
- சந்தைப்படுத்தலில் பட்டப்பின் டிப்ளோமா (CIM-ஐக்கிய இராச்சியம்)
- முதன்மைத் திட்ட முகாமையாளர் (ஐக்கிய அமெரிக்கா)
- வணிக நிருவாக அமைப்பின் சக உறுப்பினர் (ஐக்கிய இராச்சியம்)
- அமெரிக்க திட்ட முகாமைத்துவ அமைப்பின் சக உறுப்பினர் (ஐக்கிய அமெரிக்கா)
- பட்டய தொழில்முறை முகாமைத்துவ நிறுவனத்தின் சக உறுப்பினர் (இலங்கை)
- இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினர் (SLIM).

## திரு. லலித் அபேசிறிவர்தன

பணிப்பாளர்

திரு. லலித் அபேசிறிவர்தன, பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு சுயாதீன / நிர்வாகம் சாராத பணிப்பாளராக, பணிப்பாளர் சபைக்கு 03.01.2020 இல் நியமிக்கப்பட்டார். திரு. லலித் அபேசிறிவர்தன 1996 ஆம் ஆண்டில் இருந்து ஒரு சட்டத்தரணியாகச் செயற்பட்டு வருகின்றார். இவர் சட்டமாணி பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுள்ளார். இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணிக்கான தகுதியைப் பெற்றார்.

தற்போது லலித் அபேசிறிவர்தன லீட் பிஸ்னஸ் டிவலப்மன்ட் அன்ட் மனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட், புட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் லீட் ஹார்வெயர் அன்ட் கன்ஸ்ரக்ஷன் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களில் பணிப்பாளர் பதவி வகித்து வருகிறார்.

## திரு. கே.ஈ.டி. சுமணசிரி

பணிப்பாளர்

திரு. சுமணசிரி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிருவாகத்தில் விஞ்ஞானமாணி (கௌரவ) பட்டம் பெற்றதைத் தொடர்ந்து, 1990 இல் இலங்கை வங்கியில் இணைந்து கொண்டார். இவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சக உறுப்பினராவார். ஐக்கிய அமெரிக்காவின் ஹார்வாட் பல்கலைக்கழகத்தின் ஹார்வாட் வணிகப் பாடசாலையில் முகாமைத்துவப் பாடநெறியை பூர்த்தி செய்த இவர், 2013 ஏப்ரல் மாதம் இலங்கை வங்கியில் ஒரு பிரதிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவருக்கு சில்லறை வங்கி, நுண் நிதி, கூட்டுறவு நிதி மற்றும் வள அபிவிருத்தி ஆகிய துறைகளில் பரந்த அனுபவமும் இலங்கை வங்கி கிளை வலையமைப்பில் முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ வகிபங்குகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தது. இவர் இலங்கை வங்கியில் முகாமையாளர், பிரதேச முகாமையாளர், செயற்பாட்டு முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகிய பல பதவிகளை வகித்துள்ளார்.

திரு. சுமணசிரி, இலங்கை வங்கி பயிற்சி நிறுவனத்தில் ஒரு பீட உறுப்பினராகச் சேவையாற்றுகையில் பயிற்சி நெறி சம்பந்தமான முகாமையாளர் பதவியை வகித்த காலத்தில் இலங்கை வங்கி பணியாட்களின் அறிவை மேம்படுத்துவதற்கு எப்போதும் தயாராக இருந்தார். இலங்கை வங்கி பணியாட்களின் தொழில் முன்னேற்றத்தில் இவர் முக்கிய காரணகர்த்தாவாக இருந்தார்.

இலங்கையின் வட பகுதியில் நடைபெற்ற மூன்று தசாப்த யுத்த காலம் முடிவுக்கு வந்ததை அடுத்து, திரு சுமணசிரி, வட மாகாணத்தை தமது பொறுப்பில் எடுத்து, இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளராக பதவியேற்று அப்பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார். மேலும், வட மாகாணத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அவர் மகத்தான பங்களிப்புச் செய்தார். அதுமட்டுமன்றி, வட பிரதேசத்தில் விநியோக ஊடகங்களை விரிவாக்குவதிலும் பாரிய பங்காற்றினார்.

அவருக்கு நுண் நிதி மற்றும் சில்லறை வங்கி ஆகிய துறைகளில் இருந்த விரிவான அனுபவம் மற்றும் நிபுணத்துவம், வட மாகாணத்தில் இலங்கை வங்கியை ஒரு உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லக்கூடியதாக இருந்தது.

திரு. சுமணசிரி, தற்போது இலங்கை வங்கியில் ஒரு சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராகக் கடமையாற்றுவதுடன், Ceybank Holiday Homes, கொலதெனிய ஹைட்ரோபவர் (பிரைவேட்) லிமிட்டட், ஹொட்டேல் கிரான்ட் ஒறியன்டல் ஆகியவற்றில் பணிப்பாளர் பதவியை வகிக்கிறார். இதனைவிட இவர், இலங்கை வங்கியாளர் நிறுவனம் மற்றும் லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிட்ட ஆகியவற்றில் மாற்று சபை உறுப்பினராகவும் கடமையாற்றி வருகிறார்.

# கூட்டுறவு முகாமைத்துவ அணி



திரு. ரீ.குகன்
பொது முகாமையாளர் / பிநிஅ

திரு. ரீ.குகன், இலங்கையில் கௌரவம் பெற்ற இரண்டு தனியார் வங்கிகளான HNB மற்றும் யூனியன் வங்கி கொழும்பு ஆகியவற்றில் சேவையாற்றிய பின், 2011 செப்டம்பர் மாதம் RDB யில் ஒரு தொழில்முறை சார்ந்த வங்கியாளராக இணைந்து கொண்டார். வங்கி விருத்தியாண்மை, கூட்டுறவுக் கடன், கிளை வங்கி, இடர் முகாமைத்துவம் மற்றும் வணிக நிதியிடல் ஆகியவற்றில் அனுபவம் பெற்று பல்வேறுபட்ட முகாமைத்துவத் தகைமைகளில் பதவி வகித்து, வங்கித்துறையின் முழுமையாக 29 வருடங்களுக்கும் மேற்பட்ட தொடர்ச்சியான சேவை அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதி பொருளியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும், பொருளாதார அபிவிருத்தியில் பட்டப் பின் டிப்ளோமாவும் பெற்றுள்ளார். மேலும், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் (IBSL) வங்கி முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமாவையும், வங்கி மற்றும் நிதித்துறையில் டிப்ளோமா வையும் தனதாக்கியுள்ளார். இதனைவிட, மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் இயந்திரப் பொறியியலில் தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) தகைமையையும் பெற்றுள்ளார். இவர் IBSL இன் சிரே்ட துணை உறுப்பிராக இருக்கிறார். மேலும், இவர் IBSL இன் வருகைதரு விரிவுரையாளராகவும், வினாத்தாள் மதிப்பீட்டாளராகவும் கடமையாற்றுகிறார்.



திரு. வஜிர ஜயசிங்க
பிரதம தகவல் அதிகாரி

திரு. ஜயசிங்க, தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு தொழில்முறை வல்லுனராவார். இத்துறையில் இவருக்கு 20 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உள்ளது. இவர், 2011 ஜூன் மாதம் RDB யில் இணைந்து கொண்டார். திரு. ஜயசிங்க, மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் விஞ்ஞான மாணி பட்டம் பெற்றுள்ளார். அத்துடன், தாய்லாந்திலுள்ள ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் பொறியியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும், ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஹவாய் பல்கலைக்கழகத்தில் வணிக நிருவாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த பின்னர், IBM வேர்ள்ட் ரேட் கூட்டுத்தாபனத்தில் ஒரு முறைமைகள் பொறியியலாளராக தமது தொழிலை ஆரம்பித்தார். இவருக்கு நிதிச் சேவைகள் மற்றும் வங்கிக் கைத்தொழில் துறையில் முகாமைத்துவப் பதவிகளில் 16 வருடங்களுக்கும் மேற்பட்ட தொழில் அனுபவம் உண்டு. இவர், பிரித்தானிய கணனி அமைப்பில் (CITP) சான்று படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப தொழில் வல்லுனராகவும், ஐக்கிய அமெரிக்காவின் திட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் திட்ட முகாமைத்துவ தொழில் வல்லுனராகவும் இருக்கின்றார். திரு. ஜயசிங்க, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் ஒரு பட்டயப் பொறியியலாளராவார்.



திரு. கே.எம்.ஜே.எஸ்.கருணாதிலக
மனிதவள பிரிவுத் தலைவர் / மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் (2020 ஜூன் வரை)

திரு. கே.எம்.ஜே.எஸ்.கருணாதிலக, மனித வளத் துறையில் ஒரு விசேட நிபுணராவார். இத்துறையில் இவருக்கு 32 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உண்டு. 2014 ஜூலை மாதத்தில் இவர் RDB யில் இணைந்து கொண்டார். இவர், அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் (SMIB) உதவிப் பொது முகாமையாளர் / தலைவராக (மனித வளங்கள் மற்றும் ஏற்பாட்டியல்) கடமையாற்றினார். மேலும், கமிதிரியவில் (உலக வங்கி உதவியளிக்கப்பட்ட திட்டம்) மேலதிக திட்டப் பணிப்பாளராக சேவையாற்றினார். மேலும், இவர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் பணிப்பாளராக (மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்) பணிப்பாளராகவும், இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனத்தில் சிரே்ட முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் முகாமையாளராகவும் (நிர்வாகம் மற்றும் நிதி) பணியாற்றினார். திரு. கருணாதிலக, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் (1986) வணிக நிருவாகத் துறையில் (விசேட) விஞ்ஞானமாணி பட்டம் பெற்றுள்ளார். மேலும், பட்டப்பின் முகாமைத்துவ நிறுவனத்தில் (PIM) மனிதவள முகாமைத்துவத் துறையில் பட்டப் பின் சான்றிதழ் (1996) மற்றும் வணிகத்துறையில் முதுமாணிப் பட்டம் (2003) பெற்றுள்ளார். இவர் இலங்கை தனிப்பட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் சக உறுப்பினராவார். இவர் 2010 ஆம் ஆண்டு IPM இல் இருந்து தேசிய மனித வள சிறப்பு விருதினையும் பெற்றுக் கொண்டார். திரு. கணருணாதிலக, IPM இலங்கை (2017) மனித வள அபிவிருத்தி கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கான “சான்றுபடுத்தப்பட்ட மனித வள கணக்காய்வாளர்” என்ற தகுதிக்கான சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.



திரு. பி.சுமேத எதிரிசூரிய
பிரதம நிதி அதிகாரி

திரு. எதிரிசூரிய, 1992 இல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிருவாகத்தில் விசேட விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனததின் சக உறுப்பினராவார். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வணிக நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். கணக்காய்வு, கணக்கியல், வரி விதிப்பு, முகாமைத்துவ ஆலோசனை, வங்கி மற்றும் நிதி ஆகிய துறைகளில் 29 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவங்களைப் பெற்ற இவர், ஏர்னஸ்ட் அன்ட் யங் கொழும்பு, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் செலான் வங்கி ஆகிய முன்னணி நிதி நிறுவனங்களில் கடமையாற்றியுள்ளார். RDB பிரதம நிதி அதிகாரியாக நியமிக்கப்பட முன், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியில் பிரதம நிதி அதிகாரி, இணக்க அதிகாரி மற்றும் பதில் பொது முகாமையாளர் / பிநிஅ ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.



திரு. ஏ.எச்.எம்.எம்.பி.ஜயசிங்க
பிரதிப் பொது முகாமையாளர்
கடன் மற்றும் மீட்பு

திரு. ஜயசிங்க 1986 இல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்ககத்தில் இருந்து வணிக நிருவாகத்தில் விசேட விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றார். மேலும், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் இருந்து வங்கி முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவ டிப்ளோமா, வயம்ப பல்கலைக்கழத்தில் இருந்து பட்டப்பின் முகாமைத்துவ டிப்ளோமா, இலங்கை NIBM இல் இருந்து பிரதேச அபிவிருத்தித் துறையில் பட்டப் பின் டிப்ளோமா ஆகிய தகைமைகளைப் பெற்றுள்ளார். பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த பின்னர் இவர் 1987 இல் பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைந்து கொண்டார். இவ்வங்கியில் கிளை முகாமையாளர், வலய முகாமையாளர், மாவட்ட முகாமையாளர், பிரதம முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய பொது முகாமையாளர் ஆகிய மட்டங்களில் பதவிகளை வகித்துள்ளார். திரு. ஏ.எச்.எம்.எம்.பி.ஜயசிங்க அவர்களுக்கு வங்கிக் கைத்தொழில் துறையில் 31 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உள்ளது.



திரு. சி.எல்.பிஹிலந்த
பிரதிப் பொது முகாமையாளர் -
செயற்பாடு மற்றும் வணிக உதவி

திரு. பிஹிலந்த, களனி பல்கலைக்கழகத்தில் இருந்து வர்த்தகத் துறையில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்துள்ளார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத் துறையில் பட்டப் பின் டிப்ளோமா பெற்றுள்ளார். இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார். இவர், வங்கியின் முகாமையாளராக இணைந்து கொண்டார். (முன்னர் மஹநுவர பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி / RRDB) இவரது வங்கித்தொழில் காலத்தின் போது கிளை முகாமையாளர், பிரதம முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் பிராந்திய பொது முகாமையாளர் ஆகிய முகாமைத்துவ மட்ட அனுபவம் இவருக்கு உண்டு. இவருக்கு வங்கித் கைத்தொழில் துறையில் 31 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உள்ளது.

# பிராந்திய பொது முகாமையாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்



திரு. டீ.எம்.எஸ். பண்டார
பிராந்திய பொது முகாமையாளர்
மத்திய மாகாணம்
*B.Com.* (சிறப்பு) பட்டம்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



திரு. டீ.எம்.ரீ.எஸ்.குமார
பிராந்திய பொது முகாமையாளர்
வட மேல் மாகாணம்
*B.Sc.* வர்த்தக நிருவாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
*MA* பொருளியல் - களனி பல்கலைக்கழகம்



திரு. டப்ளியூ,எம்.என். டி சில்வா
பிராந்திய பொது முகாமையாளர்
தென் மாகாணம் (2020 ஜூலை வரை)
*B.Sc.* வர்த்தக நிருவாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா



திரு. ஏ.எச்.எம்.ஜீ. அபேரத்ன
பிராந்திய பொது முகாமையாளர்
வட மத்திய மாகாணம்
*B.Com.* (சிறப்பு) பட்டம் -
களனி பல்கலைக்கழகம்
நுண் நிதி டிப்ளோமா -
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



திரு. ஜீ.எஸ்.டீ. டி சில்வா
பிராந்திய பொது முகாமையாளர்
மேல் மாகாணம்
*B.Sc.* வர்த்தக நிருவாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



திரு. பீ.எச்.எம்.எஸ். பஸ்நாயக்க
பிராந்திய பொது முகாமையாளர்
ஊவா மாகாணம் (2020 ஏப்ரல் வரை)
*B.Sc.* வர்த்தக நிருவாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
முகாமைத்துவ டிப்ளோமா
ஊவா பல்கலைக்கழகம்



திருமதி சீ.எஸ். வேரகொட
பிராந்தியப் பொது முகாமையாளர்
சப்ரகமுவ மாகாணம்
*B.Sc.* வர்த்தக நிருவாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



திரு. ஆர்.எம்.ஆர். ரந்தெனிய
பிராந்தியப் பொது முகாமையாளர்
கிழக்கு மாகாணம்
கலை மாணிப் பட்டம் - பேராதனை
பல்கலைக்கழகம்
இலங்கை வங்கியாளர் கல்லூரியில் -
வங்கித்துறை மற்றும் நிதிச் சான்றிதழ்



திரு. டப்ளியூ.எம்.டீ.எஸ்.விக்கிரமசிங்க
பிராந்தியப் பொது முகாமையாளர்
ஊவா மாகாணம் (2020 ஏப்ரல் முதல்)
*B.Com.* (சிறப்பு) பட்டம் -
ருஹுணு பல்கலைக்கழகம்
வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டப் பின்
படிப்பு - கொழும்பு பல்கலைக்கழகம்
வங்கித் துறையில் இடர் முகாமைத்துவ
சான்றிதழ் - சுவீடன்



திரு. கே. ஆரியதிலக
பதில் பிராந்தியப் பொது முகாமையாளர்
தென் மாகாணம் (2020 ஜூலை முதல்)
*HRD* இல் உயர் தேசிய டிப்ளோமா - தேசிய
வணிக முகாமைத்துவ நிறுவனம்



திரு. கே.பீ. தஹநாயக்க
சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்
மனித வள அபிவிருத்தி
மற்றும் நிர்வாகம்
*B.Com.* (சிறப்பு) பட்டம் -
ருஹுணு பல்கலைக்கழகம்
பட்டப் பின் டிப்ளோமா முகாமைத்துவம்
ரஜரட்ட பல்கலைக்கழகம்

# உதவிப் பொது முகாமையாளர்கள் / பிரிவுத் தலைவர்கள்



திரு. பி.எம்.யூ.எஸ்.பஸ்நாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
செயற்பாடுகள் (2020 ஆகஸ்ட் வரை)
விவசாய டிப்ளோமா
விவசாயக் கல்லூரி - பெல்வெஹர



திரு. டீ.எஸ்.பி.சீ. ஹந்துன்ஹேவா
உதவிப் பொது முகாமையாளர்
சந்தைப்படுத்தல், ஆய்வு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி - நுண் நிதி டிப்ளோமா
இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்
*CBF* - இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்



திரு. டப்ளியூ.வீ.ஈ.ஜீ. வரக்காகொட
உதவிப் பொது முகாமையாளர்
திறைசேரி
*B.Sc.* வர்த்தக நிருவாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
இடைநிலைத் தேர்வு - இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம்



திரு. எல்.பீ. உபாலி
உதவிப் பொது முகாமையாளர்
கடன்கள்
*B.Com.* (சிறப்பு) பட்டம் -
களனி பல்கலைக்கழகம்
இடைநிலைத் தேர்வு -
இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம்



திருமதி பீ.ஆர்.டி. புஷ்பகுமாரி
உதவிப் பொது முகாமையாளர்
வட மேல் மாகாணம்
*B.Com.* (சிறப்பு) பட்டம் -
களனி பல்கலைக்கழகம்



திரு. டீ.பி. தர்மதாச
உதவிப் பொது முகாமையாளர்
மத்திய மாகாணம் (2020 ஆகஸ்ட் வரை)
கலைமாணிப் பட்டம் -
பேராதனை பல்கலைக்கழகம்



திரு. பீ.எஸ்.ரீ. ரணதுங்க
உதவிப் பொது முகாமையாளர்
மத்திய மாகாணம்
கலைமாணி (சிறப்பு) பட்டம் -
கொழும்பு பல்கலைக்கழகம்



திரு. கே.சீ.டீ. தர்மப்பிரிய
உதவிப் பொது முகாமையாளர்
வட மத்திய மாகாணம்
கலைமாணி பட்டம் -
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சிரேஷ்ட உறுப்பினர்



திரு. பீ.எம்.எஸ். விக்கிரமதுங்க
உதவிப் பொது முகாமையாளர்
அறவீடுகள்
*B.Com.* (சிறப்பு) பட்டம் -
கொழும்பு பல்கலைக்கழகம்
இடைநிலைத் தேர்வு -
இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
*CBF* - இலங்கை வங்கியாளர் நிறுவனம்
*MAAT*



திரு. எம்.எம்.எஸ். ஆனந்த
உதவிப் பொது முகாமையாளர்
மேல் மாகாணம்
இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின்
இணை உறுப்பினர்



திரு. பீ.ஜீ.டப்ளியூ.ஏ. குமார
உதவிப் பொது முகாமையாளர்
கிழக்கு மாகாணம்
*B.Sc.* பொது நிர்வாகம் (சிறப்பு) பட்டம் -
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



திரு. எம்.ஏ. ஞானரத்ன
உதவிப் பொது முகாமையாளர்
சப்ரகமுவ மாகாணம்
*B.Sc.* பொது நிர்வாகம் (சிறப்பு) பட்டம் -
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



திரு. கே.பீ. விஜேரத்ன
உதவிப் பொது முகாமையாளர்
நிதி
*B.Sc.* வர்த்தக முகாமைத்துவம் (சிறப்பு) பட்டம் -
ரஜரட்ட பல்கலைக்கழகம்
இடைநிலைத் தேர்வு -
இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
*CBF* - இலங்கை வங்கியாளர் நிறுவனம்



திரு. ஜீ.எம்.பீ.சீ. டி சில்வா
உதவிப் பொது முகாமையாளர்
இடர் முகாமைத்துவம்
*B.Com.*பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர
பல்கலைக்கழகம்
இலங்கையின் வங்கியாளர் நிறுவனத்தின்
இணை உறுப்பினர்
வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்பு
டிப்ளோமா - வயம்ப பல்கலைக்கழகம்
*MBA* - வயம்ப பல்கலைக்கழகம்
நுண் நிதியியலில் சான்றிதழ்



திரு. டப்ளியூ.எம்.எஸ். விஜேதுங்க
உதவிப் பொது முகாமையாளர்
தகவல் தொழில்நுட்பம்
*B.Sc.*- பயன்பாட்டு அறிவியல் பட்டம் -
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
*M.Sc.* தகவல் தொழில்நுட்பம்
கொழும்பு பல்கலைக்கழகம்
தகவல் தொழில்நுட்பத்தில் *MBA* நிபுணத்துவம் -
சிக்கினி மனிபால் பல்கலைக்கழகம்
வங்கி முகாமைத்துவத்தில் *PGEXDip*
இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்



திரு. டப்ளியூ.பீ.எம்.கே. தசந்த
உதவிப் பொது முகாமையாளர்
கட்டட மற்றும் பராமரிப்பு
*B.SC. (ENG.) - HONS.* - மொறட்டுவ
பல்கலைக்கழகம்
*PGDIP. IN TECHNOLOGY* - இலங்கை திறந்த
பல்கலைக்கழகம்
பட்டய பொறியியலாளர் - MIE (SL)



திருமதி ஆர்.எம்.ரீ. ராஜபக்ஷ
சபையின் செயலாளர்
சட்டத்தரணி
*LLB* - கொழும்பு பல்கலைக்கழகம்



திருமதி டப்ளியூ.வீ.டீ.பி. குமுதினி
உதவிப் பொது முகாமையாளர்
மனித வள சேவைகள் மற்றும் அபிவிருத்தி
*B.Sc.* பொது நிர்வாகம் (சிறப்பு) பட்டம் -
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# உதவிப் பொது முகாமையாளர்கள் / பிரிவுத் தலைவர்கள்



திரு. சீ.எல்.சீ. முத்துபண்டா
உதவிப் பொது முகாமையாளர்
உள்ளகக் கணக்காய்வாளர்
*B.Sc.* வர்த்தக நிர்வாகம் (சிறப்பு)
பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
*CBF* - இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்



திருமதி டப்ளியூ.எம்.ஐ.கே. அபேரத்ன
உதவிப் பொது முகாமையாளர்
நிருவாகம்
*B.Sc.* (இயற்பியல் அறிவியல்) பட்டம் -
பேராதனைப் பல்கலைக்கழகம்



திரு. பீ.எச். விஜேதிலக
உதவிப் பொது முகாமையாளர்
தென் மாகாணம்
*B.Sc (Estate Mgt.& Valuation)* பட்டம் -
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
*CBF* - இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்



திரு. டீ.எம். குணசிங்க
உதவிப் பொது முகாமையாளர்
ஊவா மாகாணம்
*B.com* பட்டம் - ருஹுணு பல்கலைக்கழகம்



திருமதி ஜி.பீ.எம்.ரீ.கே. விஜேரத்ன
பிரதம முகாமையாளர்
இணக்கம்
*BA*(பொருளியல்) சிறப்பு - பேராதனை
பல்கலைக்கழகம்
*CBF* - இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்



திருமதி பீ.என்.ஏக்கநாயக்க
பிரதம சட்ட அதிகாரி
சட்டத்தரணி



மேஜர் ஜெனரல் ஜே.சி.பி. பக்ஷவீர
தலைமைப் பாதுகாப்பு அதிகாரி
*RSP,VSV,USP (Rtd)*

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்


26 நிதி மீளாய்வு
29 வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு
32 சந்தைப்படுத்தல் மீளாய்வு
37 சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு
39 பணியாட்கள் மீளாய்வு
42 விசேட நிகழ்வுகள்
49 இடர் முகாமைத்துவம்

# நிதி மீளாய்வு

அபிவிருத்தி நிதி தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு நிதி நிறுவனம் என்ற வகையில் RDB நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முக்கிய பங்காற்றி வருகிறது. உணர்திறன் மற்றும் நவீன காலகட்டத்தில் துடிப்புடன் பங்குபற்ற அதிகமான நிதி நிறுவனங்கள் தயங்கி வரும் இந்த வேளையில், பொருளாதாரத் துறைகளுக்கு சேவை வழங்குவதன் ஊடாக நாட்டின் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக செயற்படுகின்ற ஒரு தனித்துவமான நிதி நிறுவனமான RDB ஒரு நிதியாளர் என்ற அடிப்படையில் நாட்டின் பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய இடம் வகிக்கிறது. வடக்கு - கிழக்கு உட்பட நாடு பூராகவும் பரந்துள்ள 06 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் தளம், எமது பிரதான சொத்தாகும். நாட்டையும் நாட்டு மக்களையும் முன்னேற்றுவதில் வங்கி கவனம் செலுத்துகிறது. எனவே, அவர்களை மேம்படுத்துவதன் மூலம் நாடு பூராகவும் பரந்துள்ள 276 கிளைகள் ஊடாக தேசத்தைக் கட்டியெழுப்புகிறது.

## இலாபத் தன்மை

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வங்கியின் மொத்த வருமானம் 6% ஆல் அதிகரித்துள்ளது. 2019 இல் செயற்படு இலாபம் ரூபா 2,960 மில்லியனாக குறைந்துள்ளது. இது, 2018 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,606 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 18% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 இல் 2.1% ஆக இருந்த சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) 2019 இல் 1.6% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. 31.12.2019 இல் உள்ளவாறு வங்கி அடைந்த மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 பில்லியன் ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 13% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

## வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட முக்கியமான சாதனைகள்

| | உண்மையான ரூபா '000 | குறிப்பிடப்பட்ட ரூபா '000 | சாதனை % |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 27,507,821 | 26,247,150 | 105 |
| செயற்படு இலாபங்கள் | 2,960,258 | 3,147,868 | 94 |
| வரிக்கு பிந்திய இலாபம் | 498,595 | 417,098 | 120 |

## RDB யின் காலாண்டு நிதிச் செயற்திறன்

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓரளவு முன்னேற்றமடைந்த RDB யின் காலாண்டு நிதிச் செயற்திறன்

| | 2019 | | | | |
|---|---|---|---|---|---|
| | டிசம்பர் 31 ரூபா '000 | செப்டம். 30 ரூபா '000 | ஜூன் 30 ரூபா '000 | மார்ச் 31 ரூபா '000 | 2018 டிசம். 31 ரூபா '000 |
| நிகர செயற்படு வருமானம் | 10,916,887 | 7,662,298 | 4,983,868 | 2,240,309 | 11,442,195 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 2,960,258 | 1,836,691 | 1,206,261 | 413,445 | 3,606,330 |
| வரிக்கு பின் இலாபம்/(நட்டம்) | 498,595 | 133,576 | 78,982 | (25,750) | 1,073,586 |
| கடன்கள் மற்றும் பெறுகைகளும் | 144,693,551 | 140,805,499 | 139,606,532 | 136,388,470 | 137,769,683 |
| வாடிக்கையாளர் வைப்புகள் | 149,599,829 | 146,461,414 | 143,840,189 | 139,220,160 | 141,559,974 |
| மொத்த சொத்துக்கள் | 199,978,929 | 190,329,661 | 187,881,565 | 175,763,050 | 176,937,319 |
| பங்குதாரர் நிதியம் | 14,965,322 | 14,634,015 | 14,805,590 | 14,763,500 | 14,710,115 |

## வருமானம்


வங்கியின் மொத்த வருமானம் வருடாந்த அடிப்படையில் 6% ஆல் அதிகரித்து ரூபா 26 பில்லியனில் இருந்து ரூபா 27.5 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதற்குப் பிரதான காரணியாக அமைந்தது வட்டி வருமானமாகும். வட்டி வருமானம் 6% ஆல் உயர்வடைந்தது.

## மொத்த வருமானத்தின் உள்ளடக்கம்

| | ரூபா '000 |
|---|---|
| வட்டி வருமானம் | 26,357,071 |
| கட்டண மற்றும் தரகு வருமானம் | 1,134,422 |
| ஏனைய செயற்படு வருமானம் | 16,328 |
| மொத்த வருமானம் | 27,507,821 |

## நிகர வட்டி வருமானம் (NII)


2019 இல் நிகர வட்டி வருமானம் ரூபா 11,906 மில்லியனில் இருந்து ரூபா 12,453 மில்லியனாக அதிகரித்தது. இது 5% அதிகரிப்பாகும்.




நிகர வட்டி வருமானம் (ரூபா. மில்.)

## நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம்

2019 இல் 8% வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது, 2018 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 928 மில்லியனுக்கு எதிராக 2019 இல் ரூபா 856 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது.




நிகர வட்டி மற்றும் தரகு வருமானம் (ரூபா மில்.)


## வரி விதிப்பு

| | 2019 ரூபா '000 | 2018 ரூபா '000 | மாற்றம் % |
|---|---|---|---|
| நிதிச் சேவைகள் மீதான VAT வரி | 1,012,949 | 1,158,678 | -13 |
| தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கான வரி | 123,626 | 154,490 | -20 |
| வருமான வரி | 723,566 | 1,029,496 | -30 |
| கடன் மீள் கொடுப்பனவுத் தீர்வை | 601,523 | 190,080 | 216 |
| மொத்த வரிச் செலவு | 2,461,663 | 2,532,744 | -3 |

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கி நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கான வரி மற்றும் கடன் மீள் கொடுப்பனவுத் தீர்வை என்பனவற்றுக்கு ரூபா 1,738 மில்லியனை செலவிட்டது. வருமான வரி ரூபா 724 மில்லியனாக அமைந்திருந்தது. இந்த வருடத்திற்கான மொத்த வட்டித் தொகை ரூபா 2,462 மில்லியன்.

## சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA)


வங்கி 2018 இல் பதிவு செய்யப்பட்ட 2.1% ROA க்கு எதிராக 2019 இல் 1.6% ஆக பதிவு செய்தது.




சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) (%)

## பங்குரிமை மீதான திரும்பல் (ROE)

வரிக்குப் பின்னரான இலாபம் மற்றும் 31.12.2018 இல் வழங்கப்பட்ட பங்கு என்பவற்றில ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ROE 3.4% ஆக குறைவடைந்தது.




வருவாய் மீதான திரும்பல் (ROE) (%)


# நிதி மீளாய்வு

## மொத்த சொத்துக்கள்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வங்கியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 13% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இதற்கமைய, சுமார் ரூபா 200 பில்லியனை அடையும் இலக்கை நோக்கி மொத்த சொத்துக்களின் தளம் ரூபா 199 பில்லியனைக் கடந்துள்ளது. முன்னாள் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியை இணைத்துக் கொண்டமையினால் ரூபா 9.3 பில்லியன் மொத்த சொத்து உட்பாய்ச்சல் ஏற்பட்டது. இதன் காரணமாக, வங்கி மொத்த சொத்துக்களை ரூபா 200 பில்லியனை அடையக் கூடியதாக இருந்தது.

## மொத்த பங்குதாரர்களின் பங்குரிமை


2018 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 14,710 மில்லியனாக மொத்த பங்குதாரர்களின் பங்குரிமை 2019 இல் ரூபா 14,965 மில்லியனாக அமைந்திருந்தது.




மொத்த பங்குதாரர்களின் ஒப்புரவு (ரூபா மில்.)


## சொத்துக்களின் தரம்

2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, வங்கியின் செயலற்ற கடன் விகிதம் (NPL) 9.63% ஆக அதிகரித்தது. கடந்த வருட இறுதியில் இதன் பெறுமதி 5.4% ஆகும். வெளிப்புற சாதகமற்ற காரணிகள் இக்காலப் பகுதியின் போது NPL இன் கணிப்பிட முடியாத அதிகரிப்பை ஏற்படுத்தியது.




செயலற்ற கடன்கள் (NPL) விகிதம் (%)

இலங்கை மத்திய வங்கியின் கடன் இடர் வகுப்பாக்கத்தின் அடிப்படையில் வங்கியின் செயலற்ற கடன்கள் மீதான ஒரு பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.




இலங்கை மத்திய வங்கியின் கடன் இடர் வகுப்பாக்கத்தின் அடிப்படையில் வங்கியின் செயலற்ற கடன்கள் (ரூபா மில்.)

## திரவத்தன்மை

| | 2019 | 2018 |
|---|---|---|
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் (SLAR) | 32.38% | 24.27% |

வங்கி அதன் திரவ மட்டங்களை ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலே ஒருசீராகப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளது. இந்த 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியின் போது சில நிறுவன ரீதியான வைப்புகளின் உட்பாய்ச்சல் மற்றும் முன்னாள் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் முதலீட்டு போட்போலியோவில் இருந்து பெறப்பட்ட சொத்துக்கள் காரணமாக, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ஒரு உயர்ந்த SLAR ஐ பதிவு செய்துள்ளது.

# வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு

## கடன் மற்றும் செயற்பாடுகள்

தேசிய மட்டத்தில் அபிவிருத்தி வங்கி ஒன்றாக நாட்டை முன்னேற்றும் பாதையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை மேற்கொள்ள வங்கி எதிர்பார்க்கின்றது. கடன் மிக முக்கிய செயற்பாடாக இருக்கின்றது. வங்கி அதன் குறிக்கோளை அடைந்து கொள்ள இந்தக் கருவியைப் பயன்படுத்துகிறது. பொருளாதாரத் துறையில் விவசாயம், சிறு கைத்தொழில்கள், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, வீடமைப்பு மற்றும் சேவைத் துறைகள் போன்ற முக்கியமான துறைகளை ஊக்குவிப்பதற்கு கடன் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் துறைகளினால் தேசிய வருமானத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்புகளை அதிகரிக்க முடியும். வங்கியின் மற்றுமொரு முக்கியமான அம்சம் யாதெனில், கிராமிய மற்றும் கிராம - நகரங்களுக்கு இடையிலான பிரதேசங்களில் வங்கியின் வலுவான பிரசன்னமாகும். 1985 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இது தொடர்கிறது.

இதன் காரணமாக, கடன் செயற்பாடுகள் உட்பட வங்கியின் அனைத்து நடவடிக்கைகளிலும் அதன் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பல மூலோபாயங்களை வங்கி நிறைவேற்றியுள்ளது. மேலும், தேவையான துறைகளுக்கு சலுகை அடிப்படையில் அமைந்த வட்டி விகிதங்களுடன் இலகுவான பாதுகாப்பு உத்தரவாத, பாதுகாப்புத் தேவைப்பாடுகளுடனான வசதியான சலுகைக் காலத்துடன் கூடிய சௌகரிகமாக உருவாக்கப்பட்ட மீள் கொடுப்பனவுத் திட்டங்கள், கடன் வசதிகள் தொடர்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட, முயற்சியாண்மை அபிவிருத்தி, பயிற்சி நெறி, முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் மீதான ஆலோசனை உதவி போன்ற கடனுக்கு மேற்பட்ட வசதிகளையும் வங்கி அளிக்கின்றது. கடனுக்கு மேற்பட்ட சேவைகள், கடன் பெறும் இடரைக் குறைப்பதோடு, கடனுக்காக உத்தரவாதங்கள் மீது தங்கியிருத்தலையும் குறைக்கிறது.

தற்போது, வங்கி அனைத்து வகையான பல்வேறுபட்ட வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பல்வேறுபட்ட கடன் திட்டங்களை வடிவமைத்துள்ளது. பெரும்பான்மையான அபிவிருத்திக் கடன் திட்டங்களின் செயற்பாடுகளுக்கான நிதி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகிய நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் மீள் நிதியிடல் ஊடாகப் பெறப்படுகின்றது. இதற்கமைய மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் வங்கி அத்தகைய 26 மீள் நிதியிடல் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ஒரு பங்குபற்றும் கடன் நிறுவனமாக (PCI) செயற்பட்டது. இவற்றில் 16 நிகழ்ச்சித் திட்டங்கள் மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்டன.

மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் அனைத்து மீள் நிதியிடல் திட்டங்களின் அநேகமானவற்றில் வங்கி பங்குபற்றுவதன் மூலம், வலுவான பிரதிநிதித்துத்தைக் காட்டுகிறது. மேலும், 2019 ஆம் ஆண்டின் போது வங்கி இலங்கையின் 16 நிறுவன கடன் நிதித் திட்டத்தின் கீழ் துடிப்புடன் செயலாற்றியது.

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் "பண்டகசாலை வரவு நிதியிடல் என்ப பெயரிடப்பட்ட கடனுக்கான புதுமையான சாதனத்தை விரிவாக்கக்கூடிய நிலையில் இருந்தது. இலங்கையில் இத்தகைய ஒரு புதுமையான கருவியை வங்கி ஒன்றினால் விவசாய சமூகத்திற்கு உதவ பயன்படுத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இந்தக் கருவி, விவசாயிகள் தமது உற்பத்திகளைக் குறைந்த சந்தை விலையில் விற்பனை செய்யாது, தமது இருப்புகளை அறுவடைக் காலப்பகுதியில் பிணையமாக வைத்து, தற்காலிக நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அளிக்கிறது. வங்கி அநுராதபுர மாவட்டத்தின் உப்புல்தெனிய, மொனராகல மாவட்டத்தின் புத்தள, மன்னார் மாவட்டத்தின் முருங்கன் ஆகிய இடங்களில் 5,000 தொன்கள் சராசரி கொள்ளளவு கொண்ட 06 பண்டகசாலைத் திட்டங்களை முகாமைத்துவம் செய்வதில் ஈடுபட்டுள்ளது. உலக வங்கியின் உதவியுடன் அரசாங்கம் சார்பாக பொலன்னறுவை, எம்பிலிப்பிட்டிய மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் 2018 இல் புதிதாக ஆரம்பித்துள்ளது. விவசாயிகள் தமது அறுவடைகளை விலைமட்டங்கள் ஸ்திரமடையும் வரை விற்பனை செய்யாது இந்த பண்டகசாலையில் பாதுகாப்பாக வைத்திருக்க வசதி அளிக்கின்றது.

இதேவேளை, விவசாயிகள் தமது அவசர பணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அறுவடை பூர்த்தியாகும் வரை, விலைகள் நியாயமான மட்டத்தை அடையும் வரை இந்தப் பண்டகசாலை வரவுகள் மீது குறுகங்காலக் கடன்களை பெற முடியும். மேலும், வங்கி, விவசாயிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய திறத்தவர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் நிதி அமைச்சினால் அமர்த்தப்பட்ட தகுதிவாய்ந்த ஆலோசகர்களைக் கொண்டு பல விழிப்புணர்வு நிகழ்சித் திட்டங்களை நடத்துவதில் ஈடுபட்டது.

வங்கி 2019 ஒக்டோபரில் நிதிக் குத்தகைச் செயற்பாடுகளை அரம்பித்தது. 2019 முடிவில் இலங்கை ரூபா 97 மில்லியனைக் கொண்ட 43 அத்தகைய வசதிகைள் பெற்றுக் கொண்டது.

வங்கி, 2019 இல் வங்கியால் வழங்கப்டுகின்ற கடன்களுடன் தொடுபுடைய காப்புறுதி செயற்பாடுகளுக்கு ஒரு ஊடகமாக இருந்து கட்டண வருமானத்தை தொடர்ந்து பெறுகிறது.


இந்த நோக்கத்திற்காக விவசாயக் காப்புறுதி, கால்நடைக் காப்புறுதி, வாகன கடன் காப்புறுதிகள். வீட்டுக் கடன் காப்புறுதிகள் போன்ற காப்புறுதிக் கொள்கைகளைப் பெற 15 காப்புறுதிக் கம்பனிகளின் சேவைகளை வங்கி பெற்றுக் கொண்டது. மேலும், 2019 இல் ஆரம்பித்த நிதிக் குத்தகை செயற்பாடுகளுக்கும் இந்த சேவையை விரிவாக்கம் செய்துள்ளது. 2019 இல் பெறப்பட்ட வட்டி வருமானம் இலங்கை ரூபா 18 மில்லியன் ஆகும். இந்த அனுபவத்தைக் கொண்டு வங்கி, காப்புறுதி நடவடிக்கைகளை விதிமுறைப்படுத்தவும், விரிவாக்கவும் பாங்க'ரன்ஸ் பிரிவை மேலும் வலுப்படுத்தியது.

மேலும், வங்கி, 2017 இல் ஆரம்பிக்கப்பட்ட RDB யின் கிளை வலையமைப்புகள் ஊடாக வாடிக்கையாளர்கள் இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை டெலிகொம் பிஎல்சி ஆகியவற்றின் பயன்பாட்டுக் கட்டணங்களை செலுத்துவதற்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக பயன்பாட்டு பட்டியல் கொடுப்பனவு வசதியை மேலும் விரிவுபடுத்தியது. எதிர்காலத்தில் ஏனைய சேவை வழங்குநர்களுக்கும் இந்த வசதியை விரிவாக்க RDB எதிர்பார்க்கிறது.

ஏற்ற இறக்க பெரும்பாக பொருளாதார சூழ்நிலை நிலவியதனால், 2019 இல் வங்கி கடன் வழங்கும் செயற்பாட்டில் தீவிரமாக ஈடுபடவில்லை. எனினும், அரசாங்கத்தினுடைய நோக்கிற்கு அமைவாக சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களுடன் கூடிய கடன்களை பொருளாதாரதின் தேவையான துறைகளுக்கு கடன் வழங்கி ஒரு முக்கிய பங்கை ஆற்றியது.

# வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு


## கடன்கள் மற்றும் முற்பண வளர்ச்சி




கடன்கள் மற்றும் முற்பண வளர்ச்சி (ரூபா. மில்.)

## கடன்கள் மற்றும் முற்பணங்கள் போட்போலியோ பகுப்பாய்வு - தயாரிப்பு வாரியாக


| வகை | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| அடகு | 13,747 | 11,455 |
| ஊழியர் கடன்கள் | 3,561 | 3,479 |
| குறுங்கால | 10,201 | 9,181 |
| நீண்டகால | 117,185 | 113,655 |
| மொத்தம் | 144,694 | 137,770 |




கடன்கள் மற்றும் முற்பண போட்போலியோ பகுப்பாய்வு - தயாரிப்பு வாரியாக (ரூபா. மில்.)

## கடன்கள் மற்றும் முற்பண போட்போலியோ பகுப்பாய்வு - கைத்தொழில் துறை வாரியாக

| வகை | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| விவசாயம் மற்றும் மீன்பிடி | 29,289 | 36,880 |
| உற்பத்தி | 22,724 | 22,907 |
| போக்குவரத்து | 165 | 244 |
| நிர்மாணம் / வீடமைப்பு | 23,618 | 20,086 |
| வியாபாரிகள் | 24,261 | 22,819 |
| நுகர்வு / வைப்புக்கு எதிரான / பணியாட்கள் / உல்லாசப் பிரயாணத்துறை | 44,637 | 26,852 |
| மொத்தம் | 144,694 | 137,770 |




**A** விவசாயம் மற்றும் மீன்பிடி
**B** உற்பத்தி
**C** போக்குவரத்து
**D** நிர்மாணம் / வீடமைப்பு
**E** வியாபாரிகள்
**F** நுகர்வு / வைப்புக்கு எதிரான / பணியாட்கள் / உல்லாசப் பிரயாணத்துறை

கடன்கள் மற்றும் முற்பண போட்போலியோ பகுப்பாய்வு - கைத்தொழில் துறை வாரியாக (ரூபா. மில்.)


## அறவீடுகள்

2018 ஆம் ஆண்டு இறுதியில் 5.4% ஆக இருந்த செயலற்ற கடன் போட்போலியோவை நிர்வகிப்பதற்கு வங்கி 2019 இல் விசேட கவனம் செலுத்தியது. இந்த விசேட முயற்சிகள் காரணமாகவும், எமது பல வாடிக்கையாளர்களால் வெளிச் சூழலில் இருந்து ஏற்பட்ட துரதிஷ்டவசமான சூழ்நிலைகள் காரணமாகவும் எழுந்த அழுத்தத்தை கவனமாகக் கையாண்டமையினால், இவ்வருடத்தின் போது ஓரளவான கடன் வளர்ச்சியை அடைந்த அதேவேளை, 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 9.63% NPL விகிதத்தை தக்க வைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

| செயலற்ற வகை | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| விசேடமாகக் குறிப்பிட்ட | 2,051 | 1,323 |
| தரம் குறைந்த | 3,185 | 2,080 |
| சந்தேகமான | 2,228 | 1,431 |
| இழப்பு | 6,247 | 2,429 |
| மொத்த செயலற்ற | 13,711 | 7,263 |
| NPL விகிதம் (%) | 9.63% | 5.40% |

## வைப்பு வளர்ச்சி


வங்கியின் வைப்புத் தளம் சுமார் ரூபா 150 பில்லியனுக்கு அதிகரித்தது. இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 6% வளர்ச்சியை பிரதிநிதித்துவம் செய்கிறது. இதற்கு, சேமிப்பு வைப்புகள் பிரதான காரணியாக அமைந்திருந்தது. இது 9% ஆல் வளர்ச்சியடைந்த அதேவேளை நிலையான வைப்புகள் 4% ஆல் வளர்ச்சியடைந்தன.




வைப்பு வளர்ச்சி (ரூபா. மில்.)

## சேமிப்புக் கலவை (இ.ரூ. மில்.)

| சேமிப்பின் வகை | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| சேமிப்பு வைப்புகள் | 55,951 | 51,519 |
| நிலையான வைப்புகள் | 93,649 | 90,040 |
| மொத்தம் | 149,600 | 141,559 |




வைப்புக் கலவை (இ.ரூ. மில்.)

## 2019 இல் தகவல் தொழில் நுட்பத்தில் அடைந்த சாதனைகள்

வாடிக்கையாளர்களின் சேவைகளை தொழில்நுட்ப அமுலாக்கல் மூலம் உயர்த்துவதற்கு வங்கி 2019 இல் தகவல் தொழில்நுட்ப முறையை மேலும் மெருகூட்டியது.

2019 இறுதியில் வங்கி அதன் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு 200,000 க்கு மேற்பட்ட ATM அட்டைகளை வழங்கியது. அத்துடன், வங்கியினால் உரிமை கொள்ளப்பட்ட ATM களின் எண்ணிக்கை 50 வரை அதிகரிக்கப்பட்டது. RDB இவ்வருடத்தில் 24 மணி நேர வங்கிச் சேவையை வழங்க, தெரிவு செய்யப்பட்ட இடங்களில் 5 CDM அலகுகளைப் பொருத்தியுள்ளது.

லங்கா கிளியர் நிறுவனத்தின் உதவியுடன் IT திணைக்களம் EMV அடிப்படையிலான JCB Chip அட்டைகளை வெற்றிகரமாகப் பரீட்சித்தது. எதிர்காலத்தில் EMV அடிப்படையிலான JCB Chip அட்டைகளை ATM மற்றும் கடன் அட்டைகளுக்கு வழங்க திட்டமிட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் சட்ட வழக்கு முகாமைத்துவ முறைமைத் தொகுதியை (LCMS) வங்கிக்கு அறிமுகப்படுத்தக்கூடியதாக இருந்தது. இந்த முறைமையின் கீழ் பொருத்தமான அதிகாரமளிக்கப்பட்ட பணியாட்கள் வங்கியினாலும் வங்கிக்கு எதிராகவும் பதிவு செய்யப்பட்ட சட்ட வழக்குகளைக் கண்காணிக்க முடியும்.

2019 இல் குத்தகை வணிகத்தை நடத்துவதற்கு முக்கிய வங்கி முறைமை (CBS) என்ற தயாரிப்புத் தொகுதி வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விரிவான குத்தகைத் தொகுதி குத்தகை வணிகத்திற்குரிய காப்புறுதி மற்றும் மீட்புப் பணிகளை முழுமையாக ஒருங்கிணைத்துள்ளது.

பல்வேறுபட்ட கணனி அடைவுச் சொற்களை நினைவில் வைத்திருப்பது பணியாட்களுக்கு கடினமாக இருந்ததால், IT திணைக்களம் உள்ளகப் பணியாட்களுக்காக "பொது முறைமை முகப்பு ஒன்றை" (CSP) அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் அனைத்துக் கணனி முறைமைகளையும் ஒரு அடைவுச் சொல்லைப் பயன்படுத்தி அடையக்கூடியதாக உள்ளது.

2019 இல் வீட்டு வாயிலில் வங்கிச் சேவையை வழங்குவதற்காக "பயன்பாட்டுப் பட்டியல் சேகரிப்புத் தொகுதி" என்பதை வெற்றிகரமாக அமுல்படுத்தியது. இது, RDB வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் அல்லாதோர் வங்கிகளுக்கு சமூகமளிக்காது தமது பயன்பாட்டுக் கட்டணங்களை இலகுவாக செலுத்தக்கூடியதாக இருக்கும்.

"பாங்க'ரன்ஸ் முறைமையை அறிமுகப்படுத்திமை, 2019 ஆம் ஆண்டில் IT திணைக்களம் அடைந்த மற்றுமொரு சாதனையாகும். இந்தத் தொகுதிகள் காப்புறுதிச் செயன்முறையின் அனைத்துப் படிமுறைகளையும் கண்டறிய உதவுகிறது.

2019 ஆம் வருடத்தில் IT திணைக்களம் "பிரச்சினைகளை கையாளும் முறைமை" என்பதை கூடிய வினைத்திறனுடன் இறுதிப் பயன்பாட்டாளர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகளை கண்காணிக்கவும் பூர்த்தி செய்யவும் மீள வடிவமைக்கப்பட்டது.

# சந்தைப்படுத்தல் மீளாய்வு

## தயாரிப்பு மற்றும் சேவைகள்

### RDB கெகுளு - சிறுவர் சேமிப்புக் கணக்கு

RDB கெகுளு கணக்கு 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். இந்தக் கணக்கின் மூலம் எமது தாய்நாட்டின் ஒவ்வொரு பிள்ளையின் ஒளி மயமான எதிர்காலத்திற்காக RDB யுடன் சேமிக்க முடியும். RDB ஒவ்வொரு புதிய கணக்கிற்கும் ஒரு புதிய சேமிப்பை வழங்குகிறது. மேலும், பல எண்ணிக்கையான பரிசுகளும் வழங்கப்படுகின்றன. குடைகள், பாடசாலைப் புத்தகப்பைகள், அகராதிகள், பரிசு வவுச்சர்கள் அத்துடன் வெவ்வேறு மட்டங்களில் கணக்கிலுள்ள மீதிகளுக்காக சலுகை அடிப்படையில் சிறுவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்படுகின்றன. சேமிப்புகளுக்கு உயரிய திரும்பல்களை வழங்குவதன் ஊடாக சிறுவர் சமூகத்திற்கிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கும் நடவடிக்கைகளையும் வங்கி மேற்கொண்டுள்ளது. இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு சேமிக்கும் பழக்கத்தைத் தூண்டுகிறது. இதற்கமைய, ஒரு அரச வங்கி என்ற அடிப்படையில் RDB "RDB கெகுளு" எனப் பெயரிடப்பட்ட விசேட திட்டத்தை இலங்கையின் சிறுவர்களுக்காக எதிர்காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. பிள்ளைகளுக்கு சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான பயனுள்ள பரிசுகள், புலமைப் பரிசில்கள் மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களையும் வழங்குவதன் மூலம் சேமிக்கும் பழக்கத்தை சிறு வயது முதலே ஏற்படுத்த வங்கி எத்தனிக்கிறது. RDB பிள்ளைகளுக்கு சேமிக்கும் பழக்கத்தை தூண்டுவதற்கான பாடசாலை சேமிப்பு நிலையங்களை உருவாக்குவதன் காரணமாக, பிள்ளைகளுக்கு சேமிக்கும் பழக்கம் முக்கியத்துவம் பெறுகிறது. இதனைவிட இந்தக் கணக்கு மேலதிக குறிக்கோள்களை அடைய வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, பிள்ளைகளுக்கு கல்விக்கு உதவுதலும் நாட்டின் சிறந்த பிரசைகளாக அவர்களை உருவாக்குவதுமாகும். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் குறிப்பிட்ட வருடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் கணக்கினை வைத்திருக்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைகளுக்காக தோற்றுகின்ற கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### RDB 4டீன் பிளஸ்

RDB 14+ கணக்கு RDB வங்கியினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, பதின்ம வயதினர் சமூகத்தினரை சேமிக்கும் பழக்கத்தை நோக்கிக் கொண்டுவருவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு விசேட சேமிப்புக் கருவியாகும். இந்தக் கணக்கு 14 வயதுக்கு மேற்பட்ட பதின்ம வயதினருக்காக விசேடமாகத் திட்டமிடப்பட்டது. சிக்கனம் மற்றும் சேமிப்புப் பழக்கங்கள் இளம் வயதிலிருந்தே நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்திற்காக திட்டமிடவும், அதன் மூலம் எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். இதற்கமைய RDB யின் 14+ பதின்ம வயதினரைக் கவரக் கூடிய வகையில் பெறுமதி சேர்க்கைகளுடன் செயற்படுகிறது. கணக்கிலுள்ள மீதி வளர்ச்சியை ஒப்பிட்டு, மேலதிக போனஸ் வட்டி, உயர் வட்டி வீதத்திற்கு மேலதிகமாக RDB 14+ கணக்கிற்கு வழங்கப்படுகிறது. இதற்கு ATM அட்டை வழங்கப்படுவதால், 14 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் தமது நிதித் தேவைகளுக்காக பணத்தை மீளப் பெற முடியும். ஆகவே, பிள்ளைகள் பணத்தை தமது கைகளில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. பிள்ளைகள் பாடசாலையில் தமது அவசர நிதித் தேவைகளுக்காக இந்தக் கணக்கினைப் பயன்படுத்தலாம். ATM அட்டைகள் மூலம் ஒவ்வொரு மீள் பெறுகை நடைபெற்ற பின்னரும் பணம் மீளப் பெற்றமைக்கான விபரங்களை வழங்கி ஒரு குறுஞ்செய்தி பாதுகாவலரின் கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பி வைக்கப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரங்களின்படி இலங்கையின் மொத்த தொழிற்படையில் சுமார் 10% ஆனோர் 15 - 25 வயதுக்கு உட்பட்டவர். இந்த தொழிற்படைக்குள் வருகின்ற ஆட்கள் இந்தக் கணக்கின் மூலம் விசேட அனுகூலங்களைப் பெறலாம். இளம் சமூகத்தினர் தமது கனவுகளான வீடு, வாகனம் மற்றும் தளபாடங்களை வாங்குதல், வியாபாரத்தை ஆரம்பித்தல், இலத்திரனியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், கல்விசார் தேவைப்பாடுகள், வெளிநாட்டுப் பயணங்கள் என்பவற்றைப் பூர்த்தி செய்யலாம். இக்கணக்கினை வைத்திருப்பவர்களுக்கு இக்கணக்கின் ஊடாக இவ்விடயங்கள் எளிதாக்கப்படும். நடைபெறும் சகல பரிவர்த்தனைகள் தொடர்பாக உங்களுடைய கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும்.

### RDB லிய சவிய - மகளிர் சேமிப்புக் கணக்கு

இந்தக் கணக்கு, இலங்கையிலுள்ள துணிச்சல் மிக்க பெண்களை நோக்கி உருவாக்கப்பட்டது. வங்கி நிதி வசதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக, சுயதொழில் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பெண்களுக்கு வங்கி ஆலோசனைசார் சேவைகளை அளிக்கிறது. உயர் வட்டி வீதம், போனஸ் வட்டி மற்றும் போட்டி அடிப்படையிலான வட்டி வீதங்கள் மீதான முற்பணங்கள் என்பன இந்தக் கணக்கின் விசேட பண்புகளாகும். சர்வதேச மகளிர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு வருடமும் மகளிர் முயற்சியாண்மையாளர்களுக்கு விசேட கருத்தரங்குகள், திறன் அபிவிருத்தி தொழில் பயிற்சி நெறிகள் மற்றும் பல்வேறுபட்ட பிரதேச மற்றும் தேசிய மட்ட செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன. இதனைவிட வங்கி, நாடு பூராகவும் சிறந்த மகளிர் முயற்சியாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியை ஏற்பாடு செய்கிறது. இக்கணக்கை வைத்திருப்பவர்கள் இந்தப் போட்டியில் பங்குபெற முடியும்.

## RDB லிய சவிய பிளஸ் - மகளிர் முதலீட்டுக் கணக்கு

RDB லிய சவிய பிளஸ் - மகளிர் முதலீட்டுக் கணக்கு, பாதுகாப்புடன் கூடிய நடுத்தர கால முதலீட்டுச் சந்தர்ப்பம் மற்றும் விசேட கடன் திட்டங்கள் என்பவற்றுடன் ஊக்குவிக்கும் குறிக்கோளைக் கொண்டு, மகளிருக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு சேமிப்புத் திட்டமாகும்.

### RDB லிய சவிய பிளஸ் - மகளிர் முதலீட்டுக் கணக்கு அம்சங்கள்

- 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இக்கணக்கைத் திறக்கத் தகுதியுடையோர்
- ஐந்து வருட முதலீட்டுத் திட்டம்
- உயர் வட்டி வீதம் வழங்கப்படுகிறது
- சேமிப்பை ஊக்குவிப்பதற்காக விசேட பரிசுத் திட்டம்

## RDB NEW LIFEஓய்வூதியத் திட்டம்

RDB New Life ஓய்வூதியத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு விசேட கணக்காகும். இக்கணக்கில் இருந்து உயர் வட்டி வீதம் ஒன்றைப் பெற முடியும். இது ஒரு ஓய்வூதியத் திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்தம் பிரசுரிக்கப்படும் 6 மாத சராசரி AWDR இன் அடிப்படையில் வட்டி விகிதம் வருடத்திற்கு இரு முறை புதுப்பிக்கப்படும். AWDR (சராசரி மொத்த வைப்புகள் விகிதம்) கணக்கு வைத்திருப்பவர் 55 அல்லது 60 வயதை அடையும் போது இந்தக் கணக்கு ஒரு காப்பீட்டு ஓய்வூதிய அனுகூலத்தை வழங்கும். இந்தத் தொகை கணக்கு வைத்திருப்பவர் இறக்கும் வரை செலுத்தப்படும். எனவே, சுயதொழில் வாய்ப்பை மேற்கொள்வோர், வணிகர்கள், விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், ஓய்வூதியம் பெறாத வேலையாட்கள் போன்ற எந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்தற்ற ஆட்களுக்கும் இக்கணக்கு மிகப் பொருத்தமாக அமையும். இந்தக் கணக்கை 16 - 60 வயதுக்கு உட்பட்ட குழுவினர் ஆரம்பிக்கலாம். அத்துடன், கணக்கு வைத்திருப்பவரின் நிதிப் பாய்ச்சலுக்கு அமைவாக கணக்கை வைப்பு செய்யுலாம். கிரமமான கட்டுப்பணத்துடன் கூடிய முதலீடுகள் அல்லது ஒரே முறையில் முதலீடு செய்யப்படும் ஒரு தொகை மூலம் கணக்கு வைத்திருப்பவரின் வாழ்காலத்தில் கணக்கைப் பெருக்கலாம். ஓய்வு பெற்ற பின்பு இந்தச் சேமிப்பின் முழுத் தொகையை அல்லது ஒரு பகுதியை கிரமமான ஓய்வூதிய வருமானத்தை உருவாக்க பயன்படுத்தப்படலாம். இந்தக் கணக்கின் மீதி மாதாந்தம் ஓய்வூதிய நலனாக பயன்படுத்தப்படும்.

## RDB விக்டரி

RDB விக்டரி கணக்கு, ஒரு விசேட சேமிப்புக் கணக்காகும். இக்கணக்கின் விசேட அம்சம் என்னவெனில், பணத்தை மீளப் பெறும் போது, உயர் வீதம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கணக்கின் ஊடாக ஒரு போனஸ் வட்டி விசேட அனுகூலமாக வழங்கப்படுகிறது. மேலும், கணக்கு வைப்பாளர்களால் விசேட கடன் வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும். கணக்கு மீதியில் உள்ள தொகையில் 10 மடங்கினை ஒரு கடனாகப் பெறலாம். ஒருசில நாட்கள் மாத்திரம் பணத்தை வைப்பு செய்திருந்தாலும், இந்தக் கணக்கின் மூலம் போனஸ் வட்டி வழங்கப்படும். மேலும், அனைத்து பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்களும் குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்படும். நாட்டின் அபிவிருத்திக்கு பிரசைகளின் சேமிப்பு நடைமுறை மிகவும் முக்கிய பங்களிப்புச் செய்கிறது. அத்துடன், RDB விக்டரி வைப்புக் கணக்கு மக்களின் சேமிப்புப் பழக்கத்தை முன்னேற்றும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டமாகும். இந்தக் கணக்கின் மூலம் விசேட தள்ளுபடி விகிதங்களுடன் பணப் பரிமாற்றச் சேவைகளுக்கான ஏற்பாடு இருப்பது ஒரு விசேட அம்சமாகும்.

## RDB உத்தம சிரேஷ்ட பிரசைகள் சேமிப்புக் கணக்கு

RDB வங்கி இந்த சிரேஷ்ட பிரசைகள் குழுவுக்கு சந்தையில் போட்டியான வட்டி வீதங்களை வழங்குகிறது. 55 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு தனி நபரும் ரூபா 500 ஐ ஆரம்ப வைப்பாகக் கொண்டு இந்தச் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம். கணக்கு வைத்திருப்பவருக்கு தமது முதலீட்டிற்காக உயர் வட்டி வீதங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்கள் தமது பயன்பாட்டுப் பட்டியல் கட்டணங்களை, சேவைக் கட்டணங்கள் இன்றி வழங்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இலவச மருத்துவப் பரிசோதனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், ஓய்வூதியம் பெறுவோர் "RDB தெடுசவி" கடன் வசதிகளைப் பெற உரித்துடையவர்கள்.

# சந்தைப்படுத்தல் மீளாய்வு

# தயாரிப்பும் சேவைகளும்

## RDB முதலீட்டுக் கணக்கு

இது, கடன் வசதிகளைப் பெறுகின்ற வங்கியின் வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொது முதலீட்டுக் கணக்கு ஒன்றாகும். இந்தக் கணக்கின் கீழ் வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டியும், விசேட கடன் திட்டமும் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

## RDB நிலையான வைப்புகள்

RDB யின் நிலையான வைப்புகள் அதன் தனிப்பட்ட மற்றும் கூட்டுறவு வாடிக்கையாளர்களிடையே ஒரு பிரசித்தி பெற்ற முதலீடாக இனங்காணப்பட்டுள்ளது. RDB யில் நிலையான வைப்புகள் 1, 2, 3 மற்றும் 6 மாதங்கள் மற்றும் 1 - 5 வருடங்கள் ஆகிய காலப்பகுதிகளுக்கு உண்டு. ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடுகையில், ஒரு கவர்ச்சிகரமான வட்டியை ஆரம்பத்தில் இருந்தே வங்கி வழங்கி வருகிறது. ஒரு வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட முதிர்வுக் காலப்பகுதிகளுடன் நிலையான வைப்புகளுக்கு விசேட வட்டி வீதங்கள் வழங்கப்படுகின்றன.

## RDB ஜய நிதான வைப்புச் சான்றிதழ்கள்

RDB வங்கியினால் உருவாக்கப்பட்ட இந்தத் தயாரிப்பு, சகல பொருளாதார மட்டங்களையும் சேர்ந்த வாடிக்கையாளர்களையும் கவர்கிறது. இந்தச் சான்றிதழ் ரூபா 5,000, ரூபா 10,000, ரூபா 25,000, ரூபா 100,000 ரூபா 500,000 ரூபா 1,000,000 முகப் பெறுமதித் தொகையாகக் கொண்ட ஒரு சான்றிதழை வழங்குகிறது. நாட்டின் சிறிய அளவில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வோருக்கு உதவிக் கரம் நீட்டுவதற்காக வங்கியின் நிலையான வைப்பு போட்போலியோவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தயாரிப்பாகும். இக்கணக்கு முதிர்வடையும் போது பொருத்தமான வட்டியை வங்கி வழங்குவது இந்தத் தயாரிப்பின் சிறப்பம்சமாகும்.

## RDB தொரின் தொர வங்கிச் சேவை

இது, இலங்கையில் வாசல்படி வரையான வங்கிச் சேவையை அளிப்பதில் முன்னோடியாக உள்ள RDB வங்கியின் பிரதான சேவை ஒன்றாகும். இந்த முறைமை ஒரு கடமை உணர்ச்சியுடன் பணியாற்றும் ஒரு தொகையான சேவை வழங்குநர்களால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சேவை வழங்குநர்கள், தினந்தோறும் வியாபார ஸ்தலங்கள் மற்றும் வீடுகளுக்கு விஜயம் செய்வர். இத்தகைய கிரமமான வருகைகள், வாடிக்கையாளர்கள் தமது வங்கிப் பரிவர்த்தனைகளுக்காக மீண்டும் மீண்டும் வங்கிக்கு வருகை தந்து தமது பெறுமதியான நேரத்தை வீணாக்காமல், செலவு குறைந்த வழியில் அவர்களுக்குரிய சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு நிவாரணமாகவும், வசதியாகவும் அமைகின்றது. வீடு வீடாக நடைபெறும் இந்தச் சேவை, வைப்புகளை சேமிப்பது மாத்திரமன்றி, இலக்குகளுக்கு உட்பட்ட வாடிக்கையாளர் தளம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக கடன்களைப் பெற்றுக் கொள்ளவும், கடன் கணக்கிற்கான சேவையைப் பெற்றுக் கொள்ளவும், தவணைக் கட்டணங்களைச் செலுத்தவும் கூடிய வாய்ப்பை அளிக்கின்றது. இதனைவிட இந்தச் சேவை ஊடாகப் பயன்பாட்டுக் கட்டணக் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளலாம். இந்தத் தனித்துவமான சேவை சிறிய அளவு முயற்சியாளர் மற்றும் தனிப்பட்டவர்கள் ஆரோக்கியமான கணக்கு மீதிகளை அதிக முயற்சி, குழப்பமின்றி கட்டியெழுப்புவதற்கு உதவியது. இதனைவிட இந்தப் பரிவர்த்தனைகள், இலத்திரனியல் முகப்பு கையடக்க சாதனங்களின் மூலம் நடைபெறுகிறது. அத்துடன், இந்தப் பரிவர்த்தனை, வங்கி முறைமையில் தானாகவே புதுப்பிக்கப்படும். இவ்வகையில் வங்கியின் “முயற்சியாண்மையாளர்களை வளர்த்தெடுத்தல்” என்ற நோக்கை பூர்த்தி செய்கிறது.

## RDB குத்தகை

"RDB குத்தகை" என்பது, நுண் வியாபாரம் சிறிய மற்றும் நடுத்தர வியாபார முயற்சிகள், தொழில் முறைசார்ந்தோர், பெறுமதி வாய்ந்த அதிக சொத்துக்களை வைத்துள்ள தனியாட்கள், அரசாங்கம் மற்றும் தனியார்துறை பணியாட்கள் ஆகியோர் தமது வணிக மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளுக்காக அவசியமான பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அரசாங்கத்தினால் உரிமை கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தி வங்கி என்ற வகையில் RDB லொறிகள், பார ஊர்திகள், பார ஊர்திகள், வாடகை வண்டிகள், பஸ் ண்டிகள் மற்றும் வான்கள் அத்துடன் சாலை அல்லாத வாகனங்கள், விவசாய வண்டிகள் ஆகிய வணிக வாகனங்களை வாங்குவதற்கும் வசதியளிக்கின்றது.

## லங்கா மணி டிரான்ஸ்பர் (LMT)

வெளிநாட்டிலிருந்து எமது நாட்டிற்கு லங்கா மணி டிரான்ஸ்பர் மூலமாக கிராமிய மற்றும் கிராம - நகர பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் பரந்து கிடக்கின்ற RDB யின் அனைத்துக் கிளைகள் ஊடாக பணத்தை இலகுவாகவும், விரைவாகவும் அனுப்ப முடியும். அனுப்பபடும் அனைத்து பணங்களும், பயனாளிகளின் சேமிப்புக் கணக்கில் உடனடியாக வைப்புச் செய்யப்படும்.

## வெஸ்டர்ன் யூனியன்

வெளிநாட்டிலிருந்து எமது நாட்டிற்கு வெஸ்டர்ன் யூனியன் மூலமாக கிராமிய மற்றும் கிராம - நகர பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் பரந்து கிடக்கும் RDB யின் அனைத்துக் கிளைகள் ஊடாக பணத்தை இலகுவாகவும் விரைவாகவும் அனுப்ப முடியும்.

## ATMகள் மற்றும் CDMகள்

நடைமுறைக் கணக்கு தவிர, வங்கி சேமிப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், மகளிர் கணக்குகள் மற்றும் சிரேஷ்ட பிரசைகளுக்கான கணக்குகள், ஈட்டு வசதிகள் மற்றும் நீண்டகாலக் கடன் வசதிகள் என்பவற்றை உள்ளடக்கிய, பலதரப்பட்ட தயாரிப்புக்களையும், சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. பலதரப்பட்ட சேவைகளை அளித்த போதிலும், அண்மைக்காலம் வரை வங்கி தமது வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் அட்டை வசதிகளை வழங்கவில்லை. எனினும், லங்கா கிளியரின் உதவியுடன் LankaPay பொது ATM அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது வங்கி, வாடிக்கையாளர்களுக்கு ATM அட்டைகளை வழங்கத் தயாராகவுள்ளது. எனவே, 2015 ஆம் ஆண்டில் இருந்து RDB ATM அட்டையை LankaPay இலச்சினை கொண்டுள்ள எந்தவொரு ATM களிலும் தமது கணக்குகளில் இருந்து வாடிக்கையாளர்கள் பணத்தை மீளப் பெறுவதற்கான மூலோபாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எமது பெரும்பான்மையான வாடிக்கையாளர்கள் கிராமிய மற்றும் கிராமிய - நகரங்களுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் இருப்பதனாலும், விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருப்பதாலும் இந்த அட்டை அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, பாதுகாப்பையும் அளிக்கின்றது. தற்போது நாடு பூராக 50 RDB ATM இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, 2018 இல் பண வைப்பு இயந்திர வலையமைப்பை (CDM) வங்கி அறிமுகப்படுத்தியது. எமது வாடிக்கையாளர்களின் வசதி கருதி, வேலைப்பழு கூடிய பல நகரங்களில் இது அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், முறையான வங்கிச் சேவைகள் இல்லாத பதவிசிரிபுர, வெலி-ஓயா ஆகிய இடங்களில் இரண்டு தன்னியக்க வங்கி நிலையங்கள் உள்ளன.

# சந்தைப்படுத்தல் மீளாய்வு

## நடமாடும் வங்கிப் பிரிவு (Mobile Banking)



நடமாடும் வங்கிப் பிரிவு, RDB வங்கினால் வாடிக்கையாளர்களுக்கு ATM வசதிகளையும், கொடுக்கல் வாங்கல் செய்கின்ற முகப்பில் (over-the-counter) வங்கிச் சேவையை வழங்குவதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். பண வைப்புகள், பண மீளப் பெறுதல்கள், புதிய கணக்குகளைத் திறத்தல், பயன்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துதல், வெளிநாட்டு பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை எளிதாக்குகின்ற ஒரு உள்ளமைக்கப்பட்ட கரும பீடம் ஒன்று உள்ளது. இந்தப் பிரிவு அனர்த்த மீட்பு நடமாடும் பிரிவாகவும் செயற்படுகிறது.

## இலங்கையில் வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறை (SLIPS)

RDB யின் SLIPS வங்கிகளுக்கு இடையே பணத்தை இலத்திரனியல் ஊடகம் மூலமாக பரிமாற்றம் செய்யும் ஒரு முறையாகும். இது, இலங்கைக்குள் நடைபெறுகின்ற பாதுகாப்பான ஒரு பணப் பரிமாற்ற முறையாகும். இலங்கையிலுள்ள எந்தவொரு வங்கிக்கும் பணத்தை அனுப்ப SLIPS பயன்படுத்தப்படலாம்.

## பொது இலத்திரனியல் நிதிப் பரிமாற்ற இணைப்பி (CEFTS)

பொது இலத்திரனியல் நிதிப் பரிமாற்ற இணைப்பி (CEFTS) என்பது, ஒரு நிகழ்நேர நிதிப் பரிமாற்ற முறையாக அமைகிறது. இது வாடிக்கையாளர் தமது வசதிக்கு ஏற்ப நிகழ் நேரத்தில் உள்நாட்டில் வங்கிகளுக்கிடையே நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்ளலாம்.

## பயன்பாட்டு பட்டியல் கட்டண கொடுப்பனவு



ஒரே கூரையின கீழ் பயன்பாட்டுப் பட்டியல் கட்டணங்களைச் செலுத்த வசதியளிக்கிறது. இதற்கமைய, வாடிக்கையாளர்கள் தமது மின்சாரப் பட்டியல், நீர் பட்டியல்கள், தொலைத் தொடர்புப் பட்டியல்கள், காப்புறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பட்டியல் கொடுப்பனவுகளை RDB கிளைகள் மற்றும் எமது தொரின் தொர / Grameeya Naika (நடமாடும் சேவைகள்) ஆகியவற்றின் ஊடாக செலுத்த முடியும்.

## பண்டகசாலை வசதிகள்



விவசாயிகள் தமது விவசாயப் பொருட்களை விற்பனை செய்வதன் ஊடாக எதிர் நோக்குகின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக, இலங்கை அரசாங்கம் உலக வங்கியின் உதவியுடன் விவசாயிகளுக்கு வங்கியிலிருந்து கடன்களை பெற்றுக்கொள்வதற்காக பண்டகசாலை வரவுகள் முறைமையை ஆரம்பித்தது. இந்த முறைமை விவசாயப் பொருட்களை விநியோகம் செய்யாது, பண்டகசாலையில் பாதுகாப்பாக வைத்திருந்து, அதன் உரிமையை மாற்றுவதன் மூலம் கடன் பெற வசதியளிக்கிறது.

இந்த வரவுகள், வங்கிக் கடன்களுக்கான ஒரு பிணையாகப் பயன்படுத்தப்படலாம். பண்டகசாலை வரவுகள், நிதி வசதிகள் இரண்டு நோக்கங்களை பூர்த்தி செய்கின்றன. அவையாவன, பண்டகசாலை ஊடாக விவசாயிகளுக்கு ஒரு பெறுமதிமிக்க சேவையையும், அதேவேளை, தாம் பாதுகாப்பாக வைத்திருக்கும் உற்பத்திகளுக்கு எதிராக கடன் பெறுதல் என்பனவாகும்.

கலென்பிந்துனுவெவ, முருங்கன், புத்தள, கிளிநொச்சி, மதவாச்சி, எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களில் 06 பண்டகசாலைகள் RDB யினால் கையாளப்படுகின்றன. இங்கு விவசாயிகள் தாம் உற்பத்தி செய்கின்ற தானிய வகைகளின் அடிப்படையில் மிகக் குறைந்த கட்டணத்தைச் செலுத்தி, தமது அறுவடையை பாதுகாப்பாக வைத்திருக்கலாம். இந்த விடயம் இப்பிரதேசங்களில் வாழும் விவசாயிகள் தமது தானியங்களை தேக்கி வைத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது.

## வங்கிக் காப்புறுதி

எம்மோடு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, எமது வாடிக்கையாளர்கள் திருத்தியமைக்கப்பட்ட காப்புறுதித் தயாரிப்புகளை அல்லது காப்புறுதி அனுகூலங்களை எமது RDB வங்கிக் காப்புறுதி அலகுகள் ஊடாக பலதரப்பட்ட காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு

## கூட்டுறவு சமூகப் பொறுப்புடைமை – CSR

சமூகத்தினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள், வங்கி பங்குதாரர்களை நோக்கி வங்கியின் பொறுப்பு மற்றும் பொது மக்களை நோக்கி வங்கிக்குள் பொறுப்பு மற்றும் சுற்றாடல் தொடர்பாக இருக்கக்கூடிய பொறுப்பு என்பன சமூகத்தை நோக்கிய பொறுப்பாகக் கருதப்படுகிறது. இவை பற்றி அக்கறையையும், விழிப்புணர்வையும் எமது பணியாட்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

RDB ஒரு முழுமையாக அரச உரிமை நிறுவனமாக இருப்பதால், பல அனுகூலங்களைப் பெறுவதோடு, இது, அதன் சமூகக் கடப்பாடுகளை நிலைநிறுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளது. இதற்கமைய, வங்கி, அதன் ஆரம்பத்தில் இருந்தே தமது பயணத்தை இலாபம் எய்தும் நோக்கத்தை மாத்திரம் கொண்டு செயற்படவில்லை. பதிலாக, வங்கி தனது தகைமையில் தன்னுடைய வகிபங்கை மேற்கொள்வதோடு, எந்தவொரு வழியிலும் சமூக நலன்புரியை சாத்தியமான வகையில் உயர்த்த செயற்படுகிறது.

அதன் பணி நோக்கிற்கு அமைவாக, வங்கி, கடமை உணர்ச்சியுடன் செயற்படும் ஒரு அணி ஊடாக நிதி மற்றும் ஆலோசனைசார் சேவைகளை வழங்குவதோடு, பிரதேசங்களின் சமூக, பொருளாதார செழுமையை உயர்த்த எண்ணுகிறது. எமது நாட்டின் சமூக பொருளாதார செழுமைக்கு பங்களிப்புச் செய்யும் முயற்சியாளர்களை வளர்த்தெடுப்பதே வங்கியின் நோக்கமாகும்.

வங்கியின் சமூக நலன்புரித் திட்டங்களில் barefoot வங்கிக் கோட்பாட்டிற்கு முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இந்தக் கோட்பாட்டின் கீழ், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மகளிர் முயற்சியாளர்களுக்கு சலுகை அடிப்படையில் வட்டி வீதங்களை வழங்குவதன் மூலம் வங்கிச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக RDB அதன் முழுமையான பணியாட்களின் ஒத்துழைப்பு, கடமை உணர்ச்சி என்பவற்றுடன் நாட்டில் பாரிய சமூக சேவைத் திட்டங்களை அமுல்படுத்த கணிசமான பங்களிப்பைச் செய்யக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, அரசதுறை மற்றும் தனியார் துறைக்கு ஒரு சிறந்த உதாரணமாக வங்கி விளங்க முடியும்.

### நிகிலகஸ்கடயில் உள்ள லூலேகெதர தமிழ் மகா வித்தியாலயத்திற்கு புதிய மலசல கூட வசதிகள்



வங்கி தனது, கூட்டுறவு சமூகப் பொறுப்புடைமை (CSR) நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மலசல கூட வசதிகளை உயர்த்த ஆலோசித்துள்ளது.

இதற்கமைய 2019 ஜனவரி 24 ஆம் திகதி லூல்கெதர தமிழ் வித்தியாலய பாடசாலை மாணவாகளுக்கு ஒரு புதிய மலசல கூட வசதிகளை கையளித்தது.

### மரம் செடிகளை பகிர்ந்து சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டம்

2019 ஆம் ஆண்டின் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 2019 ஏப்ரல் 15 ஆம் திகதி புதுவருட கைவிசேடம் மேற்கொள்ள வருகை தந்த வாடிக்கையாளர்களுக்கு மரம், செடிகள் பகிரப்பட்டன. இந்த நிகழ்வு நாடு பூராகவும் உள்ள சகல RDB கிளைகளிலும் இடம்பெற்றன.



# கூட்டுறவு சமூகப் பொறுப்புடைமை – CSR

## தானியக் களஞ்சியம் பற்றிய விழிப்புணர்வுத் திட்டம்

RDB யினால் செயற்படுத்தப்பட்டு வரும் பண்டகசாலை வசதிகள் மற்றும் அனுகூலங்கள் பற்றி விவசாயிகளின் அறிவை மேம்படுத்துவதற்காக, முருங்கன் மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேசங்களில் தானிய பண்டகசாலைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகள், தானியங்களை களஞ்சியப்படுத்தவும், போட்டி மிக்க விலைகளில் தமது அறுவடைகளை விற்பனை செய்யவும் பண்டகசாலை வரவு நிதி வசதியின் கீழ் நிதி உதவி பெறவும் முடியும்.





## வாடிக்கையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கிடையில் உள்ளவர்கள் பொறுப்புள்ள பிரசைகளாக வருவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை கிரமமாக நடத்துவதற்கு RDB அதன் வளங்களை முதலீடு செய்துள்ளது. இத்தகைய முயற்சிகள், மக்களின் அன்றாட வாழ்க்கையை சிறந்த முறையில் திட்டமிடவும், ஒழுங்கமைக்கவும், அமுல்படுத்தவும் முடியும். மேலும், சேமிப்பு அணுகுமுறையில் மாத்திரம் கவனம் செலுத்தாது, முக்கியமான மற்றும் நேரத்தை சேமிக்கக்கூடிய வழிமுறைகளில் தமது வாழ்க்கை முறைகளை முன்னேற்றுவதற்கு பல பாதைகளையும், வழிமுறைகளையும் தேடிக்கொள்ள முடியும்.



# ஊழியர்கள் மீளாய்வு

## கண்ணோட்டம்

பாராட்டத்தகு அணி கலாசாரத்துடன் கூடிய ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள பணிச் சூழலை உருவாக்கும் அதேவேளை, ஊழியர்கள் தமது முழுமையான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்களை வழங்க RDB கடமைப்பட்டுள்ளது. அறிவுப் பங்கீட்டுக் கலாசாரம், தொழில் பாதுகாப்பு மற்றும் தமது தொழில் முன்னேற்றத்துக்கான சந்தர்ப்பங்களை அனுபவிப்பதன் மூலம் ஊழியர்கள் நன்மை பெறுவர்.

வங்கி அதன் ஊழியர்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்கு டிஜிட்டல் நிலைமாற்ற நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் உள்ளடங்கலாக, முறையான கொள்கைகள், நடைமுறைகள், செயன்முறைகள் என்பவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம், தகைமை அடிப்படையிலான மனித வள அபிவிருத்தி நடைமுறைகளை உருவாக்குவதற்கு கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்கின்றன. தன்னியக்க மனித வள செயன்முறைகள், ஊழியர்களின் ஈடுபாட்டை நெறிமுறைப்படுத்த உதவியுள்ளது. மனித வளம் தொடர்பான தரவுகள் மற்றும் பகுப்பாய்வுகள், மனித மூலதன நிதிக் கூற்றின் ஊடாக அவர்களின் வணிக செயற்திறன் பங்களிப்பையும் ஊழியர்களின் வலிமையையும் மதிப்பிடுவதற்கு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## மனித வளத்தில் முக்கிய நிதி செயற்திறன் குறிகாட்டிகள் (KPI)

வங்கி ஊழியர்கள் தொழிற்படையின் மொத்தச் செலவையும் குறைந்த மட்டத்தில் பேணுகின்ற அதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வணிக செயற்திறனை அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்துள்ளமையால், மனித மூலதன ROI தொடர்பான நிதி, மனித வளத்தில் முக்கிய நிதி செயற்திறன் குறிகாட்டிகள் (KPI) தொடர்ந்து 2019 இலும் முன்னேற்றமடைந்துள்ளது.

### 2016 - 2019 ஆம் ஆண்டுக்கான தொழிற்படை ஆக்கத்திறன் தாக்கம் தொடர்பான முக்கிய நிதி செயற்திறன் குறிகாட்டி (KPI)

| | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|
| மொத்த செயற்பாட்டு இலாபம் (ரூபா மில்.) | 2,130 | 3,307 | 3,606 | **2,960** |
| மொத்த வருமானம் (ரூபா மில்.) | 15,744 | 22,016 | 26,071 | **27,508** |
| கடன் போட்போலியோ (ரூபா மில்.) | 106,806 | 130,325 | 137,770 | **144,694** |
| வைப்பு போட்போலியோ (ரூபா மில்.) | 107,032 | 139,827 | 141,560 | **149,600** |
| மொத்த ஆட்களின் எண்ணிக்கை (FTE) | 2,342 | 2,395 | 2,345 | **2,735** |
| தொழிற்படைக்கான மொத்தச் செலவு (ரூபா மில்.) | 4,699 | 5,346 | 6,225 | **6,261** |
| மனித மூலதன ROI விகிதம் | 1.47 | 1.62 | 1.33 | **1.08** |
| ஒரு குழுவுக்கான ஆக்கத் திறன் (ரூபா மில்.) | 950,514 | 1,380,791 | 900,357 | **1,082,267** |
| மனித மூலதன முதலீட்டின் மீதான திரும்பல் | 45.3% | 61.9% | 52% | **47.3%** |

*(FTE – முழு நேர ஊழியர்)*

## மனித சக்தி வலு

வங்கியின் மனித சக்தி, நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் ஆட்களை உள்ளடக்கியுள்ளது. வீடு வீடாகச் சென்று களப் பணியில் ஈடுபடும் உதவியாளர்கள் (இவர்கள் நிரந்தர ஒப்பந்த காலப்பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்) மற்றும் கிராமியத் தலைவர் (நுண் நிதி முறைமையுடன் தொடர்புபட்டவர்கள்) நீங்கலாக, ஏனையோர் வங்கிக்கு மனித சக்தி சேவையை வழங்குகின்றனர். மேலும், பயிற்சி நெறியைத் தொடர தேவைப்படுத்தப்பட்டுள்ள பயிற்சியாளர்களுக்கு (6-12 மாதங்கள்) பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழக உட்பிரவேசத்திற்கு தகுதி பெற்று, பாடசாலையில் இருந்து விலகியவர்கள் ஆகியோருக்கு பயிற்சியை வழங்குகிறது. இந்த வகையைச் சார்ந்தவர்கள் வங்கியின் செயற்திறனுக்கு பெறுமதியான உள்ளீடுகளை வழங்குகின்றனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்ட மனித சக்தி வலுவின் சாராம்சம்.

| | எண்ணிக்கை | |
|---|---|---|
| மனித சக்தி வகை | 2018 | 2019 |
| நிரந்தர / ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | 2345 | **2735** |
| வீடு வீடாக செல்லும் களப்பணி உதவியாளர்கள் (தொரின் தொர) | 399 | **449** |
| கிராமியத் தலைவர்கள் | 340 | **200** |
| மொத்தம் | 3084 | **3384** |

328 பயிற்சி அபிவிருத்தி உதவியாளர்கள் உட்பிரவேச மட்டத் தகுதிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது தவிர, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் கையகப்படுத்தலின் பின்னர், அங்கிருந்து 152 பணியாட்கள் உள்வாங்கப்பட்டனர். இவ்வருடம் பணியாட்கள் கையகப்படுத்தலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 17% ஆல் ஏற்பட்டுள்ளது. முகாமைத்துவ மட்டத்தில் ஆட்களின் எண்ணிக்கையின் பங்கீடு கீழே தரப்பட்டுள்ளது:

# ஊழியர்கள் மீளாய்வு

| முகாமைத்துவ மட்டம் | எண்ணிக்கை பங்கீடு | | |
|---|---|---|---|
| | 2018 | 2019 | % |
| கூட்டுறவு முகாமைத்துவம் | 8 | **6** | -25 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 29 | **34** | 17 |
| நிர்வாக முகாமைத்துவம் | 153 | **133** | -13 |
| நிர்வாகிகள் | 1030 | **1040** | 1 |
| எழுத்துசார் மற்றும் இணை சேவைகள் | 981 | **1366** | 28 |
| ஏனைய தரங்கள் | 144 | **156** | 8 |
| மொத்தம் | 2345 | **2735** | 17 |

வங்கி ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமமான தொழில் வாய்ப்புகளை வழங்குகிறது. புதிய ஆட்சேர்ப்பு / கையேற்பு நடைபெற்ற பின்னரும் கூட 2019 ஆம் ஆண்டிலும் பால் நிலை தோற்றப்பாடு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்துள்ளது.

| | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|
| பால்நிலை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| ஆண் | 1314 | 56.03 | **1546** | **56.53** |
| பெண் | 1031 | 43.97 | **1189** | **43.47** |
| மொத்தம் | 2345 | 100.00 | **2735** | **100.00** |

வங்கியின் ஊழியர்கள் ஓரளவு வயது முதிர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு 15.8 வருட சராசரி கடந்த சேவை அனுபவம் உள்ளது. மேலும், இவர்களின் சராசரி வயது 41.2 ஆகும். வங்கியின் பணியாட்களின் வயது மற்றும் அனுபவத் தோற்றப்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

## வயதுத் தோற்றப்பாடு

| வயது வகுப்பு | எண்ணிக்கை | % |
|---|---|---|
| 31 வருடங்களுக்குக் குறைவு | 608 | 22.23 |
| 31 - 40 வருடங்கள் | 830 | 30.35 |
| 41 - 50 வருடங்கள் | 562 | 20.54 |
| 51 - 55 வருடங்கள் | 487 | 17.81 |
| 55 வருடங்களுக்கு மேல் | 248 | 9.07 |
| மொத்தம் | 2735 | 100.00 |

## அனுபவத் தோற்றப்பாடு

| அனுபவ வகுப்பு | எண்ணிக்கை | % |
|---|---|---|
| 30 வருடங்களுக்கு மேல் | 308 | 11.26 |
| 20 - 29 வருடங்கள் | 836 | 30.57 |
| 10 - 19 வருடங்கள் | 576 | 21.06 |
| 5 - 9 வருடங்கள் | 554 | 20.26 |
| 5 வருடங்களுக்கு குறைவு | 461 | 16.85 |
| மொத்தம் | 2735 | 100.00 |

## தொழில் முன்னேற்றம்

வங்கி, ஊழியர்களின் மனப்பாங்கை மாற்றுவதற்கும், அறிவை விருத்தி செய்யவும், வங்கிச் செயற்பாடுகளை நோக்கிய கற்கை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கும் தொடர்ந்து பயிற்சி நெறிகளை வழங்கி வருகிறது. இவ்வருடத்தின் போது 2,382 பங்குபற்றுநர்களுக்கு 87 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தியாவிலுள்ள ஜவஹர்லால் நேரு வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் உதவியுடன் 10 நாட்கள் SME பயிற்சி நிகழ்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 30 பங்குபற்றுநர்களைக் கொண்ட இரண்டு தொகுதிகள் பங்குபற்றின. இவர்கள் SME திட்ட நிதியிடலில் ஈடுபட்டிருக்கின்ற முக்கியமான ஆட்களை பிரதிநிதித்துவம் செய்தனர். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம், SME திட்ட நிதியிடல் துறையில் ஒவ்வொரு அணுகுமுறை பற்றியும் அறிவை வழங்குவதாகும்.

09 அதிகாரிகளுக்கு அவர்களின் பணித் துறைகளில் அறிவை வழங்க வெளிநாட்டுப் பயிற்சி நெறிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் சிறந்த கிளை விருதை வென்ற கிளை பணியாளுக்கு வெளிநாட்டுப் பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், 2017 இல் சிறந்த கிளை எனத் தெரிவு செய்யப்பட்ட கிளை முகாமையாளருக்கு வெளிநாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வருடத்தின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த முதலீடு ரூபா 24.2 மில்லியன் ஆகும்.

## குறைதீர்ப்புப் பரிகாரம்

தொடர்பாடலை முன்னேற்றுவதன் மூலமாக, சாத்தியமான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வங்கி எதிர்பார்ப்பதால், ஊழியர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளையும், குறைகளையும் கலந்தாராய ஒரு பொறிமுறை அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. தலைமைக் காரியாலயத்திலும், மாகாண மட்ட அலுவலகங்களிலும் "ஊழியர் தினம்" என ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தினத்தில், மனித வளம் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. காலாண்டு அடிப்படையில் திகதிகள் நிர்ணயிக்கப்பட்டு அதுபற்றி ஊழியர்களுக்கு அறிவிக்கப்படும்.

## ஊழியர் நலன்கள்

RDB வங்கியின் ஊழியர் சம்பளங்கள், ஏனைய அரச வங்கி ஊழியர்களின் சம்பள மட்டங்களுக்குச் சமமாக மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. RDB யின் துடிப்பான பணியாட்களுக்கு சிபாரிசு செய்ய ஒரு ஓய்வூதிய அனுகூலத் திட்டம் பற்றி தொழிற்சங்கத்துடன் ஆராய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இங்கு நிதி ரீதியாக ஊழியர்களுக்கு செலுத்தக்கூடிய வகையிலான ஓய்வூதிய நலத் திட்டம் பற்றிய பல காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீடு நடத்தப்பட்டது.

## கையகப்படுத்தலை அடுத்து லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் (LDB) பணியாட்களை உள்வாங்குதல்

தனிப்பட்ட முகாமைத்துவப் பட்டய நிறுவனத்தினால் நடத்தப்பட்ட மனித வள அறிக்கையின் சிபாரிசுக்கு அமைய RDB 152 ஊழியர்களை LDB யில் இருந்து உள்வாங்கிக் கொண்டது. வங்கியினால் நடத்தப்பட்ட தூண்டல் மற்றும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பின்னர், இவர்களுக்கான பதவிகள் வழங்கப்பட்டன. RDB வங்கியில் இணைந்து கொள்ள விரும்பாத 10 பணியாட்களுக்கு சுய விருப்பத்துடன்கூடிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

## மனித வள சபை - உப குழுக்கள்

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல் மற்றும் கூட்டுறவு ஆளுகை நடைமுறைகளுக்கு அமைய, சபை மனித வளங்கள் மற்றும் தெரிவுக் குழு (BHRRC) மற்றும் BNC தெரிவுக் குழு என்பன உருவாக்கப்பட்டன. இந்த இரு குழுக்களும் வங்கியின் தலைவரால் வழிநடத்தப்படுகிறது. 2019 ஆம் ஆண்டின் போது நான்கு தெரிவுக் குழுக் கூட்டங்களும், 10 சபை மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன.

இதனைவிட, வங்கியில் கூட்டுவு ஆளுகை நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு, மனித வள கொள்கைக் குழுவை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் குழுவின் நோக்கம், மனித வள நடைமுறைகள் மற்றும் BHRRRC மற்றும் BMC ஆகியவற்றின் தோற்றப்பாடுகள் பற்றி சிபாரிசு வழங்குவதாகும். இந்தக் குழு நிர்வாகக் குழு ஒன்றாக செயற்படுவதனால், பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியினால் தலைமை வகிக்கப்படுகிறது. இவ்வருடத்தின் போது, நான்கு கூட்டங்கள் நடைபெற்றன. கூட்ட அறிக்கைகள் BHRRC க்கும் BMC க்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

# விசேட நிகழ்வுகள்

## கிளைகள் இடமாற்றம்

### மொனராகலை கிளை



மொனராகல கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.ஏ.ஆரியபால பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 ஜனவரி 21 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

### களுவெல்ல கிளை



களுவெல்ல கிளை, மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர், மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 மே 27 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

### குருவிற்ற கிளை



குருவிற்ற கிளை, மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 பெப்ரவரி 18 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

### தந்துரே கிளை



தந்துரே கிளை, மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 ஜூன் 10 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

## ஹேதெனிய கிளை



ஹேதெனிய கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 ஜூன் 10 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

## கல்முனை கிளை



கல்முனை கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 ஆகஸ் 19 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

## மட்டக்களப்பு 2வது கிளை



மட்டக்களப்பு 2வது கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

## பொத்துபிட்டிய கிளை



பொத்துபிட்டிய கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 செப்டம்பர் 16 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

# விசேட நிகழ்வுகள்

## கெகனதுர கிளை



கெகனதுர கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது. தென் மாகாண பிரதேச பொது முகாமையாளர் திரு. நிமால் டி சில்வா 2019 ஒக்டோபர் 14 ஆந் திகதி வைபவ ரீதியாக இதனைத் திறந்து வைத்தார்.

## கிழக்கு மாகாண அலுலவகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயம்



கிழக்கு மாகாண அலுலவகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயம் என்பன மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. திரு. சுஜித் பிரசன்ன காரியவசம் - தலைவர் மற்றும் திரு. ரீ.குகன் பதில் பொது முகாமையாளர் / பி.நி.அ ஆகியோரால் 2019 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வைபவ ரீதியாக இவை திறந்து வைக்கப்பட்டன.

## ஜயசிறி மகா போதியில் தானம் வழங்குதல்

RDB வங்கியினால் ஒழுங்கு செய்யப்படும் வருடாந்த தான நிகழ்வு 2019 ஜுன் மாதம் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களின் பங்குபற்றுதல்களுடன் நடைபெற்றது.



## பாடசாலை சேமிப்பு நிலையங்கள்

பாடசாலை மாணவர்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக கண்டியிலுள்ள ஸ்பிரிங்.்.பீல்ல் சர்வதேச பாடசாலையில் 2019 ஜனவரி 31 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டது.



“இதுறு மிதுறு” திட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக்கழகத்தின் லியோ சங்கத்தின் ஒத்துழைப்புடன் பத்தேகம கிளையினால் பத்தேகமயில் உள்ள சித்தார்த்த வித்தியாலயத்தில் பாடசாலை சேமிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.



## தைப்பொங்கல் கொண்டாட்டம்

தைப்பொங்கல் தினத்தை சிறப்பிக்கும் முகமாக, 2019 ஜனவரி 16 ஆம் திகதி RDB யின் தலைமை அலுவலகத்தில் விசேட கொண்டாட்டம் நடைபெற்றது.



## சர்வதேச மகளிர் தின விழா கொண்டாட்டம்

நாட்டிலுள்ள பெண்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக RDB யின் சகல கிளைகளிலும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.



## கண்டி மாநகரில் அவுருறு வாசி விசேட வீதிப் பிரசாரம்

வங்கியின் சேமிப்புத் தளத்தை உயர்த்துவதற்கும், எதிர்கால வாடிக்கையாளர்களை இலக்கு வைத்தும் RDB யின் கண்டி கிளை, கண்டி மாநகரில் 2019 ஏப்ரல் 03 ஆம் திகதி அவுறுது வாசி விசேட வீதி விழிப்புணர்வுப் பிரசாரத்தை நடத்தியது.



# விசேட நிகழ்வுகள்



## சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டம்

RDB யின் அனைத்துக் கிளைகளும், சிங்கள மற்றும் இந்து புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக 2019 ஏப்ரல் 16 ஆம் திகதி விசேட நிகழ்ச்சிகளை நடத்தியது.



## ATM இயந்திர பொருத்துகை

அதி சௌகரிகமான சேவையை வழங்கும் பொருட்டு அதன் ATM வலையமைப்பை விரிவாக்க 2019 ஆம் ஆண்டு RDB நாடு பூராக 25 ATM இயந்திரங்களைப் பொருத்தியது.



## புதிய ஆட்சேர்ப்புகள்

RDB ஆக்கத் திறனை அதிகரிக்கவும், புதிய கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் அதன் தொழிற்படைக்கு 328 பணியாட்களை 2019 இல் இணைத்துக் கொண்டது.



## நடமாடும் வங்கிச் சேவை

ஸ்மார்ட் ஷேர்ட் கம்பனியில் பணி புரியும் ஊழியர்களுக்கு பணப் பரிமாற்றங்களை இலகுபடுத்தும் முகமாக, உடதும்பர கிளையினால் ஹுன்னஸ்கிரியவில் உள்ள ஸ்மாட் ஷேர்ட் கம்பனியில் 2019 செப்டம்பர் 04 ஆம் திகதியில் இருந்து மாதாந்தம் நடமாடும் வங்கிச் சேவை நடைபெறுகிறது.



## ஊழியர்களுக்கான பயிற்சி நெறித் திட்டங்கள்

ஊழியர்களின் செயற்திறனை அதிகரிக்கவும், அனைத்து ஊழியர்களின் அறிவுத் தளத்தை விரிவாக்கவும் RDB பல பயிற்சி நெறி அமர்வுகளை நடத்தியது.



## RDB யின் ஆண்டு நிறைவு

RDB தனது 34வது வருடப் பூர்த்தியை கொண்டாடும் முகமாக அனைத்து வாடிக்கையாளர்களுடன் இணைந்து அனைத்துக் கிளைகளும் விசேட நிகழ்வுகளை நடத்தியுள்ளது.



## உலக சிறுவர் தினக் கொண்டாட்டம்

சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடையே சேமிப்புப் பழகத்தை ஊக்குவிக்கும் முகமாக, ஒக்டோபர் முதலாம் திகதி RDB யின் சகல கிளைகளும் உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடின.





# விசேட நிகழ்வுகள்

## 2019 இல் உருவாக்கப்பட்ட புதிய தயாரிப்பு விருத்தியாண்மைகள்

### RDB குத்தகை விழிப்புணர்வு

நுண், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள், தொழில்முறை வல்லுநர்கள் செலவிடக்கூடிய வருமானத்தைக் கொண்ட தனிப்பட்ட நபர்கள் அரசாங்கம் மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, RDB அதன் தயாரிப்பு போட்போலியோவில் போட்டி அடிப்படையில் குறைந்த வட்டி விகிதத்தை உடைய "RDB குத்தகையை 2019 ஒக்டோபர் 18 ஆம் திகதி சேர்த்துக் கொண்டது.



### RDB லிய சவிய பிளஸ் விழிப்புணர்வு

#### மகளிர் முதலீட்டு சேமிப்புக் கணக்கு

RDB லிய சவிய பிளஸ் முதலீட்டுக் கணக்கு மகளிர் முயற்சியாளர்களுக்கு சேமிக்கும் பழக்கத்தைத் தூண்டுவதற்காக RDB யினால் விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். போட்டி மிக்க வட்டி விகிதத்தை வழங்குவதற்கு மேல் இந்த நடுத்தரகால முதலீட்டுக் கணக்கிற்கு விசேட பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இந்த தயாரிப்பு உலக மகளிர் தினத்தைக் கொண்டாடும் முகமாக 2019 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.



# இடர் முகாமைத்துவம்


## நிருவாகச் சுருக்கம்


வங்கி தனது தொழிற்பாட்டுச் செயன்முறையின் போது எழுகின்ற இடர்களைக் கையாளவும், தணிக்கவும், வங்கி நடவடிக்கைகள் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் விரிவான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை அமுல்படுத்துகிறது.

### இடர் முகாமைத்துவ மாதிரிகளும் கட்டுப்பாடுகளும்


- நிறுவனத்தின் முழு இடரையும் கட்டுப்படுத்தவும், கையாளவும் 03 மட்டப் பாதுகாப்பைப் பிரயோகித்தல்
- தகைமையுடைய பணியாட்களுடன் இடர் முகாமைத்துவப் பிரிவை ஸ்தாபித்தலும், விரிவாக்கலும்
- பொருத்தமான தகவல் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு
- நன்கு நிறுவப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுக்கள்
- தகவல் பாதுகாப்பு அலகுகளை ஸ்தாபித்தல்
- விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நெறி ஊடாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கலாசாரத்தை ஸ்தாபித்தல்

### கடன் இடர் தோற்றப்பாட்டில் முன்னேற்றங்களை ஒன்றிணைத்தல்





NPA விகிதம் (%)




புவியியல் அடிப்படையில் கவனம் செலுத்துல் (%)





துறை வாரியாக கவனம் செலுத்துதல் (%)


- மொத்த போட்போலியோவில் 37% கைத்தொழில் துறைக்கும் 20% விவசாய மற்றும் மீன்பிடித் துறைக்கும் பயன்படுத்தப்பட்டது. மேலும், மொத்த போட்போலியோவின HHI குறியீடு முறையே 0.111 மற்றும் 0.041 ஐ வெளிப்படுத்தியது. அத்துடன், கடன் போட்போலியோவுக்குரிய HHI 0.205 எனவே, துறை ரீதியாக குறைந்த கவனம் செலுத்தப்பட்டது,
- கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் (2018) மொத்தக் கடன் பொட்போலியோவில் 5% முன்னேற்றம்.
- 2018 ஆம் ஆண்டு இறுதியுடன் ஒப்பிடுகையில் (5.36%) 4.2% ஆல் அதிகரித்த NPL வீதம் 9.63 க்கு உயர்த்தப்பட்டது.
- காப்பு விகித ஏற்பாடு அண்ணளவாக 55.92% ஆக தொடர்ந்து இருந்தது. எனவே, வங்கி, எதிர்பாராத சூழ்நிலை ஒன்றுக்கு பங்குதாரர் நிதியைப் பயன்படுத்த அதன் NPA 40.39% ஆக மாற்றியது.
- ஏற்பாடுகள் டிசம்பரில் இலங்கை ரூபா 4.2 பில்லியன் ஆல் அதிகரித்தது. இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், (2018) 119% அதிகரிப்பாகும்.

# இடர் முகாமைத்துவம்

## வங்கியின் திரவ இடர்




நியதிச்சட்ட திரவச் சொத்து விகிதம் (%)




மொத்த மூலதனம் (%)


- வங்கி மூலதனத் தேவைப்பாட்டை புதிய பாசல் III உடன் இணங்கிச் சென்றது.

## திரவக் காப்பு விகிதம்

| காலப்பகுதி | 2019-ஜனவரி | 2019-பெப்ரவரி | 2019-மார்ச் | 2019-ஏப்ரல் | 2019-மே | 2019-ஜூன் | 2019-ஜூலை | 2019-ஆகஸ்ட் | 2019-செப்டம் | 2019-ஒக்டோ | 2019-நவம்ப | 2019-டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உண்மைப் பெறுமதி (%) | 172.22 | 225.94 | 114.32 | 145.20 | 158.41 | 144.98 | 183.63 | 144.70 | 170.09 | 205.99 | 187.26 | 205.99 |

- நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதத்திற்கான (SLAR) நியதிச் சட்டத் தேவைப்பாடு 20% ஆகும். வங்கி நியதிச் சட்ட தேவைப்பாட்டுடன் இணங்கிச் சென்று SLAR ஐ 32.38% ஆக பேணி வந்துள்ளது.
- திரவக் காப்பு விகிதத்திற்கான (LCR) நியதிச் சட்டத் தேவைப்பாடு 2019 ஜனவரி 01 ஆம் திகதி 100 ஆகும். வங்கி ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டுடன் இணங்கிச் சென்றுள்ளது. அத்துடன் LCR ஐ 205.99% ஆக பேணியுள்ளது.

## மூலதன இடர்




அடுக்கு 1 மூலதனம் (%)

## நிதிசாராத இடர்கள்

### செயற்பாட்டு இடர்

- 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது 12 செயற்பாட்டு உப-குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றின் அறிக்கைகள் மீளாய்வுக்காக IRMC க்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டதோடு, IRMC ஆல் சிபாரிசு செய்யப்பட்டு, வங்கியின் இடையூறு அற்ற செயற்பாட்டிற்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

### இணக்க இடர்

சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் / இணக்கப்பாடுகள் (SAGM) னால் தலைமை வகிக்கப்படும் IRMC உடைய கட்டுப்பாட்டின் கீழ் வங்கியின் இணக்கத் தொழிற்பாடு வருகிறது. இந்த இலக்கை அடைவதற்காக இவர், இணக்கத் தேவைப்பாடுகளைக் கண்காணித்து, மதிப்பீடு செய்து, வங்கியின் இணக்க அந்தஸ்து தொடர்பான அறிக்கைகளை IRMC யின் மீளாய்வுக்காகச் சமாப்பிப்பார். மேலும், வருடாந்தம் மீளாய்வு செய்யும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விரிவான இணக்கக் கொள்கை ஒன்று உள்ளது. தேவையான நியதிச் சட்ட அறிக்கைகள் ஒழுங்குபடுத்துநருக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதை மேற்பார்வை செய்யும் வகையில் ஒரு இணக்க அதிகாரி கடமையாற்றி வருகிறார்.

ஒவ்வொரு வணிகமும் அதன் வணிகச் சூழலில் நிச்சயமற்ற தன்மைகளையும், இடர்களையும் எதிர்நோக்கும். நிதி நிறுவனம் என்ற வகையில், வங்கியின் செயற்பாட்டு நடவடிக்கையில் இடர் உள்ளார்ந்த ஒரு அம்சமாகும். எனவே, வங்கி எப்போதும் இடர் மற்றும் திரும்பலுக்கு இடையில் சகிப்புத் தன்மையைப் பேணி வருகிறது. நிறுவனத் தொடர்ச்சி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இது, பாரதூரமான செயற்பாட்டு மற்றும் நிதி இழப்புகளை ஏற்படுத்தாத விடத்து, வங்கி, அதன் இடர் காரணிகளைக் கையாள்வதுடன் தணித்தல் வேண்டும். வங்கி, அதன் எதிர்பாராத இடரைக் கையாளவும், தணிக்கவும் மற்றும் வங்கியின் மூலோபாய மற்றும் செயற்பாட்டுக் குறிக்கோள்களை உயர்த்துவதன் மூலம், நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு சிறந்த தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வினைத்திறனான இடர் முகாமைத்துவச் செயன்முறை வழிசமைக்கிறது.

## இடர் முகாமைத்துவம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

வங்கியினால் எதிர்கொள்ளப்படும் இடர்கள் உள்ளக, வெளியக இடர்கள் என வெளிப்படுத்தப்படலாம். உள்ளக இடர் என்பது, வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் அமைந்ததாகும். வெளியக இடர்கள், வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். இவ்விரண்டு வகையான இடர்களும் ஒரு தரமான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினால் கையாளப்படுகின்றன.

வங்கியின் ஒட்டுமொத்த இடர் தோற்றப்பாட்டின் மாற்றங்கள் வெளியக மற்றும் உள்ளகக் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக ஏற்படலாம். வங்கி, இவ்வாறு உருவாகும் இடர்களுக்கும், நிச்சயமற்ற தன்மைகளுக்கும் மூலோபாய பதில்களுடன் விடையளிக்கின்றது.

இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை அமுல்படுத்துவதில் உள்ள குறைபாடுகள், பெரும்பாகப் பொருளாதார மாறிகள் பற்றிய வேறுபட்ட அனுமானங்கள், உள்ளக செயன்முறைகளில் உள்ள நிறைவேற்று இடைவெளிகள் போன்றவற்றை உள்ளகக் காரணிகள் எனவும், ஒட்டுமொத்த பொருளாதார அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் பாதகமான நகர்வுகள், அரசியல் ஸ்திரமற்ற தன்மை, அரசாங்க நிதிக் கொள்கைகளில் ஏற்படுகின்ற மாற்றம் என்பன வெளியகக் காரணிகளாகும். இத்தகைய காரணிகள் வங்கியின் செயற்படு சூழலை மிகச் சிக்கலானதாகவும், மாறுபட்டதாகவும் உருவாக்குவதால், இடர் முகாமைத்துவம் என்பது சவால் மிக்க ஒன்றாக இருக்கின்றது.

## உருவாகி வரும் இடர்களும் நிச்சயமற்ற தன்மைகளும்

மேலே குறிப்பிட்ட இடர்களுக்கு அப்பால், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் எதிர்பாராத அபிவிருத்திகள், இலத்திரன் மயமாக்கல், சனத்தொகையில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றினால் சில இடர்களையும், நிச்சயமற்ற தன்மைகளையும் வங்கிகள் எதிர்கொள்கின்றன. இவை, நிதிச் சேவையளிக்கும் நிறுவனங்களுக்கு ஏற்ற, இறக்கத்தையும், எதிர்பாராத பிரச்சினைகளையும் உருவாக்கி உள்ளன.

பிரதேச அபிவிருத்தி வங்கிகளும் இத்தகைய தோன்றி வரும் இடர்களையும், நிச்சயமற்ற தன்மைகளையும் இனங்கண்டுள்ளன. அத்தகைய இடர்களின் மோசமான இயல்பு பற்றி அறிந்துள்ள வங்கி, ஒரு உயர் மட்ட அடிப்படையிலான ஊக்கத்துடன் அவை பற்றி கண்காணித்து வருகிறது.

இத்தகைய பின்தொடர்தல் நடவடிக்கை மூலம், வங்கி, உள்ளக செயன்முறையில் சிறந்த நிறைவேற்றத்தை அடைவதுடன், செயற்பாட்டுச் செலவுகளையும் குறைத்து, வாடிக்கையாளர்கள் பற்றி நன்கு அவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய முடியும். வங்கி, எதிர்கால வளர்ச்சியை நோக்கி இத்தகைய இடர்களை சிறப்பாகக் கையாள்கின்ற அதேவேளை, இத்தகைய மூலோபாயங்கள் அது வழங்கி வரும் சேவைகளை வேறுபடுத்திப் பார்க்கவும், அவற்றை வேறு சந்தர்ப்பங்களுக்கு மாற்றவும் முடியுமென உறுதியாக நம்புகிறது.

## இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு


வங்கி மூன்று கட்ட பாதுகாப்பு மாதிரி அடிப்படையில் வினைத்திறனான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை (RMF) உருவாக்கியுள்ளது. RMF வங்கி எதிர்கொள்ளக்கூடிய சாத்தியமான இடர்களையும், நிச்சயமற்ற தன்மைகளையும் கருத்திற் கொள்ளும். மேலும், இவற்றைக் கடுமையான நிறுவனக் கட்டமைப்பு முறைமைகள், செயன்முறைகள், செயல் முறைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் கையாள முடியும். சர்வதேச தரத்திலான மூன்று மட்ட பாதுகாப்பு மாதிரி இடர்களைக் கையாள்வதற்கு தனித்துவமான அணுகுமுறைகளையும், விசேட திறன்களையும் வளர்க்க உதவியளிக்கிறது. RMF வங்கியின் அன்றாட செயற்பாடுகளுக்கு வழி காட்டுகிறது.

வங்கி, வணிக செயற்பாட்டில் தலையிட்டுள்ள இடரை உரிய நேரத்தில் இனங்கண்டு, பகுப்பாய்வு செய்து, அளவிட்டு, முகாமைத்துவம் செய்து, அறிக்கையிடுகிறது. வங்கியின் இடர் முகாமைத்துவச் செயன்முறை வினைத்திறன் மற்றும் மூலதன போதுமான தன்மை "முக்கிய செயற்திறன் மற்றும் முக்கிய இடர் காரணிகள்" என்பவற்றை உறுதிப்படுத்துகிறது.

நன்கு ஸ்தாபிக்க இடர் முகாமைத்துவ மூலோபாயம், வங்கி இடர் முகாமைத்துவ அணியினால் இடர் தொடர்பான கூற்றில் முன்னரே வரையறை செய்து, வங்கியின் ஒட்டுமொத்த இடரை உள்வாங்க பணிப்பாளர் சபையினால் விரிவான இடர் முகாமைத்துவக் கொள்கைகள், செயல் முறைகள், கட்டமைப்பு என்பன அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், RDB யின் இடர் முகாமைத்துவ செயன்முறை, உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் நிலுவைகளின் அழுத்தப் பரீட்சை ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனிப்பதோடு, மூன்று மட்ட பாதுகாப்பை ஸ்தாபித்து பிரயோகிக்கின்றது.

# இடர் முகாமைத்துவம்

வங்கியின் இடர் முகாமைத்துவத்தின் பொறுப்பு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அனைத்து தனி நபர்களிடமும் தங்கியுள்ளது.



## இடர் ஆளுகை

RDB யின் இடர் ஆளுகைக் கட்டமைப்பு, பணிப்பாளர் சபையில் இருந்து ஆரம்பமாகி, இடர் முகாமைத்துவக் கொள்கைகள், நடபடி முறைகள், குழுக்கள் மற்றும் கையளிக்கப்பட்ட அதிகார மட்டங்கள் ஊடாக கிளை மட்டங்கள் வரை கீழே செல்கிறது. வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவத்தைக் கையாளும் பொறுப்பு, பணிப்பாளர் சபையிடம் உள்ளது. சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு BIRMC, சபை கடன் குழு BCC, சபை தகவல் தொழில்நுட்பக் குழு மற்றும் சபைக் கணக்காய்வுக் குழு என்பன வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவத்தையும் சபை மேற்பார்வை செய்வதற்கு உதவுகிறது. அத்துடன், முகாமைத்துவக் குழு (MC) மற்றும் வங்கியின் வியாபாரத்தில் இருந்து சுயாதீனமாக இயங்கும் பிரதம இடர் அதிகாரி (CRO) வங்கியின் அனைத்து வணிக மட்டங்களின் அன்றாட செயற்பாடுகள் பற்றி கிரமமான அறிக்கைகளை சபைக்கு வழங்குவார்.

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)
இந்தக் குழு, நிர்வாகப் பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுவதோடு, வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகிறது. இந்தக் குழு, வங்கியின் ஒட்டுமொத்த இடர் தோற்றப்பாடு பற்றி பரிந்துரைகளை வழங்கியுள்ளது. மேலும், வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கைகள், செயல் முறைகள் மற்றும் உள்ளக மூலதன போதுமான மதிப்பீட்டுச் செயன்முறை என்பனவற்றைப் பரிந்துரை செய்துள்ளது. கொள்கைகள், செயல் முறைகள் என்பன இக்குழுவினால் வகுக்கப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு CRO வினால் காலாண்டு அடிப்படையில் IRMC க்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.


சபை கணக்காய்வுக் குழு (BAC)
RDB வங்கியின் பணிப்பாளர் சபை சார்பாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் இணக்கத்தை இக்குழு பரீட்சிக்கின்றது. அத்துடன், இக்குழு வங்கியின் செயற்திறன், உள்ளகக் கணக்காய்வு பற்றிய செயற்திறன், உண்மைத்தன்மை, சுயாதீனத்தன்மை என்பவற்றை மதிப்பீடு செய்கிறது.

முகாமைத்துவக் குழு (MC)
இக்குழு, பொது முகாமையாளர் / பி.நி.அ வினால் தலைமை வகிக்கப்படுகிறது. மேலும், இக்குழு வங்கியின் அனைத்து நிர்வாக மட்ட பணியாட்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. இக்குழு காலாந்தர அடிப்படையிலும், தேவை ஏற்படும் போதும் செயற்படும். வங்கியின் இடரைத் தணிக்கவும், நிச்சயமற்ற தன்மையை நீக்கவும் காலாந்தர அடிப்படையில் அனைத்து செயற்பாட்டு மட்ட அறிக்கைகளையும் மீளாய்வு செய்யும்.

பிரதம இடர் அதிகாரி (CRO)
இவர் ஒரு சுயாதீன நபராக இருப்பதோடு, வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவ உபாய நுட்பங்கள் பற்றி பணிப்பாளர் சபைக்கும், IRMC க்கும் உதவும் பொறுப்பைக் கொண்டுள்ளார்.

இடர் முகாமைத்துவத் திணைக்களம் (RMD)
இது, CRO வினால் தலைமை வகிப்படுகின்றது. இப்பிரிவு கடன், செயற்பாடு, சந்தைப்படுத்தல் மற்றும் வட்டி விகித இடர் ஆகிய இடர் முகாமைத்துவத்தின் பணிகளை மேற்கொள்கிறது.

## இடர் ஆளுகைக் கட்டமைப்பு



# இடர் முகாமைத்துவம்

### கொள்கைக் கட்டமைப்பு

இடர் முகாமைத்துவத்தின் வினைத்திறன், இடர் முகாமைத்துவக் கொள்கைகள், செயல் முறைகள் மற்றும் கட்டமைப்பு என்பவற்றில் அடிப்படையாகத் தங்கியுள்ளது. RDB யின் வினைத்திறனான இடர் முகாமைத்துவத்திற்கு இவை மூலோபாய வழிகாட்டிகளாகும். RMD ஆல் ஸ்தாபிக்கப்பட்ட விரிவான இடர் முகாமைத்துவக் கொள்கைகள், செயல் முறைகள் மற்றும் கட்டமைப்பு என்பன IRMC யின் பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ் அனைத்துக் கொள்கைகள், நடை முறைகள் மற்றும் கட்டமைப்பு என்பன வருடாந்தம் RMD யினால் மீளாய்வு செய்யப்படும்.

## RDB யில் இடர் முகாமைத்துவக் கொள்கைகளும் செயல் முறைகளும்

| கொள்கை | ஸ்தாபித்த வருடம் | காப்பு |
|---|---|---|
| கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை | 2012 | துறைசார் வரையறைகள் மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகள் மற்றும் கடன் தணிப்பு நுட்பங்கள் |
| செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை | 2012 | தணிப்பை இனங்காணும் நுட்பங்கள் மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு உப குழுவின் விபரங்கள் |
| திரவ இடர் முகாமைத்துவக் கொள்கை | 2012 | திரவச் சொத்துக்கள் மற்றும் திரவப் பொறுப்புக்களின் முகாமைத்துவ நுட்பங்கள் |
| வட்டி விகித இடர் முகாமைத்துவக் கொள்கை | 2012 | தணிப்பு மற்றும் வட்டி விகித இடர் என்பவற்றை இனங்காணும் நுட்பங்கள் |
| அழுத்த சோதனைக் கொள்கை | 2012 | மூலதன போதுமான தன்மை, திரவத்தன்மை என்பவற்றுக்கான அழுத்த சோதனைக் கட்டமைப்பு |
| ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு | 2013 | RDB க்கான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு |
| சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கை | 2015 | சந்தை இடர் தணிப்பு மற்றும் முகாமைத்துவத்தை இனங்காணும் நுட்பங்கள் |
| கடன் மீளாய்வுக் கொள்கை | 2016 | கடன் மீளாய்வுப் பொறிமுறை |
| வணிக தொடர்ச்சித் திட்டம் | 2016 | அனர்த்தத்திற்கான வணிக தொடர்ச்சித் திட்ட வழிகாட்டி |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட பயன்பாட்டுக் கொள்கை | 2015 | தகவல் பயன்பாட்டிற்கான வழிகாட்டி |
| தகவல் பாதுகாப்புக் கொள்கை | 2015 | தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புக்கான வழிகாட்டி |
| இடர் ஆர்வக் கூற்று | 2019 | சகிப்பு வரையறைக்கான வழிகாட்டி |

## RDB யின் கடன் இடர் முகாமைத்துவம்

### ஏனைய கடன் இடர் வெளிப்பாடு

RDB யின் மொத்த கடன் இடர் வெளிப்பாடு, அதன் மொத்த சொத்துக்களில் 72.35%. கடன் விரிவாக்கம் வங்கியின் பிரதான வணிகமாகும். இதன் விளைவாக, வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் மிக முக்கியமான இடர் வகையாக கடன் இடர் உள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், எமது கடன் வழங்கும் போட்போலியோ ரூபா 6.92 பில்லியனால் இவ்வருடம் அதிகரித்து இது, 5.03% அதிகரிப்பைப் பதிவு செய்கிறது. 2019 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு, வங்கியின் கடன் போட்போலியோ 05 மில்லியனுக்கு மேற்பட்ட 626 கடன் வசதிகளை உள்ளடக்கியிருந்தது. அத்துடன், மொத்த முற்பணப் போட்போலியோவில் முதலிடம் வகிக்கும் 10 கடன் பெறுநர்கள் 0.43% பங்களிப்பைச் செய்துள்ளது. முதல் மூன்று வாடிக்கையாளர்கள் முறையே 0.13%, 0.11% மற்றும் 0.03% ஆகிய பங்களிப்பை மேற்கொண்டுள்ளனர் என்பது மேலதிக பகுப்பாய்வில் தெரிய வருகிறது. RDB யின் கடன் போட்போலியோ விவசாயக் கடன், கால்நடை வளர்ப்புக் கடன், கைத்தொழில் துறைக் கடன் (SMS) வியாபார மற்றும் சேவைகள் கடன், வீடமைப்புக் கடன், அடகு, நுகர்வுக் கடன் மற்றும் வைப்புகளுக்கு எதிரான கடன் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

RDB அபிவிருத்தி வங்கி என்ற வகையில், ஏனைய வங்கிகளைப் போன்று கடனை பிரதான வணிகமாகக் கருதுவதுடன், இது, வங்கியின் ஒட்டுமொத்த கடன் வெளிப்பாட்டை அதிகரிக்கும் போக்கை காட்டுகிறது. எனவே, கடன் இடர் முகாமைத்துவ செயன்முறை மீது குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவத்தை வங்கி வழங்கியுள்ளது.

### கடன் இடர் ஆளுகை

RDB யின் கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை கடன் இடர் முகாமைத்துவத்திற்கு பிரதான வழிகாட்டியாக இருப்பதோடு, இது, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகிறது. இந்தக் கொள்கை கடன் இடரைத் தணிக்கும் மற்றும் இனங்காணும் முறைமைகளையும், இடர் தொடர்பான அனைத்துக் கொள்கைகள் மற்றும் செயல் முறைகள் என்பவற்றை உள்ளடக்குகிறது. சபை மட்டக் குழுக்களும், முகாமைத்துவ மட்டக் குழுக்களும் RDB யின் கடன் இடர் ஆளுகையில் ஈடுபடுகின்றனர். RMD யுடன் இணைக்கப்பட்டுள்ள கடன் நிருவாக அலகு பாதுகாப்பு இடர், NPL இடர் என்பவற்றை இனங்காணவும், கண்காணிக்கவும் மேலும் கடன் மேற்பார்வையையும் மேற்கொள்கிறது. RMD யின் கீழ் வருகின்ற கடன் இடர் முகாமைத்துவ அணி RDB யின் கடன் போட்போலியோவை மீளாய்வு செய்து காலாந்தர அடிப்படையில் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.




### கடன் இடர் தணிப்பு, கண்காணிப்பு மற்றும் தணிக்கையிடல்

வங்கியின் கடன் போட்போலியோ அன்றாட வாடிக்கையாளர் பகுப்பாய்வு மற்றும் மீட்பு செயன்முறைகள் ஊடாக கிளை முகாமையாளர் / கடன் அதிகாரிகள் மற்றும் அடிமட்டத்தில் தனிப்பட்ட கடன் வசதிகள் (கிளை மட்ட) ஆகியவற்றினால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், தலைமைக் காரியாலய மட்டத்தில் இடர் முகாமைத்துவத் திணைக்களம், வங்கியின் கடன் போட்போலியோவை பகுப்பாய்வு செய்வதோடு, சுயாதீன அவதானிப்புகளுடன் முக்கிய இடர் குறிகாட்டிகளின் (KRI) கீழ் பணிப்பாளர் சபைக்கு மாதாந்தம் அறிக்கையிடுகிறது. KRI அறிக்கை மொத்தக் கடன் போட்போலியோ பகுப்பாய்வு, NPA பகுப்பாய்வு, கடன் ஏற்பாட்டுப் பகுப்பாய்வு போன்றவற்றை உள்ளடக்குகிறது. இடர் முகாமைத்துவப் பிரிவு முதல் 20 கடன் பெறுநர்களையும் உன்னிப்பாக மேற்பார்வை செய்து, மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகிறது. தரமான கடன் போட்போலியோவை கையாள்வதற்கு RDB யினால் கீழே தரப்பட்டுள்ள தணிப்பு நுட்பங்களும் அணுகுமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

### கையளிக்கப்பட்ட அங்கீகாரம் வழங்கும் அதிகார சபை

கடன் வசதிகளை அங்கீகரிப்பதற்கு விசேட கையளிக்கப்பட்ட அதிகார மட்டங்களை வங்கி கொண்டுள்ளது. சாதாரணமாக, கடன் பிரேரணைகள் அனுபவம் வாய்ந்த கடன் அதிகாரிகளினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமான அங்கீகார அதிகார மட்டத்திடம் கையளிக்கப்படும். எனினும், உயர் பெறுமதியுடைய கடன் பிரேரணைகள், கடன் குழுவினாலும் பணிப்பாளர் சபையினாலும் அங்கீகரிக்கப்படும். தற்போது பிரதிப் பொது முகாமையாளர் / கடன் உடைய அதிகார மட்டத்தை விஞ்சுகின்ற கடன் பிரேரணைகள், கடன் இடர் அதிகாரியின் சுயாதீன மதிப்பீட்டிற்கு உட்பட்டது. 2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட மதிப்பீட்டு மற்றும் அங்கீகார செயன்முறையை வங்கி தொடர்ந்து பின்பற்றி வருவதுடன், இந்தச் செயன்முறை வங்கியின் கடன் போட்போலியோ இடர் முகாமைத்துவத்திற்கு பாரிய பங்களிப்புச் செய்துள்ளது.


# இடர் முகாமைத்துவம்

## கடன் நிருவாகப் பிரிவு

கடன் போட்போலியோவின் நிருவாக செயன்முறையை அதிகரிப்பதற்காக 2016 மார்ச் மாதத்தில் வங்கி கடன் நிருவாகப் பிரிவை ஸ்தாபித்தது. இது, இடர் முகாமைத்துவப் பிரிவின் கீழ் ஒரு உதவிப் பொது முகாமையாளரின் தலைமை ஒரு சுயாதீனப் பிரிவாக செயற்பட்டு வருகிறது. இந்தப் பிரிவு மேலதிக அனுபவம் வாய்ந்த மற்றும் தகுதியான பணியாட்களுடன் 2019 இல் வலு சேர்க்கப்பட்டது. அத்துடன், இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள் விரிவாக்கப்பட்டன.

இப்பிரிவு, ஆரம்பத்தில் கம்பஹா மாவட்டத்தில் கடன் பாதுகாப்பு ஆவணங்களைக் கண்காணிக்கவும் ரூபா 2.5 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட சகல கடன்களையும் மீளாய்வு செய்யவும் பொறுப்பாக இருந்தது. இதனையடுத்து, 2019 இல் இந்தப் பிரிவு நாடு பூராகவும் உள்ள அனைத்துக் கிளைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்தப் பிரிவு, கடன் பாதுகாப்பு ஆவணங்களைக் கண்காணிக்கவும், ரூ. 2.5 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட கடன்களை மீளாய்வு செய்யவும் பொறுப்பாக இருந்ததோடு, மேலும், ரூபா 5 மில்லியனுக்கும் மேற்பட்ட கடன்களை மேல் மாகாணத்தில் மீளாய்வு செய்தது.

2019 ஆம் ஆண்டில் வங்கியின் கடன் இடரை தணிக்கும் கடன் கொள்கை மற்றும் கையேட்டு சுற்றறிக்கைகள் என்பவற்றின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு அமைய, கிளைகள் செய்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு 208 கடன் வசதிகளின் பாதுகாப்பு ஆவணங்களை கடன் நிர்வாகப் பிரிவு மீளாய்வு செய்தது.




2019 இல் மீளாய்வு செய்யப்பட்ட கடன்களின் எண்ணிக்கை

## கடன் மீளாய்வுப் பொறிமுறை (LRM)

2017 தொடக்கம் தரமான கடன் போட்போலியோவைப் பேணுவதற்காக RDB விரிவான LRM ஒன்றை ஸ்தாபித்துள்ளது. கடன் நிருவாகத்தின் பண்பு மற்றும் அளவு என்பவற்றை மேம்படுத்துவதற்கு RDB யின் கடன் மீளாய்வுக் கொள்கை கடன் மீளாய்வுப் பொறிமுறைக்காக ஒரு பொதுவான கட்டமைப்பை ஸ்தாபித்துள்ளது. இந்த மீளாய்வு, ஆரம்ப அளவை விட அதிகமான அனைத்து செயற்படு கடன்களையும் உள்ளடக்க வேண்டும். இது, வங்கியின் கடன் போட்போலியோவில் 40% விட அதிகமாக இருக்க வேண்டும். கடனின் ஆரம்ப அளவு IRMC உடைய பரிந்துரையுடன் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட / அங்கீகரிக்கப்பட வேண்டும்.

வங்கியின் LRM கொள்கையுடன் இணங்கி நடக்கின்ற வகையில் கடன் நிர்வாகப் பிரிவு ஆரம்ப அளவான 40%ஐ உள்ளடக்கி 2020 க்காக வருடாந்தத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தக் கொள்கையின் கீழ், பாதுகாப்பு ஆவணங்களின் பௌதீக சரிபார்ப்பு மற்றும் அங்கீகாரம் அளிக்கப்படும் அதிகார சபையினால் உருவாக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் என்பன வங்கியின் கடன் இடரைத் தணிப்பதற்காக அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட அதிகாரியினால் பரிசோதிக்கப்படுகிறது.

சரிபார்க்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட கிளைக்கு வருகை தந்த அதிகாரி ஒரு விரிவான அறிக்கையைத் தயாரிப்பதுடன், ஏதேனும் சீர்படுத்தல் நடவடிக்கைகள் இருப்பின் அவ்வறிக்கையை உதவிப் பொது முகாமையாளர் - இடர் உடைய கையொப்பத்துடன் கிளை முகாமையாளருக்கு அனுப்பி வைப்பதுடன், மேலதிகப் பிரதிகளை பொருத்தமான பிரதேச பொது முகாமையாளர் மற்றும் மாவட்ட முகாமையாளருக்கு அனுப்பி வைப்பார்.

தற்போது 09 கிளைகளில் மேலே தரப்பட்ட வரையறைகளுக்கு அப்பாற்பட்ட கடன் வசதிகள், கடன் நிருவாகப் பிரிவினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கிளைகளில் 05 கிளைகள் மேலே குறிப்பிடப்பட்டவாறு தமது அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளன.

இதனைவிட இந்தப் பிரிவு கடன் இடர் மற்றும் வங்கியின் செயற்பாட்டு இடர் என்பவற்றைத் தணிப்பதற்காக பின்வரும் பணிகளையும் மேற்கொள்கின்றன.

- வழங்கப்பட்ட வசதிகளுக்கான வட்டி விகிதங்களை நாளாந்தம் மேற்பார்வை செய்தல்
- புதுப்பிக்கப்பட வேண்டிய காப்புறுதிக் கொள்கைகளை க்கண்காணித்தலும், உரிய அதிகார சபைகளுக்கு அறிவித்தலும்.
- அதன் புதுப்பிக்கப்பட வேண்டிய மதிப்பீடுகளைக் கண்காணித்தலும் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தலும்.
- முக்கிய வங்கி முறைமையில் அசாதாரணமான உள்ளீடுகள் பற்றி விழிப்பாக இருத்தல்
- ரூபா 500,000 விடக் கூடிய ஈட்டு வசதிகளை கண்காணித்தல்.

## இடர் மதிப்பீடு

2016 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து வங்கியின் குறிப்பான வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு, வாடிக்கையாளர் தரமிடலை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் AAA, AA, A மற்றும் BBB என மதிப்பிடப்படுவர். சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு அமைய BBB க்கு கீழே உள்ள வாடிக்கையாளர் வங்கியில் இருந்து கடன் பெற தகுதியற்றவர் ஆவார்.

## இடர் அடிப்படையிலான விலையிடல்

2016 இல் இருந்து வங்கியின் கடன் வசதிகளுக்காக இடர் அடிப்படையிலான விலையிடலை RMD அறிமுகப்படுத்தியுள்ளது. வங்கி வாடிக்கையாளர் இடர் மதிப்பிடலின் அடிப்படையில் இவ்வசதியுடைய விலையை சீராக்கியுள்ளது. வங்கி நிதிகளின் கீழ் வருகின்ற வசதிகளுக்கு மாத்திரமே இந்த விலையிடல் முறைமை பிரயோகிக்கப்படும். மீள் நிதியிடல் திட்டங்களின் கீழ் கருத்திற் கொள்ளப்படும் ஏனைய வசதிகள் இடர் அடிப்படையிலான விலையிடலில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

## கடன் இழப்பு ஏற்பாடு (வலுக்குறைப்பு ஏற்பாடுகள் மற்றும் மத்திய வங்கி ஏற்பாடு)

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு இசைவாக நடைபெறும் பொருட்டு, வங்கி, கீழே தரப்பட்டுள்ள இரண்டு முறைகளின் அடிப்படையில் கடன் நட்டத்திற்கான வலுக்குறைப்பைக் கணக்கிட்டுள்ளது.

- தனிப்பட்ட வலுக்குறைப்பு
- கூட்டு வலுக்குறைப்பு

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலுக்கு அமைய, வங்கி இரண்டு வகையான ஏற்பாட்டு முறைகளைப் பின்பற்றுகின்றது. அவையாவன:

- பொது ஏற்பாடு (மத்திய வங்கி வழிகாட்டலுக்கு அமைய)
- விசேட ஏற்பாடு (மத்திய வங்கி வழிகாட்டலுக்கு அமைய)

வங்கியின் ஏற்பாட்டுக் காப்பு விகிதம் மற்றும் திறந்த கடன் வெளிப்பாடு என்பன, காலாந்தர அடிப்படையில், இடர் முகாமைத்துவ திணைக்களத்தினால் கணக்கிடப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்தத் திணைக்களம், தமது அவதானிப்புகளுடன் இவ்விதங்களை மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கின்றது.

## SLFRS 9 இன் அமுலாக்கம்

வங்கி SLFRS 9 ஐ 2018 ஜனவரி முதல் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த ஏற்பாட்டு முறை, தவறுகையில் உறப்பட்ட கடன் நட்ட வெளிப்பாட்டைப் பயன்படுத்தி (EAD), தவறுகையின் நிகழ்தகவு (PD) தவறுகையில் வழங்கப்பட்ட நட்டம் (LGD) மற்றும் நிலுவையாக உள்ள முதலாவது மற்றும் இரண்டாவது தவணைக் கட்டணங்கள் என்பவற்றின் மீதான முன்னோக்கிய பார்வையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## துறைசார் வரையறைகளும் செறிவு இடரைக் கையாளுதலும்

வங்கி, கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை ஊடாக கடனுக்காக அங்கீகரிக்கப்பட்ட துறைசார் வரையறைகளை ஸ்தாபித்துள்ளது. RDB யின் இடர் முகாமைத்துவ திணைக்களம் பொருளாதார மற்றும் கைத்தொழில் தரங்களுக்கு அமைய இந்த வரையறைகளை காலாந்தர அடிப்படையில் அங்கீகரிக்கிறது. இவ்வரையறைகளுக்கு அமைய, வணிகப் பிரிவுகள் தமது தனிப்பட்ட கடன் போட்போலியோவை முகாமைத்துவம் செய்கின்றன.

## அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான துறைசார் வரையறைகள்

| | 2019-டிசம்பர் | | |
|---|---|---|---|
| துறை | உண்மை விகிதம் | அங்கீகரித்த விகிதம் | வேறுபாடு |
| விவசாயம் | 20.86% | 21.00% | (0.14%) |
| கால்நடை வளர்ப்பு | 2.21% | 3.00% | (0.79%) |
| கைத்தொழில் (SME) | 33.37% | 35.00% | (1.63%) |
| வர்த்தக மற்றும் சேவைகள் | 0.11% | 1.00% | (0.89%) |
| வீடமைப்பு | 16.44% | 19.00% | (2.56%) |
| நகை அடகு | 6.30% | 6.00% | 0.30% |
| ஏனைய முன்னுரிமை* | 18.12% | 12.00% | 6.12% |
| ஊழியர்கள் | 2.58% | 3.00% | (0.42%) |

*ஏனைய முன்னுரிமை = நுகர்வு + வைப்புகளுக்கு எதிரான கடன்கள் + குத்தகை + மீளமைக்கப்பட்ட கடன்கள் + LDL NPL கடன்கள்

## செறிவு இடர்


காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்ட துறைசார் வரையறைகளுக்கு அமைய ஒவ்வொரு துறை, தயாரிப்பு மற்றும் புவியியல் அடிப்படையில் செறிவு இடரை வங்கி கையாண்டுள்ளது.

| | 2018 | 2019 |
|---|---|---|
| துறைகள் | HHI | HHI |
| விவசாயம் | 0.038 | **0.044** |
| கால்நடை வளர்ப்பு | 0.001 | **0.000** |
| கைத்தொழில் துறை (SME) | 0.112 | **0.111** |
| போக்குவரத்து சேவைக் கடன்கள் | 0.000 | **0.000** |
| வீடமைப்பு | 0.042 | **0.027** |
| நகை அடகு | 0.003 | **0.004** |
| ஏனைய முன்னுரிமை | 0.025 | **0.033** |
| ஊழியர்கள் | 0.001 | **0.001** |
| மொத்தம் | 0.221 | **0.220** |


தயாரிப்பு வாரியான மொத்த HHI பூச்சியத்தை விடக் கூடிய பெறுமதியாகவும், 0.5 ஐ விடக் குறைவாகவும் உள்ளது. SME மற்றும் நுண் நிதி மீது உயரிய செறிவு உள்ளதை நாம் அவதானித்துள்ளோம். ஏனைய தயாரிப்புகள் குறைந்த செறிவு இடரைக் கொண்டுள்ளதுடன் அவற்றின் HHI பூச்சியத்தை மிக நெருங்கியுள்ளது. எனவே, ஒவ்வொரு வகையையும் கருத்திற் கொள்ளும் போது, தயாரிப்பு வாரியான கடன் வசதிகளுக்கு குறைந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# இடர் முகாமைத்துவம்

## திறந்த கடன் வெளிப்பாடும் ஏற்பாட்டுக் காப்பு விகிதமும்




2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்த விகிதம் அதிகரித்தது. இது ஒரு அறிகுறியல்ல. ஏனெனில், இந்த விகிதம் எதிர்பாராத சூழ்நிலை ஒன்றுக்குப் பயன்படுத்த வேண்டிய NPL இன் தொகையின் விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கிறது. நாட்டின் பொருளாதார சூழ்நிலை காரணமாக, இந்த விகிதம் குறைகின்ற அளவுக்கு வங்கிக்கு நன்மை பயக்கும். எனினும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்திற்கான NPA யின் குறையும் போக்கின் காரணமாக, இவ்விகிதத்தில் ஒரு சிறிய வீழ்ச்சியை நாம் அவதானித்துள்ளோம். எனினும், ஏற்பாடுகளை அதிகரிப்பதன் ஊடாகவும், மீட்பு நடவடிக்கைகள் மூலமாகவும் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த வங்கி குறை தீர்ப்பு நடவடிக்கையை எடுத்தது.




## திரவ இடர்

வங்கி தனது நிதிக் கடப்பாடுகளைச் சந்திப்பதில் எதிர்கொள்கின்ற சிரமம் "திரவ இடர்" எனப்படும். இந்த இடர் பணம் அல்லது ஏனைய நிதிச் சொத்துக்களை விநியோகிப்பதன் மூலம் தீர்க்கப்படுகிறது.

## RDB யில் திரவ இடர் முகாமைத்துவம்

வங்கி, தொடர்ந்து வங்கித் திரவத்தன்மை மீதான திரவ முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுடன் இணங்கி நடந்துள்ளது. ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான திரவச் சொத்தின் மீதான விகிதம் 20% ஆகவும், திரவக் காப்பு விகிதம் (LCR) 80% ஆகவும் இருக்கின்றது. வங்கி, எப்போதும் இந்தத் தேவைப்பாட்டை விட அதிகமாக ஒரு சிறந்த நிலைமையைப் பேணிப் பாதுகாக்கும் வங்கியின் கொள்கையை தக்க வைத்துள்ளது. இந்தக் குறிக்கோளை அடைய வங்கி தொடர்ந்து செல்லும் அடிப்படையில் திரவச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மதிப்பீடு செய்து கண்காணித்து வருகிறது.

## திரவ இடர் ஆளுமை

வங்கியின் திரவத்தன்மையைக் கையாளும் பிரதான பொறுப்பு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழுவிடம் (ALCO) உள்ளது. இந்தக் குழு நிருவாக மட்டத்தில் அமைந்திருப்பதோடு, வங்கியின் கூட்டுறவு மற்றும் நிருவாக மட்டப் பணியாட்களைக் கொண்டுள்ளது. இக்குழு குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை அல்லது தேவைக்கு ஏற்றவாறு அடிக்கடி சந்திக்கும்.

## திரவ இடர் தணிப்பு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்

வங்கி, திரவ இடரை அளவிட இரண்டு பிரதன அணுகுமுறைகளைக் கையாள்கிறது. அவையாவன:

- இருப்பு அணுகுமுறை
- பாய்ச்சல் அணுகுமுறை

ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைய, வங்கி இருப்பு அணுகுமுறையின் கீழ் வங்கியின் திரவ இடரை அளவிட பிரதானாக இரண்டு விகிதங்களைப் பயன்படுத்தியுள்ளது.


## நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் (SLAR)


வங்கி, நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதத்தை ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 20% ஐ விட அதிகமாகப் பேணி வந்துள்ளது.

## திரவ காப்பு விகிதம் (LCR)

RDB 2016 இல் இலங்கை மத்திய வங்கியின் திரவக் காப்பு விகித வழிகாட்டியுடன் இணங்கி நடந்து LCR விகிதத்தை 2019 டிசம்பர் இறுதியில் உள்ளவாறு 205.99% ஆக பேணியுள்ளது. இது, ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட உயர்வாக உள்ளது. (100%).

## 2019 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்




கீழே தரப்பட்டுள்ள ஏனைய விகிதங்களும் திரவ இடரை அளவிட கணக்கிடப்பட்டது.

## திரவத்தன்மை மீதான அழுத்த சோதனை

இடர் முகாமைத்துவத் திணைக்களம், வங்கி திரவத்தன்மை தொடர்பான என்ற சூழ்நிலைகளின் கீழ் ஒரு அழுத்த சோதனையை கிரமமாக நடத்துகிறது. இது, பல்வேறுபட்ட தீவிரமான நிலைமைகளோடு தொடர்புபட்டது. ஒவ்வொரு மாதமும் திணைக்களம் அழுத்த சோதனைகளின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்து வங்கியின் திரவத்தன்மை மீதான எதிர்பாராத சூழ்நிலைகளின் சாத்தியமான தாக்கங்களை அளவிடுகின்றது. அழுத்த சோதனை பெறுபேறுகளுக்கு அமைய இடர் முகாமைத்துவத் திணைக்களம் எடுக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கை பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதுடன், ALCO ஊடாக அத்தகைய சூழ்நிலைகளுக்கான நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

சகல எண்ணிக்கைகளும் ரூபாவில் '000

| விபரங்கள் | 31.12.2019 இல் உள்ளவாறு மீதி | அதிர்வுகள் சிறிய | மிதமான | பாரிய |
|---|---|---|---|---|
| அதிர்வுகளின் அளவு | | 2% | 4% | 6% |
| திரவச் சொத்துக்கள் | 46,699,453 | 46,699,453 | 46,699,453 | 46,699,453 |
| மொத்த தகுதியான பொறுப்புகள் | 144,233,376 | 144,233,376 | 144,233,376 | 144,233,376 |
| மொத்த தகுதியான பொறுப்புக்கள் மீதான பெறுமதி | | 2,884,668 | 5,769,335 | 8,654,003 |
| அதிர்வின் பின் திருத்தப்பட்ட மொத்த தகுதியுடைய பொறுப்புக்கள் | | 141,348,709 | 138,464,041 | 135,579,374 |
| அதிர்வின் பின் திருத்தப்பட்ட திரவச் சொத்துக்கள் | | 43,814,786 | 40,930,118 | 38,045,451 |
| நியதிச்சட்ட திரவச் சொத்து விகிதம் | 32.38% | 31.00% | 29.56% | 28.06% |

# இடர் முகாமைத்துவம்

## செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர் என்பது, பற்றாக்குறையான அல்லது தோல்வியடைந்த உள்ளக செயன்முறைகள் கடன் அல்லது சந்தையினால் ஏற்படுத்தப்பட்ட வெளியக நிகழ்வுகள் தோல்வியடைந்த ஆட்கள் அல்லது முறைமைகள் என்பவற்றில் இருந்து எழுகின்ற நேரடியான அல்லது மறைமுகமான நட்டங்களின் ஆபத்து பற்றிய வெளிப்பாடாகும்.

## RDB இல் செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டிலும் 276 கிளைகளை வங்கி கொண்டுள்ளது. கிளைகளின் எண்ணிக்கை தொடர்பில் பார்க்கும் போது RDB நாட்டின் மூன்றாவது பெரிய வங்கியாகவும், 3,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் செயற்பட்டு வருகிறது.

2014 ஆம் ஆண்டு இறுதி வரை வங்கி நான்கு வேறுபட்ட தகவல் தொழில்நுட்பத் தளங்களைக் கொண்டு பணியாற்றியது. தற்போது RDB ஒரு புதிய மத்தியப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பத் தீர்வைக் கொண்டுள்ளது. வங்கி, தினந்தோறும் ஒவ்வொரு புதிய தொழில்நுட்பத் தயாரிப்புகளை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது. புதிய தகவல் தொழில்நுட்பத் தீர்வைக் கையாண்ட பின் வங்கி, தானாகவே தகவல் தொழில்நுட்ப இடரை நோக்கிச் சென்றுள்ளது. 2015 இல் இருந்து LankaPay வலையமைப்புடன் இணைந்து நாடு பூராகவுள்ள வாடிக்கையாளர்களுக்கு ATM வலையமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதோடு, தனது சொந்த ATM வலையமைப்பு நிலையங்களையும் அமைத்துள்ளது.

## செயற்பாட்டு இடர் ஆளுகை

RDB 2013 இல் ஒரு விரிவான செயற்பாட்டு இடர் முகாமைத்துக் கொள்கையை ஸ்தாபித்துள்ளது. இது, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. வங்கியின் இடர் முகாமைத்துவம் தொடர்பான பிரதான வழிகாட்டியாக இந்தக் கொள்கை செயற்படுவதுடன், காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகிறது.

## செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு

- 2019 ஆம் ஆண்டில் 12 செயற்பாட்டு உப குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றின் அறிக்கைகள் மீளாய்வுக்காக IRMC க்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
- 2019 இல் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டது. மேலும், IRMC யினால் பரிந்துரைக்கப்பட்டு, வங்கியின் இடையூறு அற்ற செயற்பாட்டிற்காக பணிப்பாளர் சபை அங்கீகரித்தது.

## செயற்பாட்டு இடர் முகாமைத்துவப் பிரிவு

RMD யின் கீழ் வரும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவப் பிரிவு, மாதாந்த KRI அடிப்படையில் செயற்பாட்டு நட்டங்கள் தொடர்பான காலாந்தர அறிக்கைகளைச் சமாப்பித்தது.

## செயற்பாட்டு இடர் முகாமைத்துவ உப குழு

2012 ஆம் ஆண்டு தொடக்கம் RMD வங்கியின் பிரதம இடர் அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் ஒரு செயற்பாட்டு இடர் உப குழுவை அமைத்துள்ளது. 2017 ஆம் ஆண்டு வங்கியில் செயற்பாட்டுத் திணைக்களம் உருவாக்கப்பட்டதோடு, இந்தக் குழு மீள ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது, இக்குழு குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை சந்திப்பதுடன், அதன் அறிக்கையை மதிப்பீட்டிற்காக காலாண்டு அடிப்படையில் IRMC க்கு சமர்ப்பிக்கிறது. இந்த அறிக்கை RDB யின் செயற்பாட்டு விடயங்கள் தொடர்பான அனைத்து அணுகுமுறைகளையும் உள்ளடக்குகிறது.

## தகவல் தொழில்நுட்ப செயற்குழு

2013 இல் வங்கி தகவல் தொழில்நுட்ப செயற்குழுவை ஸ்தாபித்தது. இக்குழு வங்கியின் CIO வினால் தலைமை வகிக்கப்படுகிறது. இக்குழு அனைத்து தொழிநுட்ப ஆட்களையும் CRO வையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. வங்கியில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் காலாந்தர அடிப்படையில் ஆராய்ந்து பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளையும் தீர்வுகளையும் மேற்கொள்ளும்.

## வணிகத் தொடர்ச்சித் திட்டம் (BCP)

வங்கி அதன் வணிகத் தொடர்ச்சித் திட்டத்தை 2015 இல் பூர்த்தி செய்தது. 2017 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அனைத்து கிளைகள் மற்றும் தலைமைக் காரியாலயத்தையும் உள்ளடக்கியது. BCP யை செயற்படுத்தும் பொறுப்பு செயற்பாட்டுக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் வரும். வங்கி BCP திட்டத்தை 2017 இல் தலைமைக் காரியாலயத்தில் நடத்தியது.

## தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறை (ISMS)

2015 இல் இருந்து தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறை வங்கியின் பிரதம இடர் அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயன்பாட்டுக் கொள்கைகள் அமுலில் இருப்பதோடு, காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகிறது.

## செயற்பாட்டு இடர் தணிப்பு, மேற்பார்வை மற்றும் அறிக்கையிடல்


வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள தணிப்பு, மேற்பார்வை மற்றும் அறிக்கையிடும் நுட்பங்களை பின்பற்றியுள்ளது.

## இழந்த தரவுகள் பற்றி அறிக்கையிடுதல்


RMD 2012 இல் இருந்து தரவு இழப்பு சம்பந்தமாக அறிக்கையிடுகிறது. விசாரணைப் பிரிவுக்கு அறிக்கையிடப்படும் அனைத்து இழப்புகளும் RMD யினால் பதிவு செய்யப்படுவதோடு, ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் ரூபா 500,000 ஐ விட ஆரம்ப வரையறையை விஞ்சுகின்ற இழந்த தரவு பற்றி மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்படுகிறது. வங்கி பல்வேறு வகைப்பட்ட தரவு இழப்புகளுடன் தொடர்புபட்ட ஒரு தரவுத் தளத்தைப் பேணி வருகிறது.

## 2019 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்

### தரவு இழப்பு பற்றி அறிக்கையிடல்




உள்ளக மோசடி பற்றிய போக்கு




வெளியக மோசடி பற்றிய போக்கு

# இடர் முகாமைத்துவம்

## மூலதன முகாமைத்துவம்


மூலதன போதுமான விகிதம், வங்கியின் இடருடன் எடையிடப்பட்ட சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட வங்கியின் மூலதனத்தை அளவிடுகிறது. மூலதனத்தில் இருந்து இடர் எடையிடப்பட்ட சொத்துக்கள் விகிதம், வங்கியின் நிதி ஸ்திரத்தன்மையையும், வினைத்திறனையும் ஊக்குவிக்கிறது. எனவே, CAR வங்கியின் ஸ்திரத்தன்மையும், உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தும் முக்கிய நிதிக் குறிகாட்டிகளுள் ஒன்றாகும். இந்த அளவீடு பல்வேறுபட்ட பொருளாதார சூழ்நிலைகளில் வங்கியினால் கொண்டு நடத்தப்படும் ஒரு எதிர்பாராத நட்ட சூழ்நிலை ஒன்றில் வங்கி தொடர்ந்து செல்வதற்கான தகைமையைக் காட்டுகிறது. பாசல் குழு வங்கியின் மூலதனத்தை அளவிட ஒரு தொகையான வழிமுறைகளை அமுல்படுத்தியுள்ளது. இதற்கமைய , பாசல் III ஒப்பந்தம் 2010 இல் விநியோகிக்கப்பட்டது. இது, பாசல் II ஒப்பந்தம் பாசல் III யினால் பதிலீடு செய்யப்பட்டது. இது, இலங்கையில் 2017 ஜூலை 01 ஆம் திகதியில் இருந்து மத்திய வங்கியின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வழிகாட்டியின்படி அமுலுக்கு வந்தது. இந்தத் தேவைப்பாடு இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் மூலதனத் தேவைப்பாட்டிற்காகக் கொண்டுவரப்பட்டது. RDB ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்கும் வகையில் ஒரு முன்னேற்றமான மூலதன முகாமைத்துவத்தைக் கொண்டிருப்பதற்காக காலத்திற்குக் காலம் அதன் மூலதன சேகரித்தல் திட்டத்தைத் திருத்தும். 2017 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு வரை வங்கி பாசல் II ஒப்பந்தங்களுடன் இணங்கிச் சென்று, அதன் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டை 10% பேணி வந்தது. எனினும், 2017 ஜூன் மாதத்தில் இருந்து பாசல் III இன் அறிமுகம் காரணமாக, RDB அதன் மூலதனத்தை 12.5% குறைந்தபட்ச மூலதன போதுமான விகிதத்தைப் பூர்த்தி செய்ய அதிகரிக்க வேண்டியிருந்தது.

2017 ஜூலை 01 ஆம் திகதியில் இருந்து 500 பில்லியனுக்கும் குறைவான உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கி என்ற வகையில் கீழே குறிப்பிடப்பட்டவாறு மூலதனத்தின் கீழ் (2 அடுக்குகளில்) வங்கி, மொத்த சொத்துக்களைப் பேண வேண்டும்.

| | குறைந்தபட்ச தேவைப்பாடு |
|---|---|
| அடுக்கு 1 | 7.00% |
| அடுக்கு 2 | 8.50% |
| மொத்த மூலதனம் | 12.50% |

வங்கியின் கடந்த இரண்டு வருடங்களின் போதான மூலதன போதுமானதன்மை கீழே தரப்பட்ட வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

### தேவைப்படுத்தப்பட்ட எதிர் உண்மையான மூலதன போதுமான வீதம்




உண்மையான எதிர் தேவைப்படுத்தப்பட்ட LAR (%)

மேலே தரப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டவாறு, பல சந்தர்ப்பங்களில் குறைந்தபட்ச தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையினால் வங்கி பாசல் III ஒப்பந்தங்களுக்கு அமைய ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை நிச்சயமாக அடைய வேண்டும். பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை வங்கியின் மூலதன தளத்தை வலுப்படுத்துவதற்காக அங்கீகரித்துள்ளன.

1. பிரதேச அபிவிருத்தி வங்கியின் சட்டத்திற்கு அமைய, தற்போது இருக்கும் பங்குதாரர்களிடமிருந்து மேலதிக மூலதன உட்செலுத்துகைக்காக கோருதல். இது, புதிய முதலீட்டாளர் ஒருவரை பங்குதாரராக வர அனுமதிக்காது.
2. தொகுதிக் கடன்களை வழங்குதல்

2017 ஆம் ஆண்டில் ரூபா 02 பில்லியன் வரை பெறுமதியான தொகுதிக்கடன்களை வழங்குவதன் மூலம், மூலதனத்தை அதிகரிக்க சபை அங்கீகாரம் வழங்கியது. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு உபாய நுட்பங்களையும் அமுல்படுத்தும் போது, வங்கி, ஒழுங்குபடுத்துநரால் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாட்டை விஞ்சுவதன் மூலம், அதன் மூலதனத் தளத்தை வலுப்படுத்த முடியும்.

வங்கியின் மூலதன போதுமான தன்மையைப் பாதிக்கும் கடன் போட்போலியோவின் NPA நகர்வு மீது சபையும் முகாமைத்துவமும் கவனம் செலுத்தி வருகின்றன. எனவே, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அழுத்தப் பரீட்சைக் கொள்கை வழிகாட்டிகளின் அடிப்படையில் இடர் முகாமைத்துவ திணைக்களத்தினால் காலாந்தர அழுத்த சோதனை நடத்தப்பட்டு வருவதுடன், அதன் பெறுபேறுகள் காலாண்டு அடிப்படையில் IRMC ஊடாக சபைக்கு அறிவிக்கப்படுகிறது.

2019 இல் நடத்தப்பட்ட அழுத்த சோதனையின் பெறுறுகள் பின்வருமாறு:

| செயற்திறனற்ற முன்னோக்கிய போட்போலியோ | ஆரம்ப CAR | நிலை 01 | நிலை 02 | நிலை 03 |
|---|---|---|---|---|
| அதிர்வின் அளவு | - | 2% | 3% | 4% |
| இழப்பு வகைக்கு நேரடியாக தொடர்புபட்ட | 11.27% | 11.24% | 11.22% | 11.20% |
| அனைத்து வகைக்குள்ளும் இடமாற்றப்பட்ட அதிர்ச்சிகள் | 11.27% | 11.25% | 11.25% | 11.24% |

## கடந்த இரண்டு வருடங்களுக்கான மூலதன சேர்க்கையின் சாராம்சமும் அடுத்த வருடத்திற்கான திட்டமும்

RDB நாட்டில் இருக்கும் ஏனைய வங்கிகள் போன்ற வளர்ச்சி, இலாபம், வினைத்திறன் ஆகிய முக்கியமான செயற்திறன் துறைகளில் வெற்றி கண்டுள்ளது. பாசல் III மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு அதன் மூலதனத் தளத்திற்கு புதிய மூலதனத்தைக் கவர்வதில் பாரிய சவாலை எதிர்நோக்குகிறது.

வங்கி உருவாக்கப்பட்ட சட்டம் பங்கு வைத்திருப்பதை மூன்று அரச வங்கிகளுக்கும், திறைசேரிக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தி இருப்பதனால், இந்த மூலதன மட்டுப்பாடுகள் மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

ஆரம்ப பாசல் III மூலதன தேவைப்பாடான 12.5% ஐ அடைய திறைசேரி அதன் பங்கு வைத்திருத்தலை ரூபா 2.5 பில்லியனை உட்செலுத்துவதன் மூலம் அதிகரித்துள்ளது. இது, 2017 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் அதன் பங்குகளை 64% இருந்து 8.3% ஆக அதிகரித்தது. மேலும், வங்கி, 2018 செப்டம்பர் மாதத்தில் இருந்து லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியை இணைத்துக் கொண்டதால் அதன் மூலதனம் ரூபா 4,176,292,999 ஆக அதிகரித்தது.

வங்கி எதிர்காலத்தில் சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளையும், பின்னூட்டல்களையும் மேற்கொண்டுள்ளது. அவை கீழே தரப்பட்டுள்ளன:

- மூலதன போதுமான விகிதத்தின் பாதகமான விளைவைக் கட்டுப்படுத்த வங்கி NPA வளர்ச்சியை நிறுத்தும் / கட்டுப்படுத்தும்.
- ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து டொலர் கடனின் இரண்டாவது விடுகையை பெறும் செயன்முறையில் உள்ளது.
- அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வங்கிச் சட்டம் திருத்தம் பற்றிய நடவடிக்கையை பின்தொடர்கிறது. இதன் மூலம் வங்கியில் தற்போதுள்ள பங்கு வைத்திருத்தல் நிலைமை விரிவாக்கப்படும்.
- 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டவாறு, மேலதிக மூலதனத்தை உட்செலுத்துவதன் மூலம் பங்கு வைத்திருத்தலை உயர்த்துவதற்கான கோரிக்கையை திறைசேரியிடம் முன்வைத்தல்.
- எதிர்கால கடன் வளர்ச்சி மற்றும் மூலதன முதலீடுகளை இயன்றளவு சுருக்குதல்.

## உள்ளக மூலதன போதுமான மதிப்பீட்டு செயன்முறை (ICAAP)

உள்ளக மூலதனப் போதுமான மதிப்பீட்டு செயன்முறையின் நோக்கம், வங்கியின் நிறுவன தொடர்ச்சிக் கோட்பாட்டைப் பேணுவதற்கு மூலதன போதுமான மட்டம் உள்ளதா என்பதைத் தீர்மானிக்கவும், அதனுடன் தொடர்புடைய இடர்களின் போதுமான மூலதன மட்டங்களை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த அறிக்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பாசல் III ஒப்பந்தங்களோடு இணங்கி நடக்கின்ற தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்கிறது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை இந்த அறிக்கையை வங்கிக்காக தயார் செய்து, அங்கு மூலதன தேவைப்பாட்டின் மதிப்பீடு முழு வங்கியுடன் தொடர்புடைய இடரின் மதிப்பீடு இடர் தணிப்பு உபாய நுட்பங்கள், அழுத்த உபாய நுட்பங்கள், மூலதன முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் மீதான பணிப்பாளர் சபையின் வகிபங்கு என்பவற்றை உள்ளடக்குவர். இந்த அறிக்கை வருட இறுதியில் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு, மே மாத இறுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

## இணக்க இடர் முகாமைத்துவம்

வங்கிக்கு இருக்கக்கூடிய கடப்பாடுகளின் தோல்விகள் அல்லது மீறுகைகளைத் தவிர்ப்பதற்காக அதன் நியதிச் சட்டம் மற்றும் நிதி அதிகார சபை மற்றும் ஏனைய சட்ட / அரசாங்க நிறுவனங்களினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் ஒருங்கிணைந்து செல்வதை உறுதிப்படுத்துவதில் வங்கியின் முகாமைத்துவம் முக்கிய இடத்தை வழங்குகிறது.

உள்ளகக் கட்டுப்பாடுகளும், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவது இணக்க அதிகாரியின் முக்கிய குறிக்கோளாகும். வங்கியின் இணக்கப் பாடுகள் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் / இணக்கம் ஆல் தலைமை வகிக்கப்படுவதுடன் IRMC யின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இவ்விணக்கத்தை அடைவதற்காக இவர், இணக்கத் தேவைப்பாடுகளைக் கண்காணித்து, மதிப்பீடு செய்து, இணக்க அந்தஸ்து பற்றி காலாண்டு அறிக்கைகளை IRMC யின் மீளாய்வுக்காக சமர்ப்பிப்பார்.

இணக்க அதிகாரி இவ்வறிக்கைகள் உரிய நேரத்தில் உரிய அதிகார சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டனவா என்பதை மேற்பார்வை செய்வார்.

## வட்டி விகித இடர்

வட்டி விகித இடர் என்பது, வங்கியின் நிதி நிலைமை, வட்டி விகிதங்களின் பாதகமான நகர்வுகள் என்பவற்றின் வெளிப்பாடாகும். வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் வங்கியின் வருமானங்களை குறிப்பிடத்தக்களவு பாதிப்பதோடு, வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு அப்பாற்பட்ட விடயங்களின் அடிப்படை பொருளாதார பெறுமதியையும் பாதிக்கும்.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வட்டி விகித இடர் முகாமைத்துவக் கொள்கைக்கு அமைய, ALCO வங்கியின் இடைவெளி மற்றும் காலப் பகுதிப் பகுப்பாய்வின் அடிப்படையில் வட்டி விகிதங்களை தீர்மானிக்கப் பொறுப்புடையது. இந்தப் பகுப்பாய்வின் அடிப்படையில் இடர் முகாமைத்துவ திணைக்களம், வட்டி விகித ஏற்ற இறக்கங்கள் தொடர்பான இடர் மதிப்பீட்டை நடத்தும். எனினும், தற்போது ALCO கடன் மற்றும் வைப்புகள் இரண்டிற்கும்

# இடர் முகாமைத்துவம்

சந்தை நிலைமைகள், முறைமைகளில் உள்ள மட்டுப்பாடுகள் காரணமாக, கடன் வைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வட்டி விகிதங்களைத் தீர்மானிக்கிறது. இந்த இடர் மதிப்பீட்டுத் துறை எதிர்காலத்தில் முக்கிய வங்கித் தீர்வு அமுல்படுத்துகை பூர்த்தியடைந்த பின்னர் மேலும் முன்னேற்றப்படும்.

## தகவல் இடர் மற்றும் இணைய தள இடர்

வங்கியின் செயற்பாடுகளை அன்றாடம் நடத்துவதற்கு பயன்படுத்தப்படும் கணனி முறைகள், கணக்குப் புத்தகங்களின் இணக்கப்பாடு, தகவல்கள் மற்றும் அறிக்கைகளைப் பாதுகாப்பாக வைத்தலும், மீளப் பெறுதலும் காரணமாக, தொழில்நுட்ப இடர் எழுகின்றது. இந்த இணைய தள இடர் இணைய தாக்குதல்கள அல்லது முறைமைகள் முறிவடைதல் வலையமைப்பு அல்லது தரவுத் தளங்களில் இடையூறுகள் ஏற்படுதல் இவற்றின் மூலம் வாடிக்கையாளரின் தரவுகள் தொலைந்து போதல், செயற்பாடுகள் குழப்பமடைதல் அல்லது கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுதல் ஆகியவற்றில் இருந்து எழுகின்றது.

## தகவல் மற்றும் இணைய தள இடர் தொடர்பான இடர் ஆளுகை

### தகவல் தொழில்நுட்ப செயற்குழு

தகவல் தொழில்நுட்ப செயற்குழு 2013 இல் உருவாக்கப்பட்டது. இது வங்கியின் CIO வினால் தலைமை வகிக்கப்படுகிறது. இந்தக் குழு அனைத்து தொழில்நுட்ப ஆட்கள் மற்றும் CRO ஆகியோரைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறது. இக்குழு வங்கியின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சகல விடயங்களையும் காலாந்தர அடிப்படையில் ஆராய்ந்து பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுகளையும், தீர்வுகளையும் வழங்குகிறது.

### தகவல் இடர் மற்றும் இணைய தள இடர், இடர் தணிப்பு, கண்காணிப்பு, அறிக்கையிடல்

- பலமான தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக் கொள்கை மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடனான வலுவான தகவல் தொழில் தொழில்நுட்ப ஆளுகை
- கிரமமான தகவல் தொழில்நுட்ப பாதிப்பு பற்றிய மதிப்பீடு
- கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் என்பவற்றை மெருகூட்டுவதற்கான தொடர்ச்சியான முதலீடுகள்
- சுயாதீன திறத்தவர்களினால் தகவல் தொழில்நுட்ப கணக்காய்வுகள்

## எதிர்கால நோக்கு

வங்கியின் முகாமைத்துவம் போட்டிமிக்க நிதி கைத்தொழில் துறை சூழ்நிலையில் இடர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளது. இடர் முகாமைத்துவப் பணியை முன்னேற்றுவதில் முதலீடு செய்தலானது, அடுத்து வரும் சில வருடங்களில் முக்கிய பங்கு வகிக்கும். வங்கி முகாமைத்துவம், இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு கீழே உள்ள தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளது.

- கடன் மதிப்பெண் வலையம் மற்றும் கடன் மதிப்பிடல் முறைமை ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல்
- தன்னியக்க SLFRS 9 கணக்கியல் முறைமையைக் கொள்வனவு செய்தல்.
- தரமான கடன் போட்போலியோவை வலுப்படுத்துவதற்கு கடனை தோற்றுவிக்கும் முறைமையைக் கொள்வனவு செய்தல்
- வங்கி முழுவதும் முன்னெச்சரிக்கை முறைமையை அமுல்படுத்தல்.
- பாசல் ஒழுங்கு விதியுடன் முழுமையாக இணங்கி நடத்தல்
- இணைய தள பாதுகாப்பு தணிப்பு நுட்பங்களை ஸ்தாபித்தல்
- தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக்காக ISO 27000 ஐ ஸ்தாபித்தல்

# கூட்டுறவு ஆளுகை


66 கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
67 கூட்டுறவு ஆளுகை
88 சபை மற்றும் சபைக் குழுக்களுக்கான சமூகம்
89 பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை
95 சபை கணக்காய்வுக் குழுவின் (BAC) அறிக்கை
97 சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC)
சபைத் தெரிவுக்குழு (BNC) அறிக்கை
99 சபை தகவல் தொழில்நுட்ப செயற்குழு (BITSC) அறிக்கை
100 ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை
102 பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புக் கூற்று
103 நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளரின் பொறுப்பு
104 உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
106 உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் கூற்று

# கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை




தலைவர்
பிரதேச அபிவிருத்தி வங்கி

இலங்கை மத்திய வங்கியினால் - 2019 டிசம்பர் 31 இல் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டியின் தேவைப்பாட்டிற்கு அமைய, பிரதேச அபிவிருத்தி வங்கி இணங்கி நடந்தமை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் பற்றிய அறிக்கை

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாட்டுடன் இணங்கி நடந்தமை தொடர்பாக பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நான் இவ்வறிக்கையின் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளேன். நடைமுறை ரீதியான ஈடுபாடுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, பொருத்தமான தொடர்புபட்ட சேவைகள் 4400 மீதான இலங்கை நியமங்களில் (SLSRRS 4400) குறிப்பிடப்பட்டுள்ள எண்ணக்கருக்களுக்கு அமைவாக, என்னுடைய பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி தேவைப்பாட்டுடன் இணங்கி நடப்பதில் தங்களுக்கு உதவி அளிக்கவே இந்த நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டன.

என்னுடைய கண்டறிதல்களை இவ்வறிக்கைக்கான இணைப்பு ஒன்றில் நான் இணைத்துள்ளேன்.

மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைகள், இலங்கையின் மீளாய்வு ஈடுபாடுகள் தொடர்பான நியமங்கள் அல்லது இலங்கை கணக்காய்வு நியமங்கள் என்பவற்றுக்கு அமைவாக, இவை ஒரு கணக்காய்வாகவோ, மீளாய்வாகவோ கருதப்படாத காரணத்தினால் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி மீதான இணக்கம் தொடர்பில் நான் எவ்வித உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்த மாட்டேன்.

இலங்கை மீளாய்வு ஈடுபாடுகள் தொடர்பான நியமங்கள் அல்லது இலங்கை கணக்காய்வு நியமங்கள் என்பவற்றுக்கு அமைவாக மேலதிக நடைமுறைகளை அல்லது கணக்காய்வு ஒன்றை அல்லது மீளாய்வு ஒன்றை நான் நிறைவேற்றி இருந்தேனா என்பது தொடர்பில் ஏனைய விடயங்கள் என்னுடைய கவனத்திற்கு வந்திருப்பின் அவற்றை நான் தங்களுக்கு அறிக்கையிட்டிருப்பேன்.

என்னால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணத்திற்காகவும், தங்களுடைய தகவலுக்காகவுமே அன்றி, இந்த அறிக்கை வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட முடியாது அல்லது ஏனைய திறத்தவர்களுக்குப் பகிரப்படவும் முடியாது.

இந்த அறிக்கை மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் மாத்திரமே தொடர்புபடுகிறது. அத்துடன், அவை பிரதேச அபிவிருத்தி வங்கியை முழுமையாக எடுத்து நோக்குகின்ற போது, வங்கியின் வேறு ஏதேனும் நிதிக் கூற்றுக்கள் பற்றி இவை கருத்துக்களை வெளியிடாது.

டப்ளியூ.பீ.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

# கூட்டுறவு ஆளுகை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

## இணைப்பு - 1

### நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் மீதான அறிக்கைக்குரிய இணைப்பு

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(1) | சபையின் பொறுப்புக்கள் | |
| 3(1)(i) | சபை வங்கியின் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் வலுப்படுத்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடத்திய ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள். | |
| | a) சபையின் அங்கீகாரம், வங்கியின் மூலோபாய இலக்குகள் மற்றும் கூட்டுறவுப் பெறுமதிகள்<br><br>வங்கி தனது மூலோபாய இலக்குகளையும் கூட்டுறவுப் பெறுமதிகளையும் வங்கி முழுவதும் அறிவித்துள்ளதா | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>2016-2020 காலப் பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டமும், வருடாந்த வரவு செலவுத் திட்டமும் உள்ளது. அவை, வங்கியின் மூலோபாய இலக்குகளையும், கூட்டுறவுப் பெறுமதிகளையும் உள்ளடக்கியுள்ளது. எனினும், தற்போதுள்ள கூட்டுறவுத் திட்டம் 2020 வரை மாத்திரமே எதிர்வு கூறுகிறது.<br><br>வங்கியின் மூலோபாய இலக்குகளும், கூட்டுறவுப் பெறுமதிகளும், தலைமைக் காரியாலய மட்டத்தில் பிராந்தியப் பொது முகாமையாளர்களுக்கும், மாகாண மட்டத்தில் கிளை முகாமையாளர்களுக்கும் கூட்டங்கள் வைத்து அவர்கள் ஊடாக வங்கி ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | b) வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்திற்கான சபையின் அங்கீகாரம்.<br><br>ஒட்டுமொத்த வணிக மூலோபாயம் முழுமையான இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குவதோடு, அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>ஒட்டுமொத்த வணிக மூலோபாயம் குறைந்தபட்சம் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கு அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டுள்ளது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டம் (2016-2020) வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தை உள்ளடக்குகிறது.<br><br>ஒட்டுமொத்த இடர் கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது, காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும்.<br><br>எனினும், கூட்டுறவுத் திட்டத்திலுள்ள அளவிடக்கூடிய இலக்குகள் 2020 வரை மாத்திரமே எதிர்வு கூறுகிறது. |
| | c) இனங்காணப்பட்ட இடர்களைக் கையாழுவதற்கு உள்ள பொருத்தமான முறைகள் விவேகமானதாக இருப்பதோடு, முறையாக அமுல்படுத்தப்படுகின்றன. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கைகளும் நடைமுறைகளும் தொடர்ச்சியான மற்றும் விவேகமான மதிப்பீட்டுச் செயன் முறைகளை உள்ளடக்குகின்றன. மேலும், இது, BIRMC யினால் மீளாய்வு செய்யப்படுகிறது. |
| | d) சபை தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது. இக்கொள்கை வைப்பாளர்கள், கடன் தருநர்கள், பங்குதாரர்கள், கடன் பெறுநர்கள் ஆகிய அனைவருக்கும் அமுல்படுத்தப்படுகிறது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கை ஒன்று அமுலில் உள்ளது. இக்கொள்கை வைப்பாளர்கள், கடன் தருநர்கள், பங்குதரர்கள் மற்றும் கடன் பெறுநர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்குகிறது. |

# கூட்டுறவு ஆளுகை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | இணக்க மட்டம் |
|---|---|
| e) சபை வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமை என்பவற்றின் போதுமான தன்மையையும் ஒருமைப்பாட்டையும் மீளாய்வு செய்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>முக்கியமான அனைத்து முகாமைத்துவ ஆட்கள் விசேடமாக, பிரதிப் பொது முகாமையாளர் / செயற்பாடு உட்பட அனைவரும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை தாபிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் பொறுப்புடையவர்கள்.<br><br>மேலும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறை ஆகிய இரண்டினதும் போதுமான தன்மையை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மீளாய்வு செய்கிறது.<br><br>அத்துடன், சபையின் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| f) இலங்கை கணக்கியல் நியமங்களில் வரையறை செய்யப்பட்டவாறு (i) கொள்கையில் குறிப்படத்தக்களவு செல்வாக்கு உடையவர்கள் (ii) நேரடி செயற்பாடுகளில் ஈடுபடுவர்கள் (iii) வணிக நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துபவர்கள் ஆகிய நிலையில் இருப்பவர்களை இனங்கண்டு, முக்கியமான முகாமைத்துவ ஆட்களுக்கு பொறுப்புக்களை வழங்கியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபை, முக்கியமான முகாமைத்துவ ஆட்களை இனங்கண்டு அவர்களுக்கு பொறுப்புகளை வழங்கியுள்ளது. |
| g) சபை, பணிப்பாளர் சபைக்கு மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு உரிய அதிகாரத் துறைகளையும், முக்கிய பொறுப்புக்களையும் வரையறை செய்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபை சாசனம், பணிப்பாளர் சபையின் அதிகாரத் துறைகளையும் முக்கிய பொறுப்புக்களையும் வரையறை செய்துள்ளது.<br><br>முக்கிய முகாமைத்துவ ஆட்களின் அதிகாரத் துறைகளும் முக்கியமான பொறுப்புக்களும், பொருத்தமான தொழில் விபரங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. |
| h) சபையின் கொள்கைக்கு இணங்க, சபை, முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஊடாக பொருத்தமான மேற்பார்வை நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபையின் உப குழுக்கள் மற்றும் சபையின் ஊடாக பொருத்தமான மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்கிறது.<br><br>மேலும், ஏதேனும் தெளிவூட்டல்கள் தேவைப்படின் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவர். |
| i) சபை பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக, சபை பணிப்பாளர்களின் வினைத் திறனை, காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்யும்.<br>(i) பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் தெரிவு, நியமனம் மற்றும் தேர்தல்<br>(ii) அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளைக் கையாளுதல். மற்றும்,<br>(iii) பலவீனங்களைத் தீர்மானித்தலும், தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல்படுத்துதலும். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபை பணிப்பாளர்களுக்கு உரிய சுய மதிப்பீட்டுப் படிவங்கள் நடைமுறையில் உள்ளன. |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| | j) சபை முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு ஒரு பின்னுறு (Succession) திட்டத்தை வைத்துள்ளது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு பின்னுறு கொள்கை ஒன்று இருப்பினும், இற்றைத் தேதி வரை பின்னுறு திட்டம் ஒன்று இல்லை. |
| | k) சபை கொள்கைகளை மீளாய்வு செய்யவும், தொடர்பாடல் கோவைகளை ஸ்தாபிக்கவும் கூட்டுறவு மூலோபாயங்களை நோக்கி முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் கிரமமான கூட்டங்களைத் திட்டமிட்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>கூட்டுறவுக் குறிக்கோள்களை கலந்தாராயவும், அவற்றின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும், கூட்டங்களை நடத்துவதுடன் மேலதிகத் தகவல்களுக்காகவும், அறிவுரை வழங்குவதற்காகவும் முக்கிய முகாமைத்துவ ஆட்களை அழைக்கின்றது. |
| | l) ஒழுங்குபடுத்தல் சூழலைப் புரிந்து கொள்வதற்கான செயன்முறைகள் அமுலில் இருப்பதோடு, அவை தொடர்பான நடவடிக்கைகளையும் சபை எடுத்துள்ளது. வங்கி ஒழுங்குபடுத்துநர்களுடன் ஒரு தொடர்பைப் பேணி வருகிறது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபை, ஒழுங்குபடுத்தல் சூழலைப் புரிந்து கொள்ளவும், ஒழுங்குபடுத்துநர்களுடன் உறவைப் பேணவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு, அது தொடர்பான செயன்முறைகளும் உள்ளது. |
| | m) சபை, வெளியகக் கணக்காய்வாளர்களை வாடகைக்கு அமர்த்தவும், மேற்பார்வை செய்யவும் ஒரு செயன் முறையைக் கொண்டுள்ளது. | பொருத்தமற்றது<br><br>பிரதேச அபிவிருத்தி வங்கியின் சட்டத்தின் பிரிவு 33 இன் கீழ் கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியக கணக்காய்வாளர் ஆவார். |
| 3(l)(ii) | சபை, தலைவரையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும் நியமித்துள்ளது.<br><br>தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பணிகளும் பொறுப்புகளும் இந்த வழிகாட்டிகளில், வழிகாட்டி 3(5) க்கு அமைவாக உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம், தலைவர் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>பொது முகாமையாளர், சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>தலைவர், நிர்வாகம் சாராத பணிப்பாளராக இருப்பதோடு, பிரதம நிர்வாக அதிகாரி வங்கியின் செயற்பாடு மற்றும் வணிகம் தொடர்பான அன்றாட முகாமைத்துவத்திற்கு நிர்வாக ரீதியில் பொறுப்பானவராக இருப்பார். எனினும், 2018 நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கடன் குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய, தலைவர் வங்கி சார்பாக உடன்படிக்கைகள், முறிகள், உறுதிகள் ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றில் கையொப்பமிடுவார். |
| 3(l)(iii) | சபை கிரமமாகச் சந்தித்து மாதாந்த இடைவெளிகளில் ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 12 தடவைகள் சபைக் கூட்டங்களை நடத்தியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பொதுவாக சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறும். இதனைவிட, தேவை ஏற்படும் போது, விசேட கூட்டங்களும் நடைபெறும். 2019 இல் 16 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு இணங்க, டிசம்பர் மாதத்தில் சபைக் கூட்டம் நடைபெறவில்லை. |
| 3(l)(iv) | கிரமமான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில், அனைத்து பணிப்பாளர்களும், விடயதானங்களையும், உத்தேச திட்டங்களையும் உள்ளடக்குவதற்காக ஒரு நடைமுறையை சபை கொண்டுள்ளது. இந்த விடயங்களும் உத்தேச திட்டங்களும் வணிக முன்னேற்றம், வங்கி இடர்களின் முகாமைத்துவம் என்பவற்றோடு தொடர்புடையது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>கிரமமான கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறும். அடுத்த கூட்டம் பற்றி பணிப்பாளர்களுக்கு முன்னரே அறிவிக்கப்படும். எனவே, பணிப்பாளர்கள் கலந்தாராய வேண்டிய விடயங்களையும், உத்தேச திட்டங்களையும் உள்ளடக்கக் கூடியதாக இருக்கும். |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(l)(v) | அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் கூட்டங்களுக்கு சமூகமளிக்கும் வாய்ப்புகளை வழங்குவதற்காக சபை, ஒரு கிரமமான சபைக் கூட்டத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து சபைக் கூட்டங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கிரமமான சபைக் கூட்டங்களுக்கு 7 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய விசேட கூட்டங்கள் நியாயமான அறிவித்தலின் பின்னர் நடைபெறும். |
| 3(l)(vi) | 12 மாத காலப்பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற கூட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வருகைதராத அல்லது அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத பணிப்பாளர் மீது சபை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் மாற்றுப் பணிப்பாளரினால் சமூகம் தராத பணிப்பாளரின் இடம் நிரப்பப்படுமாயின், அது சமூகமளித்துள்ளதாகக் கருதப்படும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>மூன்றில் இரண்டு பங்கிற்கு மேற்பட்ட கூட்டங்களுக்கு சமூகம் தராத அல்லது அடுத்து நடைபெற்ற மூன்று கூட்டங்களில் சமூகம் தராத சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. |
| 3(l)(vii) | வங்கி ஒரு கம்பனி செயலாளரை நியமித்துள்ளது. அவர், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 43 இன் பிரிவுகளைத் திருப்திப்படுத்துகிறார். அவர், பணிப்பாளர் சபை மற்றும் பங்குதாரர்களின் கூட்டங்களுக்கு செயலாளராகவும், நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏனைய பணிகளையும் மேற்கொள்வார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 43 க்கு அமைய, செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 19 இன் பிரகாரம் செயலாளர் ஒரு முழு நேர அலுவலராவார். |
| 3(l)(viii) | கம்பனி செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் பணிப்பாளர் அணுகுவதற்குரிய செயன்முறை ஒன்று உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>அனைத்துப் பணிப்பாளர்களும் சபையின் செயலாளருடைய அறிவுரைகளையும் சேவைகளையும் பெற முடியும். |
| 3(l)(ix) | கம்பனி செயலாளர் சபைக் கூட்டக் குறிப்புகளைப் பேணி வருவதோடு, அத்தகைய சபைக் கூட்டங்கள் குறிப்புகளை பணிப்பாளர்கள் பரிசோதிக்க செயன்முறையொன்று உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபையின் செயலாளர் கூட்டக் குறிப்புகளைப் பேணிப் பாதுகாக்கிறார். மேலும், அத்தகைய குறிப்புகள் எந்தவொரு பணிப்பாளரின் மேற்பார்வைக்கும் உட்பட்டது. |
| 3(l)(x) | சபைக் கூட்டக் குறிப்பு பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் அல்லது குறிக்கும் -<br>(a) சபை தனது விவாதங்களில் பயன்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் சாராம்சம்<br>(b) சபை கருத்திற் கொண்ட விடயங்கள்<br>(c) நிகழ்வு கண்டறிதல் தொடர்பான கண்டறிதல்களும் விவாதத்திற்கு உட்பட்ட விடயங்களும் அல்லது மாறான கருத்துக்களும். இவை. சபை தனது கடமைகளை உரிய கவனத்துடனும், விவேகமாகவும் பூர்த்தி செய்தனவா என்பதை விளக்கும்.<br>(d) சபை மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்கி நடந்த விடயங்களும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடைய பின்பற்றுதல்களும்.<br>(e) வங்கி எதிர்கொண்ட இடர்கள் பற்றிய புரிந்துணர்வும் கையாளப்பட்ட இடர் முகாமைத்துவ வழிமுறைகள் பற்றிய கண்ணோட்டமும்.<br>(f) சபையின் முடிவுகளும் தீர்மானங்களும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபைக் கூட்டக் குறிப்புகள் பின்வரும் தேவைப்பாடுகளை உள்ளடக்கும்.<br>I. குறிப்பான விடயதானங்கள் மீது எடுக்கப்பட்ட வணிக முடிவுகள்.<br>II. விசேட விடயதானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்<br>III. முகாமைத்துவத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அறிவுறுத்தல்களும் விடயங்களும்<br>IV. விடயதானங்கள் மீதான கொள்கை முடிவுகளும் செயற்திறன்கள் பற்றிய மீளாய்வும்<br>V. சபை உப குழு அறிக்கைகள் மீதான பரிந்துரைகள்<br>VI. சபை மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளுடனான இணக்கம்<br>VII. இடர் முகாமைத்துவ வழிமுறைகள் பற்றிய கண்ணோட்டம். |
| 3(l)(xi) | பணிப்பாளர்களின் நியாயமான வேண்டுகோள்களுக்கு அமைய, வங்கியின் செலவில் பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீனமான தொழில்முறைசார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள், பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சுயாதீனமான தொழில்முறைசார் அறிவுரைகளை பெற்றுக் கொள்ள சபை அங்கீகரித்த நடைமுறை உண்டு. |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(l)(xii) | அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தவிர்க்கவும், அத்தகைய சூழ்நிலைகள் இருக்கும் போது அவற்றை எதிர்கொள்ளக் கூடிய விடயங்களைத் தீர்மானிக்க அறிக்கையிட, தீர்வளிக்கக் கூடிய ஒரு நடைமுறை உள்ளது.<br><br>பணிப்பாளர் ஒருவரின் நெருங்கிய உறவினர் அல்லது அப்பணிப்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கணிசமான அளவு அக்கறை இருக்குமாயின் அத்தகைய விடயம் தொடர்பில் சபை எடுக்கும் தீர்மானத்தில் வாக்களிப்பதில் இருந்து பணிப்பாளர் நீங்க வேண்டும்.<br><br>அவர் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பொருத்தமான நிகழ்ச்சி நிரல் விடயத்திற்கான நிறைவெண்ணில் உள்ளடக்கப்படுவார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சபை பணிப்பாளர் ஒருவருக்கு தணிப்பட்ட ரீதியில் அக்கறை இருக்கக்கூடிய விடயம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் போது அவர் அந்த தீர்மானம் தொடர்பில் வாக்களிப்பதில் இருந்து நீங்க வேண்டும்.<br><br>அக்கறை உள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் விடயத்திற்கான நிறைவெண்ணில் பணிப்பாளர் உள்ளடக்கப்பட மாட்டார். |
| 3(l)(xiii) | வங்கியின் திசை மற்றும் கட்டுப்பாடு, அதன் அதிகாரத்தின் கீழ் உறுதியாக உள்ளது என்பதை இனங்காண்பதற்கு என விசேடமாக ஒதுக்கப்பட்ட ஒரு விதிமுறையான விடய அட்டவணை ஒன்று உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தீர்மானம் எடுக்கும் நடைமுறையில் பங்களிப்பை உறுதிப்படுத்துவதன் ஊடாக இறுதித் தீர்மானங்களை எடுப்பதற்கு சபையின் தீர்மானங்களுக்காக விடயங்களின் அட்டவணை ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 3(l)(xiv) | சபை, வங்கி அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய இயலாத விடத்து அல்லது அத்தகைய ஒரு சந்தர்ப்பம் இருக்குமெனத் தோன்றுமிடத்து அல்லது வங்கி ஒரு முடிவுக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ள விடத்து அல்லது வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன் தருநர்கள் காரணமாக, கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்க தீர்மானிக்கின்ற போது, வங்கி தொடர்பான தீர்மானம் ஒன்றை அல்லது நடவடிக்கை எடுக்க முன்பு சபை வங்கியின் பணிப்பாளருக்கு (மேற்பார்வைக்குப் பொறுப்பான) அறிவிக்கும். | பொருத்தமற்றது<br><br>அத்தகைய ஒரு சூழ்நிலை எழாதவிடத்தும் வங்கி ஒரு நிலைக்குத் தள்ளப்படும் சூழ்நிலை காணப்படுமிடத்து அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் தருநர்களால் கொடுப்பனவுகள் இடை நிறுத்தப்படுகின்ற போது, அவை பற்றி ஏதேனும் தீர்மானம் அல்லது நடவடிக்கை எடுக்க முன்பு வங்கி மேற்பார்வைக்குப் பொறுப்பான பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டிய தேவை பற்றி சபை அறிந்துள்ளது. |
| 3(l)(xv) | நிதி சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு தேவையான மட்டங்களில் வங்கி முதலீடுகளைக் கொண்டுள்ளது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>31.12.2019 இல் உள்ளவாறு நிதி சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில், வங்கி நிதிப் போதுமான தன்மையைப் பேணியுள்ளது. எனினும், சில சந்தர்ப்பங்களில் தேவைப்படுத்தப்பட்ட மட்டத்தை விட குறைந்த மட்டத்தில் இருந்தமை அறிக்கையிடப்பட்டது. |
| 3(l)(xvi) | இந்த வழிகாட்டல்களின் மூன்றாவது வழிகாட்டிக்கு இணங்கி நடக்கின்ற வகையில், சபை வங்கியின் வருடாந்த அறிக்கையில் இந்த இணக்கப்பாடு பற்றி குறிப்பிட்டு, ஒரு வருடாந்தக் கூட்டுறவு ஆளுகை அறிக்கையைப் பிரசுரிக்கும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கை மத்திய வங்கியினால் வெளியிட்டப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்கப்பட்டமை தொடர்பாக வருடாந்த அறிக்கையில் கூட்டுறவு ஆளுகை அறிக்கை குறிப்பிட்டுள்ளது. |
| 3(l)(xvii) | ஒவ்வொரு பணிப்பாளராலும் வருடாந்தம் முன்னெடுக்கப்பட வேண்டிய சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை சபை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், அத்தகைய மதிப்பீடுகளின் பதிவுகளை சபை பேணி வருகிறது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபையிடம் உரிய சுய மதிப்பீட்டுப் படிவங்கள் உள்ளன. |

# கூட்டுறவு ஆளுகை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| **3(2)** | **சபை உள்ளடக்கம்** | |
| 3(2)(i) | சபை 7 பேருக்குக் குறையாத 11 பேரை விஞ்ஞாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>26.11.2019 இல் உள்ளவாறு சபை 8 பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது. |
| 3(2)(ii) | (A) பிரதம நிர்வாக அதிகாரி என்ற பதவியை வகிக்கின்ற பணிப்பாளரைத் தவிர, ஏனைய பணிப்பாளர்களின் மொத்த சேவைக்காலம் 9 வருடங்களை விஞ்ஞாது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>வழிகாட்டியில் குறிப்பிட்டவாறு எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடங்களை விஞ்சவில்லை. |
| | (B) எவரேனும் பணிப்பாளர் ஒருவர் 9 வருடங்களை விஞ்சியிருக்கின்ற விடத்து நிலைமாற்ற ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனிக்க. | பொருத்தமற்றது<br>அத்தகைய சூழ்நிலை எழவில்லை. |
| 3(2)(iii) | பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட நிர்வாகப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை பணிப்பாளர் சபையின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றை விஞ்சவில்லை. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>ஒரு நிர்வாகப் பணிப்பாளர் இருப்பதோடு, பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட சபை மூன்றில் ஒன்றை விஞ்சவில்லை. |
| 3(2)(iv) | குறைந்தபட்சம் மூன்று சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் அல்லது சபை மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று இவற்றில் எது அதிகமோ அவ்வகையில் குறைந்த பட்சம் மூன்று சுயாதீனப் பணிப்பாளர்கள் இருத்தல் வேண்டும்.<br><br>நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் இருப்பின், அவர்கள் சுயாதீனமானவர்களாகக் கருதப்பட முடியுமா என்பதைக் கவனிக்க. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>26.11.2019 இல் உள்ளவாறு நான்கு சுயாதீன / நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் இருந்தனர். 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின்படி ஒவ்வொரு பங்குதாரர் வங்கிகளிலும் இருந்து மூன்று சுயாதீனமற்ற பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன். ஒரு சுயாதீனமான பணிப்பாளர் பொதுத் திறைசேரிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். |
| | a) வங்கியின் பங்குகளில் 1 வீதத்திற்கு மேற்பட்ட நேரடியான அல்லது மறைமுகமான பங்குகளை வைத்திருத்தல். | பொருத்தமற்றது |
| | b) தற்போது பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு இரண்டு வருட காலப்பகுதிகளில் வழிகாட்டி 3(7) இல் விபரிக்கப்பட்டவாறு, வங்கியுடனான வணிக நடவடிக்கைகளில் வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10% ஐ விட அதிகமாக இருந்தது அல்லது இருக்கின்றது. | பொருத்தமற்றது |
| | c) பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு இரண்டு வருட காலப்பகுதியில் வங்கியினால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார். | பொருத்தமற்றது |
| | d) நெருங்கிய உறவினர் ஒருவராக, அவர் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக, முக்கிய முகாமைத்துவ ஆட்களின் ஒரு உறுப்பினராக வங்கியின் முக்கிய பங்குதாரராக அல்லது ஏனைய வங்கிகளின் முக்கிய பங்குதாரராக (இப்பிரிவின் நோக்கத்திற்காக "நெருங்கிய உறவினர் என்பது" வாழ்க்கைத் துணை அல்லது நிதி ரீதியாகத் தங்கியிருக்கும் பிள்ளையைக் குறிக்கும்). | பொருத்தமற்றது |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| | e) வங்கியின் விசேட பங்குதாரரை பிரதிநிதித்துவப்படுத்தல். | பொருத்தமற்றது |
| | f) ஒரு கம்பனியின் பணியாளர் அல்லது பணிப்பாளர் அல்லது ஒரு முக்கியமான பங்குதாரர் அல்லது வணிக நிறுவனம் இவற்றில் ஏதேனும் ஒன்று,<br>I. வழிகாட்டி 3(7) இல் வரையறை செய்யப்பட்டவாறு தற்போது வங்கியுடன் பரிவர்த்தனை ஒன்றில் ஈடுபட்டு வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனம் 10% ஐ விட அதிகரித்திருத்தல். அல்லது,<br>II. இவற்றில் ஏதேனும் ஒன்றில் வங்கியின் ஏனைய பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பணி புரியுமிடத்து அல்லது பணிப்பாளராக இருக்குமிடத்து அல்லது முக்கிய பங்குதாரராக இருத்தல். அல்லது,<br>III. வழிகாட்டி 3(7) இல் குறிப்பிடப்பட்டவாறு, வங்கியின் ஏனைய பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பரிவர்த்தனை ஒன்றில் ஈடுபட்டு அது, வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10% அதிகரித்திருத்தல். | பொருத்தமற்றது |
| 3(2)(v) | சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு மாற்றுப் பணிப்பாளர் நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர் சுயாதீனப் பணிப்பாளருக்கு உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்கின்றாரா என்பதைப் பரீட்சித்தல். | பொருத்தமற்றது<br>2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரகாரம் மாற்றுப் பணிப்பாளரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை. |
| 3(2)(vi) | சுயாதீனப் பணிப்பாளர் ஏற்பாடுகளை வங்கி கொண்டுள்ளன. | பொருத்தமற்றது<br>திறைசேரியின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய, பணிப்பாளர்கள் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவர். |
| 3(2)(vii) | வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நிறைவெண் 50% க்கு மேற்பட்ட பணிப்பாளர்களை உள்ளடக்கும். நிறைவெண்ணில் 50% க்கு மேற்பட்டவர்கள் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்க வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 16வது பிரிவின்படி பணிப்பாளர்களின் எண்ணிக்கை 07 ஆக இருப்பின் நிறைவெண் 05 ஆகவும், பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 ஐ விட அதிகமாக இருப்பின் நிறைவெண் 06 ஆகவும் அமையும். |
| 3(2)(viii) | வங்கி, வருடாந்த கூட்டுறவு ஆட்சி அறிக்கையில் சபையின் உள்ளடக்கத்தை பணிப்பாளர்கள், தலைவரின் பெயர் உள்ளடங்கலாக, நிர்வாகப் பணிப்பாளர்கள், நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் என்ற வகுதிக்குள் உள்ளடக்கும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை உள்ளடக்கம் மற்றும் பணிப்பாளர்களின் தகவல் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |
| 3(2)(ix) | சபைக்கு புதிய பணிப்பாளர்களை நியமிப்பது தொடர்பான நடைமுறை | பொருத்தமற்றது<br>பணிப்பாளர்கள் திறைசேரி பணிப்பாளர்களின் ஆலோசனையின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவார். |
| 3(2) (x) | பணிப்பாளர்களின் நியமனத்தின் பின்னர் நடைபெறும் முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அமைய சமயாசமய வெற்றிடம் ஒன்று நிரப்பப்படும். | பொருத்தமற்றது<br>பணிப்பாளர்களின் நியமனங்களும், நீக்கங்களும் திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சரினால் மேற்கொள்ளப்படும். |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(2)(xi) | பணிப்பாளர் ஒருவர் இராஜினாமாச் செய்யுமிடத்து, அவர் பதவியிலிருந்து நீக்கப்படுமிடத்து சபை,<br>(a) பணிப்பாளரின் ராஜினாமா அல்லது நீக்கம் பற்றியும் அத்தகைய நீக்கம் அல்லது இராஜினாமாவுக்கான காரணங்கள், ஆயின், அதற்கு மட்டும் மட்டுப்படுத்தாது, வங்கியின் பணிப்பாளருக்கு உள்ள பொருத்தமான உடன்பாடு இன்மை பற்றிய தகவல்களையும் அறிவிக்கும். அத்துடன்,<br>(b) பணிப்பாளரின் கவனத்திற்கு ஏதேனும் விடயங்கள் கொண்டுவரப்பட வேண்டுமா என்பதை உறுதிப்படுத்தி கூற்று ஒன்றை வெளியிடும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்களின் நியமனங்களும், நீக்கங்களும் திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.<br>பணிப்பாளர் ஒருவர் ராஜினாமா செய்வது பற்றி கடிதம் மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அக்கடிதத்தின் அடிப்படையில் பணிப்பாளரின் இராஜினாமா பற்றி வங்கி அமைச்சுக்கு அறிவிக்கும். |
| 3(2)(xii) | வங்கியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் இன்னுமொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பதை இனங்காண நடைமுறை ஒன்று உள்ளதா என்பதைப் பரீட்சித்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம், கௌரவ அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனம் மேற்கொள்ளப்படுவதனால், இத்தகைய சூழ்நிலை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. அத்துடன், இலங்கை மத்திய வங்கி, பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களிடம் இருந்து பெறப்பட்ட பிரகடனங்களின் அடிப்படையில் தகுதி மற்றும் தனி உரிமை என்பவற்றை மதிப்பீடு செய்யும். |
| **3(3)** | **பணிப்பாளர்களின் தகுதி மற்றும் தனியுரிமை ஆகியவற்றிற்கான அளவுகோல்கள்** | |
| 3(3)(i) | பணிப்பாளராகச் சேவையாற்றும் நபருடைய வயது 70 ஐக் கடந்திருத்தல் ஆகாது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>70 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு பணிப்பாளரும் சபையில் இல்லை. |
| | (A) நிலைமாற்ற ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | பொருத்தமற்றது |
| 3(3)(ii) | வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உட்பட நபர் ஒருவர் 20 கம்பனிகள் / நிறுவனங்கள் / ஸ்தாபனங்கள் என்பவற்றில் பணிப்பாளர் பதவியை வகித்திருந்தால். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்களின் பிரகடனங்களின்படி, எந்தவொரு பணிப்பாளரும் 20 கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை வகிக்கவில்லை. |
| **3(4)** | **சபையினால் கையளிக்கப்பட்ட முகாமைத்துவப் பணிகள்** | |
| 3(4)(i) | கையளிப்பு ஏற்பாடுகள், சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை வங்கியின் விவகாரங்களோடு தொடர்புபட்ட விடயங்களை சபை உப குழுக்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய முக்கிய முகாமைத்துவ ஆட்களிடம் கையளித்துள்ளது. |
| 3(4)(ii) | அத்தகைய விடயங்கள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 3(1)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பொறுப்பினை சபை ஏற்றுக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>அத்தகைய விடயங்கள் கையளிக்கப்பட்ட போதிலும், 3(1)(i) இல் குறிப்பிட்டப்பட்ட பொறுப்புக்களை சபை பொறுப்பேற்றுள்ளது. |
| 3(4)(iii) | வங்கியின் தேவைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயங்கள் பொருத்தமாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு கையளிப்பு நடைமுறையைக் காலாந்தர அடிப்படையில் சபை மீளாய்வு செய்யும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை கையளிக்கப்பட்ட செயன்முறையை காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்து அங்கீகரிக்கும். அதிகார மட்டத்திற்கு அமைய, அங்கீகார வரையறைகள் தீர்மானிக்கப்படுகின்றன. |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| **3(5)** | **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி** | |
| 3(5)(i) | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் வகிபங்கு வெவ்வேறாக இருப்பதோடு, அது, ஒரே நபரினால் செயற்படுத்தப்படுவதில்லை. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகிய தகுதிகள் வெவ்வேறாக இருப்பதோடு, இரண்டு தனிப்பட்ட நபர்களால் அவை நிறைவேற்றப்படுகின்றன.<br><br>தலைவர் ஒரு நிர்வாகம் சாராத பணிப்பாளராக இருப்பார். அத்துடன் பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் வணிகம் மற்றும் செயற்பாடு தொடர்பான அன்றாட முகாமைத்துவத்திற்கு நிர்வாகப் பொறுப்பை வகிப்பார்.<br><br>எனினும், 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கடன் குழுவின் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய, தலைவர் வங்கி சார்பாக உடன்படிக்கைகள், முறிகள், உறுதிகள் மற்றும் ஏனைய சாதனங்களில் கையொப்பமிடுவார். |
| 3(5)(ii) | தலைவர் ஒரு நிருவாகம் சாராத பணிப்பாளர்<br><br>தலைவர் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராக இல்லாத சந்தர்ப்பத்தில், பொருத்தமாக ஆவணப்படுத்தப்பட்ட விதிக் குறிப்புகளுக்கு அமைய, சபை ஒரு சுயாதீனப் பணிப்பாளரை சிரேஷ்ட பணிப்பாளராகக் குறித்துரைக்கும்.<br><br>சிரேஷ்ட பணிப்பாளரின் பதவி, வங்கியின் வருடாந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தலைவர் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர் ஆவார். அத்துடன், வங்கி சிரேஷ்ட பணிப்பாளராக எவரையும் நியமிக்கவில்லை. |
| 3(5)(iii) | தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சபை உறுப்பினர்களுக்கு இடையே ஏதேனும் உறவுமுறை (நிதி, வணிகம், குடும்ப அல்லது ஏதேனும் முக்கிய /பொருத்தமான உறவு முறைகள்) இருப்பின் அத்துடன், சபை உறுப்பினர்களுக்கு இடையே உள்ள உறவு முறையின் இயல்பு உட்பட இந்த உறவு முறைகள் பற்றி இனங்காணவும், வெளிப்படுத்தவும் சபை அதன் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் ஒரு செயன்முறையைக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>வருடாந்தப் பிரகடனங்கள் அத்தகைய உறவு முறையை இனங்காண உதவுகிறது. |
| 3(5)(iv) | பின்வரும் சந்தர்ப்பங்களில் சபை ஒரு சுயமதிப்பீட்டுச் செயன் முறையைக் கொண்டிருக்கும். தலைவர்:<br>(a) சபைக்குத் தலைமைத்துவம் வழங்கும் போது,<br>(b) சபை வினைத்திறனாகச் செயற்படுவதுடன், அதன் பொறுப்புகளை நிறைவேற்றுகிறது என்பதை உறுதிப்படுத்தல். மற்றும்,<br>(c) அனைத்து முக்கிய மற்றும் பொருத்தமான விடயங்கள் சபையினால் உரிய நேரத்தில் கலந்துரையாடப்படுதலை உறுதிப்படுத்தல். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபையின் சுயமதிப்பீட்டுப் படிவங்கள் உள்ளன. |

# கூட்டுறவு ஆளுகை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(5)(v) | தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விதிமுறையான நிகழ்ச்சி நிரல் கம்பனி செயலாளரினால் வழங்கப்படும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம், ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்கும் உரிய நிகழ்ச்சி நிரல் சபை செயலாளரினால் தயாரிக்கப்பட்டு பகிரப்படும். |
| 3(5)(vi) | சபைக் கூட்டத்தில் எழுப்பப்படும் விடயங்கள் பற்றி அனைத்து பணிப்பாளர்களுக்கும் உரிய முறையில் விவரிக்கப்பட்டுள்ளது என்பது, உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும் சமர்ப்பணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>அவசரத் தேவைகள் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் சபையில் கலந்தாராயப்பட உத்தேசிக்கப்பட்ட விடயங்கள் பற்றிய விபரங்கள் கூட்டம் நடைபெற 07 தினங்களுக்கு முன்னதாக கூட்ட அறிவித்தலுடன் பகிரப்படும். |
| 3(5)(vii) | சபையின் விடயங்களில் ஒரு முழுமையான மற்றும் துடிப்பான பங்களிப்பை மேற்கொள்ள அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் ஊக்குவிப்பதற்கான ஒரு சுய மதிப்பீட்டு செயன்முறை உள்ளது. அத்துடன், வங்கியின் சிறந்த அக்கறையின் நிமித்தம் செயற்படும் பொருட்டு தலைவர் முன்னிலை வகிப்பார். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபைக்கான சுய மதிப்பீட்டுப் படிவங்கள் உள்ளன. |
| 3(5)(viii) | சபை வைத்திருக்கின்ற சுயமதிப்பீட்டுச் செயன்முறை நிர்வாகம் சாராத பணிப்பாளர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்யும். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபைக்கான சுய மதிப்பீட்டுப் படிவங்கள் உள்ளன. |
| 3(5)(ix) | தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆட்களை மேற்பார்வை செய்யும் நேரடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவார் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கடமைகளில் ஈடுபடுவார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தலைவர் நிர்வாகம் சாராத ஒரு பணிப்பாளராக இருக்கின்றார். அவர் முக்கிய முகாமைத்துவ ஆட்களை மேற்பார்வை செய்வதில் நேரடியாக ஈடுபட மாட்டார்.<br><br>எனினும், 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற சபையின் கடன் குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய, தலைவர் வங்கி சார்பாக உடன்படிக்கைகள், முறிகள், உறுதிகள் மற்றும் ஏனைய சாதனங்களில் கையொப்பமிடுவார். |
| 3(5)(x) | பங்குதாரர்களுடன் வினைத்திறனாக தொடர்பாடலைப் பேணுவதற்கு ஒரு செயன்முறை இருப்பதோடு, பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்குத் தெரிவிக்கப்படும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>2008 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்படி நான்கு உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்கள், மூன்று பங்குதாரர், வங்கிகளையும், பொதுத் திறைசேரியையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இவர்கள் சபை மற்றும் பங்குதாரர்களுக்கு இடையே ஒரு ஊடகமாகச் செயற்படுகின்றனர். |
| 3(5)(xi) | வங்கியின் செயற்பாடுகள் மற்றும் வணிகம் தொடர்பாக அன்றாட முகாமைத்துவத்திற்கு பிரதம நிறைவேற்று அதிகாரி ஒரு உயர் நிர்வாக பொறுப்பு அதிகாரியாக செயற்படுகிறார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கி செயற்பாட்டின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருக்கும் ஒரு நிர்வாக அதிகாரி ஆவார். |

| | | |
|---|---|---|
| 3(6) | சபை நியமிக்கப்பட்ட குழுக்கள் | |
| 3(6)(i) | இந்த வழிகாட்டிகளுள் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு வங்கி குறைந்த பட்சம் நான்கு சபைக் குழுக்களை ஸ்தாபித்துள்ளது.<br><br>ஒவ்வொரு சபைக் குழுவின் அறிக்கையும், நேரடியாக சபைக்கு முகவரி இடப்பட்டுள்ளது.<br><br>ஒவ்வொரு குழுவின் கடமைகள், வகிபங்குகள் மற்றும் செயற்திறன் பற்றி சபை தனது வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>வழிகாட்டிகள் 3(6)(ii), 3(6)(iii), 3(6) (iv) மற்றும் 3(6) (v) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட குழுக்களை ஸ்தாபித்துள்ளது. அவை சபைக்கு நேரடியாக அறிக்கையிடும்.<br><br>சபை கணக்காய்வுக் குழு<br>சபை மனிதவள மற்றும் சம்பளக் குழு<br>சபைத் தெரிவுக் குழு<br>ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு<br>சபை தகவல் தொழில்நுட்பச் செயற்குழு<br>சபை கடன் குழு<br><br>ஒவ்வொரு சபையினுடைய கடமைகள், வகிபங்குகள் மற்றும் செயற்திறன் என்பன பற்றிய அறிக்கை, வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 3(6)(ii) | கணக்காய்வுக் குழு | |
| | (a) கணக்காய்வுக் குழுவின் தலைவர் தகுதிகளையும் அனுபவத்தையும் கொண்ட ஒரு சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர். | இணங்கி நடக்கப்படவில்லை.<br><br>கணக்காய்வுக் குழுவின் தலைவர் திறைசேரிக்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஆவார். திறைசேரி பெரும்பான்மை பங்கு மூலதனத்தைக் கொண்டிருப்பதால், மேலே குறிப்பிட்ட பணிப்பாளர் சுயாதீனமானவர் அல்ல. |
| | (b) குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் |
| | (c) குழு பின்வரும் விடயங்கள் பற்றிய பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது.<br><br>(i) பொருத்தமான நியதிச் சட்டங்களுடன் இணங்கி நடக்கும் வகையில் கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதற்காக வெளியகக் கணக்காய்வாளரை நியமித்தல்,<br><br>(ii) காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் வழங்கப்படும் கணக்காய்வாளர்களுக்கு உரிய வழிகாட்டிகளை அமுல்படுத்தல்.<br><br>(iii) பொருத்தமான கணக்கியல் நியமங்களைப் பிரயோகித்தல். மற்றும்,<br><br>(iv) கணக்காய்வாளருடைய சேவைக் காலம் கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளருடைய ஏதேனும் இராஜினாமா அல்லது பணி நீக்கம்: எவ்வாறாயினும், கணக்காய்வு பங்காளருடைய ஈடுபாடு, ஐந்து வருடங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்துடன், கடந்த கால சேவைக்காலம் பூர்த்தியான திகதியில் இருந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் குறிப்பட்ட கணக்காய்வுப் பங்காளருடய சேவையைப் பெற முடியாது. | பொருத்தமற்றது<br><br>2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 33 இன்படி கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியக கணக்காய்வாளர்.<br><br>அரசாங்க கணக்காய்வாளர் அழைப்பின் பேரில் சபை கணக்காய்வுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவார். மற்றும் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் அரசாங்க மற்றும் மத்திய வங்கி வழிகாட்டிகள் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்கள் கூட்டங்களில் கலந்தாராயப்படும். |
| | d) குழு வெளியகக் கணக்காய்வாளரிடம் இருந்து அவர்களுடைய சுயாதீனத் தன்மை பற்றியும், SLAuS இற்கு அமைய கணக்காய்வு நடத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்தி பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக் கொண்டது. | பொருத்தமற்றது<br><br>2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 33 இன்படி கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியக கணக்காய்வாளர் ஆவார். |

# கூட்டுறவு ஆளுகை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | இணக்க மட்டம் |
|---|---|
| e) குழு பொருத்தமான ஒழுங்கு விதிகளுக்கு அமைய, ஒரு வெளியகக் கணக்காய்வாளரை கணக்காய்வு சாராத சேவைகளைப் பெற்றுக்கொள்ள ஈடுபடுத்துவதற்கான கொள்கை ஒன்றை அமுல்படுத்தியது. | பொருத்தமற்றது<br><br>கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் கணக்காய்வாளராக இருப்பதனால் அத்தகைய சூழ்நிலை எழவில்லை. |
| f) குழு கணக்காய்வு ஆரம்பிக்க முன்னர் SLAuS க்கு அமைவாக வெளியகக் கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வின் இயல்பு மற்றும் எல்லை பற்றி ஆராய்ந்து பூர்த்தியாக்கியது. | பொருத்தமற்றது<br><br>1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(3) மற்றும் (4) என்பவற்றுக்கு அமைய கணக்காய்வின் எல்லையையும், அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குகிறது. |
| g) வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வருடாந்த அறிக்கை கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் என்பவற்றின் நேர்மைத் தன்மையைக் கண்காணிப்பதற்காக குழு வங்கியின் நிதித் தகவல்களை மீளாய்வு செய்ய செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அத்துடன், கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை பிரதம நிறைவேற்று அதிகாரியிடமிருந்து பெற ஒரு செயன்முறை உள்ளது.<br><br>(i) பாரிய தீர்வுத் துறைகள்<br>(ii) கணக்கியல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏதேனும் மாற்றங்கள்<br>(iii) நிறுவனத் தொடர்ச்சி ஊகம். மற்றும்,<br>(iv) பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல். மற்றும்,<br>(v) கணக்காய்வில் இருந்து வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எழுகின்ற குறிப்பிடத்தக்க சீர்படுத்தல்கள். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பாரிய தீர்வுத் துறைகள், கணக்கியல் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைகளைக் கருத்திற் கொண்டு சபை கணக்காய்வுக் குழு காலாண்டு அடிப்படையிலும், வருடாந்த அடிப்படையிலும் வங்கி நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்யும். |
| h) கணக்காய்வு சம்பந்தமாக நிர்வாக முகாமைத்துவம் பிரசன்னமாகாத போது, ஏதேனும் பிரச்சினை தொடர்பில் வெளியகக் கணக்காய்வாளர்களை குழு சந்தித்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>குழு நிர்வாக முகாமைத்துவத்தின் சம்மதமின்றி வெளியக கணக்காய்வாளர்களுடன் கூட்டங்களை நடத்தியுள்ளது. |
| i) குழு வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதத்தையும், முகாமைத்துவத்தினால் அதற்கு அளிக்கப் பட்ட பதிலையும் மீளாய்வு செய்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>குழு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய முகாமைத்துவக் கடிதங்களையும், பதில்களையும் மீளாய்வு செய்துள்ளது. |
| j) குழு வங்கியுடைய உள்ளகக் கணக்காயவுப் பணி தொடர்பாக பின்வரும் படிமுறைகளை பின்பற்ற வேண்டும். | |
| I. உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் எல்லை, பணிகள் மற்றும் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்வதுடன், குறிப்பிட்ட திணைக்களம் தனது கடமையைச் செய்வதற்குத் தேவையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என திருப்திப்படுகிறது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது. |
| II. உள்ளக கணக்காய்வு நிகழ்சித் திட்டதையும், உள்ளக கணக்காய்வு செயன்முறையின் பெறுபேறுகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையான போது உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது. |
| III. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பணி உறுப்பினர்களின் செயற்திறன் பற்றிய ஏதேனும் மதிப்பீட்டை மீளாய்வு செய்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>2018 ஆம் ஆண்டுக்கான பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் வருடாந்த மதிப்பீட்டு அறிக்கையை குழு மீளாய்வு செய்துள்ளது. |

| | இணக்க மட்டம் |
|---|---|
| IV. தலைவர், சிரேஷ்ட பணி உறுப்பினர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பணிக்காக, வெளியில் இருந்து அமர்த்தப்பட்ட சேவை வழங்குநர்கள் ஆகியோருடைய நியமனம் அல்லது பணி முடிவுறுத்தல் பற்றி பரிந்துரை மேற்கொள்ளல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை கணக்காய்வுக் குழு பரிந்துரை செய்த போதிலும் நியமனம் முழு சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டது. |
| V. குழு பிரதம கணக்காய்வாளர் மற்றும் வெளியே இருந்து அமர்த்தப்பட்ட சேவை வழங்குநர் உள்ளடங்கலாக, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணி உறுப்பினர்களின் ராஜினாமாக்களை மதிப்பீடு செய்துள்ளது. அத்துடன், அவ்வாறு இராஜினாமாச் செய்வதற்குரிய காரணங்களை சமர்ப்பிப்பதற்கு சிரேஷ்ட பணி உறுப்பினர்களுக்கும் வெளிச் சேவை வழங்குநர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>குழு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவரின் செயற்திறனை மதிப்பிடு செய்துள்ளது. |
| VI. உள்ளகக் கணக்காய்வுப் பணி அது மேற்கொள்ளும் கணக்காய்வு நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமானது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>உள்ளகக் கணக்காய்வுப் பணி, அது மேற்கொள்ளும் கணக்காய்வு நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமானது. அத்துடன், சபை கணக்காய்வுக் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடும். |
| k) குழு உள்ளக விசாரணைகளின் பிரதான கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டுள்ளதா என்பதை குழு தீர்மானிக்கும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பாரிய உள்ளகக் கணக்காய்வுக் கண்டறிதல்களும், முகாமைத்துவப் பதில்களும், கணக்காய்வுக் குழுவினால் ஆராயப்பட்டு, தேவையான பரிந்துரைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |
| l) நிர்வாகம் பணிப்பாளர்களின் சமூகம் இன்றி வெளியக கணக்காய்வாளர்களுடன் குறைந்த பட்சம் இரண்டு கூட்டங்களை சபை நடத்தியுள்ளதா. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>நிர்வாகப் பணிப்பாளர் பங்குபற்றலின்றி சபை குறைந்த பட்சம் இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளது. |
| m) குழுவின் குறிப்பு விதிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றன.<br>(i) அதன் குறிப்பு விதிகளுக்குள் வருகின்ற ஏதேனும் விடயத்தை விசாரிப்பதற்கு வெளிப்படையான அதிகாரம்,<br>(ii) அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவையான வளங்கள்,<br>(iii) தகவலை முழுமையாக அணுகுதல். மற்றும்,<br>(iv) வெளியகத் தொழில்முறை வல்லுநர்களிடமிருந்து ஆலோசனை பெற அதிகாரமும், தேவையான போது பொருத்தமான அனுபவங்களைக் கொண்ட வெளியாட்களை வரவழைத்தலும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதி இவ்வனைத்து துறைகளையும் உள்ளடக்குகின்றது. |
| n) குழு குறைந்தபட்சம் நான்கு தடவைகள் சந்தித்துள்ளது. கூட்டக் குறிப்புகள் பேணப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>2019 இல் 07 குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. கூட்டக் குறிப்புகள் பேணப்பட்டுள்ளன. |
| o) சபை வருடாந்த அறிக்கையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்தியுள்ளது.<br>(i) கணக்காய்வுக் குழு நடவடிக்கைகளின் விபரங்கள்.<br>(ii) வருடத்தின் போது நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை.<br>(iii) அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரதும் விபரங்கள். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>நடவடிக்கைகளின் விபரங்கள், கூட்டங்களின் எண்ணிக்கை, சமூகமளித்தவர்களின் விபரங்கள் என்பன வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| | p) குழுவின் செயலாளர் அல்லது உள்ளகக் கணக்காய்வுப் பணியின் தலைவர் குழுவின் செயலாளராகச் செயலாற்றுவார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வுக் குழுவின் செயலாளராக சபை செயலாளர் செயற்பட்டார். |
| | q) இடித்துரைப்பான் கொள்கை (Whistle blowing) பின்வரும் விடயங்களின் செயன்முறையைக் கையாள்கிறது.<br>i) நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களின் முறையற்ற தன்மைகள்.<br>ii) குழு அத்தகைய விடயங்களை நியாயமாகவும், சுயாதீனமாகவும் விசாரணை செய்வதற்கு முறையான ஏற்பாடுகளை குழு உறுதிப்படுத்துகிறது என்பது தொடர்பாக. அத்துடன்,<br>iii) பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை அங்கீகரித்த இடித்துரைப்பான் கொள்கை (Whistle blowing) ஒன்று உள்ளது. |
| 3(6)(iii) | மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுகின்றனவா. | |
| | a) குழு குறிப்பு விதிகளையும், கூட்டக் குறிப்புகளையும் மீளாய்வு செய்வதன் மூலம் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோருடைய ஊதியங்களைத் (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானிப்பதற்கான கொள்கை ஒன்றை அமுல்படுத்தியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்களின் ஊதியங்கள், பொது நிறுவன சுற்றறிக்கைகளினால் ஆளப்படுகின்றன. முகாமைத்துவ ஆட்களுடன் தொடர்புபட்ட ஊதியங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகளைத் தீர்மானிக்க குழு ஊதியக் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது. |
| | b) பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் இலக்குகளும், குறிக்கோள்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>முக்கிய முகாமைத்துவ ஆட்களின் இலக்குகளும், குறிக்கோள்களும் ஒவ்வொரு முக்கிய முகாமைத்துவ ஆட்களினாலும் வழங்கப்பட்ட வருடாந்த செயற்திட்டம் ஊடாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர்களின் இலக்குகளும் குறிக்கோள்களும் ஆவணப்படுத்தப்படவில்லை. |
| | c) செயற் திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக்கள் தொடர்பான கொடுப்பனவுகள், ஊதியங்கள் மற்றும் அனுகூலங்கள் என்பனவற்றைத் திருத்துவதற்கான அடிப்படையைத் தீர்மானிப்பத்றகு குழு பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக காலாந்தர அடிப்படையில் அவர்களுடைய செயற்திறன் மதிப்பீடுகளைக் கருத்திற் கொண்டுள்ளது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு முக்கிய முகாமைத்துவ ஆட்களின் செயற்திறனை மதிப்பிட்டுள்ளது. எனினும், சில முகாமைத்துவ ஆட்களுடைய செயற்திறன் மதிப்பிடப்படவில்லை. சுயாதீனப் பணிகளில் ஈடுபடுகின்ற CRO, CO மற்றும் CIA ஆகியோருடைய செயற்திறன் மதிப்பீடு பொருத்தமான சபைக் குழுக்களால் மீளாய்வு செய்யப்படுகின்றன. |
| | d) குறிப்பு விதிகள் பிரதம நிறைவேற்று அதிகாரி, அவர் தொடர்பான விடயங்கள், கூட்டங்களில் ஆராயப்படுகின்ற போது சமூகமளித்திருக்கவில்லை என்பதை கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>BHRRC யின் குறிப்பு விதிகள் பிரதம நிறைவேற்று அதிகாரி, அவர் தொடர்பான விடயங்கள், கூட்டங்களில் ஆராயப்படும் போது சமூகமளித்திருக்கவில்லை என்பதை கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(6)(iv) | தெரிவுக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுமா | |
| | a) புதிய பணிப்பாளர்களை, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களைத் தெரிவு செய்ய / நியமிக்க ஒரு நடைமுறையை குழு அமுல்படுத்தியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்களின் நியமனம் திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகிறது. பிரதம நிறைவேற்று அதிகாரியை சபை நியமிக்கிறது. முக்கிய முகாமைத்துவ ஆட்களைத் தெரிவு செய்ய / நியமிக்க பதவி உயர்வு வழங்க, அளவு கோல்களை குழு தீர்மானிக்கிறது. |
| | b) குழு தற்போதைய பணிப்பாளர்களை மீளத் தேர்ந்தெடுக்க பரிந்துரை (பரிந்துரை செய்யவில்லை) செய்துள்ளது. | பொருத்தமற்றது<br><br>கௌரவ அமைச்சர் திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் பணிப்பாளர் சபையை நியமிப்பார். |
| | c) பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோருக்கு நியமனம் வழங்க அல்லது பதவி உயர்வு வழங்க தொழில் விபரங்களை மீளாய்வு செய்வதன் மூலம் தகுதிகள், அனுபவம், மற்றும் தகுதி பெறுவதற்கான பண்புகள் போன்ற அளவு கோல்களை குழு உருவாக்கியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர்கள், பிராந்தியப் பொது முகாமையாளர்கள் ஆகிய பதவிகளுக்குத் தெரிவு செய்வதற்கு தேவையான தகுதிகள் மற்றும் அனுபவம் என்பன 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் குறித்துரைக்கிறது. முகாமைத்துவ ஆட்களின் தகுதி / தெரிவு அளவுகோல்கள் மற்றும் தகுதிகள் என்பன தெரிவுக்குழு / சபையினால் தீர்மானிக்கப்படலாம். |
| | d) நியதிச் சட்டங்களிலும், வழிகாட்டி 3(3) என்பவற்றிலும் தரப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோர் தத்தமது பதவிகளை வகிக்க தகுதியான மற்றும் முறையான நபர்களாக இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தி, அவர்களிடம் இருந்து தனிப்பட்ட கையொப்பமிடப்பட்ட பிரகடனங்களை குழு பெற்றுக்கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தகுதி மற்றும் தனியுரிமை மீதான பிரகடனங்கள் பெறப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. அத்துடன், தொழில்நிலை / தகைமைகள் என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்படும் போது இப்பிரகடனங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. |
| | e) குழு ஓய்வு பெறும் பணிப்பாளர்களுக்கும், முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கும் ஒரு விதிமுறையான பின்னுறு திட்டத்தைக் கருத்திற் கொண்டுள்ளது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்களுக்குரிய பின்னுறு ஏற்பாடுகள் திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் கௌரவ அமைச்சர் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு பின்னுறு திட்டம் ஒன்று உள்ளது. எனினும், பின்னுறு திட்டம் புதுப்பிக்கப்படவில்லை. |
| | f) குழு ஒரு சுயாதீனப் பணிப்பாளரால் தலைமை வகிக்கப்படல் வேண்டும். அத்துடன், பெரும்பான்மையான சுயாதீனப் பணிப்பாளர்களோடு உருவாக்கப்படுதல் விரும்பத்தக்கது. பிரதம நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளிக்கலாம். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>சுயாதீனப் பணிப்பாளர் ஒருவர் கூட்டங்களுக்கு தலைமை வகித்துள்ளார். குறிப்பு விதிகளின்படி பிரதம நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் வேண்டும். எனினும், பிரதம நிறைவேற்று அதிகாரி, அனைத்துக் கூட்டங்களிலும் சமூகமளித்துள்ளார். |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(6)(v) | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC) தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுகின்றனவா, | |
| a) | குழு பரந்த இடர் வகுதிகளான கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு இந்தக் குழு குறைந்தபட்சம் நிர்வாகம் சாராத மூன்று பணிப்பாளர்களையும், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், குழு தனக்குரிய அதிகாரக் கட்டமைப்பு மற்றும் வழங்கப்பட்ட பொறுப்பு என்பவற்றின் எல்லைக்குள் இருந்து செயற்பட வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>குழு நிர்வாகம் சாராத மூன்று பணிப்பாளர்களையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும், பிரதம இடர் அதிகாரியையும் கொண்டுள்ளது. இணக்க அதிகாரி அழைப்பின் பேரில் 2019 காலப்பகுதியில் நடைபெற்ற கூட்டங்களுக்கு சமூகமளித்துள்ளார். |
| b) | கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் ஆகிய அனைத்து இடர்களையும் முறையான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் என்பனவற்றின் ஊடாக மாதாந்த அடிப்படையில் மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையை குழு கொண்டுள்ளது. துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் தொடர்பில் இடர் முகாமைத்துவம் வங்கி அடிப்படையிலும், குழும அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>குழு இடர்களை மதிப்பீடு செய்துள்ளது. அத்துடன், பிரதம இடர் அதிகாரியினால் மாதாந்த அடிப்படையில் முக்கிய இடர் குறிகாட்டிகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், IRMC யின் பரிந்துரைகள் சபை மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், வங்கியின் இடர் தோற்றப்பாட்டைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் சில இடர்களை மதிப்பீடு செய்வதில் மேலதிக முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றன. |
| c) | குழு, கடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக் குழுக்கள் போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்காக குறிப்பான, அளவு மற்றும் பண்புசார் இடர் எல்லைகளை மீளாய்வு செய்வதோடு. ஏதேனும் இடர் குறிகாட்டிகளை காலாந்தர அடிப்படையில் அறிக்கையிட்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>குழு செயற்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக BIRMC யினால் முகாமைத்துவ மட்டக் குழுக் கூட்டக் குறிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. |
| d) | குழு, குறித்துரைக்கப்பட்ட அளவு மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்கு அப்பால் சென்று, அனைத்து இடர் குறிகாட்டிகளையும் மீளாய்வு செய்து கவனத்திற் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>முக்கிய இடர் குறிகாட்டிகள் மீதான அறிக்கைகள் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. |
| e) | காலாண்டு அடிப்படையில் குறைந்தபட்சம் எத்தனை தடவைகள் குழு சந்தித்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>2019 இல் குழு 04 தடவைகள் சந்தித்துள்ளது. |
| f) | குழு, குறிப்பான இடர்களை இனங்காணத் தவறிய பொறுப்பான அதிகாரிகள் தொடர்பாக விதிமுறையான ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்க நடவடிக்கை நடைமுறையை மீளாய்வு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>விதிமுறையான ஒழுக்கக் கோவை ஒன்று உள்ளது. குழு இடர் விடயங்கள் தொடர்பாக குழு ஆவணங்கள் ஊடாக தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது. எனினும், 2019 ஆம் ஆண்டின் இனங்காணப்பட்ட எந்தவொரு நிகழ்வும் இல்லை. |
| g) | கூட்டம் நடைபெற்றதில் இருந்து ஒரு வாரத்திற்குள், குழு, இடர் மதிப்பீட்டு அறிக்கையை சபையின் கருத்துக்களையும், ஒத்திசைவுகளையும் மற்றும் / அல்லது விசேட வழிகாட்டிகளையும் பெற்றுக்கொள்ள சபைக்கு சமர்ப்பிக்கும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>வங்கியின் முக்கிய இடர் குறிகாட்டிகள் தொடர்பான அறிக்கை, பிரதம இடர் அதிகாரியினால் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அண்மையில் நடைபெறும் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும். மேலும். IRMC கூட்டக் குறிப்புகள் அண்மையில் நடைபெறவுள்ள சபைக்கு சமர்ப்பிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | h) அனைத்து வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் உள்ள சட்டங்கள், ஒழுங்கு விதிகள், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடன் வங்கி இணங்கி நடக்கின்றது என்பதை மதிப்பிட ஒரு இணக்கப் பணியை குழு ஸ்தாபித்துள்ளது. அத்துடன், பணியை மேற்கொள்வதற்கு கடமை உணர்ச்சியுடைய இணக்க அதிகாரி ஒருவர் முக்கிய முகாமைத்துவ ஆட்களில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். இவர், குழுவுக்கு காலாந்தர அடிப்படையில் அறிக்கையிட வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>வங்கியின் இணைக் கம்பனி இணக்க அதிகாரியினால் தலைமை வகிக்கப்பட்டு, இணக்க இடர் மதிப்பீட்டு அறிக்கை இணக்க அதிகாரியினால் காலாந்தர அடிப்படையில் BIRMC க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3(7) தொடர்புடைய திறத்தவருடனான பரிவர்த்தனைகள்

| | | |
|---|---|---|
| 3(7)(i) | ஏதேனும் நபருடன், குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சார்ந்தவர்களுடன் வங்கி நடத்துகின்ற ஏதேனும் பரிவர்த்தனையில் இருந்து ஏதேனும் அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடு ஒன்று தோன்றுவதைத் தவிர்ப்பதற்கு சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்று இருத்தல் வேண்டும். கீழே தரப்பட்ட வகையைச் சார்ந்தவர்கள் இந்த வழிகாட்டியின் நோக்கங்களுக்காக "தொடர்புபட்ட திறத்தவர்கள்" எனக் கருதப்படுவார்கள்.<br>a. வங்கியின் ஏதேனும் துணைக் கம்பனிகள்<br>b. வங்கியின் ஏதேனும் இணைக் கம்பனிகள்<br>c. வங்கியின் எவரேனும் பணிப்பாளர் ஒருவர்<br>d. வங்கியின் எவரேனும் முக்கிய முகாமைத்துவ நபர்<br>e. வங்கி பணிப்பாளர்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆட்களின் எவரேனும் நெருங்கிய உறவினர்<br>f. வங்கியில் முக்கியமான அக்கறையை உரித்தாகக் கொண்ட ஒரு பங்குதாரர்<br>g. வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது வங்கியின் பணிப்பாளர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் அல்லது முக்கியமான பங்குதாரர்களில் எவரேனும் ஒருவர் கணிசமான அளவு அக்கறை உடையவராக இருக்கின்றார் என்று கருதப்படும் போது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தொடர்புபட்ட திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் தொடர்பான சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஒன்று உள்ளது. எனினும், மேலே குறிப்பிடப்பட்ட கொள்கை பணிப்பாளர்களையும், தொடர்புடைய கம்பனிகளையும் இணைத்துக் கொள்வதை எளிதாக்குகின்ற வழிகாட்டிகளை மாத்திரமே கொண்டுள்ளது. மேலும், இது, மீளாய்வு செய்யப்படவில்லை. தொடர்புபட்ட திறத்தவர்களுக்கு உரித்தான பரிவர்த்தனைகள் பிரகடனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள NIC ஐப் பயன்படுத்தி கண்டுபிடிக்கலாம். |
| 3(7)(ii) | இங்கு குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளில் உள்வாங்கப்பட்ட தொடர்புபட்ட திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் என இனங்காணப்பட்ட கீழே தரப்பட்டுள்ள வகையிலான பரிவர்த்தனைகளை இனங்காணவும், அறிக்கையிடவும் செயன்முறை ஒன்று உள்ளது.<br>a) உள்வாங்கக்கூடிய அதி உச்சத் தொகை என்பதை நாணய சபை வழிகாட்டிகள் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு வழங்கப்பட்ட ஏதேனும் வகையிலான உள்வாங்கல்.<br>b) வைப்புகள், ஏனைய கடன் பெறுகைகள் மற்றும் முதலீடுகள் போன்ற வடிவங்களில் உருவாக்கப்பட்ட வங்கியின் ஏதேனும் பொறுப்புகள்.<br>c) நிதி அல்லது நிதி சாராத இயல்பைக் கொண்ட வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது வங்கியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் சேவைகளின் எற்பாடு.<br>d) சாத்தியமான தனி உரிமை, அத்தகைய மூன்றாம் திறத்தவர்களுக்கு பயனளிக்கக்கூடிய, நம்பமான அல்லது வேறு வகையிலான உணர்திறன் தகவல்கள் என்பவற்றை பகிர்வதனை முன்னெடுக்கும் வங்கி மற்றும் எவரேனும் மூன்றாம் திறத்தவர்களுக்கு இடையில் அறிக்கையிடும் வரிசைகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதலும் பேணுதலும். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தொடர்புபட்ட திறத்தவருடனான பரிவர்த்தனைக் கொள்கை ஒன்று உள்ளது. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை (a) யை மாத்திரம் உள்வாங்குகிறது. தொடர்புடைய திறத்தவர்களுக்கு இடையிலான பரிவர்த்தனைகள் வழங்கப்பட்ட பிரகடனங்களை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே இனங்காண முடியும். |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(7)(iii) | வழிகாட்டி 3(7)(i) இல் வரையறை செய்யப்பட்டவாறு அத்தகைய திறத்தவர்களுக்கு அதே வியாபாரத்தைக் கொண்டு நடத்துகின்ற வங்கியின் ஏனைய கூறுகளுக்கு வழங்கப்பட்டதை விட "மிகவும் சாதகமான நடத்துகையை" வழங்குகின்ற வகையில், வங்கி தொடர்புடைய திறத்தவர்களுடன் பரிவர்த்தனைகளில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு செயன்முறை ஒன்று உள்ளதா.<br><br>a) சபையின் தீர்மானத்திற்கு அமைய, வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் ஒரு விவேகமான விகிதாசாரத்தை விஞ்சிய தொடர்புபட்ட திறத்தவர்களுக்கு "மொத்த தேறிய உள்வாங்குகையை வழங்குதல்" இந்த உப வழிகாட்டியின் நோக்கங்களுக்காக,<br><br>I. "உள்வாங்குகை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வங்கி வழிகாட்டிகள் சட்டம் என்பதில் வரையறை செய்யப்பட்டவாறு அதி உச்ச உள்வாங்கும் தொகை எனப் பொருள்படும்.<br><br>II. 'மொத்த தேறிய உள்வாங்குகை, மொத்த உள் வாங்குகையில் இருந்து வங்கியில் அத்தகைய தொடர்புடைய திறத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பிணையங்கள் மற்றும் முதலீடுகளை அளித்து கணக்கிடப்படும்.<br><br>III. ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட முதிர்வுக் காலத்தைக் கொண்ட பங்கு மூலதனமும் கடன் கருவிகளும்.<br><br>b) தொடர்புபடாத ஒப்பிடக்கூடிய எதிர் திறத்தவருடன் ஒரு ஒப்பிடக்கூடிய பரிவர்த்தனைக்காக வங்கியின் சிறந்த கடன் வீதத்தை விட ஒரு குறைந்த வட்டி வீதத்தை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வீதத்தைவிட அதிக வீதத்தைச் செலுத்துதல்.<br><br>c) தொடர்புபடாத திறத்தவர்களுடன் பொறுப்பேற்றுக் கொண்ட சாதாரண வர்த்தக நடவடிக்கையின் போது வழங்கப்பட்ட நியதிகளுக்கு அப்பால் சென்று சாதகமான நியதிகள், வணிக நட்டங்களை உள்வாங்குதல் மற்றும் அல்லது கட்டணங்கள் / தரகுகள் விடுவிப்பு போன்ற சாதகமான நடத்துகையை வழங்குதல்.<br><br>d) மதிப்பீட்டு நடைமுறை ஒன்று இன்றி, தொடர்புடைய திறத்தவரிடம் இருந்து சேவைகளைப் பெறுதல் அல்லது திறத்தவருக்கு வழங்குதல்.<br><br>e) நெறிமுறையான கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் தொடர்புடைய திறத்தவர்களுடன் சாத்தியமான தனியுரிமை, நம்பகமான அல்லது வேறு வகையில் உணர்திறன் கொண்ட தகவல்களைப் பகிர்வதற்கு வழியை ஏற்படுத்தும் அறிக்கையிடும் வரிசைகளையும் தகவல் பாய்ச்சல்களையும் பேணுதல். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்பட்ட உள்வாங்குகை, சபையில் இருக்கக்கூடிய பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பணிப்பாளர்களினால் கூட்டம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், முக்கியமான முகாமைத்துவ ஆட்களுக்கு வழங்கப்பட்ட மிகச் சாதகமான நடத்துகையை இனங்காணுவதற்கு செயன்முறை ஒன்று இல்லை (ஏதேனும் இருப்பின்) |
| 3(7)(iv) | வங்கி அதன் பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவ ஆட்கள் எவரேனும் ஒருவருக்கு உள்வாங்குகையை வழங்குவதற்கான செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அத்துடன், அத்தகைய உள்வாங்குகை, அத்தகைய உள்வாங்குகையைப் பெறும் பணிப்பாளர் தவிர ஏனைய சபை பணிப்பாளர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதவர்களால் சபைக் கூட்டத்தில் அந்த உள்வாங்குகைக்கு சாதகமாக வாக்களிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. அத்துடன், இந்த உள்வாங்குகை காலத்திற்குக் காலம் நாணய சபையினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய உத்தரவாதத்தினால் பாதுகாக்கப்படுகிறது. | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>இவ்வருடத்தின் போது பணிப்பாளர்கள் சம்பந்தமாக இத்தகைய சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்படவில்லை. எனினும், முக்கிய முகாமைத்துவ ஆட்களின் உள் வாங்குகைகள் சபையினால் அனுமதிக்கப்படாது சாதாரண கடன் அங்கீகரிக்கும் செயன்முறை கையாளப்பட்டுள்ளது. |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(7)(v) | a) வங்கியினால் நபர் ஒருவருக்கு அல்லது அந்த நபரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது ஏதேனும் காரணத்திற்காக அத்தகைய நபருக்கு, கணிசமான அளவு அக்கறை உள்ள போது, அந்த நபர் வழங்குகையை உடனடுத்து, வங்கிக்கு பணிப்பாளராக நியமிக்கின்ற விடத்து, பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் நாணய சபையின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தேவையான பாதுகாப்பை பணிப்பாளரிடம் இருந்து பெறுவதற்கு வங்கி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஒரு செயன்முறை உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனை தொடர்பில் சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கை இந்த தேவைப்பாட்டை உள்வாங்குகிறது. |
| | b) மேலே தரப்பட்ட வழிகாட்டி 3(7)(5)(a) இவ் குறிப்பிட்டவாறு, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படாத விடத்து வழங்குகை பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட தினத்தில் குறித்துரைக்கப்பட்ட அக் காலப்பகுதிக்குள் அல்லது பணிப்பாளர் நியமனம் பெற்று 18 மாதங்கள் பூர்த்தியடைகின்ற போது, இதில் எது முடிவடைகிறதோ அத்தினத்தில் வங்கி ஏதேனும் வழங்குகை தொடர்பாக நிலுவையாக உள்ள தொகையை வட்டியுடன் அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதா. | அத்தகைய சூழ்நிலை ஒன்று எழவில்லை. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்கவில்லை. |
| | c) மேலே தரப்பட்ட உப வழிகாட்டிகளில் உள்ள தேவைப்பாடுகளுடன் எவரேனும் பணிப்பாளர் இணங்கி நடக்காத விடத்து அதனை இனங்காண ஒரு செயன்முறை உள்ளது. அத்தகைய பணிப்பாளர் தனது பதவியில் இருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன், வங்கி அத்தகைய நிகழ்வுகளை பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும். | அத்தகைய சூழ்நிலை ஒன்று எழவில்லை. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்கவில்லை. |
| | d) எவரேனும் உறுப்பினர் உள்வாங்குகை வழங்கப்படுகின்ற போது, வங்கியின் ஊழியராக இருக்குமிடத்தது, வாசகம் 3 (7) (v) (c) இல் உள்ள செயன்முறை அவருக்குப் பொருந்தாது. குறிப்பிட்ட திட்டம் ஒன்றின் கீழ் வழங்கப்பட்ட உள்வாங்குகை அத்தகைய வங்கியின் அனைத்துப் பணியாளர்களுக்கும் பொருந்தும். | அத்தகைய சூழ்நிலை ஒன்று எழவில்லை. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்கவில்லை. |
| 3(7)(vi) | வங்கியின் பணியாட்களுக்கு பிரயோகமாகின்ற திட்டம் ஒன்றின் அடிப்படைக்கு அப்பால் வங்கி ஏதேனும் உள்வாங்குகையை அல்லது அதிக சாதகமான நடத்துகையை கட்டண விடுபாடு மற்றும் அல்லது தரகு விடுபாடு தொடர்பாக குறிப்பிட்ட விடயத்தில் கணிசமான அக்கறையுடைய எவரேனும் பணியாள் அல்லது அத்தகைய பணியாளின் நெருங்கிய உறவினருக்கு வழங்குகின்ற போது, அதனை இனங்காண ஒரு செயன்முறை உள்ளது. மேலும், வழிகாட்டி 3(7)(v) இல் குறிப்பிட்டவாறு உள்வாங்குகை ஒன்று வழங்கப்பட்டிருந்து, அது, நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிணையம் ஒன்றினால் பாதுகாக்கப்பட்டிருக்கும் போது இதே செயன்முறை பிரயோகிக்கப்படும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்பட்ட உள்வாங்குகை, சபையில் இருக்கக்கூடிய பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பணிப்பாளர்களினால் கூட்டம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், உள் வாங்குகைகள் பணியாட்களுக்குச் சாதாரண வணிக நடவடிக்கைகளின் போது வழங்கப்பட்டுள்ளது. |
| 3(7)(vii) | வழிகாட்டி 3(7)(v) மற்றும் 3(7)(vi) இன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உள்வாங்குகைக்கு நாணய சபையிடமிருந்து முன் அனுமதி பெறுவதற்கான செயன்முறை ஒன்று உள்ளது. அத்தகைய உள் வாங்குகையில் இருந்து ஏதேனும் ஒரு பகுதியையோ அல்லது ஏதேனும் அக்கறையையோ நாணய சபையின் முன் அனுமதி இன்றி குறைத்தல் ஆகாது. அத்துடன், அத்தகைய அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் வெற்றானது ஆவதுடன் எந்த விளைவுப் பயனையும் தராது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>தொடர்புடைய திறத்தவருடனான பரிவர்த்தனை மீதான சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கை இவ்விடயத்தை உள்வாங்குகிறது. இக்காலப் பகுதியின் போது இத்தகைய சூழ்நிலைகள் எழவில்லை. |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(8) | வெளிப்படுத்தல்கள் | |
| 3(8)(i) | சபை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது. |
| | (a) வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மேற்பார்வை மற்றும் ஒங்குபடுத்தல் அதிகார சபைகளினால் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்களினால் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்புக்களில் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கூற்றுகள் பத்திரிகைகளில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. | வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளினால் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்களினால் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்புக்களில் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கூற்றுக்கள் பத்திரிகைகளில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. |
| | (b) காலாண்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு பத்திரிகைகளில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. | |
| 3(8)(ii) | சபை வருடாந்த அறிக்கையில் பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது என்பதை பரீட்சித்தல். | |
| | a) பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளுக்கு அமைய, வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய கூற்று. இக்கூற்றில் விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ற வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. |
| | b) நிதி அறிக்கையின் உண்மைத் தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்ற வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறை தொடர்பான சபை அறிக்கை உறுதிப்படுத்துவதுடன், வெளியக நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கியல் எண்ணக்கருக்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை தொடர்பான அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாடு மீதான “பணிப்பாளர்களின் கூற்றில்” தரப்பட்டுள்ளது. |
| | c) வழிகாட்டி 3(8)(ii)(b) இல் குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வினைத்திறன் பற்றிய வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கையை சபை பெற்றுக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>வங்கி கணக்காய்வாளர் நாயகத்திடம் இருந்து நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றுள்ளது. |
| | d) பணிப்பாளர்களின் பெயர்கள், தகைமைகள், வயது, அனுபவம், தகுதி மற்றும் தனி உரிமை பற்றிய ஒழுங்கு விதிகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வங்கியுடனான பரிவர்த்தனைகள் மற்றும் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணங்கள் / ஊதியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் விபரங்கள். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பெயர்கள், தகைமைகள், பணிப்பாளர் சபையின் அனுபவம் என்பவற்றை உள்ளடக்கிய விபரங்கள் பணிப்பாளர் சபை என்பதன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>மேலும் பணிப்பாளர் சபைக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் / ஊதியங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |

| | | இணக்க மட்டம் |
|---|---|---|
| e) | 3(7)(iii) இல் வரையறை செய்யப்பட்டவாறு, மொத்த தேறிய உள்வாங்குகை தொடர்புபட்ட திறத்தவர்களின் ஒவ்வொரு வகுதியினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட உள்வாங்குகை வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் விகிதாசாரம் ஒன்றாக வெளிப்படுதப்படல் வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது. |
| f) | வங்கியினால் அதன் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதிகளும், முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் மொத்தப் பெறுமதிகளும், செலுத்தப்பட்ட ஊதியங்கள், வழங்கப்பட்ட உள்வாங்குகை மற்றும் வைப்புகள் அல்லது வங்கியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் என்ற பரந்த பிரிவுகளுக்குள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த ஊதியத்தின் மொத்தப் பெறுமதியும் அவர்களுடனான பரிவர்த்தனைகளின் மொத்தப் பெறுமதியும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| g) | சபை கூட்டறவு ஆளுகை வழிகாட்டிகளுடன் இணங்கி நடந்தமை தொடர்பாக வெளிவாரி கணக்காய்வாளர்களின் அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>கூட்டுறவு ஆட்சி வழிகாட்டிகளுடன் இணங்கி நடந்தமை தொடர்பான வெளிவாரி கணக்காய்வாளர்களின் அறிக்கை வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| h) | விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏதேனும் முக்கியமான தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்காமையை சீர்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள வழிவகைகள் ஆகியவற்றின் விபரங்களை குறிப்பிட்ட ஒரு அறிக்கை. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள் பணிப்பாளரின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |
| i) | ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை விடயங்களில் வங்கியின் இடர் முகாமைத்துவம் விட்ட குறைபாடுகள் அல்லது அத்தகைய வழிகாட்டுதல்களுடன் இணங்கி நடக்காமை பற்றி வங்கி மேற்பார்வை தொடர்பான பணிப்பாளரால் குறித்துக் காட்டப்பட்டிருப்பின், அவை பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அந்த வெளிப்படுத்தலில் அத்தகைய விடயங்களை எதிர்கொள்ள வங்கி எடுத்த நடவடிக்கைகளையும் குறிப்பிட வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br><br>நாணய சபையினால் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற எந்த வழிகாட்டுதலும் வழங்கப்படவில்லை. |

# பணிப்பாளர் சபை / சபை உப குழுக்கள் உள்ளடக்கம் மற்றும் சமூகமளித்த பணிப்பாளர்கள் / குழு உறுப்பினர்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போதான சபை உப குழுக்களின் கூட்டங்கள்

| பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்று / நிறைவேற்று சாராத / சுயாதீனத் தகைமை உடைய பணிப்பாளர்களின் பெயர்கள் | பணிப்பாளர்கள் சபை | | சபை கணக்காய்வுக் குழு | | | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு | | | சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு | | | சபை கடன் குழு | | | சபைத் தெரிவுக் குழு | | | சபை தகவல் தொழில்நுட்ப செயற்குழு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | * E | * A | * S | E | A | * S | E | A | * S | E | A | * S | E | A | * S | E | A | * S | E | A |
| 1. திரு. ஜே.ரீ.எஸ்.பீ.காரியவாசம் (தலைவர்) | 16 | 16 | | | | | | | C | 10 | 10 | C | 07 | 07 | C | 04 | 04 | | | |
| 2. *திரு. ரீ.ஏ.ஆரியபால (பொது முகாமையாளர்) | 03 | 03 | | | | | | | | 02 | 02 | | | | | | | | 01 | 01 |
| 3. **திரு. ரீ. குஹன் (பொது முகாமையாளர்) | 13 | 13 | | | | | 04 | 04 | | 08 | 08 | | 07 | 07 | | 04 | 04 | | 02 | 02 |
| 4. ***திரு. ஏ.ஆர். தேஷப்பிரிய (சபை பணிப்பாளர்) | 03 | 02 | | | | | | | | | | | | | | | | | | |
| 5. ****திரு. ஏ.கே. செனவிரத்ன (சபை பணிப்பாளர்) | 13 | 13 | C | 07 | 07 | | | | | | | | | | | | | | | |
| 6. திரு. கே.பீ. விஜேரத்ன (சபை பணிப்பாளர்) | 16 | 15 | M | 07 | 07 | C | 04 | 04 | M | 03 | 03 | M | 07 | 06 | M | 02 | 02 | | | |
| 7. *****திரு. கே.பீ. ராஜபக்ஷ (சபை பணிப்பாளர்) | 09 | 09 | | | | C | 03 | 03 | | | | M | 04 | 04 | | | | C | 02 | 02 |
| 8. ******திரு. எம்.ஏ.பி. சில்வா (சபை பணிப்பாளர்) | 04 | 04 | | | | | | | | | | M | 01 | 01 | | | | | | |
| 9. திரு. எம்.ஜே.பீ. சல்காடோ (சபை பணிப்பாளர்) | 16 | 12 | | | | M | 04 | 04 | M | 04 | 04 | | | | M | 03 | 03 | M | 03 | 03 |
| 10. ******* திரு. நீல் டி அல்விஸ் (சபை பணிப்பாளர்) | 06 | 06 | M | 01 | 01 | M | 01 | 01 | M | 06 | 06 | | | | M | 01 | 01 | M | 01 | 01 |
| 11. ******** திரு. கே. அமரசிங்க (நிறைவேற்றுப் பணிப்பாளர்) | 06 | 06 | | | | M | 01 | 01 | M | 06 | 06 | M | 03 | 02 | | | | | | |
| 12. *********திரு. ஜே. ஆர். பெர்னாண்டஸ் (சபை பணிப்பாளர்) | 09 | 09 | | | | | | | | | | | | | | | | C | 02 | 02 |
| 13. **********திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய (சபை பணிப்பாளர்) | 09 | 08 | M | 05 | 05 | | | | M | 04 | 04 | | | | M | 03 | 02 | | | |
| 14. ***********திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (சபை பணிப்பாளர்) | 06 | 05 | M | 03 | 01 | M | 01 | 01 | | | | M | 03 | 02 | | | | M | 01 | 01 |

*S – உரிய குழுக்களில் உள்ள பணிப்பாளரின் அந்தஸ்து
C – குழுவின் தலைவர் M – குழு உறுப்பினர்
*E – சமூகமளிப்பதற்கான தகைமை *A – சமூகம் BI – அழைப்பின் பேரில்

* 30.01.2019 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் ஓய்வு பெற்ற
** 01.02.2019 இல் பதில் பொது முகாமையாளர்/பி.நி.அ மற்றும் 01.11.2019 முதல் பொ.மு/ பி.நி.அ
*** 31.01.2019 இல் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா
**** 21.02.2019 இல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம்
***** 01.07.2019 இல் அமுலுக்கு வரும் வகையில் காலம் பூர்த்தி
****** 25.07.2019 இல் நிமிக்கப்பட்ட மற்றும் 18.09.2019 இல் தகுதி மற்றும் தனியுரிமை பெறப்பட்டது
******* 01.04.2019 இல் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா
******** 01.04.2019 இல் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா
********* 21.02.2019 இல் நிமிக்கப்பட்ட மற்றும் 15.05.2019 இல் தகுதி மற்றும் தனியுரிமை பெறப்பட்டது
********** 12.03.2019 இல் நிமிக்கப்பட்ட மற்றும் 15.05.2019 இல் தகுதி மற்றும் தனியுரிமை பெறப்பட்டது
*********** 04.06.2019 இல் நிமிக்கப்பட்ட மற்றும் 24.07.2019 இல் தகுதி மற்றும் தனியுரிமை பெறப்பட்டது

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

## பொதுவானவை

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) பணப்பாளர்கள், வங்கியின் விவகாரங்கள் தொடர்பான வருடாந்த அறிக்கையை 2019 டிசம்பர் 31 இல் பூர்த்தியடைந்த வங்கியின் 10வது வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். இவ்வறிக்கை 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் கூட்டுறவு ஆளுகை தொடர்பான வழிகாட்டிகள் ஆகியவற்றில் உள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளமையையும் இவ்வறிக்கை மேலும் உறுதிப்படுத்துகிறது. வங்கி 1997 ஆம் ஆண்டு 17 கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு ரஜரட்ட, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கிகள் என 6 வங்கிகளாக உருவெடுத்தன. இந்த 6 மாகாண அபிவிருத்தி வங்கிகளும் 2010 மே மாதம் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு தேசிய மட்ட அபிவிருத்தி வங்கியாக உருப்பெற்று பிரதேச அபிவிருத்தி வங்கி (பிராந்திய அபிவிருத்தி வங்கி அல்லது RDB) எனப் பெயரிடப்பட்டது. RDB 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. RDB அரசினால் உரிமை கொள்ளப்பட்ட தேசிய மட்ட வங்கியாக இருப்பதோடு, இது கிராமிய மக்களுக்கு அணுகக்கூடிய மற்றும் செலவு குறைவுடன் பெறக்கூடிய நிதிச் சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும், கிராமியப் பொருளாதாரத்தை உயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## முதன்மை நடவடிக்கைகள்

விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் இலங்கையர்களை மேம்படுத்தல் ஆகிய ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன வங்கியின் முதன்மை நடவடிக்கைகளாக அமைகின்றன.

## நோக்கு மற்றும் பணி நோக்கு

வங்கியின் நோக்கு மற்றும் பணி நோக்கு என்பன வருடாந்த அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கி தனது நோக்கு, பணி நோக்குக் கூற்றுக்களில் குறிப்பிட்ட இலக்குகளை அடைகின்ற அதேவேளை, அதன் நடவடிக்கைகளில் உயர் நெறிமுறைத் தன்மையைப் பேணுகிறது.

## தொடர்ந்து செல்லும் நிறுவனம்

வங்கி, எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளை தொடர்ந்து நடத்த போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தியடைகிறது. எனவே, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நாம் தொடர்ந்து நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையைக் கையாண்டு வருகின்றோம்.

## நிதிக் கூற்றுக்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் குறித்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்களுடனும் (SLFRS/LKAS) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் ஒத்திசைந்து, வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வங்கியின் 10வது வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் பிரதம நிதி அதிகாரி, பிரதம நிர்வாக அதிகாரி மற்றும் வங்கியின் இரண்டு பணிப்பாளர்களால் முறையாக கையொப்பமிடப்பட்டு, 115வது பக்கத்தில் தரப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையின் முக்கிய பாகமாக அமைகிறது.

## நிதி அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள்

வங்கியின் விவகாரங்கள் பற்றி உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவும், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன.

இந்த வருடாந்த அறிக்கையின் 103வது பக்கத்தில் தோன்றுகின்ற பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று, நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புகளை விபரமாக விளக்குகிறது. அத்துடன், இது, பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையின் முக்கிய பாகமாகவும் அமைகிறது.

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

## கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வாளர் வங்கியின் கணக்காய்வை 2019 இல் மேற்கொண்டார். கணக்காய்வு வருடம் முழுவதும் நடைபெற்றது. அவர்களுடைய அறிக்கையில் இனங்காணப்பட்ட விடயங்கள் துரித நடவடிக்கைக்காக முகாமைத்துவத்திற்கு கிரமமாக சமர்ப்பிக்கப்பட்டது. நிதி அறிக்கையிடல், நிதிக் கூற்றுக்கள், தேவையான தரவு மற்றும் தகவல்களுடன் அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்னர், கணக்காய்வாளர் நாயகத்தின் பரிசீலனைக்காக வழங்கப்பட்டது. இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்து 108வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை அமைப்பு என்ற வகையில், இலங்கை மத்திய வங்கி அதனால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளோடு ஒத்திசைந்து வங்கியின் விடயங்கள் அமைந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்கு வங்கி நடவடிக்கைகளையும் பதிவுகளையும் காலாந்தர பரீட்சைக்கு உட்படுத்தியது. மேலும், மத்திய வங்கி, RDB தேவையான மட்டத்தில் தேவைப்படுத்தப்பட்ட நிதிக் குறிகாட்டிகளைப் பேணி வந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும். இதன் மூலம் அனைத்து பங்குதாரர்கள் குறிப்பாக வைப்பாளர்களின் அக்கறைகள் பாதுகாக்கப்படும்.

## முக்கிய கணக்கியல் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்திய முக்கிய கணக்கியல் கொள்கைகள் 122 - 134 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## பணிப்பாளர்களின் ஊதியங்கள்

இவ்வருடத்தின் போது பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் பற்றிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 12 இல் தரப்பட்டுள்ளன.

## எதிர்கால அபிவிருத்திகள்

வங்கியின் எதிர்கால அபிவிருத்தி பற்றிய ஒரு பார்வை தலைவரின் கூற்று (பக்கங்கள் 8 - 9) பொது முகாமையாளர்/ பி.நி.அ வின் மீளாய்வு (பக்கங்கள் 10 - 12) மற்றும் முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (பக்கங்கள் 25 - 64) என்பவற்றில் தரப்பட்டுள்ளன.

## வணிக செயற்திறன் பற்றிய மீளாய்வு

இந்த நிதியாண்டின் போது வங்கி செயற்திறன் பற்றிய மீளாய்வு தலைவரின் கூற்று (பக்கங்கள் 8 - 9), பொது முகாமையாளர்/ பி.நி.அ வின் மீளாய்வு (பக்கங்கள் 10 - 12) மற்றும் முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (பக்கங்கள் 25 - 64) என்பவற்றில் தரப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் வருடாந்த அறிக்கையின் முக்கிய பாகமாக அமைகின்றன.

## நிதிப் பெறுபேறுகள்

வங்கியின் நிதி மற்றும் தொழிற்பாட்டுச் செயற்திறன் என்பன பொது முகாமையாளர் / பி.நி.அ வின் மீளாய்வில் (பக்கங்கள் 10 - 12) மற்றும் நிதிச் சிறப்பம்சங்கள் (பக்கங்கள் 5 - 7) என்பனவற்றில் தரப்பட்டுள்ளன.

## குறிப்பிடப்பட்ட மூலதனம்

31.12.2019 இல் உள்ளவாறு மொத்த பங்குதாரர் நிதி ரூபா 15 பில்லியன். வருட இறுதியில் பங்குதாரர்களினால் பங்களிப்பு செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூபா 8.05 பில்லியன். அவற்றின் பங்குதாரர்களின் பங்கு வைத்திருத்தல் விகிதம் கீழே தரப்பட்டுள்ளன.

| | | ரூபா | % |
|---|---|---|---|
| 1. | பொதுத் திறைசேரி | 7,553,739,710 | 94 |
| 2. | இலங்கை வங்கி | 164,484,480 | 2 |
| 3. | மக்கள் வங்கி | 164,484,480 | 2 |
| 4. | தேசிய சேமிப்பு வங்கி | 164,521,260 | 2 |
| | மொத்தம் | 8,047,229,930 | 100 |

## வருமானம்

2019 ஆம் ஆண்டில் வங்கி பெற்ற மொத்த வருமானம் ரூபா 27.5 பில்லியன் ஆகும். வருமானம் பற்றிய விபரங்கள் 136வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

## வரி விதிப்பு

2019 ஆம் ஆண்டில் வங்கி வரிகள் மற்றும் தீர்வைகள் என்ற அடிப்படையில் ரூபா 2,629 மில்லியன் பங்களிப்புச் செய்துள்ளது. இத்தொகை ரூபா 891 மில்லியன் வருமான வரி ரூபா 1,013 மில்லின் நிதிச் சேவை பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, ரூபா 124 மில்லியன் NBT மற்றும் ரூபா 601 கடன் மீள் செலுத்துகை தீர்வை ஆகியவற்றை உள்ளடக்குகிறது. வங்கி செயற்பாடுகள் மீது பிரயோகிக்கப்படுகின்ற வருமான வரி வீதம் 28% ஆகும். வங்கி பொறுப்பு முறைமையின் கீழ் அனைத்து அறியப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மீது ஒத்தி வைக்கப்பட்ட வரியை வழங்குவது வங்கியின் கொள்கையாகும்.

## ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இந்த வருடத்தின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் குத்தகை ஆதனம் மற்றும் அருவச் சொத்துக்கள் என்பவற்றை கையகப்படுத்துவதற்கு ஏற்பட்ட வங்கியின் மொத்த மூலதனச் செலவு ரூபா 232 மில்லியன். (2018 இல் ரூபா 414 மில்லியன்) இவை பற்றிய விபரங்கள் வருடாந்த அறிக்கையின் 150 - 158வது பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 24 மற்றும் 25 இல் தரப்பட்டுள்ளன.

## ஐந்தொகை திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் முக்கியமான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. அதனால் நிதிக் கூற்றுக்களில் சீர்படுத்தல்களோ அல்லது வெளிப்படுத்தல்களோ தேவைப்படவில்லை.

## நிலுவையாக உள்ள வழக்குகள்

வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் வங்கியின் சட்டத்தரணிகளின் கருத்தின்படி, நிதிக் கூற்றுக்களுக்கான கூற்று 38.2 இல் வெளிப்படுத்தப்பட்ட வங்கிக்கு எதிரான வழக்குகள், வங்கியின் நிதி நிலைமையில் அல்லது எதிர்கால செயற்பாடுகளில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தாது.

## மூலதனமும் ஒதுக்குகளும்

தக்க வைக்கப்பட்ட சம்பளங்கள் உள்ளடங்கலாக வங்கியின் மூலதனமும், ஒதுக்குகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

| | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | **8,047,229,930** | 8,047,229,930 |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதி | **742,261,195** | 717,331,468 |
| விசேட ஒதுக்க நிதி | **596,651,523** | 571,721,796 |
| பொது ஒதுக்க நிதி | **3,157,644,530** | 3,057,925,624 |
| தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | **2,421,534,400** | 2,315,905,812 |
| மொத்தம் | **14,965,321,578** | 14,710,114,630 |

## பங்கிலாபங்கள்

31.12.2018 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட பங்குகளில் ஒரு பங்கிற்கு உரிய ஒரு இறுதிப் பங்குலாபம் ரூபா 0.50 ஆகும். இது, 31.12.2018 இல் நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்ட பங்கை விலக்களிக்கிறது. இவ்வாறு விலக்களிக்கப்பட்ட பின்னர் 2019 டிசம்பரில் செலுத்தப்பட்ட தொகையான ரூபா 193,546,847, 2018 ஆம் ஆண்டின் இலாபத்தில் இருந்து செலுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் ஒரளவளான செயற்பாட்டு பெறுபேறுகளின் பார்வையிலும் மற்றும் 13.05.2020 எனத் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 2020 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வழிகாட்டியின் அடிப்படையிலும் பணிப்பாளர்கள் 2019 ஆம் ஆண்டின் இலாபத்தில் இருந்து பங்கிடப்பட வேண்டிய பங்குலாபங்களை அங்கீகரிக்கவில்லை.

## முன்னாள் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியுடனான கூட்டிணைப்பு

2016 ஆம் ஆண்டின் அரசாங்க வரவு செலவுத் திட்டப் பிரேரணைக்கு அமைய, 01.04.2019 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில், முன்னாள் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. இவை பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 23 இல் தரப்பட்டுள்ளன.

## பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபை தலைவர் உள்ளடங்கலாக 10 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. திறைசேரியின் செயலாளர் தலைவரையும், ஏனைய பணிப்பாளர்களையும் நியமிப்பார். பொதுத் திறைசேரி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய நான்கு பணிப்பாளர்கள் பங்குதாரர்களால் நியமிக்கப்படுவர். கீழே தரப்பட்டுள்ள பெயர்கள் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிப்பவர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளதுடன், அவர்களின் விபரங்கள் 14 - 17வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| திரு. எம். மஹிந்த சாலிய | - தலைவர் |
| திரு. ஏ.கே. செனவிரத்ன | - சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |
| திரு. கே.பீ. விஜேரத்ன | - சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |
| திரு. எம்.ஜே.பி. சல்காடோ | - சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் (2020.02.29 வரை) |
| திரு. எம்.ஏ.பி சில்வா | - சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் (2020.03.04 வரை) |
| திரு. எம்.எஸ்.டீ. ரணசிரி | - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |
| திரு. டப்ளியூ.எம்.கருணாரத்ன | - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |
| பேராசிரியர் எச்.எம்.டப்ளியூ. ஆரியரத்ன ஹேரத் | - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |
| டொக்டர் நிர்மால் டி சில்வா | - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |
| திரு. லலித் அபேசிரிவர்தன | - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் |

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

## பணிப்பாளர்களின் இராஜினாமா

திரு. ஜே.ரீ.எஸ்.காரியவசம் - தலைவர்,
31.12.2019 இல் இருந்து இராஜினாமா

திரு. ஏ.ஆர். தேஷப்பிரிய - சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்,
31.01.2019 இல் இருந்து இராஜினாமா

திரு. கே.பீ. ராஜபக்ஷ - சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்,
01.07.2019 இல் காலம் பூர்த்தியானது.

திரு. நீல் டி அல்விஸ் - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்,
01.04.2019 இல் இருந்து இராஜினாமா

திரு. கே. அமரசிங்க - சுயாதீன/ நிறைவேற்றுப் பணிப்பாளர்,
01.04.2019 இல் இருந்து இராஜினாமா

திரு. ஜே. ஆர். பெர்னாண்டஸ்- சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்,
02.12.2019 இல் இருந்து இராஜினாமா

திரு. எஸ்.ஜே.சி. பெரேரா - சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்,
15.12.2019 இல் இருந்து இராஜினாமா

திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய-சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்,
02.12.2019 இல் இருந்து இராஜினாமா

## புதிய பணிப்பாளர்களின் நியமனம்

| பணிப்பாளர் | நியமனத் திகதி |
|---|---|
| திரு. எம். மஹிந்த சாலிய | 27.12.2019 மற்றும் 01.01.2020 இல் கடமைகளை பொறுப்பேற்றார். |
| திரு. ஏ.கே. செனவிரத்ன | 21.02.2019 |
| திரு. எம்.ஏ.பி சில்வா | 25.07.2019 |
| திரு. ஜே. ஆர். பெர்னாண்டஸ் | 21.02.2019 |
| திரு. எஸ்.ஜே.சி. பெரேரா | 04.06.2019 |
| திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய | 12.03.2019 |

## சபை உப குழுக்கள்

பணிப்பாளர் சபை ஒட்டுமொத்த பொறுப்பையும், வகை கூறலையும் பொறுப்பேற்றுக் கொள்கின்ற அதேவேளை, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய நியதிச் சட்ட இணக்கத் தேவைப்பாடுகளுடன் கூட்டுறவு ஆளுகை தொடர்பான தரங்களைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்த பின்வரும் சபை உப குழுக்களை நியமித்துள்ளது. சபை உப குழுக்களின் உள்ளடக்கம் பின்வருமாறு:

## சபை கணக்காய்வுக் குழு

1. திரு. ஏ.கே. செனவிரத்ன (குழுவின் தலைவர்)
2. திரு. கே.பீ. விஜேரத்ன (2018.08.01 இல் நியமனம்)
3. திரு. நீல் டி அல்விஸ் (2019..01.04 இல் பதவி விலகல்)
4. திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய (2019.05.30 இல் நியமனம்)
5. திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (2019.09.06 இல் நியமனம்)
6. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஒரு கணக்காய்வு கண்காணிப்பாளர்.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 95வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அத்துடன், இது பணிப்பாளரின் அறிக்கையின் ஒரு பகுதியாக அமைகிறது.

## ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

1. திரு. கே.பீ. ராஜபக்ஷ (குழுவின் தலைவர், 2019.07.01 இல் காலம் பூர்த்தி)
2. திரு. கே.பீ. விஜேரத்ன (குழுவின் தலைவர், 2019.07.08 இல் நியமனம்)
3. திரு. எம்.ஜே.பீ. சல்காடோ
4. திரு. நீல் டி அல்விஸ் (2019.04.01 இல் ஓய்வு)
5. திரு. கே. அமரசிங்க (2019.04.01 இல் ஓய்வு)
6. திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (2019.09.06 இல் நியமனம்)
7. திரு. எம்.ஏ.பி. சில்வா (2019.10.02 இல் நியமனம்)
8. திரு. ரீ.ஏ.ஆரியபால (பொ.மு/பிநிஅ 2019.01.30 இல் ஓய்வு)
9. திரு. ரீ. குஹன் (பதில் பொ.மு/பிநிஅ 2019.02.01 மற்றும் பொ.மு/பிநிஅ 2019.11.01 நியமனம்)
10. திரு. கே.சி.டீ. தர்மப்பிரிய (உபொமு - இடர் முகாமைத்துவம்)
11. திரு. டப்ளியூ.எம்.எஸ். விக்கிரமசிங்க (இணக்க அதிகாரி)

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 100வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இது, பணிப்பாளர்களின் அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

## சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு

1. திரு. ஜே.ரீ.எஸ்.பீ. காரியவசம் (குழுவின் தலைவர்)
2. திரு. கே.பீ. விஜேரத்ன (2019.07.12 இல் நியமனம்)
3. திரு. எம்.ஜே.பீ. சல்காடோ (2019.05.30 இல் நியமனம்)
4. திரு. நீல் டி அல்விஸ் (2019.04.01 இல் ஓய்வு)
5. திரு. கே. அமரசிங்க (2019.04.01 இல் ஓய்வு)
6. திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய (2019.05.30 இல் நியமனம்)
7. திரு. ரீ.ஏ.ஆரியபால - பொ.மு/பிநிஅ (2019.01.30 இல் ஓய்வு)
8. திரு. ரீ. குஹன் (பதில் பொ.மு/பிநிஅ 2019.02.01 மற்றும் பொ.மு/பிநிஅ 2019.11.01 நியமனம்)
9. திரு. கே.எம்.ஜே.எஸ். கருணாதிலக - தலைவர் - மனித வள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்

## சபை தகவல்கள் தொழில்நுட்ப செயற்குழு

1. திரு. கே.பீ. ராஜபக்ஷ (குழுவின் தலைவர், 2019.07.01 இல் காலம் பூர்த்தி)
2. திரு. ஜே. ஆர். பெர்னாண்டஸ் (2019.05.30 இல் நியமனம், குழுவின் தலைவராக 2019.08.07 இல் நியமனம்)
3. திரு. எம்.ஜே.பீ. சல்காடோ
4. திரு. எம்.ஏ.பி. சில்வா (2019.10.02 இல் நியமனம்)
5. திரு. நீல் டி அல்விஸ் (2019.04.01 இல் ஓய்வு)
6. திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (2019.08.07 இல் நியமனம்)
7. திரு. ரீ.ஏ.ஆரியபால - பொ.மு/பிநிஅ (2019.01.30 இல் ஓய்வு)
8. திரு. ரீ. குஹன் (பதில் பொ.மு/பிநிஅ 2019.02.01 மற்றும் பொ.மு/பிநிஅ 2019.11.01 நியமனம்)
9. திரு. வீ. ஜயசிங்க (பிரதம தகவல் அதிகாரி)
10. திரு. கே.சீ.டீ. தர்மப்பிரிய (உபொமு - இடர் முகாமைத்துவம்)

## சபை கடன் குழு

1. திரு. ஜே.ரீ.எஸ்.பீ. காரியவசம் (குழுவின் தலைவர்)
2. திரு. கே.பீ. ராஜபக்ஷ (குழுவின் தலைவர், 2019.07.01 இல் காலம் பூர்த்தி)
3. திரு. கே.பீ. விஜேரத்ன
4. திரு. எம்.ஏ.பி. சில்வா (2019.10.02 இல் நியமனம்)
5. திரு. கே. அமரசிங்க (2019.04.01 இல் ஓய்வு)
6. திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (2019.08.07 இல் நியமனம்)
7. திரு. ரீ. குஹன் (பதில் பொ.மு/பிநிஅ 2019.02.01 மற்றும் பொ.மு/பிநிஅ 2019.11.01 நியமனம்)

## சபையின் தெரிவுக் குழு

1. திரு. ஜே.ரீ.எஸ்.பீ. காரியவசம் (குழுவின் தலைவர்)
2. திரு. கே.பீ. விஜேரத்ன (2019.07.12 இல் நியமனம்)
3. திரு. எம்.ஜே.பீ. சல்காடோ (2019.05.30 இல் நியமனம்)
4. திரு. நீல் டி அல்விஸ் (2019.04.01 இல் ஓய்வு)
5. திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய (2019.05.30 இல் நியமனம்)
6. திரு. ரீ. குஹன் (பதில் பொ.மு/பிநிஅ 2019.02.01 மற்றும் பொ.மு/பிநிஅ 2019.11.01 நியமனம்)
7. திரு. கே.எம்.ஜே.எஸ். கருணாதிலக - தலைவர் - மனித வள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்

## பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை சபைக் கூட்டங்கள், சபைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுக் கூட்டங்கள், சபையின் தெரிவுக் குழுக் கூட்டங்கள், சபை கடன் குழுக் கூட்டங்கள், சபை தகவல் தொழில்நுட்பக் கூட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், இந்தக் கூட்டங்களில் சமூகமளித்த பணிப்பாளர்களின் விபரங்கள் வருடாந்த அறிக்கையின் 88வது பக்கத்தில் கூட்டுறவு ஆளுகையின் கீழ் தரப்பட்டுள்ளது.

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

வங்கியுடன் ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் இருக்கக்கூடிய அக்கறை, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 39.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கு வேறு ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான அக்கறைகளோ அல்லது வங்கியுடன் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களோ கிடையாது.

## தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள்

இலங்கை கணக்கியல் நியமங்களில் (LKAS 24) விதிகளில் தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் என வகுப்பாக்கம் செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் ஏதேனும் இருப்பின் அவை பற்றி பணிப்பாளர்கள் வெளிப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். தொடர்புடைய திறத்தவருடனான வெளிப்பாடுகள் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட பரிவர்த்தனைகள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 39 இல் தரப்பட்டுள்ளன.

## பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

பொது முகாமையாளர் பிரதம நிருவாக அதிகாரியாக இருப்பதோடு, அவர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவார். பொது முகாமையாளருக்கு சபைக் கூட்டங்களில் சமூகமளிக்கவும் பங்குபற்றவும் உரிமையுள்ளது.

## மனித வளங்கள்

உயர் தரத்திலான சேவை ஊடாக நிலையாதாரப் பெறுமதியை உருவாக்க கடமை உணர்ச்சியுடன் செயற்படும் அர்ப்பணிப்பு மற்றும் உயர் ஊக்குவிப்புடன் கூடிய பணியாட்களை, விருத்தியாண்மை செய்வதிலும் பேணுவதிலும் வங்கி தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறது.

## செயற்பாட்டு சிறப்பு

வினைத்திறனை அதிகரிக்கவும், செயற்பாட்டுச் செலவைக் குறைக்கவும், வங்கி கொள்கைகளை இயக்கவும், தரத்தைச் செயற்படுத்தவும் மற்றும் தற்போது இருக்கக்கூடிய தொழில்நுட்பத் தளங்களை உச்ச அளவில் பயன்படுத்தவும், தொடாந்தும் முன்னெடுக்கும் முயற்சிகளைக் கொண்டுள்ளது.

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

## சுற்றாடல் பாதுகாப்பு

வங்கியின் நிலையாதார அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் முக்கியமான அங்கமாக அமைகின்ற சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுப்பதற்கு வங்கி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வங்கி, சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும் அல்லது பாதகமான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை.

## நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் அரசாங்கம் மற்றும் பணியாட்களுடன் தொடர்புடைய அனைத்துச் செலுத்த வேண்டிய நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டு விட்டது என திருப்தியுறுகின்றனர்.

## இடர் முகாமைத்துவம் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறை

பணிப்பாளர் சபை, இடர் முகாமைத்துவம் தொடாபான ஒட்டு மொத்த பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. இந்த நோக்கத்திற்காக, பணிப்பாளர் சபை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள் தொடர்பான வினைத்திறனான மற்றும் விரிவான முறையொன்றை உருவாக்கி அமுல்படுத்துகிறது. வங்கி எதிர்கொள்ளக்கூடிய இடர்களைத் தணிப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகள் மீள் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், இவை முக்கியமான பிறள்கூற்றுக்கள் அல்லது நட்டங்களுக்கு எதிராக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குகின்றன. வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்களை மதிப்பிடவும், கையாளவும், இனங்காணவும், தொடர்ந்து செல்லும் செயன்முறை ஒன்று உள்ளது. இடர்களைத் தணிக்க வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பான நடவடிக்கைகள் இவ் அறிக்கையின் 49 - 64 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று

நிதி அறிக்கையிடலின் உண்மைத் தன்மை பற்றி நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு ஏற்ற வகையில் நிதி அறிக்கையிடல் முறை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை சபை உறுதிப்படுத்துகிறது. வெளியக நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கியல் எண்ணக்கருக்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட இவ்வறிக்கை பணிப்பாளர்களின் வருடாந்த அறிக்கையின் முக்கிய பகுதியாக அமைவதோடு, அது, 106வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வருடாந்த அறிக்கையில் 104வது பக்கத்தில் தரப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான கணக்காய்வாளரிடம் இருந்து பெற்ற அறிக்கை மூலம் சபை உறுதிப்பாட்டைப் பெற்றுள்ளது.

## கூட்டறவு ஆளுகை

வங்கியை முகாமைத்துவம் செய்வதில் பணிப்பாளர்கள் சிறந்த கூட்டுறவு ஆளுகை நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் பின்பற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இதற்கமைய, இடர் முகாமைத்துவ வழிமுறைகளை மேம்படுத்தவும், பொறுப்புக் கூறுதல் மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை முன்னேற்றுவதற்கும், காலத்திற்குக் காலம் முறைமைகளும் கட்டமைப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன / முன்னேற்றப்பட்டுள்ளன. கூட்டுறவு ஆளுகை தொடர்பான பிரத்தியேகமான அறிக்கை 67 - 88 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் பற்றிய அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திடம் இருந்து சபை பெற்றுள்ளது.

## சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல்

வங்கி, அனைத்து சந்தர்ப்பங்களிலும், பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம், மற்றும் ஏனைய அனைத்து பொருத்தமான சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணங்கி நடந்தமையை உறுதிப்படுத்துகிறது.

## கணக்காய்வாளர்கள்

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் நிதிக் கூற்றுககள் பற்றிய கணக்காய்வு, கணக்காய்வாளர் நாயகத்தினால் நடத்தப்பட்டுள்ளது.

சபையின் உத்தரவுப்படி



சபையின் செயலாளர்

# சபை கணக்காய்வுக் குழு (BAC) அறிக்கை

வங்கியின் சபை கணக்காய்வுக் குழு (BAC) இலங்கையின் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான கூட்டுறவு ஆளுகை மீதான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கி சட்ட வழிகாட்டி ஏற்பாடுகளின்படி ஸ்தாபிக்கப்பட்டது. BAC உடைய நடவடிக்கைகள் குறிப்பிட்ட குழுவின் செயற்பாட்டிற்காக பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாசனத்திற்கு அமைவாக இருக்கும்.

கையளிப்பு அதிகாரம், எல்லை மற்றும் BAC உடைய பொறுப்புகள் போன்ற நோக்கங்களுக்காக சபை, சபை கணக்காய்வுக் குழுவின் சாசனத்தை காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்து, அதிகாரத்தை வழங்கும். உள்ளகக் கணக்காய்வு சாசனத்திற்கு அமைய, உள்ளகக் கணக்காய்வுப் பணிகளுடன் எல்லையையும் கடமைகளையும் BAC தீர்மானிக்கும்.

## குழுவின் உள்ளடக்கம்

குழு பின்வரும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்குவதுடன், அவர்கள் சபை அங்கீகரிக்கப்பட்ட BAC சாசனத்தற்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

1. திரு. ஏ.கே. செனவிரத்ன (குழுவின் தலைவர்)
2. திரு. கே.பீ. விஜேரத்ன
3. திரு. நீல் டி அல்விஸ் (2019 ஏப்ரல் 01 இல் ஓய்வு)
4. திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய (2019 மே 30 இல் நியமனம்)
5. திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (2019 செப்டம்பர் 06 இல் நியமனம்)

பொது முகாமையாளர் / CEO கணக்காய்வுத் துறைத் தலைவர், உதவிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) பிரதம நிதி அதிகாரி மற்றும் சிரேட்ட உதவிப் பொது முகாமையாளர் (இணக்கம்) மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இருந்து ஒரு பிரதிநிதி (வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்) ஆகியோர் BAC உடைய அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளிப்பர். BAC தன்னுடைய செயற்திறனை மேற்கொள்ளும் போது, பொருத்தமாக இருக்கூடிய முக்கிய விடயங்கள் மற்றும் வணிக விருத்தியாண்மைகள் பற்றிய தெளிவூட்டல்களை உயர்த்துவதற்காக அவை சம்பந்தமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டு சில கூட்டங்களில் சமூகமளிப்பதற்கு வணிகப் பிரிவுகளில் இருந்து பொருத்தமான அதிகாரிகளை வரவழைக்கும். சபை செயலாளர், BAC யின் செயலாளராக செயற்படுவார்.

## சபை சாசனம்

சபைனால் அங்கீகரிக்கப்பட்ட BAC உடைய சாசனம் குழுவின் குறிப்பு விதிகளை தெளிவாக வரையறை செய்கிறது. குழு சாசனம் 2019 ஏப்ரல் மாதத்தில் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

## சபை கணக்காய்வுக் குழுவின் கடமைகளும் வகிபங்கும்

BAC பின்வருவனவற்றுக்கு பொறுப்பாக இருக்கும்:

- வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்படுகின்ற வங்கியின் நிதிக் கூற்றுக்கள் வருடாந்த அறிக்கை கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் என்பவற்றின் நேர்மைத் திறனைக் கண்காணிப்பதற்காக வங்கியின் நிதித் தகவலை மீளாய்வு செய்தல்.
- வங்கியின் கணக்கியல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் தரம் மற்றும் ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடுதல்.
- கணக்கியல் மற்றும் நிதி அறிக்கையிடல் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இணக்கம் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
- நியதிச் சட்ட ஏற்பாடுகள், கணக்கியல் நியமங்கள் மற்றும் கணக்கியல் கொள்கைகள் என்பன ஒருசீராகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும், இணங்கி ஒழுகப்பட்டன என்பதையும் பிரசுரத்திற்கு முன் உறுதிப்படுத்த நிதிக் கூற்றுக்களை (காலாண்டுக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக) மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் மீறல்கள், மோசடிகள் மற்றும் பிழைகளைத் தவிர்ப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதில் கூட்டுறவு முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- கணக்காய்வுத் துறையின் தலைவருடைய நியமனத்தை மேற்பார்வை செய்தல் உள்ளடங்கலாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கண்காணிப்பு செயன்முறையின் சுயாதீனத் தன்மையையும், பணிகளையும் மதிப்பீடு செய்தல்.
- பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைய, வெளியக நோக்கங்களுக்காக தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களின் உண்மைத் தன்மை தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை நிதி அறிக்கையிடல் தொடர்பாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டினுடைய வினைத்திறனை மீளாய்வு செய்தல்.
- தேவை எனக் கருதப்படும் பட்சத்தில், விசேட பணிகள் மீது சுயாதீன ஆலோசகர்களை ஈடுபடுத்துதல்.

## கூட்டங்கள்

இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட நிறுவன கூட்டுறவு ஆளுகை தொடர்பான ஒழுங்கு விதிகள் / வழிகாட்டிகள் என்பவற்றுக்கு அமைவாக, குழுவின் கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் கூட்டப்படுகின்றன. 2019 டிசம்பரில் முடிவடைந்த நிதியாண்டின் போது 07 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.31 December 2019.

BAC கூட்டத்தின் நிறைவெண் மூன்று (03) உறுப்பினர்களாகும்.

# சபை கணக்காய்வுக் குழு (BAC) அறிக்கை

குழுக் கூட்ட உறுப்பினர்களின் சமூகமளிப்பு பின்வருமாறு:

| குழு உறுப்பினரின் பெயர் | சமூகம் |
|---|---|
| திரு. ஏ.கே. செனவிரத்ன | 07/07 |
| திரு. கே.பி. விஜேரத்ன | 07/07 |
| திரு. நெய்ல் டி அல்விஸ் | 01/01 |
| திருமதி வை.எம்.டி. வர்ணசூரிய | 05/05 |
| திரு. எஸ்.ஜே.சி. பெரேரா | 01/03 |

## உள்ளகக் கணக்காய்வும் மேற்பார்வையும்

கணக்காய்வுப் பணி, வங்கியின் சுயாதீனமான பணி என குழு உறுதிப்படுத்தியுள்ளது. குழு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் எல்லை மற்றும் வளங்கள் என்பவற்றின் போதுமான தன்மையையும், உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் சுயாதீனத் தன்மையையும் மீளாய்வு செய்துள்ளதோடு, குறிப்பிட்ட பிரிவு தனது பணிகளைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என திருப்தியடைகிறது.

இவ்வருடத்தின் போது, உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் அநேகமான கிளைகள், தகவல் தொழில்நுட்பப் பிரிவு, மனித வள பிரிவு, இணக்கப் பிரிவு, செயற்பாட்டு மற்றும் வங்கித் துணைச் சேவைப் பிரிவு, சட்டப் பிரிவு, இடர் முகாமைத்துவப் பிரிவு, நான்கு மாவட்ட அலுவலகங்கள் என்பன கணக்காய்வுக் குழுவின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் பேரில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டன. இதேவேளை, BAC வருடாந்த நிதிக் கூற்றுக்களும், இடைக்கால நிதிக் கூற்றுக்களும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகள் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதில் சபைக்கு உதவியளித்தது.

இலங்கை மத்திய வங்கியின் நியதிச் சட்ட சோதனை அறிக்கையினால் 2018 ஆம் வருடத்தின் போது எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 13(7)(a) இன் நியதிகளுக்கு அமைய, தேசிய கணக்காய்வு அலுலவகத்தின் அறிக்கையில் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் முகாமைத்துவக் கடிதம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் என்பவற்றை சீராக்க முகாமைத்துவம் மேற்கொண்ட நடவடிக்கைகளை BAC பின்தொடர்ந்தது.

மேலும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்தவும், மோசடிகள், பிழைகள் மற்றும் இழப்பை ஏற்படுத்தக்கூடிய ஏனைய சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துவதற்கான முறைமை களை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. சபை கணக்காய்வுக் குழு வங்கியின் நிலைத்தன்மை, இலாபத்தன்மை ஏனைய தொடர்புபட்ட அக்கறையுடைய விடயங்களை மதிப்பீடு செய்யும். அத்துடன், கணக்காய்வுப் பணியாட்களின் அறிவையும், திறன்களையும் மேம்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய சபை கணக்காய்வுக் குழு, வங்கி போதுமான மற்றும் பொருத்தமான கட்டுப்பாடுகளைப் பேணுகிறது என்பதையும், நிதி அறிக்கையிடல் மற்றும் இடர் முகாமைத்துவதிற்கான இணக்கம் தொடர்பான நடபடி முறைகளையும், முறைகளையும் பின்பற்றி நடக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகிறது.

## வெளியக கணக்காய்வு

வங்கியின் வெளியகக் கணக்காய்வுப் பணி தொடர்பாக குழுவின் வகிபங்கு பின்வருமாறு:

நாட்டின் அரசியலமைப்பு நியதிகளுக்கு அமைய வங்கியின் வெளியகக் கணக்காய்வு, கணக்காய்வாளர் நாயகத்தினால் நடத்தப்படுகிறது. குழு வெளியகக் கணக்காய்வு வினைத் திறனாகவும், சுயாதீனமாகவும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்தப் படுவதுடன், கணக்காய்வு அணுகுமுறை மற்றும் நடபடி முறை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதித் துவத்துடனான ஒரு தொடர்சசியான அறிக்கையை பேணி வருகிறது.

## இலங்கை கணக்கியல் நியமங்கள்

வங்கிக்கு பிரயோகிக்கப்படக்கூடிய புதிய மற்றும் திருத்தப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்களை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பான கொள்கைத் தீர்மானங்களை மீளாய்வு செய்து புதுப்பித்துள்ளது. இவை தொடர்பாக சபைக்கு சிபாரிசுகளை மேற்கொண்டது. குழு தொடர்ந்து இணக்கம் சம்பந்தமான பொருத்தமான கணக்கியல் நியமங்களை கண்காணிப்பதோடு, கிரமமான இடைவெளிகளில் சபைக்கு அறிவிக்கும்.

## 2019 இல் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் குழு பின்வரும் முக்கிய விடயங்களில் ஈடுபட்டது.

1. 2019 ஆம் ஆண்டுக்கான வங்கியின் துறைகள் தொடர்பான இடர் தோற்றப்பாடுகள் மீது இருந்து தயார் செய்யப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை அங்கீகரித்தது.
2. முகாமைத்துவக் கடிதத்தையும், 2018 ஆம் ஆண்டுக்கான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவுகள் 13(7) இன் கீழ் கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிக்கை மற்றும் அவற்றுக்கு முகாமைத்துவம் வழங்கிய பதில்கள் என்பவற்றை மீளாய்வு செய்து கலந்துரையாடியது.
3. இலங்கை மத்திய வங்கி நியதிச்சட்ட சோதனைகளில் எழுப்பப்பட்ட விடயங்களை மீளாய்வு செய்து, ஆராய்ந்துள்ளதோடு, சீராக்கம் தொடர்பான முன்னேற்றத்தைக் கண்காணித்துள்ளது.
4. 2019 ஆம் ஆண்டுக்கான வங்கியின் காலாண்டு நிதிச் செயற்பாட்டை மீளாய்வு செய்துள்ளதோடு, அதே அறிக்கையை சபைக்குச் சமர்ப்பிக்க பரிந்துரை செய்தது.
5. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளையும், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்திறனையும் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்தது.



ஏ.கே.செனவிரத்ன
தலைவர்
சபை கணக்காய்வுக் குழு

# சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு, (BHRRC) சபை தெரிவுக் குழு (BNC) அறிக்கை

## அறிமுகம்

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டி 03(6) இல் குறித்துரைக்கப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியினுடைய வழிகாட்டுதல்கள் மற்றும் கூட்டுறவு ஆளுகை தொடர்பான நடைமுறைகள் என்பவற்றுக்கு அமைய, பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிட சபை உப குழுக்குகளை ஸ்தாபிக்குமாறு பிரதேச அபிவிருத்தி வங்கி தேவைப்படுத்தப்படுகிறது. மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு மற்றும் சபைத் தெரிவுக் குழு எனப் பெயரிடப்பட்ட இரண்டு பிரத்தியேகக் குழுக்கள் சபை பணிப்பாளர்களின் உள்ளடக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, வரையறை செய்யப்பட்ட எல்லைகளுக்குள் இவ்விரண்டு குழுக்களுக்கும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2017 மார்ச் 27 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் BHRRC மற்றும் BMC என்பன இரண்டு பிரத்தியேகக் குழுக்களாக செயற்பட்டு வருகின்றன.

## BHRRCயின் எல்லை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது

- வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் (KMP) ஊதியக் கொள்கைகளைத் தீர்மானித்தல்.
- பணிப்பாளர்கள் மற்றும் CEO உடைய மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுடைய செயற்திறன் பற்றிய குறிக்கோள்கள், இலக்குகள் என்பவற்றைத் தீர்மானித்தலும், மதிப்பீடு செய்தலும். அத்துடன், குறித்துரைக்கப்பட்ட இலக்குகள், எல்லைகள் என்பவற்றுக்கு எதிராக CEO மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் செயற்திறனை காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.
- வங்கியின் வணிக மற்றும் செயற்பாட்டு மூலோபாயங்களுடன் தொடர்டைய மனிதவள நுட்பங்களையும், கொள்கைகளையும் உருவாக்குவதற்கு வழிகாட்டியை வழங்குதலும் அறிவுரை வழங்குதலும்.

## சபை தெரிவுக்குழுவின் எல்லை பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

- CEO மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் நியமனத்திற்கும், பதவி உயர்வுக்கும் தேவைப்படுகின்ற முக்கியமான பண்புகளை, தகுதிகளை மற்றும் அனுபவங்களை வரையறை செய்தல்.
- சபை உப குழுக்கள் CEO மற்றும் KMP ஆகிய இடங்களுக்கு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய அல்லது நியமிக்க நடபடி முறையை அமுல்படுத்துதல் அல்லது அவர்களின் மீள் நியமனத்தை மீளக் கவனத்திற் கொள்ளுதல் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த இலக்குகளை நோக்கி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்திறன் மற்றும் பங்களிப்பு மீது CEO மற்றும் KMPஉடைய பதவிக் காலத்தை நீடித்தல்.
- வழிகாட்டி 3(3) இலும் நியதிச் சட்டத்திலும் குறித்துரைக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் பணிப்பாளர்கள் பதவி வகிக்க தகுதியுடைய முறையான ஆட்கள் என்பதை உறுதிப்படுத்தல்.
- காலத்திற்குக் காலம் மேலதிக / புதிய நிபுணத்துவ ஆட்களைக் கருத்திற் கொள்ளலும், தேவையான போது சிபாரிசு செய்தலும் அத்துடன், ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தொடர்பாக பின்னுறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல். இவ்விரண்டு குழுக்களும் சபையின் அங்கீகாரத்திற்காக தமது பரிந்துரைகளை மேற்கொள்ளும்.

## உள்ளடக்கமும் கூட்டங்களும்

இரண்டு குழுக்களும் வங்கியின் தலைவரால் தலைமை வகிக்கப்படுகின்றன.

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதியில் பத்து (10) சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுக் கூட்டங்களும் நான்கு (04) சபைத் தெரிவுக் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன.

மனித வள திணைக்களம் மற்றும் நிருவாகத் துறைக்குப் பொறுப்பான தலைவர், பொது முகாமையாளர் ஊடாக பின்னணி மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல் மற்றும் பகுப்பாய்வு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் குழு உறுப்பினர்கள் முறையான தீர்மானம் ஒன்றை எடுக்க அனுப்பி வைத்தல் வேண்டும்.

சபையின் செயலாளர் இக்குறிப்பிட்ட குழுக்களுக்கு செயலாளராக கடமையாற்றுவார்.

பிரிவுத் தலைவர்கள் தேவை ஏற்படுகின்ற போது தமக்குரிய பணிகள் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க அழைக்கப்படுவர்.

BHRRC யின் அனைத்துக் கூட்டங்களுக்கும் பொது முகாமையாளர் / பிநிஅ சமூகமளிக்க வேண்டும். சபை தெரிவுக் குழுவுக்கு GM/ CEO ஆகியோர் அழைப்பின் பேரில் சமூகமளிக்க வேண்டும்.

இந்த ஒவ்வொரு குழுவின் கூட்டத்திற்கும் உரிய நிறைவெண் இரண்டு சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் ஆவர். இந்தக் குழு குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில் சந்திக்க வேண்டும். இவ்வாண்டின் போது மாற்றப்பட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய சமூகமளித்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு உறுப்பினர்கள்

| பெயர் | சமூகமளிக்கத் தகுதி / சமூகம் |
|---|---|
| திரு. ஜே.ரீ.எஸ்.பீ.காரியவசம் (தலைவர்) | 10/10 |
| திரு. கே.பீ. விஜேரத்ன - பணிப்பாளர் | |
| (2019 ஜூலை 12 இல் நியமனம்) | 03/03 |
| திரு. எம்.ஜே.பீ. சல்காடோ - பணிப்பாளர் | |
| (2019 மே 30 இல் நியமனம்) | 04/04 |
| திரு. நீல் டி அல்விஸ் - பணிப்பாளர் | |
| (2019 ஏப்ரல் 01 இல் ஓய்வு) | 06/06 |
| திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய- பணிப்பாளர் | |
| (2019 மே 30 இல் நியமனம்) | 04/04 |
| திரு. கே. அமரசிங்க - நிறைவேற்றுப் பணிப்பாளர் | |
| (2019 ஏப்ரல் 01 இல் ஓய்வு) | 06/06 |
| திரு. ரீ. குஹன் - பொது முகாமையாளர்/பிநிஅ | |
| திரு. கே.எம்.ஜே.எஸ்.கருணாதிலக - மனித வள அபிவிருத்தி மற்றும் நிருவாகத் தலைவர் | |
| திருமதி ஆர்.எம்.ரீ.ராஜபக்ஷ - சபையின் செயலாளர் | |

# சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு, (BHRRC) சபை தெரிவுக் குழு (BNC) அறிக்கை

## சபைத் தெரிவுக்குழு உறுப்பினர்கள்

| பெயர் | சமூகமளிக்கத் தகுதி / சமூகம் |
|---|---|
| திரு. ஜே.ரீ.எஸ்.பீ.காரியவசம் (தலைவர்) | 04/04 |
| திரு. கே.பீ. விஜேரத்ன - பணிப்பாளர் | |
| (2019 ஜூலை 12 இல் நியமனம்) | 02/02 |
| திரு. எம்.ஜே.பீ. சல்காடோ - பணிப்பாளர் | |
| (2019 மே 30 இல் நியமனம்) | 03/03 |
| திரு. நீல் டி அல்விஸ் - பணிப்பாளர் | |
| (2019 ஏப்ரல் 01 இல் ஓய்வு) | 01/01 |
| திருமதி வை.எம்.டீ. வர்ணசூரிய - பணிப்பாளர் | |
| (2019 மே 30 இல் நியமனம்) | 02/03 |
| திருமதி ஆர்.எம்.ரீ.ராஜபக்ஷ - சபையின் செயலாளர் | |

## நடவடிக்கைகளின் சாராம்சங்கள்

2019 மே மாதத்தில் BNC உடைய உறுப்பினரான நிருவாகப் பணிப்பாளர் திரு. கே.அமரசிங்க மற்றும் BNC மற்றும் BHRRC ஆகியவற்றின் உறுப்பினரான பணிப்பாளர் திரு. நீல் டி அல்விஸ் ஆகியோரின் ராஜினாமாவைத் தொடர்ந்து, இரண்டு குழுக்களையும் மீள் கட்டமைக்கும் தேவையை சபை கருத்திற் கொண்டது. இதற்கமைய, BNC மற்றும் BHRRC ஆகிய குழுக்களுக்கு திரு. கே.பி.விஜேரத்ன - பணிப்பாளர், திரு. எம்.ஜே.பி.சல்காது - பணிப்பாளர் மற்றும் திருமதி வை.எம்.டி. வர்ணசூரிய - பணிப்பாளர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இக்குழுக்களின் செயலாளர் BHRRC மற்றும் BNC யின் கூட்டக் குறிப்புகளைப் பரிந்துரைகளுடன் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பார். மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் சபை BHRRC மற்றும் BNC ஆகியவற்றின் பரிந்துரைகளை அங்கீகரித்தது.

டொக்டர் நிர்மால் டி சில்வா
தலைவர்
சபை மனிதவளங்கள் மற்றும் ஊதியக் குழு
சபைத் தெரிவுக் குழு

# சபை தகவல் தொழில்நுட்ப செயற்குழு (BITSC) அறிக்கை

## எல்லை

BITSC தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பவற்றில் எந்தளவிற்கு நம்பியிருக்கலாம் என்பதை உறுதிப்படுத்தவும், வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப ஆளுகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வங்கிக்கு உதவவும் உருவாக்கப்பட்டது.

குழு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவின் ஒட்டுமொத்த நுட்பங்களைக் குறித்துரைக்கவும், வாடிக்கையாளர்களின் சேவைகளையும் உள்ளக வினைத் திறனையும் மேம்படுத்த வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை அமுல்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளை மேற்கொள்ளவும் பொறுப்பாக உள்ளது.

## BITSC குழுவின் உள்ளடக்கம்


RDB யின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட BITSC பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்குகிறது.

## குழு உறுப்பினர்கள்

- திரு. கே.பீ. ராஜபக்ஷ - குழுவின் தலைவர் / பணிப்பாளர் 2019.07.01 இல் காலம் பூர்த்தி
- திரு. ஜே. ஆர். பெர்னாண்டஸ் (குழுவின் தலைவர் / பணிப்பாளர் 2019.08.07 இல் நியமனம்)
- திரு. எம்.ஜே.பீ. சல்காடோ - அங்கத்தவர் / பணிப்பாளர்
- திரு. எம்.ஏ.பி. சில்வா - அங்கத்தவர் / பணிப்பாளர் (2019.10.02 இல் நியமனம்)
- திரு. நீல் டி அல்விஸ் - அங்கத்தவர் / பணிப்பாளர் (2019 ஏப்ரல் 01 இல் ஓய்வு)
- திரு. எஸ்.ஜே.சி. பெரேரா - அங்கத்தவர் / பணிப்பாளர் (2019.08.07 இல் நியமனம்)

பொது முகாமையாளர் / பிநிஅ, பிரதிப் பொது முகாமையாளர் IT / பிரதம தகவல் அதிகாரி, பிரதம இடர் அதிகாரி ஆகியோர் கூட்டுறவு முகாமைத்தவத்தின் உறுப்பினர்களாக இருப்பதுடன் இவர்கள் BITSC உடைய கூட்டங்களுக்கு அழைப்பின் பேரில் சமூகமளிப்பர். அழைப்பின் பேரில் வங்கியின் எந்த அதிகாரியும் இக்கூட்டத்தில் சமூகமளிக்கலாம்.

இக்கூட்டத்தின் நிறைவெண் இரண்டு உறுப்பினர்களாகும். BITSC 2019 இல் மூன்று கூட்டங்களை நடத்தி ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளது.



டொக்டர் நிர்மால் டி சில்வா
தலைவர்
சபை தகவல் தொழில்நுட்ப செயற்குழு (BITSC)

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை

## குழு உள்ளடக்கம்

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC), கீழே தரப்பட்ட நிர்வாகம் சாராத ஏழு (07) பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. அவர்களது விபரங்கள் 14 - 17வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பெயரின் கீழும் குறிப்பிட்ட பணிப்பாளர், நிருவாகம் சார்ந்தவரா அல்லது நிர்வாகம் சாராதவரா எள்பது பற்றிக் குறிப்பிடபட்டுள்ளது.

1. திரு. கே.பீ. ராஜபக்ஷ - (குழுவின் தலைவர் / நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர், 01.07.2019 இல் அமுலுக்கு வரும் வகையில் காலம் பூர்த்தி)
2. திரு. கே.பீ. விஜேரத்ன (குழுவின் தலைவர் / நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர், 2019.08.07 இல் அமுலுக்கு வரும் வகையில்)
3. திரு. எம்.ஜே.பீ. சல்காடோ - (அங்கத்தவர் / நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)
4. திரு. நீல் டி அல்விஸ் (அங்கத்தவர் / நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்) (2019.04.01 இல் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா)
5. திரு. கே. அமரசிங்க (அங்கத்தவர் / நிறைவேற்றுப் பணிப்பாளர்) (2019.04.01 இல் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா)
6. திரு. எஸ்.ஜே.சி. பெரேரா (அங்கத்தவர் / நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்) (2019.09.06 இல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம்)
7. திரு. எம்.ஏ.பி. சில்வா (அங்கத்தவர் / நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்) (2019.10.02 இல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம்)

## கிரமமாக வருகை தருகைகள்

பிரதம நிருவாக அதிகாரி (CEO), பிரதம இடர் அதிகாரி (CRO) மற்றும் இணக்க அதிகாரி ஆகியோர் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டங்களுக்குக் கிரமமாக வருகை தந்துள்ளனர்.

## குழுவின் செயலாளர்

சபை செயலாளர் குழுவின் செயலாளராகச் செயற்படுவார்.

IRMC காலாண்டு அடிப்படையில் சந்திக்கும். எனினும், தேவை ஏற்படும் போது அதற்கு ஏற்றவாறு கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படும். RDB இவ்வாண்டின் போது நான்கு கூட்டங்களை நடத்தியுள்ளது. இந்தக் குழுக் கூட்டத்திற்கு உரிய நிறைவெண் இரண்டு நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் ஆவர். IRMC சாசனத்தின் படி பிரதம நிறைவேற்று அதிகாரி CRO ஆகியோர் பங்குபற்றினர்.

சாசனத்தின்படி, குழு காலாண்டு அடிப்படையில் சந்திக்கும். எனினும், தேவை ஏற்படும் போது மேலதிகக் கூட்டங்கள் நடைபெற்றன. 2019 ஆம் ஆண்டின் போது நான்கு தடவைகள் மாத்திரம் குழு சந்தித்துள்ளது.

குழு உறுப்பினர்களின் சமூகமளிப்புகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

## கூட்டங்கள்

| குழு உறுப்பினர்களின் பெயர் | சமூகமளிப்பதற்கான தகுதி / சமூகமளித்த |
|---|---|
| திரு. கே.பீ. ராஜபக்ஷ | 03/03 |
| திரு. கே.பீ. விஜேரத்ன | 04/04 |
| திரு. எம்.ஜே.பீ. சல்காடோ | 04/04 |
| திரு. நீல் டி அல்விஸ் | 01/01 |
| திரு. கே. அமரசிங்க | 01/01 |
| திரு. எஸ்.ஜே.சி. பெரேரா | 01/01 |
| திரு. எம்.ஏ.பி. சில்வா | 00/00 |

## குழுவின் குறிப்பு விதிகள்

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நியதிகளின்படி, நாணய சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் மத்திய வங்கியின் நாணய சபையினால் "இலங்கையிலுள்ள உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான கூட்டுறவு ஆளுகை" மீதான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டிக்கு அமைய IRMC பணிப்பாளர் சபையினால் ஸ்தாபிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்ட குறிப்பு விதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

1. வங்கி ஒரு விரிவான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு, பொருத்தமான இணக்கம் மற்றும் முறைமையைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தல்.
2. கடன் திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் மூலோபாய நன்மதிப்புக்கான இடர்கள், பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய, ஆனால், அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படாத அனைத்து இடர் வகைகளையும் அணுகுதல்.
3. இடர் தீர்மானங்கள் ஸ்தாபிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக எடுக்கப்பட்டன என்பதையும், குழுவினால் குறித்துரைக்கப்பட்ட இடர் இணக்கப்பாடுகளுக்கு அப்பால் இடர்களைத் தவிர்ப்பதற்கான சீராக்க நடவடிக்கைகள் என்பன வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளுக்கு அமைய எடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தல்.

4. வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமை மற்றும் இடர் முகாமைத்துவப் பணியின் உறுதியுடைமை என்பவற்றின் வினைத்திறனை கண்காணித்தலும் அணுகுதலும்.
5. உள்ளக ரீதியாக வரையறை செய்யப்பட்ட இடர் ஆர்வத்திற்கு எதிராக செயற்திறனை காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.
6. வங்கியின் இணக்க அறிக்கைகளையும், அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்தல்.
7. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துக் கட்டமைப்புடன் தொடர்புடைய விடயங்களை மீளாய்வு செய்தல்.
8. பாசல் III வரைபடத்தின் அமுல்படுத்துகை மற்றும் ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## 2019 காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்


2019 காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

1. கீழே தரப்பட்டுள்ள கொள்கைகள் மீளாய்வு செய்யபட்டு பரிந்துரை செய்யப்பட்டன.

   கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை
   செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை
   திரவ இடர் முகாமைத்துவக் கொள்கை
   வட்டி விகித இடர் முகாமைத்துவக் கொள்கை
   அழுத்த சோதனைக் கொள்கை
   ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு
   சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கை
   கடன் மீளாய்வுக் கொள்கை
2. வங்கியின் கடன் போட்போலியோவின் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்கு அப்பால் சென்று துறைசார் வரையறைகளைக் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல். அத்துடன், அவற்றைச் சீர்படுத்தலுக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.
3. ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் எந்தளவுக்கு இணங்கி நடக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பிட இணக்க அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான இணக்க அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.
4. வங்கியின் ஒட்டுமொத்த இடர் குறிகாட்டிகளை கண்காணித்தல்.
5. இடையூறு அற்ற தகவல் பாதுகாப்புப் பணிக்காக தகவல் பாதுகாப்பையும், ஏற்றுக்கொள்ளப்பட்ட பயன்பாட்டுக் கொள்கை மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர் தொடர்பான விடயங்களையும் பரிந்துரைத்தலும் மீளாய்வு செய்தலும்.
6. இடர் முகாமைத்துவ திணைக்களத்தின் செயற்திட்டத்தை அங்கீகரித்தல் மற்றும் கைக்கொள்ளுதல்.
7. அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக் கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்தல். (செயற்பாட்டு இடர் முகாமைத்துவ உப-குழு, முகாமைத்துவக் குழு, சொத்துக்கள் பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு, செயற்பாடுகள் வளாகக் குழு).

## அறிக்கையிடல்

IRMC உடைய கூட்ட நடவடிக்கைகள், கூட்டக் குறிப்புகளை சபைக்கு சமர்ப்பிப்பதன் ஊடாக அறிக்கையிடப்படுகிறது. வங்கியின் இடர் தோற்றப்பாடு மீதான அறிக்கை மற்றும் ஏனைய குறிப்பான விடயங்கள் தொடர்பான அறிக்கை IRMC யின் பரிந்துரையின் மீது சபையின் அங்கீகாரத்திற்காக பிரத்தியேகமாக சமர்ப்பிக்கப்படும். இவ்வாண்டின் போது IRMC யினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.



தலைவர்
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

# பிரதம நிர்வாக அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புக் கூற்று

2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதிக் கூற்றுக்கள் பின்வரும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:

1. இலங்கை பட்டயக் கணக்கியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்கள் (SLFRS/LKAS)
2. 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்.
3. கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல் படுத்தப்பட்ட விதிகள்
4. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதற்கான திருத்தங்களும்
5. கூட்டுறவு ஆளுகை தொடர்பான இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டி உள்ளடங்கலாக, எனினும், அதற்கு மாத்திரம் மட்டுப்படாத மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டிகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள்.
6. 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம்

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்புக்களுடன் இணங்கி நிதிக் கூற்றுக்களும் வெளிப்படுத்தல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வங்கியின் கணக்கியல் கொள்கைகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிலையத்தினால் வழங்கப்பட்ட கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக உள்ளது. இந்நியமங்கள், 2012 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. கணக்கியல் கொள்கைகள் ஒருசீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு வருடத்தின் சமர்ப்பணத்தோடு இணங்கிச் செல்லக்கூடிய வகையில் தேவையான இடங்களில் ஒப்பீட்டுத் தகவல்கள் மீள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அனைத்து முக்கியமான விடயங்கள், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. எமது அறிவுக்கு எட்டிய வகையில், இங்கு சமர்ப்பிக்கப்பட்ட வங்கியின் இவ்வருட நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமை, வருமானக் கூற்று, நிதிப் பாய்ச்சல்களின் ஒரு உண்மையான, நியாயமான பார்வையைத் தருகிறது. மேலும், வங்கி தனது செயற்பாடுகளை எதிர்வு கூறக்கூடிய, எதிர்காலத்தில் கொண்டு நடத்தத் தேவையான வளங்களைக் கொண்டுள்ளது என நாம் நம்புகிறோம். இதற்கமைய, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நாம் நிறுவனத் தொடர்ச்சிக் கோட்பாட்டைப் பயன்படுத்தியுள்ளோம்.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையும், முகாமைத்துவமும், நிதிக் கூற்றுக்களின் நேர்மைத் தன்மைக்கும், புறநிலைத் தன்மைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றன. நிதிக் கூற்றுக்கள், உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கின்றன. பரிவர்த்தனைகளின் வடிவம் மற்றும் சாராம்சம் மற்றும் வங்கியின் விவகாரங்கள் என்பன நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்பட்டன என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மதிப்பீடுகளும், தீர்ப்புகளும் நியாயமான மற்றும் விவேகமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

இதனை உறுதிப்படுத்த, சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடிகளைத் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் ஏனைய ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிப்பதற்கும் முக்கிய வங்கி முறைமையைப் பயன்படுத்தி, வங்கி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை அமுல்படுத்துவதில் முறையான மற்றும் போதுமான கவனத்தை மேற்கொண்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

வங்கியின் ஸ்தாபிக்கப்பட்ட கொள்கைகளும், செயல் முறைகளும் சீராகப் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்க உள்ளகக் கணக்காய்வாளர் காலாந்தர கணக்காய்வுகளை மேற்கொண்டு வருகிறார். எனினும், எந்தவெரு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கியல் முறைமைகளினால் வழங்கப்படுகின்ற உறுதிப்பாட்டை அளவிடுவதில் உள்ளார்ந்த மட்டுப்பாடுகள் உள்ளன என்பதை அங்கீகரித்தல் வேண்டும்.


வங்கியின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டது. கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிக்கை 108 - 112 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

SLFRS/LKAS உட்பட இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏனைய ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டன என்பதற்கும், அனைத்துப் பரிவர்த்தனைகளும் சரியாகவும், முழுமையாகவும் கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டன என்பதற்கும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் உட்பட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் போதுமான தன்மையையும், வினைத் திறனையும் சபை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்கிறது. முழுமையான சுயாதீனத்தை உறுதிப்படுத்த சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 95வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வெளியக கணக்காய்வாளர்களும், உள்ளகக் கணக்காய்வாளர்களும் ஏதேனும் விடயம் தொடர்பாக ஆராய, கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கு பிரவேசிக்க முழுமையான மற்றும் தடையற்ற அணுகல் உள்ளது.

எமது அறிவுக்கு உட்பட்ட வகையில் பின்வருவனவற்றை நாம் உறுதிப்படுத்துகிறோம்.

வங்கி பொருத்தமான அனைத்துச் சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டிகளுடன் இணங்கி நடந்துள்ளது.
முக்கியமான முரண்பாடுகள் எதுவும் இல்லை.
வருடாந்த அறிக்கையின் நிதிக் கூற்றுப் பிரிவில் 38.2 குறிப்பில் குறிப்பிடப்பட்டது தவிர, வங்கிக்கு எதிராக வேறு ஏதேனும் முக்கிய வழக்குகள் கிடையாது.

அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ளவாறு, வங்கியினால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அனைத்து நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் மற்றும் வங்கியின் பணியாட்கள் தொடர்பாக அல்லது அவர்கள் சார்பில் செலுத்த வேண்டிய அனைத்துப் பங்களிப்புகள், தீர்வைகள், வட்டிகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன.



ரி.குஹன்
பொது முகாமையாளர்/பிநிஅ



பி.எஸ்.எதிரிசூரிய
பிரதம நிதி அதிகாரி

2020 மே 29

# நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

இந்தக் கூற்று வங்கியின் நிதி அறிக்கையிடல் கட்டமைப்புடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்புகளை எடுத்துக் கூறுகிறது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் 108வது பக்கத்தில் உள்ள கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

## நிதிக் கூற்றுகள்

வங்கியின் பணிப்பாளர்கள், வங்கியின் அனைத்துப் பரிவர்த்தனைகள் தொடர்பான முறையான கணக்குப் புத்தகங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பும், ஒவ்வொரு வருட இறுதியிலும் வங்கியின் விடயங்கள் தொடர்பாக உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுகள் பொருத்தமான நியதிச் சட்ட / ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் இலங்கை கணக்கியல் நியமங்கள் (SLFRS/LKAS) என்பவற்றுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு உண்டு. நிதிக் கூற்றுக்கள், வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, ஒப்புரவில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு, ஒருசீராகப் பிரயோகிக்கப்பட்டு, வருடாந்த அறிக்கையில் போதுமான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் செயன்முறையில் பரிவர்த்தனையின் வடிவம் மற்றும் சாராம்சம் என்பவற்றின் முறையான பிரதிபலிப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு தேவையான இடங்களில் நியாயமான மற்றும் விவேகமான தீர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றின் திருத்தங்கள், இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட / ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி நடவடிக்கைகளின் உண்மையானதும், நியாயமானதுமான பார்வையைப் பிரதிபலிக்கிறது.

## நிறுவனத் தொடர்ச்சி

பணிப்பாளர்கள், வங்கி, எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிக நடவடிக்கையை நடத்தத் தேவையான போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர். இதற்கமைய, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவன தொடர்ச்சிக் கோட்பாடு பின்பற்றப்பட்டது.

## உள்ளகக் கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கம்

பணிப்பாளர்கள் உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான முறைமைகளுக்குப் பொறுப்பாக இருப்பர். வங்கியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு மற்றும் மோசடி மற்றும் பிறழ் முகாமைத்துவம் என்பவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரு வலுவான, கட்டுப்பாட்டுடன் கூடிய சூழலைப் பேணுவதற்கு குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்துகின்றனர். உள்ளக இடர்களை முழுமையாக நீக்க முடியாது என்பதைக் கூறுகின்ற அதேவேளை, வங்கி, பல்வேறு முறைகள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் மூலம் அந்த இடர்களைத் தணிப்பதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வங்கியின் நிதி அறிக்கைகள் முறைமை அதன் உண்மைத் தன்மையை நியாயமான வகையில் உறுதிப்படுத்தக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையைத் தருகின்ற பணிப்பாளர்களின் அறிக்கை ஒன்று இவ்வருடாந்த அறிக்கையின் 106வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களும், முகாமைத்துவமும், இடர் முகாமைத்துவக் கொள்கைகளையும், வழிகாட்டிகளையும் அமுல்படுத்துகின்றன. முக்கியமான இடர்களைக் கண்காணிப்பதற்கும் கையாள்வதற்கும் சபை உப-குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மேலும், இடர்கள் பற்றிய அறிக்கைகளைக் கலந்துரையாடலுக்காக காலாந்தர அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொருத்தமான சட்டங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள், வழிகாட்டிகள் என்பவற்றுடன் இணங்கி நடப்பதை இணக்கப் பிரிவு கண்காணிக்கிறது. மேலும், இதுபற்றி ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கும், பணிப்பாளர் சபைக்கும் காலாந்தர அடிப்படையில் அறிக்கையிடப்படுகிறது.

கணக்காய்வும், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துக் குழுவும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் வினைத்திறனை வலுப்படுத்துவதற்கு ஒரு விசேட வகிபங்கினை வகிக்கின்றது. கணக்காய்வுக் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள் வருடாந்த அறிக்கையில் முறையே 95 மற்றும் 100வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் உட்பட அனைத்து வங்கிப் பதிவுகளும், பணிப்பாளர் சபையினால் கணக்காய்வாளர் நாயகத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதோடு, கணக்காய்வாளர் நாயகம் பொருத்தமானது எனக் கருதுகின்ற அனைத்து மேற்பார்வைகளையும் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

## இணக்கம்

பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் வங்கியினால் செலுத்த வேண்டிய அனைத்து வரிகளும் அரசாங்கத்திற்கு நிலுவையாக உள்ள ஏனைய அனைத்து நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் மற்றும் ஏனைய பொருத்தமான ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச்சட்ட அதிகார சபைகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையான கொடுப்பனவுகளும் முடிவடைந்த நிதியாண்டில் செலுத்தப்பட்டு விட்டன என்பதில் திருப்தியுறுகின்றனர்.

இக்கூற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, பணிப்பாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

சபையின் உத்தரவுக்கு அமைய,



சபையின் செயலாளர்

2020 மே 28

# உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை




தலைவர்,
பிரதேச அபிவிருத்தி வங்கி.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்கள் கூற்றின் பணிப்பாளர் சபைக்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிமொழி.

அறிமுகம்
2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி அறிக்கையிடல் ("கூற்று") தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்கள் கூற்றின் மீது உறுதி மொழி வழங்குவதற்கான அறிக்கை.

முகாமைத்துவத்தின் பொறுப்பு
இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் வங்கிச் சட்டத்தின் பிரிவு 3(8)(ii)(b) யின் வழிகாட்டி இல. 12/2007 உடன் இணங்கி நடந்தமை மீதான "உள்ளகக் கட்டுப்பாடு" மீதான கூற்று தொடர்பாக "பணிப்பாளர்கள் மீது வங்கி பணிப்பாளர்களுக்குரிய வழிகாட்டி" க்கு அமைவாக, இக்கூற்றினைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உள்ளது.

எனது பொறுப்பும் SLSAE 3050 (திருத்தப்பட்ட) உடன் இணங்கி நடத்தலும்
ஆவணங்களைத் தயார்படுத்தல் மூலமாகவும் அல்லது பணிப்பாளர்களினால் ஆதரவளிக்கப்பட்ட இந்தக் கூற்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கைக்கொண்ட செயன்முறையை முறையாகப் பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பிடுவது எனது பொறுப்பாகும்.

உறுதிமொழி ஈடுபாடுகள் (SLSAE) 3050 (திருத்தப்பட்ட) தொடர்பான இலங்கை தரத்திற்கு அமைவாக நான் இந்த மதிப்பீட்டை நடத்தியுள்ளேன். உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று மீதான வங்கிகளுக்கான உறுதிமொழி அறிக்கை இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

இந்த நியமங்களின்படி, உள்ளகக் கட்டுப்பாடு மீதான கூற்றினை அனைத்து முக்கியமான விடயங்களையும் கருத்திற் கொண்டு முகாமைத்துவம் தயாரித்துள்ளதா என்பது பற்றி வரையறுக்கப்பட்ட உறுதிமொழியை பெற்றுக்கொள்ள நான் திட்டமிட்டு நடபடி முறைகளை நிறைவேற்றினேன்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

இந்த நடவடிக்கையின் நோக்கத்திற்காக எந்தவொரு அறிக்கையையும் புதுப்பிக்கவோ அல்லது மீள வழங்கவோ நான் பொறுப்புடையவன் அல்ல. அத்தோடு, இந்தச் செயற்பாட்டின் போது, நிதித் தகவல் தொடர்பான ஒரு கணக்காய்வையோ அல்லது மீளாய்வையோ நான் நடத்தவில்லை.

நான் நிறைவேற்றிய பணியின் சாராம்சம்
ஆவணங்களைத் தயார்படுத்தல் மூலமாகவும் அல்லது பணிப்பாளர்களினால் ஆதரவளிக்கப்பட்ட இந்தக் கூற்று வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கைக்கொண்ட செயன்முறையை முறையாகப் பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பிடுவது எனது பொறுப்பாகும்.

என்னால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள், வங்கி ஆட்களின் விசாரணைகளுக்கு முதன்மையாக மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன், மாதிரி அடிப்படையில் உள்ள ஆவணப்படுத்துகை பணிப்பாளர் சபையினால் கைக்கொண்ட செயன்முறைக்கு ஆதரவளித்தது.


SLSAE 3050 (திருத்தப்பட்ட) குறிப்பிட்ட கூற்று அனைத்து இடர்களையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றதா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் வினைத்திறன் பற்றிய கருத்தொன்றாக அமைகிறதா என்பதைக் கருத்திற் கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை.

மேலும், SLSAE 3050 (திருத்தப்பட்ட) வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் முக்கியமான பிரச்சினைகளில் முக்கியமான உள்ளகக் கட்டுப்பாட்டு அணுகுமுறைகளுடன் தொடர்பு கொள்வதை இச்செயன்முறைகள் விவரிக்கின்றனவா. மேலும், உண்மையில் அத்தகைய பிரச்சினைகளுக்கு நிவாரணம் ஒன்றை வழங்க வேண்டுமா போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை.

தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் எனது தீர்ப்பைப் பொறுத்ததாகும். இக்கூற்றைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்வு அல்லது பரிவர்த்தனை என்பவற்றின் அடிப்படையிலேயே வங்கியின் தன்மை பற்றி எனது புரிந்துணர்வு அமைந்திருந்தது.

எனது முடிவை வழங்குவதற்கு, எனக்குக் கிடைக்கப்பெற்ற சான்றுகள் போதுமானதாகவும், பொருத்தமானதாகவும் இருந்தது என நான் நம்புகிறேன்.

முடிவு
நிறைவேற்றிய நடைமுறைகளுக்கு அமைய, வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்று, வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்கு பணிப்பாளர் சபை கையாண்ட செயன்முறைகளோ முரண்படுகிறது எனக் கூறுவதற்கு எந்த விடயமும் எனது கவனத்திற்கு வரவில்லை என நான் நம்புகிறேன்.



டப்ளியூ.பீ.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று

## தேவைப்பாடு

இந்த அறிக்கை 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டியின் 3 (8) (ii) (b) பிரிவுக்கு அமைவாக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

## பொறுப்பு

பணிப்பாளர் சபை, பிரதேச அபிவிருத்தி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும், வங்கியின் வினைத்திறனுக்கும், போதுமான தன்மைக்கும் பொறுப்புடையதாகும். எனினும், வங்கியின் கொள்கைகள் மற்றும் வியாபாரக் குறிக்கோள்களை அடைவதற்கு இடர் தோல்வியை அப்புறப்படுத்துவதைத் தவிர்த்து, அத்தகைய ஒரு முறைமை வங்கியின் முக்கிய இடர் துறைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர் தோற்றப்பாட்டிற்குள் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, உள்ளகக் கட்டுப்பாட்டு முறை, முக்கியமான முகாமைத்துவப் பிறழ் கூற்று மற்றும் நிதித் தகவல் மற்றும் நிதி நட்டங்கள் அல்லது மோசடிக்கு எதிரான பதிவுகள் என்பவற்றுக்கு எதிராக நியாயமான உறுதிப்பாட்டை மாத்திரமே தர முடியும். ஆனால், முழுமையான உறுதிப்பாட்டை வழங்க முடியாது.

## சபை மீளாய்வுச் செயன்முறை

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறை, சபையினால் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதோடு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று சம்பந்தமான வழிகாட்டிகளோடு இணங்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபை, குறிப்பிட்ட வழிகாட்டியில் தரப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டிற்காக கணக்கியல் கொள்கைகளைக் கருத்திற் கொண்டு, சபை, உள்ளகக் கட்டுப்பாட்டை மதிப்பீடு செய்துள்ளது. வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பான உண்மைத் தன்மை ஆகியன தொடர்பில் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு வங்கி உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என வங்கி கருதுகிறது.

இடர் தொடர்பான சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துவதில் முகாமைத்துவம் உதவுவதோடு, மேலும், சபை எதிர்கொள்ளும் இடர்களை இனங்காணுவதிலும், மதிப்பீடு செய்வதிலும், வடிவமைப்பதிலும் செயற்பாடு போன்ற நடவடிக்கைகளில் முகாமைத்துவம் அனுசரணை வழங்குவதோடு, இத்தகைய இடர்களைக் கட்டுப்படுத்துவதற்கும், தணிப்பதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கண்காணிப்பதிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவி அளிக்கிறது.

## செயன்முறையின் முக்கிய அம்சங்கள்

நிதி அறிக்கையிடல் தொடர்பாக உள்ள, உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் போதுமான தன்மை மற்றும் நேர்மைத் திறனை மீளாய்வு செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்ட முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- வங்கியின் நாளாந்த செயற்பாடுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு, சபைக்கு உதவியளிக்கும் பொருட்டு, கணக்காய்வு, கடன், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் என்பவற்றுக்கு சபை உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன், வங்கியின் செயற்பாடுகள், கூட்டாண்மை இலக்குகள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் கொள்கைகள், வணிக வழிகாட்டிகள் என்பவற்றுக்கு அமைவாக உள்ளது.
- வங்கியின் அனைத்துப் பரிவர்த்தனைகளிலும், நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் தொடர்பான ஒரு செயற்பாட்டுக் கையேட்டை சபை அங்கீகரித்துள்ளது. இந்தக் கையேட்டில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகள் அனைத்துப் பணியாட்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் இணக்கத்தைப் பரீட்சிக்கும். அத்துடன், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் வினைத்திறன் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மாதிரிகளையும், சுழற்சி முறையிலான நடைமுறைகளையும் பயன்படுத்துவதுடன், ஏதேனும், முரணான செயற்பாடு தொடர்பான முக்கியமான கண்டறிதல்கள் சுட்டிக் காட்டப்படும். கணக்காய்வுகள், அனைத்துப் பிரிவுகளிலும், கிளைகளிலும் நடத்தப்படும். இது, எத்தனை தடவைகள் நடைபெற வேண்டும் என்பது, மதிப்பிடப்பட்ட இடரின் அளவு, சுயாதீனமான மற்றும் புறநிலைத் தன்மையுடைய அறிக்கையை வழங்குவதில் தங்கியிருக்கும்.
- வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம், கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும். உள்ளகக் கணக்காய்வின் கண்டறிதல்கள் காலாந்தரக் கூட்டங்களின் போது மீளாய்வுக்காக கணக்காய்வுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும்.
- வங்கியின் கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, ஒழுங்குபடுத்தல்கள் அதிகார சபைகள் மற்றும் முகாமைத்துவத்தினால் இனங்காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளை மீளாய்வு செய்வதோடு, இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான தன்மையையும் வினைத்திறனையும் மதிப்பீடு செய்யும். மேலும், இக்குழு கணக்காய்வுகளின் எல்லை, உள்ளகக் கணக்காய்வின் தரம் என்பவற்றுக்கு விசேட கவனம் வழங்கி, உள்ளகக் கணக்காய்வுப் பணிகளையும் மீளாய்வு செய்யும். கணக்காய்வுக் குழுக் கூட்டக் குறிப்புகள் காலாந்தர அடிப்படையில் வங்கியின் பணிப்பாளர் சபையில் முன்வைக்கப்படும்.
- வங்கி, SLFRS-9 புதிய இலங்கை கணக்கியல் நியமங்கள், 2018 ஆம் ஆண்டின் நிதிக்கருவிகள் மற்றும் SLFRS-16, 2019 ஆம் ஆண்டின் குத்தகைகள் என்பவற்றை ஏற்றுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட கணக்கியல் நியமங்களை ஏற்றுக்கொள்வதற்கு ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட செயன்முறைகளும், நடைமுறைகளும் வெளியகக் கணக்காய்வாளர்கள் ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் சபைக் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் பின்னூட்டல்களின் அடிப்படையில் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வங்கி, கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான வலுக்குறைப்பு நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றின் மீதான செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதற்கு தொடர்ந்து செயற்படும்.

## உறுதிப்படுத்தல்கள்

மேலே தரப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறை நிதி அறிக்கையிடல் தொடர்பான நம்பகத்தன்மையை நியாயமான வகையில் உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும், வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும் சபை உறுதிப்படுத்துகிறது.

## வெளியக கணக்காய்வாளர்களினால் மீளாய்வு செய்யப்பட்ட கூற்று

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மேலே தரப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்களின் கூற்றினை வெளியகக் கணக்காய்வாளர்கள் மீளாய்வு செய்தனர். அத்துடன், அவர்கள் இக்குறிப்பிட்ட கூற்று அவர்களுடைய புரிந்துணர்வுக்கு எட்டிய வகையில், சபையினால் கைக்கொள்ளப்பட்ட வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை தொடர்பான வடிவமைப்பு மற்றும் வினைத்திறனுக்கு முரணாக அமைந்திருந்தது என தாங்கள் நம்புவதற்கு உரிய ஏதேனும் காரணங்கள் தமது கவனத்திற்கு கொண்டவரப்பட்டதா என்பதை சபைக்கு அறிவித்தல் ஆகும்.

தலைவர் - கணக்காய்வுக் குழு

பணிப்பாளர்

பணிப்பாளர்

2020 மே 28

# நிதி அறிக்கைகள்


108 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
113 வருமானக் கூற்று
114 விரிவான வருமானக் கூற்று
115 நிதிநிலைமைக் கூற்று
116 காசுப் பாய்ச்சல்கள் கூற்று
117 பங்குரிமை மாற்றம் பற்றிய கூற்று
118 நிதிக் கூற்றுக்களுக்கான குறப்புகள்

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை




தலைவர்
பிரதேச அபிவிருத்தி வங்கி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 க்கு அமைவாக, 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கருத்து

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் ("வங்கி") நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு, 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குரிமை மாற்றம் பற்றிய கூற்று, அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கியல் கொள்கைகளின் சாராம்சம் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகிறது. இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின், அரசியலமைப்பு உறுப்புரை 154(1) ஐ 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளோடு சேர்த்து வாசிக்கின்ற போது தருகின்ற விளைவுப் பயன்களின் அடிப்படையில், எனது வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) க்கு அமைய பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை, உரிய நேரத்தில் கலந்துரையாடலுக்காக முன்வைக்கப்படும். இக்கணக்காய்வுப் பணியை மேற்கொள்வதற்கு பொதுப் பயிற்சியில் உள்ள ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனம் எனக்கு உதவியது.

எனது கருத்தின்படி, இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, வங்கியின் நிதி நிலைமை பற்றியும், வங்கியின் நிதிச் செயற்திறன் மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் நிதிப் பாய்ச்சல்கள் பற்றியும், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகிறது.

### 1.2 எனது கருத்துக்களுக்கான அடிப்படை

நான், எனது கணக்காய்வை இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLAuSs) அமைாக நிறைவேற்றியுள்ளேன். இந்த நியமங்களின் கீழ் எனக்கு இருக்கக்கூடிய பொறுப்புக்கள் பற்றி எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பகுதியில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைக்கப் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள், எனது கருத்தை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான அடிப்படையைத் தருகிறது என நான் கருதுகிறேன்.

### முக்கிய கணக்காய்வு வியடங்கள்

முக்கியமான கணக்காய்வு விடயங்கள் என்பது, எனது தொழில்முறைத் தீர்ப்பில் நடப்பு காலப்பகுதிக்கு உரிய நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதில் முக்கியமாக அமைந்த விடயங்களாகும். இந்த விடயங்கள், கணக்காய்வு பற்றிய எனது நிதிக் கூற்றில் முழுமையாகக் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் எனது கருத்து அமைகிறது. அத்துடன், இவ்விடயங்கள் தொடர்பில், பிரத்தியேகமான கருத்து ஒன்றை நான் வழங்க மாட்டேன். கீழே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும், அவ்விடயம், எனது கணக்காய்வில் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்பட்டது என்பது பற்றிய விபரம், அக் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டுள்ளன.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### முக்கிய கணக்காய்வு விடயங்கள்

கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறவேண்டிய வரவுகளுக்கான வலுக்குறைப்புக் கொடுப்பனவு.

கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறவேண்டிய வரவுகளுக்கான வலுக்குறைப்புக் கொடுப்பனவு, முக்கிய கணக்காய்வு விடயமாகக் கருதப்பட்டது. கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறவேண்டிய வரவுகளுக்கான வலுக் குறைப்புக் கொடுப்பனவு தொடர்பாக அறிக்கையிடப்பட்ட தொகைகளின் முக்கிய தன்மை, சிக்கலான, முக்கியமான கணக்கீடுகள், முகாமைத்துவத்தின் வலுக் குறைப்பு மதிப்பீட்டுடன் தொடர்புபட்ட உள்ளுணர்வு மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பான நியமம் 9 இன் பிரயோகம் : இதனை ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாகக் கருத்திற் கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த நிதிக் கருவிகள் (SLFRS 9) என்பன தலையிட்டுள்ளன.

2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, வங்கியின் மொத்த சொத்துக்களில், கடன்களும், வாடிக்கையாளர்களிடம் இருந்து பெற வேண்டிய வரவுகளும் 68 சதவீதமான ரூபா 136,206 மில்லியனாக அமைந்தது. (குறிப்பு 20) இது, ரூபா 7,667 மில்லியன் வலுக்குறைப்புக் கொடுப்பனவின் தேறிய தொகையாகும்.

முகாமைத்துவத்தினால் அத்தகைய கணக்கீடுகளுக்கும், வலுக்குறைப்புக் கொடுப் பனவுக்கான அடிப்படைகளாகவும் பயன்படுத்திய முக்கியமான மதிப்புகளும், அனுமானங்களும் குறிப்பு 3.1.1.7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முக்கியமான கணக்காய்வு விடயத்தை எனது கணக்காய்வு எவ்வாறு கையாண்டது

வலுக்குறைப்புக் கட்டணங்களின் நியாயத் தன்மையை மதிப்பீடு செய்ய, எனது கணக்காய்வு நடைமுறைகள் (ஏனையவற்றுக்குள்) பின்வனவற்றை உள்ளடக்கியது.

* சபைக் கணக்காய்வுக் குழு மற்றும் முகாமைத்துவத்தினால் வலுக் குறைப்பு தொடர்பில் இருக்கக்கூடிய மேற்பார்வை மட்டத்தை மதிப்பிடல், முக்கியமான தீர்புகளின் மீளாய்வு மற்றும் அங்கீகாரம் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் என்பவற்றை உள்ளடக்கிய கடன்கள் மற்றும் முற்பணங்களின் மதிப்பீடு மீதான கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் வடிவமைப்பை நான் மதிப்பிட்டுள்ளேன்.

* அடிப்படையாக அமைந்த கணக்கீடுகளும் தரவுகளும் சரிபார்ப்பதற்கு சோதனை செய்யப்பட்டது.

* மேலே தரப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, பின்வரும் முக்கியமான நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டன.

கடன்கள் மற்றும் முற்பணங்களின் மாதிரி ஒன்றுக்காக, வலுக்குறைப்புக்காக தனித்தனியாக மதிப்பிடப்பட்டது.

* ஒரு வலுக்குறைப்பு சம்பவம் நடைபெற்றது என்பதைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட பிரதான அளவுகோலை நான் மதிப்பீடு செய்துள்ளேன்.

* வலுக்குறைப்புக் குறியீடுகள் உள்ள சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சல்கள், கழிவு விகிதங்கள் மற்றும் வைத்திருக்கப்படும் பிணையங்களின் பெறுமதிகள் உள்ளடங்கலாக, முகாமைத்துவத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால மீள் பெறுவனவுகளை நான் மதிப்பீடு செய்துள்ளேன். மேலும், ஒரு மாதிரி அடிப்படையில் எதிர்கால மீள் பெறுவனவுக்காக ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளுக்கு எதிராக உண்மையான மீள் பெறுவனவுகளை நான் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

கடன்கள் மற்றும் முற்பணங்களுக்காக வலுக்குறைப்புகள் கூட்டாக மதிப்பீடு செய்யப்பட்டன.

* நான் அடிப்படையான தகவல்கள் மற்றும் கணக்கீடுகளை, பொருத்தமான மூல ஆவணங்கள், தகவல் தொழில்நுட்ப முறைகளின் தகவல்கள் மற்றும் கணக்கீடுகளை மீள் நிறைவேற்றுதல் என்பன தொடர்பாக வழங்கப்பட்ட விபரங்களின் மீது தங்கியிருந்து அவற்றின் முழுமைத் தன்மையையும் சரியான தன்மையையும் பரீட்சித்தேன்.

* பல்வேறுபட்ட வகையான கடன் கலவைகளைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட பெரும்பாக பொருளாதார மற்றும் ஏனைய காரணிகளின் நியாயத் தன்மையை பகிரங்கமாக இருக்கக்கூடிய தரவுகள் மற்றும் தகவல் மூலங்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

* குறிப்புகள் 3.1.7, 40.20 மற்றும் 46 என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு தொடர்புபட்ட நிதிக் கூற்றுக்களின் வெளிப்பாடுகளின் போதுமான தன்மையை நான் மதிப்பீடு செய்தேன்.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை




### வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதன் மீதான என்னுடைய கணக்காய்வு அறிக்கைக்கு மேலதிகமாக, வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ள தகவல்கள், ஏனைய தகவல்களை உள்ளடக்கும். வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும். இந்தக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட திகதியின் பின்னர் வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை எனது பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கருத்து, ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன், அதன் மீது எந்தவிதமான உறுதிப்பாட்டு முடிவையும் நான் வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்புபடும் போது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் பார்வைக்கு இருக்கின்ற போது, அதனை நான் வாசிப்பேன். மற்றும், அவ்வாறு வாசிக்கப்படுகையில், அத்தகைய ஏனைய தகவல் நிதிக் கூற்றுக்களுடன் பொருளளவில் முரண்படுகிறதா அல்லது கணக்காய்வின் போது என்னால் பெறப்பட்ட அறிவுடன் முரண்படுகிறதா என்பதையும் அல்லது வேறு வகையில் அத்தகவல் பொருளளவில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும் நான் கருத்திற் கொள்வேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்குப் பொறுப்பானவர்களின் பொறுப்புகள்

இலங்கை கணக்கியல் நியமங்களின் பிரகாரம், உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும். அத்துடன், முகாமைத்துவம் என்ற ரீதியில், அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகை காரணமாக, முக்கியமான பிறழ் கூற்றில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவது முகாமைத்துவத்தின் கடப்பாடாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகாமைத்துவம் நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாட்டை மதிப்பிடுவதற்குப் பொறுப்பாக உள்ளது. அதனை வெளிப்படுத்துவதுடன், பொருந்தக்கூடிய வகையில் முகாமைத்துவம் வங்கியைக் கலைப்பதற்கோ அல்லது செயற்பாடுகளை முடிவுறுத்தவோ அல்லது அவ்வாறு மேற்கொள்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று வழி ஒன்று இல்லாத வரையில், முகாமைத்துவம் கணக்குகளை மேற்கொள்வதில் நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாட்டைப் பயன்படுத்த வேண்டும்.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள் வங்கி நிதி அறிக்கையிடல் செயன்முறையில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16(1) இன் பிரகாரம், வங்கியினால் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக, அதன் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறையான கணக்குப் புத்தகங்களையும் பதிவுகளையும் பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்கள், முழுமையான அடிப்படையில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்பட்ட முக்கியமான பிறழ் கூற்றில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாடு ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதலும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கை ஒன்றை வழங்குதலுமே என்னுடைய குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடு என்பது, உயர்மட்ட உறுதிப்பாடாக அமைந்த போதிலும், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நடத்தப்பட்ட கணக்காய்வு, எப்போதும் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான பிறழ்கூற்றைக் கண்டுபிடிக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்க முடியாது. பிறழ்கூற்றுகள், மோசடி மற்றும் தவறுகளில் இருந்து எழலாம். அத்துடன், இப்பிறழ் கூற்றுக்கள் தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் தங்கியிருந்து எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பயன்பாட்டாளர்களின் பொருளாதாரத் தீர்மானங்களில் நியாயமான செல்வாக்கைச் செலுத்துமெனக் கருதப்படின், அது முக்கியமான பிறழ் கூற்றாகக் கருதப்படும்.

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுகின்ற கணக்காய்வின் ஒரு பகுதி என்ற அடிப்படையில் கணக்காய்வுச் செயன்முறை முழுவதும் நான் தொழில்முறை ரீதியான தீர்ப்பினைப் பிரயோகித்துள்ளதோடு, தொழில்முறை ரீதியாக சந்தேகங்களையும் பேணியுள்ளேன். நான் மேலும்,

- நான் மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட முக்கியமான பிறழ் கூற்றுக்களின் இடர்களை இனங்கண்டு, மதிப்பீடு செய்ததோடு, அத்தகைய இடர்களுக்குப் பதிலளிக்கக்கூடிய நடைமுறைகளை வடிவமைத்துச் செயன்முறைப்படுத்தினேன். மேலும், எனது கருத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குரிய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொண்டேன். தவறில் இருந்து எழுகின்ற பிறழ்கூற்றினை விட மோசடியில் இருந்து எழுகின்ற முக்கியமான பிறழ் கூற்றை கண்டுபிடிப்பது மேலதிக சுமையை ஏற்படுத்துகிறது. ஏனெனில், மோசடி, கூட்டுச் சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், மன எண்ணத்துடனான செய்யாமைகள், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுகின்ற செயல்களாக அமையலாம்.

- குறிப்பிட்ட சூழ்நிலைகளில், பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய ஒரு விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல், ஆயின், இவ்விளக்கம் வங்கியினுடைய உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் பற்றிய கருத்து ஒன்றை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தலும், முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களையும் மதிப்பீடு செய்துள்ளேன்.

- கணக்கியலுக்கு அடிப்படையாக முகாமைத்துவம் பயன்படுத்திய நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாட்டின் பொருத்தமான தன்மை பற்றி முடிவு கூறுதல். அத்துடன், பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்ச்சிக் கொள்கை அடிப்படையில் வங்கி தொடர்ந்து செயற்பாடுகளை தொடர்ந்தும் நடத்தும் தகைமை மீது முக்கியமான சந்தேகங்களை எழுப்பக்கூடிய சம்பவங்கள் அல்லது நிலைமைகள் தொடர்பில் ஒரு முக்கியமான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது பற்றித் தீர்மானித்தல். ஒரு முக்கியமான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என நான் தீர்மானித்தால், நிதிக் கூற்றுக்களில் உள்ள தொடர்புபடுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மீது என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துமாறு அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாத போது, எனது கருத்தினை திருத்த வேண்டுமென நான் வேண்டப்படுகிறேன். எனது தீர்மானங்கள், எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் வங்கி தொடர்ந்து செயற்பட இயலாமல் செயற்பாடுகளை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்தலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் முழுமையான சமர்ப்பணம், கட்டமைப்பு, உள்ளடக்கம் என்பவற்றையும் நிதிக் கூற்றுக்களுக்கு அடிப்படையாக அமைந்த பரிவர்த்தனைகளும், நிகழ்வுகளும் நியாயமான சமர்ப்பணத்தை அடையக்கூடிய வகையில் இருக்கின்றதா என்பதை மதிப்பிடுதல்.

ஏனைய விடயங்களுடன் ஆளுகைக்கு பொறுப்பாக இருக்கின்ற ஆட்களுக்கு என்னுடைய கணக்காய்வின் போது, உள்ளகக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்களை அனுப்பி வைக்கின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பான ஏற்பாடுகளை உள்ளடக்குகிறது.

- கணக்காய்வுக்குத் தேவைப்படுகின்ற அனைத்துத் தகவல்களையும், விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன். என்னுடைய அறிவுக்கு எட்டிய வரை, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) க்கு அமைய வங்கியினால் முறையான கணக்குப் பதிவுகள் பேணப்பட்டுள்ளன என்பது எனது பரீட்சையில் இருந்து தெரிய வருகிறது.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d)(iii) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்தில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் இவ்வருட நிதிக் கூற்றுக்கள் சீராக உள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d)(4) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் உள்ளடக்குகின்றது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், முக்கியமான விடயங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பில் எனது கவனத்திற்கு எவ்விடயமும் வரவில்லை.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(d) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய வங்கியின் சாதாரண வியாபார நடவடிக்கைகளுக்கு அப்பால், வங்கியினால் ஈடுபடுபட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும், நிறுவனத்தின் ஆளுகை அமைப்பில் உள்ள எந்தவொரு நபருக்கும், ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான அக்கறை உண்டு எனக் கூறுவதற்கு,

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(f) யின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, வங்கி ஏதேனும் பொருத்தமான எழுதப்பட்ட சட்டம் மற்றும் வங்கியை ஆளுகின்ற அமைப்பினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் சிறப்பான வழிகாட்டிகளைப் பின்பற்றவில்லை என்பதற்கு,

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(g) யின் தேவைப்பாடுகளுக்கு அமையவாக, வங்கி அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை எனக் கூறுவதற்கு,

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(h) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய, பொருத்தமான சட்டங்களுக்கு அமைவாகவும், குறிப்பிட்ட கால எல்லைகளுக்குள் வங்கியின் வளங்கள் கொள்முதல் செய்யப்படவில்லை மற்றும் பொருளாதார ரீதியாக, வினைத்திறனாக பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறுவதற்கு.

டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| மொத்த வருமானம் | 5 | **27,507,821,054** | 26,070,610,605 |
| வட்டி வருமானம் | | **26,357,071,298** | 24,865,108,981 |
| வட்டி செலவு | | **(13,903,881,276)** | (12,959,526,709) |
| நிகர வட்டி வருமானம் | 6 | **12,453,190,022** | 11,905,582,272 |
| கட்டண மற்றும் தரகு வருமானம் | | **1,134,421,657** | 1,186,795,173 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவு | | **(278,304,299)** | (259,105,166) |
| நிகர கட்டண மற்றும் தரகு வருமானம் | 7 | **856,117,358** | 927,690,007 |
| நிகர வியாபார இலாபம்/(நட்டம்) | 8 | **4,757,039** | 1,215,762 |
| ஏனைய தொழிற்படு வருமானம் (நிகர) | 9 | **11,571,062** | 17,490,689 |
| மொத்த தொழிற்படு வருமானம் | | **13,325,635,480** | 12,851,978,730 |
| வலுக்குறைப்புக் கட்டணங்கள் | 10 | **(2,408,748,853)** | (1,409,784,095) |
| நிகர தொழிற்படு வருமானம் | | **10,916,886,627** | 11,442,194,635 |
| கழி - தொழிற்படு செலவுகள் | | | |
| ஆளணிச் செலவுகள் | 11 | **(5,931,625,972)** | (5,877,946,793) |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்புச் செலவுகள் | | **(617,322,679)** | (319,020,738) |
| ஏனைய செலவுகள் | 12 | **(1,407,680,268)** | (1,638,896,765) |
| பொதுத் திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட தீர்வை | | **-** | - |
| பெறுமதி சேர் வரிக்கு முந்திய (VAT) தொழிற்படு இலாபம் | | **2,960,257,709** | 3,606,330,339 |
| நிதிச் சேவைகள் மற்றும் DRL மீதான வரிகள் | 13 | **(1,738,097,299)** | (1,503,248,448) |
| வரிக்கு முந்திய இலாபம் | | **1,222,160,409** | 2,103,081,891 |
| வரிச் செலவுகள் | 14 | **(723,565,878)** | (1,029,495,530) |
| வருடத்திற்கான இலாபம் | | **498,594,531** | 1,073,586,361 |
| ஒரு பங்கிற்குரிய சம்பாத்தியம் | | | |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் : அடிப்படை | 15 | **0.91** | 2.76 |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 118 தொடக்கம் 194 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இவை தொடர்புடைய குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கை 108வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| இவ்வருடத்திற்கான இலாபம் | | **498,594,531** | 1,073,586,361 |
| ஏனைய விரிவான வருமானம்/(செலவுகள்) | | | |
| இலாபம் அல்லது நட்டம் என மறுவகுப்பாக்கம் செய்யப்பட முடியாத ஏனைய விரிவான வருமானம் | | | |
| ஓய்வு பெறும் அனுகூலக் கடப்பாட்டின் மீதான காப்பீட்டு நட்டம் | 33.3 | **(111,761,620)** | (111,149,773) |
| மேலே கூறப்பட்டவற்றுக்கு ஏற்படும் ஒத்தி வைக்கப்பட்ட வரி விளைவு | 26.2 | **31,293,253** | 31,121,936 |
| இவ்வருடத்திற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம், வரிகளின் தேறிய தொகை | | **(80,468,366)** | (80,027,837) |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | **418,126,165** | 993,558,524 |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 118 தொடக்கம் 194 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இவை தொடர்புடைய குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கை 108வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

# நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 17 | **2,750,187,219** | 689,184,136 |
| வங்கிகளிலுள்ள வைப்புகள் | 18 | **9,798,242,492** | 6,496,628,053 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள் | 19 | **123,000** | 115,600 |
| பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய ஏனைய கடன்களும் வரவுகளும் | 20 | **136,205,641,441** | 133,432,804,004 |
| பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள் | 21 | **45,664,745,400** | 27,920,326,465 |
| விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள் | 22 | **2,289,919** | 4,176,342,999 |
| ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் | 24 | **1,228,419,894** | 1,275,785,603 |
| அருவச் சொத்துக்கள் | 25 | **45,356,343** | 60,787,719 |
| சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை | 25.1 | **855,183,154** | - |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 26 | **696,316,484** | 467,332,859 |
| ஏனைய சொத்துக்கள் | 27 | **2,732,423,840** | 2,418,011,987 |
| மொத்த சொத்துக்கள் | | **199,978,929,186** | 176,937,319,425 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 28 | **22,050,009,005** | 11,098,334,822 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு நிலுவையாக உள்ளவை | 29 | **149,599,829,047** | 141,559,973,557 |
| வழங்கப்பட்ட கடன் பத்திரங்களும் ஏனைய பெறப்பட்ட நிதிகளும் | 30 | **4,707,852,534** | 4,707,852,534 |
| நடப்பு வரிப் பொறுப்புகள் | 31 | **448,881,448** | 473,833,076 |
| ஏனைய பொறுப்புக்கள் | 32 | **5,970,920,446** | 2,460,286,430 |
| ஓய்வுப் பெறுகை நலன் கடப்பாடு | 33 | **2,236,115,128** | 1,926,924,377 |
| மொத்தப் பொறுப்புகள் | | **185,013,607,608** | 162,227,204,796 |
| **பங்குரிமை** | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 34 | **8,047,229,930** | 8,047,229,930 |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதி | 35 | **742,261,195** | 717,331,468 |
| தக்கவைப்புச் சம்பாத்தியங்கள் | 36 | **2,421,534,400** | 2,315,905,812 |
| ஏனைய ஒதுக்குகள் | 37 | **3,754,296,053** | 3,629,647,420 |
| மொத்தப் பங்குதாரர்களின் பங்குரிமை | | **14,965,321,578** | 14,710,114,630 |
| மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள் | | **199,978,929,186** | 176,937,319,425 |
| இடைநிலைப் பொறுப்புகளும் கடமைகளும் | 38 | **230,705,990** | 212,759,167 |

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 118 தொடக்கம் 194 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இவை தொடர்புடைய குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கை 108வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை நான் சான்றுபடுத்துகிறேன்.

பீ.எஸ். எதிரிசூரிய
பிரதம நிதி அதிகாரி

ரீ. குஹன்
பொது முகாமையாளர்/பிநிஅ

பணிப்பாளர் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டு, பணிப்பாளர் சபை சார்பாக பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்ட இந்த நிதிக் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

தலைவர்/பணிப்பாளர்

பணிப்பாளர்

2020 மே 29
கொழும்பு

# நிதிப் பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | **2,960,257,709** | 3,606,330,339 |
| பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் : | | | |
| வரிக்கு முந்திய இலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காசு சாராத விடயங்கள் | 41 | **4,061,421,032** | 2,009,117,605 |
| தொழிற்படு சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் | 42 | **(7,274,252,820)** | (7,759,296,804) |
| தொழிற்படு பொறுப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் | 43 | **19,218,607,096** | 2,335,364,021 |
| வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கு செலுத்தப்பட்ட பங்களிப்பு | 33.1 | **(146,286,891)** | (125,672,259) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகள் | | **(1,659,200,694)** | (1,025,230,834) |
| செலுத்தப்பட்ட வரி | 31 | **(915,600,248)** | (958,313,173) |
| **தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து /(பயன்படுத்தப்பட்ட) ஈட்டப்பட்ட நிகர காசு** | | **16,244,945,185** | (1,917,701,106) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்** | | | |
| ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு | 24 | **(217,854,701)** | (363,021,456) |
| அருவச் சொத்துக்களின் நிகர கொள்வனவு | 25 | **(13,815,989)** | (50,630,424) |
| நிலையான வைப்புக்களில் முதலீடு (3 மாதங்களுக்கு மேற்பட்ட) | | **2,287,604,755** | (1,493,138,238) |
| ஆதனம் மற்றும் இயந்திர, உபகரணங்கள் விற்பனையில் இருந்து பெறப்பட்ட வருவாய் | | **4,203,104** | 12,009,452 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து (பயன்படுத்தப்பட்ட)/பெற்ற நிகர காசு** | | **2,060,137,169** | (1,894,780,666) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்** | | | |
| சாதாரண பங்கு மூலதன வழங்குகை மூலம் பெற்ற நிகர வருவாய்கள் | | **-** | - |
| தொழிற்படு குத்தகை வட்டி செலவு | | **(81,828,219)** | - |
| முதன்மை தொழிற்பாட்டு குத்தகைக்கான கொடுப்பனவு | | **(276,245,501)** | - |
| தவணைக் கடன்களில் இருந்து பெறப்பட்ட நிகர வருவாய்கள் | | **7,534,500,000** | - |
| தொகுதிக்கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி | 30.1 | **(535,784,685)** | (535,784,685) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட நிகர காசு** | | **6,640,641,595** | (535,784,685) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு/ (குறைவு)** | | **24,945,723,949** | (4,348,266,457) |
| வருட ஆரம்பத்தின் போது இருந்த காசு அல்லது காசுக்கு சமமானவை | | **9,639,016,719** | 13,987,283,176 |
| **வருட இறுதியின் போது இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவை** | | **34,584,740,669** | 9,639,016,719 |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் இணக்கம்** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 17 | **2,750,187,219** | 689,184,136 |
| வங்கிகளில் உள்ள சாதகமான மீதிகள் | | | |
| வங்கிகளில் உள்ள வைப்புக்கள் | 18 | **9,798,274,942** | 6,496,692,932 |
| 3 மாதங்களுக்கு குறைந்த நிலையான வைப்புக்கள் | 21.2 | **22,571,266,384** | 2,520,602,739 |
| வங்கிகளுடனான பாதகமான மீதிகள் | | **(534,987,877)** | (67,463,088) |
| | | **34,584,740,669** | 9,639,016,719 |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 118 தொடக்கம் 194 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இவை தொடர்புடைய குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கை 108வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

# பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பிடப்பட்ட மூலதனம் | நியதிச் சட்ட ஒதுக்க நிதி | விசேட ஒதுக்க நிதி | பொது ஒதுக்க நிதி | தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | குறிப்பு 34 | குறிப்பு 35 | குறிப்பு 37 | குறிப்பு 37 | குறிப்பு 36 | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு | 3,870,936,931 | 663,652,150 | 518,042,478 | 2,843,208,353 | 1,716,908,747 | 9,612,748,660 |
| SLFRS 9 ஐ ஏற்றுக்கொண்டதன் தாக்கம் | - | - | - | - | (72,485,552) | (72,485,552) |
| 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு SLFRS 9 இன் கீழ் மீள் குறிப்பிடப்பட்ட மீதி | 3,870,936,931 | 663,652,150 | 518,042,478 | 2,843,208,353 | 1,644,423,195 | 9,540,263,108 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 1,073,586,361 | 1,073,586,361 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - | (80,027,837) | (80,027,837) |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | - | - | 993,558,524 | 993,558,524 |
| பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட | | | | | | |
| வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட மூலதனம் | 4,176,292,999 | - | - | - | - | 4,176,292,999 |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியத்தற்கு மாற்றம் | - | 53,679,318 | - | - | (53,679,318) | - |
| விசேட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம் | - | - | 53,679,318 | - | (53,679,318) | - |
| பொது ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம் | - | - | - | 214,717,272 | (214,717,272) | - |
| பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட | 4,176,292,999 | 53,679,318 | 53,679,318 | 214,717,272 | (322,075,908) | 4,176,292,999 |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 8,047,229,930 | 717,331,468 | 571,721,796 | 3,057,925,624 | 2,315,905,812 | 14,710,114,630 |
| 2019 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 8,047,229,930 | 717,331,468 | 571,721,796 | 3,057,925,624 | 2,315,905,812 | 14,710,114,630 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 498,594,531 | 498,594,531 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - | (80,468,366) | (80,468,366) |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | - | - | 418,126,165 | 418,126,165 |
| பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட | | | | | | |
| வழங்கப்பட்ட கூறப்பட்ட மூலதனம் | - | - | - | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - | (193,546,847) | (193,546,847) |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியத்தற்கு மாற்றம் | - | 24,929,727 | - | - | (24,929,727) | - |
| விசேட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம் | - | - | 24,929,727 | - | (24,929,727) | - |
| பொது ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம் | - | - | - | 99,718,906 | (99,718,906) | - |
| ஒன்றிணைப்பிலிருந்து பெறப்பட்ட மிகை (குறிப்பு 23) | - | - | - | - | 30,627,630 | 30,627,630 |
| பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட | - | 24,929,727 | 24,929,727 | 99,718,906 | (312,497,577) | (162,919,217) |
| 2019 டிசம்பர் 31 இல் மீதி | 8,047,229,930 | 742,261,195 | 596,651,523 | 3,157,644,530 | 2,421,534,400 | 14,965,321,578 |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 118 தொடக்கம் 194 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இவை தொடர்புடைய குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கை 108வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டாண்மைத் தகவல்கள்

### 1.1 பொதுவானவை

1985 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ், "பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்" என்ற வகையின் கீழ், மாவட்ட மட்டத்திலான வங்கிகள் உருவாக்கப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கிறது. இதனையடுத்து, 1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், 06 மாகாண வங்கிகளாக ஒன்றிணைக்கப்பட்டன. (அவையாவன, ரஜரட்டை, ருஹுண, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி) 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட 06 வங்கிகளும், 2010 மே 01 இல் பிரதேச அபிவிருத்தி வங்கி (பிராதேசிய சங்வர்தன வங்கி) என தேசிய நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது. வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலவலகம் இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 23 இல் முழுமையாக விபரிக்கப்பட்ட வகையில் 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் பிரதேச அபிவிருத்தி வங்கி இணைத்துக் கொண்டது.

2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் நிரந்தர, பயிற்சி பெறும் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை 3,469 அகும். (2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 3,381 ஆகும்).

### 1.2 முதன்மை நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு நிதியுதவியை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் துறை, வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மகளிர் மேம்பாடு என்பவற்றை விருத்தி செய்வதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதே வங்கியின் முதன்மை நடவடிக்கைகளாகும். மேலும், குத்தகை (Leasing) செயற்பாடுகளை இவ்வருடத்தில் ஆரம்பித்தது.

### 1.3 நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1988 ஆம் ஆண்டின் 30 இலக் வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கும், சமர்ப்பிக்கப்படுவதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்புடையதாகும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர் சபை அங்கீகரித்தல்

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வெளியிடுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2020 மே 29 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

## 2. தயாரிப்புக்கான அடிப்படை

### 2.1 அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் பின்வரும் முக்கியமான விடயங்கள் தவிர, வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

- வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டுக்கான பொறுப்பு, காப்பீட்டுக் கணிப்பீட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு, வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- வியாபாரத்திற்காக வைத்திக்கப்படும் நிதிச் சொத்துக்கள், நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டன.

#### 2.1.1 கணக்கியல் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்

முதல் முறையாக 2019 ஜனவரி 01 அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலப்பகுதிகளுக்கு விளைவுப் பயன் பெறக்கூடிய வகையில் இந்த நிதிக் கூற்றுக்களில் வங்கி SLFRS 16 மற்றும் IFRIC 23 ஆகியவற்றைப் பிரயோகித்துள்ளது.

**SLFRS 16 -** குத்தகைகள்

SLFRS 16 குத்தகை தொடர்பான LKAS 17 ஐ விட மேலோங்குகிறது. இந்த நியமம், குத்தகை தொடர்பான அங்கீகாரம், அளவீடு, சமர்ப்பனம் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகிய விடயங்கள் தொடர்பான எண்ணக்கருக்களை குறித்துரைப்பதுடன், குத்தகை தாரரை நிதி நிலைமைக் கூற்றில் அநேகமான குத்தகைகளை அங்கீகரிக்குமாறு தேவைப்படுத்துகிறது.

SLFRS 16 இன் கீழ் இருந்த குத்தகை பெறுபவரின் கணக்கியல் LKAS 17 இல் இருந்து கணிசமான அளவில் மாற்றமடையவில்லை. குத்தகைக்குப் பெறுபவர்கள் தொடர்ந்தும் LKAS 17 இல் குறிப்பிடப்பட்டது போன்று செயற்பாட்டுக் குத்தகையாகவோ அல்லது நிதிக் குத்தகையாகவோ வகுப்பாக்கம் செய்யப்படலாம். எனவே, வங்கி, குத்தகைக்கு கொடுத்த விடயங்கள் தொடர்பாக இருக்கக்கூடிய குத்தகை தொடர்பில் SLFRS 16 எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

2019 ஜனவரி 01 ஐ ஆரம்பப் பிரயோகத் திகதியாகக் கொண்டு, வங்கி SLFRS 16 ஐ திருத்தப்பட்ட பின்னோக்கிய முறைமையைப் பயன்படுத்தி ஏற்றுக்கொண்டது. இந்த முறைமையின் கீழ் ஆரம்பப் பிரயோகத் திகதியின் முதன் முதலாகப் பயன்படுத்தப்படும் இந்த நியமத்தின் திரண்ட விளைவுடன் இந்நியமம் பின்னோக்கிய வகையில் பிரயோகிக்கப்படுகிறது. வங்கி, தேர்வு மாற்ற நடைமுறையை குறிப்பிட்ட ஒப்பந்தம் குத்தகை ஒன்றை 2019 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளடக்கியுள்ளதா என்பதை மீள் மதிப்பீடு செய்யப் பயன்படுத்தவில்லை. இதற்குப் பதிலாக வங்கி, இந்த நியமத்தை ஆரம்பப் பிரயோகத் திகதியன்று LKAS 17 மற்றும் IFRIC 04 ஆகியவற்றைப் பிரயோகிக்கக்கூடிய ஏற்கனவே இனங்காப்பட்ட குத்தகைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தியது

வங்கி, பல கிளைகளுக்கும் மோட்டார் வாகனங்களுக்கும் குத்தகை ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது. SLFRS 16 ஐக் கையேற்பதற்கு முன்னர், வங்கி அதன் ஒவ்வொரு குத்தகையையும் (குத்தகைதாரர்) அது உருவாகிய திகதியில் நிதிக் குத்தகையாக அல்லது தொழிற்பாட்டுக் குத்தகையாக வகுப்பாக்கம் செய்துள்ளது. 2019 ஜனவரி 01 க்கு முன்னர் இருந்த கணக்கியல் கொள்கை தொடர்பாக குறிப்பு 3.1.3 ஐப் பார்க்க.

SLFRS 16 ஐ ஏற்றுக்கொண்டதை அடுத்து, குறுங்கால குத்தகைகள் மற்றும் குறைப் பெறுமதியுடைய சொத்துக்களுக்கான குத்தகைகள் தவிர ஏனைய அனைத்துக் குத்தகைகளுக்கும் ஒரு ஒற்றை அங்கீகார மற்றும் அளவீட்டு அணுகுமுறையை பிரயோகித்துள்ளது.

குறிப்பிட்ட நியமம் விசேட நிலை மாற்றத் தேவைப்பாடுகளையும் நடைமுறைக்கு உகந்தவைகளையும் தருகின்றது. இவை வங்கியினால் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தொழிற்பாட்டுக் குத்தகைகளாகக் கணக்கிடப்பட்ட குத்தகைகள்

குறுங்காலக் குத்தகைகள் மற்றும் குறைப் பெறுமதியுடைய சொத்துக்களுக்கான குத்தகைகள் தவிர, ஏற்கனவே தொழிற்பாட்டுக் குத்தகைகளாக வகுப்பாக்கம் செய்யப்பட்டவைகளுக்கு சொத்துக்களையும், குத்தகைப் பொறுப்புக்களையும் பயன்படுத்தும் உரிமையை அங்கீகரித்துள்ளது. ஆரம்ப அங்கீகாரத் திகதியில் அதிகரிக்கும் கடன் விகிதம் தவிர, இந்த நியமம் எப்போதும் பிரயோகிக்கப்பட்டு வந்தது என்ற அடிப்படையில் அநேகமான குத்தகைகளுக்கான சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை கொண்டு செல்லும் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்டது. சில குத்தகைகளைப் பொறுத்த வரை, சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை, குத்தகைப் பொறுப்புகளுக்குச் சமமான தொகை அடிப்படையில் அத்தொகை ஏதேனும் தொடர்புபட்ட முன் செலுத்தப்பட்ட தொகைக்கும், திரண்ட குத்தகைக் கொடுப்பனவுகளுக்கும் சீராக்கம் செய்யப்பட்டு, ஆரம்பப் பிரயோகத் திகதியில் உள்ள அதிகரிக்கும் கடன் விகிதத்தைக் கழித்து வருகின்ற தொகையை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கி இருக்கக்கூடிய நடைமுறைக்கு உகந்த நடைமுறைகளைப் பயன்படுத்தியுள்ளது:

- நியாயமான ஒரு ஒத்த பண்புகளுடன் குத்தகை போட்போலியோவுக்கு (Portfolio) ஒற்றைக் கழிவு விகிதத்தைப் பயன்படுத்துதல்.
- ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன், குத்தகைகள் பலமானவையா என அதன் மதிப்பின் மீது நம்பியிருத்தல்.
- ஆரம்பப் பிரயோகத் திகதியில் இருந்து 12 மாதங்களுக்குள் முடிவடையும் தவணைக் காலத்தை உடைய குத்தகைகளுக்கு குறுங்காலக் குத்தகை விதிவிலக்குகளைப் பிரயோகித்தல்.
- ஆரம்பப் பிரயோகத் திகதியில், சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை தொடர்பான அளவீட்டில் இருந்து ஆரம்ப நேரடிச் செலவுகளைத் தவிர்த்தல்.
- குறிப்பிட்ட குத்தகை விரிவாக்க அல்லது முடிவுறுத்தத் தெரிவுகளை உள்ளடக்கியுள்ள போது குத்தகை தவணைக் காலத்தைத் தீர்மானிப்பதில் பின்னறிவைப் பயன்படுத்துதல்.

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில், 2019 ஜனவரி 01 இல் உள்ளவாறு-

- நிதி நிலைமைக் கூற்றில் "சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை" என்பதற்குள் இலங்கை ரூபா 1,039 மில்லியன் பெறுமதியான சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.
- ரூபா 998 மில்லியன் பெறுமதியான மேலதிகக் குத்தகைப் பொறுப்புகள் ("ஏனைய பொறுப்புகள்" என்பதன் கீழ் உள்ளடக்கப்பட்டது) அங்கீகரிக்கப்பட்டன.
- SLFRS 16 ஐ ஏற்றுக்கொண்டமை வங்கியின் தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்களில் எந்தவித தாக்கத்தையோ மற்றும் வங்கியின் மூலதனப் போதுமான விகிதத்தில் எவ்வித பொருளளவான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

IFRIC 23 - வருவான வரி நடத்துகை மீதான நிச்சயமற்ற தன்மை

வருமான வரிக்கான கணக்கீட்டை வரி நடத்துகைகள் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குகின்ற வேளையில், அது, "வருமான வரிகள்" தொடர்பான LKAS 12 இன் பிரயோகத்தைப் பாதிக்கும் போது, பொருள் விளக்கம் அதனை நிவர்த்தி செயயும். இது, LKAS 12 உடைய எல்லைக்கு வெளியே வருகின்ற வரிகள் அல்லது தீர்வைகளுக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது. மேலும், இது, சில வரி நடத்துகைகளுடன் தொடர்புடைய வட்டி மற்றும் தண்டப்பணங்கள் தொடர்பில் குறிப்பாக எந்தத் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கவில்லை. பொருள்கோடல் குறிப்பாக பின்வரும் விடயங்களுக்கு பிரயோகமாகிறது.

- குறிப்பிட்ட நிறுவனம் ஒன்று, நிச்சயமற்ற வரி நடத்துகைகளை பிரத்தியேகமாகக் கருத்திற் கொள்கின்றனவா
- வரி விதிப்பு அதிகார சபைகளினால் வரி நடத்துகைகள் தொடர்பான சோதனைகள் பற்றி ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் அனுமானங்கள்.
- நிறுவனம் ஒன்று வரி விதிக்கக்கூடிய இலாபம் (வரி நட்டம்) வரி தளங்கள், பயன்படுத்தாத வரி நட்டங்கள், பயன்படுத்தாத வரி கடன்கள் மற்றும் வரி விகிதங்களை எவ்வாறு தீர்மானிக்கிறது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஒரு நிறுவனம் எவ்வாறு கருத்திற் கொள்கிறது.

வங்கி, ஒவ்வொரு நிச்சயமற்ற வரி நடத்துகையையும் வெவ்வேறாக கருத்திற் கொள்வதா அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிச்சயமற்ற வரி நடத்துகைகளை ஒன்றாகச் சேர்த்து கருத்திற் கொள்வதா என்பதைத் தீர்மானிக்கும். அத்துடன், வங்கி, குறிப்பிட்ட நிச்சயமற்ற தன்மைக்கு சிறந்த தீர்வை எதிர்கொள்ளக்கூடிய அணுகுமுறையைக் கையாளும்.

வருமான வரி நடத்துகை மீதான நிச்சயமற்ற தன்மைகளைக் கண்டறிய வங்கி, முக்கியமான தீர்ப்புகளைப் பிரயோகிக்கிறது. சிக்கலான சூழல் ஒன்றில் செயற்படுவதனால் வங்கி, குறிப்பிட்ட பொருள் கோடல் அதன் நிதிக் கூற்றுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என மதிப்பீடு செய்துள்ளது. பொருள் கோடலை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து வங்கி, ஏதேனும் நிச்சயமற்ற வரி நிலைமைகள் குறிப்பாக, பரிமாற்ற விலையிடல் தொடர்பாக இருக்கின்றதா என்பதைக் கருத்திற் கொண்டுள்ளது. பல்வேறுபட்ட நியாயாதிக்கங்களில் இருக்கக்கூடிய வங்கியின் வரிக் கோர்ப்புகள், பரிமாற்ற விலையிடலுடன் தொடர்புபட்ட கழிவுகளை உள்ளடக்குகிறது. அத்துடன், வரிவிதிப்பு அதிகார சபைகள், அத்தகைய வரி நடத்துகைகளை சவாலுக்குட்படுத்தலாம். வங்கி, அதன் வரி இணக்கப்பாடு மற்றும் பரிமாற்ற விலையில் கற்கை அடிப்படையில் அதன் வரி நடத்துகைகள், வரிவிதிப்பு அதிகார சபைகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூற்றுகளாக அமைவதற்கு சாத்தியமுள்ளது எனத் தீர்மானித்துள்ளது. குறிப்பிட்ட பொருள் கோடல் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் எந்தவித பாதிப்புகளையும் ஏற்படுத்தவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்களைத் தவிர வங்கி இந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலப்பகுதிகளிலும், கணக்கியல் கொள்கையை ஒருசீராகப் பிரயோகித்துள்ளது.

### 2.1.2 பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் வியாபாரக் கலவைகள்

நிறுவனங்களுக்கு இடையிலான பொதுவாக கட்டுப்பாட்டின் கீழ் வியாபாரக் கலவைகள் வட்டி திரட்டல் முறையைப் பயன்படுத்த கணக்கிடப்படுகின்றன. இதற்கமைய,

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ஒன்றிணைக்கப்படும் நிறுவனங்களின் சொத்துக்களும், பொறுப்புக்களும் அவற்றின் கொண்டு செல்லும் தொகையில் பிரதிபலிக்கும். நன்மதிப்புக்கான தொகை ஒன்றிணைக்கப்பட்டதன் பெறுபேறாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. செலுத்தப்பட்ட / பரிமாற்றப்பட்ட பிரதிபயனுக்கு இடையிலான ஏதேனும் வேறுபாடு மற்றும் கையகப்படுத்தப்பட்ட பங்குரிமை என்பன பங்குரிமைக்குள் பிரதிபலிக்கப்படும்.

தற்காலிக / மதிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தி, வியாபார ஒன்றிணைப்பு நடத்தப்பட்டது. அத்துடன், அளவீட்டுக் காலப்பகுதியின் போது (ஒரு வருடம்) பிரதேச அபிவிருத்தி வங்கி 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மீள் மதிப்பீடு செய்யுமாறும் ஒன்றிணைப்பு ஒதுக்குகளைச் சீர்செய்யுமாறும் தேவைப்படுத்தப்பட்டது.

## 2.2 இணக்கக் கூற்று

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த அப்போதைய ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவும் (SLFRSs/ LKASs) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமையவும், 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணமும், 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 தொழிற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

பிரதேச அபிவிருத்தி வங்கி செயற்படுகின்ற முதன்மை பொருளாதார சூழலில் இருக்கின்ற நாணயமாகிய இலங்கை ரூபாவிலேயே வங்கியின் நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட நிதித் தகவல்கள் வேறு விதமாகக் குறிப்பிட்டால் அன்றி, அருகிலுள்ள ரூபாவுக்கு முழுமையாக்கப்பட்டுள்ளது.

## 2.4 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதிநிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கியின் விடயங்கள், அதன் இயல்பை அடிப்படையாகக் கொண்டு வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதோடு, ஒப்பீட்டளவிலான திரவத்தன்மை மற்றும் முதிர்வு வடிவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் பட்டியலிடப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்காக சீராக்கங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் (நடப்பு) மீளப் பெற வேண்டிய அல்லது தீர்க்கப்பட வேண்டிய மற்றும் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களுக்கு மேற்பட்ட (நடைமுறை அல்லாத) மீட்பு அல்லது தீர்வளித்தல் பற்றிய பகுப்பாய்வு குறிப்பு 45 இல் தரப்பட்டுள்ளது.

## 2.5 பொருளளவான தன்மையும் ஒருங்கிணைப்பும்

LKAS 01 - "நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்" தொடர்பான விதியுடன் இணங்கி, ஒரே மாதிரியான விடயங்களைக் கொண்ட ஒவ்வொரு முக்கியமான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது பணிகளும் அவை முக்கியமானதாக கருதப்படுகின்ற வேளை வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதிச் சொத்துக்களும், நிதிப் பொறுப்புக்களும் ஈடுகட்டப் பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கான சட்டரீதியாக அமுல்படுத்தக்கூடிய உரிமை ஒன்று உள்ள போது மாத்திரம் அத்துடன், நிகர அடிப்படையில் தீர்த்துக் கட்டுவதற்கான மன எண்ணம் இருக்குமிடத்தும் அல்லது சொத்துக்கள் உண்மையான பெறுமதியை அடைகின்ற வேளையிலேயே பொறுப்புக்களையும், தீர்த்துக்கட்டுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் மாத்திரமே தேறிய தொகை நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும். வருமானம் மற்றும் செலவுகள் என்பன தேவைப்படுத்தப்பட்டால் அல்லது ஏதேனும் கணக்கியல் கொள்கை அல்லது பொருள் கோடல் அனுமதிக்கப்பட்டால் தவிர, வருமானக் கூற்றில் ஈடுகட்டப்பட மாட்டாது. அத்துடன், அவை, குறிப்பாக கணக்கியல் கொள்கைகளில் வெளிப்படுத்தப்படும்.

## 2.6 நிதிப் பாய்ச்சல் கூற்று

நிதிப் பாய்ச்சல் கூற்று LKAS 07 - "நிதிப்பாய்ச்சல் கூற்று என்ற இலக்கை கணக்கியல் நியமத்திற்கு அமைவாக, நேரடி முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள், கையிலுள்ள காசு மற்றும் பணத்தொகையாக உடனடியாக மாற்றக்கூடிய மற்றும் பெறுமதியில் ஒரு முக்கியமற்ற மாற்றங்களுக்கான இடருக்கு உட்பட்ட குறுங்கால, உயர் திரவத்தன்மை உடைய முதலீடுகள் உள்ளடங்கும்.

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 17, 18, 21.2 மற்றும் 28 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள், கையிலுள்ள காசு ஏனைய வங்கி மீதிகள், வங்கியுடனான வைப்புகள், நிலையான வைப்புகள் (3 மாதங்களுக்குக் குறைந்த) மீதான முதலீடு மற்றும் வங்கி மீதிகளின் சாதகமற்ற தேறிய தொகை என்பவற்றை உள்ளடக்கும்.

## 2.7 ஒப்பீட்டுத் தகவல்

நடைமுறை வருடத்தின் சமர்ப்பணத்தோடு இணங்கிச் செல்கின்ற தேவை ஏற்படுமிடத்து, ஒப்பீட்டுத் தகவல் வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. எனினும், வங்கி, SLFRS 16 (குத்தகைகள்) என்ற இலங்கை கணக்கியல் நியமங்களின் எல்லைகளுக்குள் வருகின்ற குத்தகைகளுக்காக 2018 ஆம் ஆண்டுக்காக ஒப்பீட்டுத் தகவலை மீள் எடுத்துக் கூறவில்லை. ஆகவே, 2018 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுத் தகவல் இலங்கை கணக்கியல் நியமம் LKAS 17 (குத்தகைகள்) இன் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தகவலோடு, ஒப்பிடக்கூடியதல்ல. SLFRS 16 க்கு அடைந்த நிலை மாற்றம் குறிப்பு இல. 25.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.8 முக்கியமான கணக்கியல் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, வங்கியினால் தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்கள் அறிக்கையிடப்பட்ட வருவாய், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அதனோடு தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் இடைநேர் விலையான பொறுப்புகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட தொகையைப் பாதிக்கக்கூடிய தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு முகாமைத்துவத்தை தேவைப்படுத்துகிறது. இத்தகைய அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மை எதிர்காலங்களில் பாதிக்கக்கூடிய சொத்து அல்லது பொறுப்புகளின் கொண்டு செல்லும் தொகையில் ஒரு முக்கியமான சீர்படுத்தலைத் தேவைப்படுத்தும் முடிவுகளை ஏற்படுத்தலாம்.

வங்கியின் கணக்கியல் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயன்முறையில் முகாமைத்துவம் எதிர்காலத்தைக் கருத்திற்

கொண்டு பின்வரும் தீர்ப்புகளையும், அனுமானங்களையும் மேற்கொண்டுள்ளது. மேலும், அடுத்துவரும் நிதியாண்டிற்குள் கொண்டு செல்லும் சொத்துக்கள், பொறுப்புகளின் தொகைகளில் முக்கியமான சீர்படுத்தலை ஏற்படுத்தும் குறிப்பான இடர் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய அறிக்கையிடும் திகதியில் உள்ள நிச்சயமற்ற தன்மையைத் தோற்றுவிக்கும் ஏனைய முக்கிய மூலங்களின் மதிப்பீட்டையும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது. எதிர்கால அபிவிருத்தி பற்றி தற்போதுள்ள சூழ்நிலைகளும் அனுமானங்களும் வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணிகளினால் மாறலாம். அத்துடன், அவை, ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அனுமானங்கள் பிரதிபலிக்கப்படலாம்.

கணிசமான முகாமைத்துவத்தின் தீர்வு மற்றும் அல்லது அனுமானங்களுடன் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும் தொகை மீது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் அது தலையிட்டுள்ள தீர்ப்புகள் / மதிப்பீடுகள் தொடர்பில் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

### 2.8.1 நிறுவனதின் தொடர்ந்து செல்லும் தன்மை

வங்கியின் முகாமைத்துவம், வங்கி நிறுவனதின் தொடர்ந்து செல்லும் தன்மை என்ற அடிப்படையில் தொடர்ந்து செல்வதற்கான தகமை பற்றி ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது. எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தை கொண்டு நடத்தத் தேவையான வளங்களை வங்கி கொண்டுள்ளது என முகாமைத்துவம் திருப்தியடைகிறது. மேலும், வங்கியின் நிறுவனத் தொடர்ந்து செல்லும் தன்மை என்ற தகைமையில் முக்கியமான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருளளவான நிச்சயத் தன்மை பற்றியும் முகாமைத்துவம் அறியாது. ஆகவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தும் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.8.2 கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வலுக்குறைப்பு நட்டங்கள்

அனைத்து வகையான நிதிச் சொத்துக்கள் தொடர்பாகவும் SLFRS 9 இன் கீழ் வலுக் குறைப்புக்கான நட்டங்களின் மதிப்பீடு தீர்ப்பினைத் தேவைப்படுத்துகிறது. குறிப்பாக, வலுக்குறைப்பு நட்டங்களைத் தீர்மானிக்கும் போது தொகையின் மதிப்பீடு மற்றும் எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் காலம், பெறுமதிகளின் தொகுப்பு என்பனவும் கடன் இடரில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவின் அதிகரிப்பு பற்றிய மதிப்பீடும் தேவைப்படுத்தப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் பல எண்ணிக்கையான காரணிகள் மற்றும் மாற்றங்களினால் இயக்கப்படும். இந்த மாற்றங்கள் அல்லது காரணிகள் பல்வேறுபட்ட மட்டங்களிலான கொடுப்பனவுகளைத் தோற்றுவிக்கும்.

வங்கியின் ECL கணக்கீடுகள் மாறக்கூடிய உள்ளீடுகள் மற்றும் அவற்றின் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் தன்மை ஆகியவற்றின் தெரிவு தொடர்பாக இருக்கக்கூடிய பல எண்ணிக்கையான அடிப்படையான அனுமானங்களுடனான சிக்கலான மாதிரிகளின் வெளிப்பாடுகளாகும். ECL மாதிரிகளின் கூறுகள் கணக்கியல் தீர்ப்புகளிலும், மதிப்பீடுகளிலும் கருத்திற் கொள்ளப்படும். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- கடன் இடரில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இருக்குமாயின், வங்கியின் மதிப்பீட்டு அளவுகோலாக அமைவதுடன், நிதிச் சொத்துக்களுக்கான கொடுப்பனவுகள் LTECL அடிப்படையிலும், தர அடிப்படையிலான மதிப்பீட்டின் அடிப்படையிலும் அளவிடப்படும்.
- நிதிச் சொத்துக்களின் ECL கூட்ட அடிப்படையில் மதிப்பிடப்படும் போது நிதிச் சொத்துக்கள் வெவ்வேறாக்கப்படும்.
- பல்வேறுபட்ட சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகளின் தெரிவு உள்ளடங்கலாக ECL மாதிரிகளின் அபிவிருத்தி
- பெரும்பாக பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் தொழிலின்மை மட்டங்கள், பிணையப் பெறுமதிகள் மற்றும் PD க்கள், PAD க்கள் மற்றும் LGD க்கள் மீதான தாக்கம் போன்ற பொருளாதார உள்ளீடுகளுக்கு இடையில் உள்ள தொடர்பைத் தீர்மானித்தல்.
- முன்னோக்கிய பெரும்பாகப் பொருளாதார சூழ்நிலைகளையும் அவற்றின் நிகழ்தகவு அளவுகளையும் ECL மாதிரிகளுக்குள் பொருளாதார உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தெரிவு செய்தல்.

### 2.8.3 வரி விதிப்பு

வங்கி வருமான வரிக்கு உட்பட்டதுடன், தீர்ப்பானது, நடப்பு ஒத்தி வைக்கப்பட்ட மற்றும் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிரயோகத்தில் இருந்த வரிச் சட்டங்களின் பொருள் கோடல் தொடர்பாக இருந்த நிச்சயமற்ற தன்மைகளினால் ஏற்பட்ட ஏனைய வரிகள் என்பவற்றுக்கான மொத்த ஏற்பாட்டை தீர்மானிக்குமாறு தேவைப்படுத்துகிறது.

பரந்துபட்ட வகையிலான வியாபார உறவுகள் மற்றும் நீண்டகாலத் தன்மை, தற்போதுள்ள சிக்கலான ஒப்பந்தம் சார் உடன்படிக்கைகள் உண்மையான பெறுபேறுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அனுமானங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் என்பன வருமான வரி மற்றும் செலவுகள் மற்றும் ஒத்தி வைக்பபட்ட வரி என்பவற்றில் சீராக்கங்களை ஏற்படுத்தியதுடன், அவை இந்நிதிக் கூற்றுக்களின் குறிப்பு, 14, 26, மற்றும் 31 களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.8.4 வரையறை செய்யயப்பட்ட அனுகூலத் திட்டங்கள்

வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதி என்பன காப்பீட்டுக் கணிப்புப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீட்டு முறை, கழிவு விகிதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் விகிதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு விகிதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு ஆகியன தொடர்பில், அனுமானங்கள் மேற்கொள்வதை உள்ளடக்கும். இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டவை. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படும்.

பொருத்தமான கழிவு விகிதத்தைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியுடன் தொடர்புடைய மேலதிக சேர்க்கப்பட்ட முதிர்வுகளுடன் இலங்கை அரசாங்க முறிகளுக்குரிய வட்டி விகிதங்களைக் கருத்திற் கொள்ளும்.

இறப்பு விகிதம் பொது மக்களுக்காக இருக்கக்கூடிய இறப்பு விகித அட்டவணைகளின் அடிப்படையில் அமைந்தவை. எதிர்கால சம்பள அதிகரிப்புகளும், ஓய்வூதிய அதிகரிப்புகளும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க விகிதங்கள் மற்றும் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

### 2.8.5 ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டுக் காலம்

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதிகள், பாவனைக் காலம் மற்றும் தேய்மான முறைகள் என்பனவற்றை மீளாய்வு செய்யும். இத்தகைய பெறுமதிகள், விகிதங்கள் மற்றும் முறைகளை மதிப்பீடு செய்வதில் முகாமைத்துவத்தின் தீர்ப்பு பிரயோகிக்கப்படும். எனவே, இவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை.

### 2.8.6 கடமைகளும் நிச்சயமின்மைகளும்

அனைத்து அறியக்கூடிய பொறுப்புகளுக்குமான தொகைகளைத் தீர்மானிக்கும் போது, அனைத்து காணக்கூடிய இடர்களும் கணக்கிடப்படும்.

நிச்சயமற்ற பொறுப்புகள் ஏதேனும் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் ஏற்படும் போது, அவற்றின் இருப்பு உறுதிப்படுத்துவதோடு, சாத்தியமான கடப்பாடுகள் எழும் அல்லது தற்போது இருக்கக்கூடிய கடப்பாடுகள் பொருளாதார அனுகூலம், சாத்தியமாக இல்லாத போது அல்லது உண்மையில் மதிப்பிட முடியாத போது கடப்பாடுகள் எழும். நிச்சயமற்ற பொறுப்புகள் நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஆயின், அவை தொலைவில் இருந்தால் தவிர வெளிப்படுத்தப்பட மாட்டாது.

### 2.8.7 நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமதி

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி நிதிநிலைக் கூற்றில் பதிவு செய்யப்படும் போது துடிப்பான சந்தையில் இருந்து பெற முடியாது. அவை, கணித மாதிரிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பலதரப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்களைப் பிரயோகப்படுத்தி தீர்மானிக்கப்படும். இயலுமான சந்தர்ப்பங்களில் அத்தகைய மாதிரிகளின் உள்ளீடுகள் அவதானிக்கக்கூடிய சந்தைகளில் இருந்து பெறப்படும். எனினும், அத்தகைய தரவு இல்லாத விடத்து நியாயமான பெறுமதிகளை ஸ்தாபிப்பதில் ஒரு அளவான தீர்ப்பு பிரயோகிக்கப்படும். இதன் மூலம் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டின் விளைவை குறைக்கலாம்.

## 3. கணக்கியல் கொள்கைகள் மற்றும் தர அடிப்படையிலான பொருள் கோடல்

### 3.1 முக்கியமான கணக்கியல் கொள்கைகளின் சாராம்சம்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. வேறுவகையில் குறிப்பிட்டால் அன்றி, கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் அனைத்துக் காலப்பகுதிகளுக்கும் வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒருசீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 3.1.1 நிதிக் கருவிகள் - ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு

#### 3.1.1.1 அங்கீகாரத் திகதி

வாடிக்கையாளருக்குரிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் நீங்கலாக, நிதிச் சொத்துக்கள், பொறுப்புகள், வாடிக்கையாளருக்கு நிலுவையாக உள்ள மீதிகள் என்பன ஆரம்பத்தில் வியாபாரத் திகதியன்று அங்கீகரிக்கப்படும். அதாவது, வங்கி, குறித்த கருவியினுடைய ஒப்பந்தம்சார் ஏற்பாடுகளுக்கு வங்கி ஒரு திறத்தவராக வருகின்ற திகதி. இது, கிரமமான வழியிலான வியாபாரங்கள், சந்தையின் ஒழுங்கு விதி அல்லது ஒப்பந்தம் ஒன்றின் கீழ் பொதுவாக ஸ்தாபிக்கப்பட்ட கால எல்லைக்குள் சொத்துக்களின் விநியோகத்தை தேவைப்படுத்துகின்ற நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனைகள் என்பனவற்றை உள்ளடக்கும். வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்பணங்களும் வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு நிதி மாற்றப்படும் போது அங்கீகரிக்கப்படும். வாடிக்கையாளருக்கு நிலுவையாக உள்ள மீதிகள் நிதி வங்கிக்கு மாற்றப்படும் போது வங்கியினால் அங்கீகரிக்கப்படும்.

### 3.1.1.2 நிதிக் கருவிகளின் ஆரம்ப அளவீடு

ஆரம்ப அங்கீகரிப்பின் நிதிக் கருவிகளின் வகுப்பாக்கம் அவற்றின் ஒப்பந்தம்சார் நியதிகள் மற்றும் அந்தக் கருவிகளைக் கையாளுகின்ற வணிக மாதிரியில் தங்கியுள்ளது. FVPL இல் பதிவு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள், நிதிப் பொறுப்புகள் தவிர நிதிக் கருவிகள் ஆரம்பத்தில் அவற்றின் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும். பரிவர்த்தனை செலவுகள் இதனோடு சேர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும். வியாபார வரவுகள் பரிவர்த்தனை விலையில் அளவிடப்படும். ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி பரிவர்த்தனை விலையில் இருந்து வேறுபடும் போது வங்கி முதல் நாள் இலாபம் அல்லது நட்டம் என கீழே விபரிக்கப்பட்டவாறு கணக்கிடும்.

### 3.1.1.3 முதல் நாள் இலாபம் அல்லது நட்டம்

கருவி ஒன்றினுடைய பரிவர்த்தனை விலை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் இருந்து வேறுபடுகின்ற போது மற்றும் நியாயப் பெறுமதி சந்தைப் பரிவர்த்தனைகளில் அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளை மாத்திரம் பயன்படுத்திய ஒரு மதிப்பீட்டு நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமாயின் வங்கி பரிவர்த்தனை விலைக்கும் நியாய விலைக்கும் இடையிலான வெறுபாட்டை தேறிய வியாபார வருமானத்தில் அங்கீகரிக்கும். சில உள்ளீடுகள் அவதானிக்கக் கூடியதாக இல்லாதிருந்து அத்தகைய மாதிரிகளின் அடிப்படையில் நியாயப் பெறுமதி அமைகின்ற சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை விலைக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ஒத்தி வைக்கப்படுவதுடன், உள்ளீடுகள் அவதானிக்கக் கூடியதாக வருகின்ற போது அல்லது நிதிக் கருவி அங்கீகாரமற்றதாகின்ற போது மாத்திரமே வருமானக் கூற்று நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

### 3.1.1.4 வகுப்பாக்கம் மற்றும் அதனை அடுத்த நிதிக் கருவிகள் மீதான அளவீடு

#### 3.1.1.4.1 நிதிச் சொத்துக்கள்

வங்கி சொத்துக்களையும் சொத்துக்களுடைய ஒப்பந்தம்சார் நியதிகளைக் கையாள்வதற்கு வணிக மாதிரி அடிப்படையில் அதனுடைய நிதிச் சொத்துக்கள் அனைத்தையும் வகுப்பாக்கம் செய்கிறது. அவற்றை பின்வரும் வழிகளில் அளவிடுகிறது.

- குறிப்பு 3.1.1.4.1.1 விளக்கப்பட்டவாறு பதிவழிப்புச் செலவு
- குறிப்பு 3.1.1.4.1.3 குறிப்பிட்டவாறு நிதிச் சொத்துக்கள் ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.
- குறிப்பு 3.1.1.4.1.2 குறிப்பிட்டவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் (FVPL)

வகுப்பாக்கமானது, நிதிச் சொத்துக்களையும், நிதிச் சொத்துக்களின் நிதிப் பாய்ச்சல் தொடர்பான ஒப்பந்தம்சார் விதிகளையும் கையாளுகின்ற வணிக மாதிரியில் தங்கியுள்ளது. இலாபம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்கள் இருந்தாலன்றி, வங்கி அதன் நிதி பொறுப்புக்களை பதிவழிப்புச் செலவில் வகுப்பாக்கம் செய்யும்.

### 3.1.1.4.1.1 வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும், பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள்

பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால் மாத்திரமே, வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் வாடிக்கையாளருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய நிதி முதலீடுகளை பதிவழிப்புச் செலவில் வங்கி அளவிடும்.

- ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்களை வைத்திருக்கும் போது குறிப்பிட்ட நிதிச் சொத்து வணிக மாதிரிக்குள் வைத்திருக்கப்பட்டால்,
- நிலுவையாக உள்ள செலுத்த வேண்டிய முதன்மைத் தொகை மீது, முழுமையாகச் செலுத்தப்பட வேண்டிய முதல் மற்றும் வட்டியின் நிதிப் பாய்ச்சல்கள், நிதிச் சொத்தின் ஒப்பந்தம்சார் நியதிகள் வலுப்பெறுகின்ற போது.

இந்நிபந்தனைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன -

#### 3.1.1.4.1.1(A) வணிக மாதிரி மதிப்பீடு

வங்கி அதன் வணிக மாதிரியை, தனது வணிகக் குறிக்கோளினை அடைவதற்கு நிதிச் சொத்துக்களின் குழுமங்களை எவ்வாறு வங்கி கையாளுகின்றது என்பதை சிறந்த அளவில் வெளிப்படுத்தக்கூடிய மட்டத்தில் தீர்மானிக்கும்.

வங்கி அதன் வியாபார மாதிரியை, ஒவ்வொரு கருவியின் அடிப்படையிலும் மதிப்பிடாது. ஆயின், மொத்த தரவறிக்கைகளை உயர்மட்ட அளவில் அளவிடுகிறது. இந்த அளவீடு பின்வரும் அவதானிக்கத்தகு காரணிகளை அடிப்படையாகக் கொண்டன.

- வியாபார மாதிரி மற்றும் அவ் வியாபார மாதிரிக்குள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் என்பவற்றின் செயற்திறன் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது மற்றும் நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு எவ்வாறு அறிக்கையிடப்படுகிறது.
- வணிக மாதிரி உடைய செயற்திறனைப் பாதிக்கக்கூடிய இடர்களும் (மற்றும் அவ் வியாபார மாதிரிக்குள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களும்) அத்துடன், குறிப்பாக எவ்வகையில் இவ் இடர்கள் கையாளப்படுகின்றன.
- வணிக முகாமையாளர்களுக்கு எவ்வாறு நட்டஈடு செலுத்தப்படுகிறது. (உதாரணமாக. நட்டஈடு முகாமைத்துவம் செய்யப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறதா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களின் அடிப்படையிலா)
- வங்கியின் மதிப்பீட்டில் விற்பனைகளின் எதிர்பார்க்கப்பட்ட அதிர்வெண் பெறுமதி மற்றும் கால நேரம் என்பனவும் முக்கியமான அணுகுமுறைகளாகும்.

வணிக மாதிரி மதிப்பீடு "மோசமான சம்பவம் அல்லது அழுத்தமான சம்பவம்" போன்ற சூழ்நிலைகளைக் கருத்திற் கொள்ளாது, நியாயமாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், வங்கியின் ஆரம்ப எதிர்பார்ப்புக்களை விட வேறுவிதமாக நிதிப் பாய்ச்சல்கள் மதிப்புப் பெறுகின்ற போது, வங்கி வணிக மாதிரிக்குள் வைத்திருக்கப்படும் எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகுப்பாக்கத்தை மாற்றாது, ஆயின், அத்தகைய தகவலை புதிதாக உருவாகின்ற அல்லது முன்னோக்கிச் செல்கின்ற, புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களோடு கூட்டிணைக்கும்.

#### 3.1.1.4.1.1(B) SPPI பரீட்சை

வங்கியின் வகுப்பாக்க செயன்முறையில் இரண்டாவது கட்டமாக வங்கி, நிதிச் சொத்துக்களின் ஒப்பந்தம்சார் நியதிகளை அவை SPPI பரீட்சையைப் பூர்த்தி செய்கின்றனவா என்பதை இனங்காண மதிப்பீடு செய்யும்.

இப்பரீட்சையின் நோக்கத்திற்காக, ஆரம்ப அங்கீகரிப்பின் போது, நிதிச் சொத்து ஒன்றின் நியாயப் பெறுமதிக்காக முதன்மை என வரையறை செய்யப்பட்டவை, நிதிச் சொத்து ஒன்றின் வாழ்காலத்தின் போது மாற்றமடையலாம். (உதாரணமாக, முதன்மைத் தொகைக்கு மீள் கொடுப்பனவுகள் உள்ள போது அல்லது கட்டுப்பணம் / கழிவின் பதிவழிப்பு உள்ளபோது)

கடன் ஏற்பாடு ஒன்றுக்குள் உள்ள வட்டி ஒன்றின் மிக முக்கியமான கூறுகள், பணம் மற்றும் கடன் இடரின் கால நேரப் பெறுமதிக்கான பிரதிபயனாகும். SPPI மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு, வங்கி தீர்ப்பு மற்றும் குறிப்பிட்ட நிதிச் சொத்து எந்த நாணயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளதோ, அதைப் போன்ற பொருத்தமான காரணிகள் மற்றும் வட்டி தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதி போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்ளும்.

இதற்கு முரணாக, ஒரு அடிப்படைக் கடன் ஏற்பாடு ஒன்றுடன் தொடர்புபடாத ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களில் ஏற்ற இறக்கங்களை அல்லது குறிப்பிட்ட இடர்களின் வெளிப்பாட்டைக் குறைப்பதைவிட வேறு விதமாக அறிமுகப்படுத்தப்படும் ஒப்பந்தம்சார் நியதிகள், நிலுவையாக உள்ள தொகை மீது முழுமையாகச் செலுத்தப்படும் முதல் மற்றும் வட்டி என்பவற்றின் ஒப்பந்தம்சார் நிதிப்பாய்ச்சலுக்கு வலுத் தராதது. அத்தகைய சூழ்நிலைகளில் நிதிச் சொத்து ஒன்று FVPL இல் அளவிடப்பட வேண்டும்.

### 3.1.1.4.1.2 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதி

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதி பின்வருவனவற்றை சமரசம் செய்யும் :

- நிதி முதலீடுகள் - வியாபாரத்திற்காக,
- முதல் மற்றும் இலாபக் கொடுப்பனவுகளை முழுமையாகப் பிரதிபலிக்காத ஒப்பந்தம்சார் நியதிகளுடனான கருவிகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக, நியாயப் பெறுமதியில் வைத்திருக்கப்படும் நிதிக் கருவிகள், ஆரம்பத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைச் செலவுகளுடன் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படும். இதனையடுத்து, இவை, நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு, அவை ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலாப அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நிதிச் சொத்து ஒன்று, நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்ற போது, கடன் இடர்களுக்குக் காரணமாக அமைகின்ற நியாயப் பெறுமதியின் நகர்வைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய எதிர் திறத்தவருடைய கடன் தகுதியைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் ஒரு கடன் மதிப்பீட்டு சீர்படுத்தல் உள்ளடக்கப்படும்.

3.1.1.4.1.2(A) நிதி முதலீடுகள் - வியாபாரத்திற்காக

ஒரு நிதி முதலீடானது, மிக அண்மைய தவணையில் விற்பனை அல்லது மீள் கொள்வனவை முதன்மை நோக்கமாகக் கொண்டு கையகப்படுத்தி அல்லது உறப்பட்டிருந்தால், அந்த நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகுப்பாக்கம் செய்யப்படும் அல்லது ஒன்றாகக் கையாளப்படுகின்ற நிதிக் கருவிகளின் போட்போலியோவின் ஒரு பகுதியாக அமைவதோடு, அதற்கு ஒரு குறுங்கால இலாபம் பெறும் என்பதற்கான சான்று ஒன்று இருத்தல் வேண்டும், அல்லது, இது, சமாளிக்கக்கூடிய தொடர்பு ஒன்றாகத் தகுதி பெறாத வழித்தோன்றலாக அமையும்.

பங்குரிமைப் பிணையங்களிலான முதலீடு, இலாபம் அல்லது நட்டம் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகுப்பாக்கம் செய்யப்படுவதோடு, நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படும். குறிப்பு 19ஐப் பார்க்க.

3.1.1.4.1.2 B இலாபம் அல்லது நட்டம் ஊடாக பெறுமதியில் மதிப்பிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிதிக் கருவிகள்

ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து, நிதிக் கருவிகள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டதாகக் குறித்துரைக்கப்படலாம். அவ்வாறு மேற்கொள்வது, அளவீட்டை நீக்குவதாக அல்லது குறிப்பிடத்தக்களவு குறைப்பதாக அல்லது நிதிச் சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை வித்தியாசமான அடிப்படையின் மீது அளவிடுகின்ற போது, வேறு வகையில் எழுகின்ற அங்கீகாரம் அல்லது முரண்பாடுகள் (அதாவது, ஒரு கணக்கியல் பொருத்தப்பாடு இன்மையை நீக்குதல்) இருக்குமிடத்து, நிதிச் சொத்து ஒன்று, இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் மாத்திரம் குறித்துரைக்கப்படும். வங்கி, இந்த வகைக்குள் எந்த நிதிக் கருவிகளையும் குறித்துரைக்காது. ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியைக் கையாளுகின்ற ஒரு மீளப் பெற முடியாத தெரிவு ஒன்றை முகாமைத்துவம் கருத்திற் கொள்ளாத போட்போலியோக்களுக்கு இயல்பாகவே அத்தகைய முதலீடுகள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.

3.1.1.4.1.3 ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

வியாபாரம் அல்லாத நிதிச் சொத்துக்களாகக் கருதப்படும் பங்குரிமைக் கருவிகளிலான முதலீடு, இலாபம் அல்லது நட்டம் ஊடாக அங்கீகரிக்கப்பட மாட்டாது அல்லது "வணிகக் கலவை" என்ற SLFRS 03 இன் கீழ் வணிகக் கலவையாக வங்கி, ஒரு எதிர்பாராத பிரதிபயனாக அங்கீகரிக்காது. இத்தகைய கருவிகள் நீண்டகாலத் தன்மை உடைய முதலீடு காரணமாக, முகாமைத்துவத்தினால் மீளப் பெற முடியாத தெரிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, இவை, ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.

ஏனைய விரிவான வருமானக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்ட தொகைகள், இலாபம் அல்லது நட்டத்திற்கு உடனடியாக மாற்றப்படாது. அத்தகைய முதலீடுகளுக்கான பங்கிலாபங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும். இவ்வகையான பங்குரிமைக் கருவிகளுக்கான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஒருபோதும் இலாபத்திற்கு மீள சுழற்சி செய்யப்பட மாட்டாது. வங்கி, குறிப்பிட்ட கருவியின் உடைய செலவின் ஒரு பகுதியை அத்தகைய வருவாய்களில் இருந்து மீளப் பெறும் அனுகூலங்களைப் பெறுகின்ற சந்தர்ப்பம் தவிர, கொடுப்பனவுக்கான உரிமை ஒன்று ஸ்தாபிக்கப்படுகின்ற போது, பங்கிலாபங்கள், தேறிய வியாபார இலாபங்கள் / நட்டங்களாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். வங்கி, அனுகூலங்களைக் கருவியொன்றின் செலவில் ஒரு பகுதியாகப் பெறுகின்ற போது, அததகைய பெறுவனவுகள் OCI இல் பதியப்படும். FVOCI இல் உள்ள பங்குரிமைக் கருவிகள் வலுக்குறைப்பு மதிப்பீடு ஒன்றுக்க உட்பட்டது அல்ல.

3.1.1.4.2 நிதிப் பொறுப்புகள்

நிதிப் பொறுப்புகளின் ஆரம்ப அல்லது உடனடுத்த அளவீடு கீழே விபரிக்கப்பட்டவாறு அவற்றின் வகுப்பாக்கத்தில் தங்கியுள்ளது.

வங்கி அதன் தோற்றத்தில் வங்கியின் நிதிப் பொறுப்புகளின் வகுப்பாக்கத்தைத் தீர்மானிக்கும். இதற்கமைய நிதிப் பொறுப்புக்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன :

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் (FVTPL)
  - வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிப் பொறுப்புகள்
  - இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள்
- பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புகள்

நிதிப் பொறுப்புகளின் உடனடுத்த அளவீடு அவற்றின் வகுப்பாக்கத்தில் தங்கியுள்ளது.

3.1.1.4.2.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் (FVTPL)

FVTPL இல் உள்ள நிதிப் பொறுப்புகள் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிப் பொறுப்புகளையும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் ஆரம்ப அங்கீகாரத்தின் ஊடாகக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகளையும் உள்ளடக்கும். ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, நிதிப் பொறுப்புகள், FVTPL இல் நியாயப் பெறுமதியாகவும், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இலாப அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

நிதிப் பொறுப்புகள், அண்மைய தவணையில் மீள் கொள்வனவு அல்லது விற்பனை செய்யும் நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள போது அல்லது குறுங்கால இலாபத்திற்காக அல்லது அவற்றின் நிலையை எடுப்பதற்காக போட்போலியோவில் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகின்ற போது, வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும். இந்த வகை, நிதிக்கருவிகளின் அங்கீகாரம் மற்றும் அளவீடுகள் மீதான LKAS 39 - இலங்கை கணக்கியல் நியமங்களில் Hedging தொடர்புகள் என வரையறை செய்யப்பட்ட Hedging கருவிகள் எனக் குறித்துரைக்கப்படாத வங்கியினால் ஈடுபடுத்தப்பட்ட வழித்தோன்றல் நிதிக் கருவிகளில் உள்ளடங்கும். வேறாக்கப்பட்ட உட்புகுத்தப்பட்ட வழித்தோன்றல்கள் வினைத்திறனான Hedging கருவிகள் எனக் குறித்துரைக்கப்படாத வரை வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிக் கருவிகள் என வகுப்பாக்கம் செய்யப்படும். வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

இவ்வகையைச் சார்ந்த எந்தவொரு நிதிப் பொறுப்பையும் வங்கி கொண்டிருக்கவில்லை.

#### 3.1.1.4.2.2 பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில் குறித்துரைக்கப்படாத, வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக் கருவிகள், பொருத்தமான வகையில் "வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய கடன்கள் காரணமாக" என்பதன் கீழ் பதிவழிப்புச் செலவில் பொறுப்பாக வகைப்படுத்தப்படும். இங்கு ஒப்பந்த ஏற்பாட்டின் சாராம்சம், வங்கி நிதிச் சொத்தை வைத்திருப்பவருக்கு பணத்தை அல்லது நிதிச் சொத்து ஒன்றினைத் தருகின்ற கடப்பாடு ஒன்றினை ஏற்படுத்தும் அல்லது அத்தகைய கடப்பாட்டை ஒரு நிலையான பணத்தொகையைப் பரிமாற்றம் செய்வதன் மூலம் அல்லது பயனுள்ள வட்டி வீதம் (EIR) முறைமையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் ஒரு நிலையான சொந்தப் பங்குரிமைப் பங்குகளுக்காக இன்னுமொரு நிதிச் சொத்தை வழங்குவதைத் தவிர்ந்த ஏனைய வகையில் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் ஆகும்.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின், இத்தகைய நிதிப் பொறுப்புகள் EIR முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படும். பதிவழிப்புச் செலவைக் கணக்கிடும் போது பயனுள்ள வட்டி வீதத்தின் (EIR) ஒரு முக்கியமான பகுதியாக அமைகின்ற செலவுகள் மற்றும் அத்தகைய வழங்குகையின் ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் என்பவன கருத்திற் கொள்ளப்படும். EIR பதிவழிப்பு வருமானக் கூற்றில் "வட்டி செலவுகள்" என்பதற்குள் உள்ளடக்கப்படும். பொறுப்புகள் அங்கீகாரமற்றதாக்கப்படும் போது EIR பதிவழிப்புச் செயன்முறை ஊடாக இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் பதியப்படும்.

இவ்வகை வங்கிகளுக்கு நிலுவையாக உள்ள தொகைகள் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு நிலுவையாக உள்ளவை மற்றும் வழங்கப்பட்ட கடன், பெறப்பட்ட கடன் நிதி என்பவற்றை உள்ளடக்கும்.

### 3.1.1.5 நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மீள் வகுப்பாக்கம் செய்தல்

வங்கி ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்துகின்ற போது, நீக்குகின்ற போது அல்லது ஒரு வியாபாரப் பகுதியை முடிவுறுத்துகின்ற போது ஆகிய சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் அதன் நிதிச் சொத்துக்களை மறுவகுப்பாக்கம் செய்யாது. நிதிப் பொறுப்புகள் ஒருபோதும் மறுவகுப்பாக்கம் செய்யப்படுவதில்லை. வங்கி 2019 ஆம் ஆண்டில் அதன் எந்தவொரு நிதிச் சொத்தையோ அல்லது பொறுப்பையோ மறுவகுப்பாக்கம் செய்யவில்லை.

### 3.1.1.6 நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அங்கீகாரமற்றதாக்குதல்

#### 3.1.1.6.1 நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஏற்பட்ட கணிசமான மாற்றம் காரணமாக அங்கீகாரமற்றதாக்குதல்

வலுக்குறைப்பு நட்டம் ஒன்று ஏற்கனவே பதியப்படாத அளவுக்கு இலாபம் அல்லது நட்டம் ஒன்றை அங்கீகாரமற்றதாக்கும் போது ஏற்படுகின்ற வேறுபாட்டின் அங்கீகாரத்துடன் வாடிக்கையாளர் ஒருவருக்கான கடனின் நியதிகளும், நிபந்தனைகளும் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டு, கணிசமான அளவில் ஒரு புதிய கடனாக வருகின்ற போது வங்கி, நிதிச் சொத்து ஒன்றினை அங்கீகாரற்றதாகும். புதிதாக அங்கீகரிக்கப்பட்ட கடன்கள், புதிய கடன், POCI ஆக கருதப்படாத வரை ECL அளவீட்டு நோக்கங்களுக்காக கட்டம் 01 ஆக வகைப்படுத்தப்படும்.

வாடிக்கையாளர் ஒருவருக்கான கடனை அங்கீகரிப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் வங்கி, ஏனைய காரணிகளுடன் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்ளும்.

- கடனின் நாணயத்தில் மாற்றம்
- புதிய பங்குரிமை அம்சம் ஒன்றை அறிமுகப்படுத்தல்
- எதிர்திறத்தவரில் மாற்றம்
- கருவிக்கு மேற்கொள்ளப்படும் திருத்தமானது SPPI அளவு கோலை ஒருபோதும் பூர்த்தி செய்யாது.

கணிசமான அளவில் வேறுபடுகின்ற நிதிப் பாய்ச்சல்களில் இந்தத் திருத்தமானது, வேறுபாட்டை ஏற்படுத்தாத போது, இத்திருத்தமானது, அங்கீகாரமற்றுள்ளதை உருவாக்காது. ஆம்ப EIR இல் கழிவு செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு வங்கி, ஏற்கனவே வலுக்குறைப்பு நட்டம் ஒன்று பதிவு செய்யப்படாத அளவுக்கு திருத்தத்தை இலாபம் அல்லது நட்டமாகப் பதியும்.

#### 3.1.1.6.2 கணிசமான திருத்தத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய விடயங்களை அங்கீகாரமற்றதாக்குதல்

##### 3.1.1.6.2(A) நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்து ஒன்றில் இருந்து பெறவேண்டிய நிதிப் பாய்ச்சலுக்கான உரிமை காலாவதியாகும் போது நிதிச் சொத்து (அல்லது பொருத்தமான இடங்களில் நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக் குழுவின் ஒரு பகுதி) அங்கீகாரமற்றதாக்கப்படும். வங்கி நிதிச் சொத்து ஒன்றைப் பரிமாற்றியுள்ள போதும் அந்தப் பரிமாற்றம் அங்கீகாரமற்றதாக்குதலுக்கு தகுதி பெறுகின்ற போது வங்கி நிதிச் சொத்து ஒன்றை அங்கிகாரமற்றதாக்கும்.

வங்கி நிதிச்சொத்து ஒன்றை பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பரிமாற்றியுள்ளது.

- நிதிச் சொத்து ஒன்றில் இருந்து நிதிப் பாய்ச்சல்களைப் பெறவேண்டிய அதன் ஒப்பந்தம்சார் உரிமைகளை மாற்றியுள்ளது.

அல்லது

- நிதிப் பாய்ச்சலுக்கான உரிமையை வங்கி தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஆயின், மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு "கடந்து செல்லல்" என்ற ஏற்பாட்டின் கீழ் பொருளளவான தாமதம் இன்றி பெறப்பட்ட நிதிப் பாய்ச்சலை முழுமையாகச் செலுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது என்பதை அனுமானிக்கின்றது.

கடந்து செல்லல் ஏற்பாடுகள் என்பது, நிதிச் சொத்து ஒன்றின் "ஆரம்பச் சொத்து" நிதிப் பாய்ச்சலைப் பெறும் ஒப்பந்த உரிமைகளை வங்கி தக்க வைத்துக்கொள்ளும் பரிவர்த்தனைகள் ஆகும். ஆயின், பின்வரும் அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அத்தகைய நிதிப் பாய்ச்சல்களை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட (இறுதிப் பெறுநர்கள்) நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ஒப்பந்தம்சார் கடப்பாடு உள்ளது என்பதை அனுமானிக்கிறது.

- வங்கி, ஆரம்பச் சொத்துக்களில் இருந்து அதற்குச் சமமான தொகைகளை, வழங்கப்பட்ட தொகைகளை முழுமையாக மீட்டெடுக்கும் உரிமையுடன் குறுங்கால முற்பணங்களைத் தவிர்த்து சந்தை விலைகளில் உள்ள திரண்ட வட்டிகளைச் சேர்த்து சேகரிக்காத வரை இறுதிப் பெறுநர்களுக்கு தொகைகளைச் செலுத்த வேண்டிய கடப்பாடு வங்கிக்கு இல்லை.

- வங்கி ஆரம்பச் சொத்தினை இறுதிப் பெறுநர்களுக்கு பிணையமாக வழங்குவதைத் தவிர விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியாது.
- வங்கி பொருளளவான தாமதமின்றி இறுதிப் பெறுநர்கள் சார்பாகச் சேகரிக்கும் எந்தவொரு நிதிப் பாய்ச்சலையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சேகரிக்கும் திகதிக்கும், இறுதிப் பெறுநர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் சம்பாதிக்கப்பட்ட வட்டி உள்ளடங்கலாக, காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளுக்கான முதலீடுகள் தவிர வங்கி அத்தகைய நிதிப் பாய்ச்சல்களை மீள் முதலீடு செய்ய உரித்துடையது அல்ல.

ஒரு பரிமாற்றமானது, பின்வரும் இரண்டில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் அங்கீகாரம் அற்றதாக்குதலுக்குத் தகுதி பெறும் :

- சொத்தினுடைய அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் வங்கி கணிசமான அளவில் மாற்றுதல்.

அல்லது,

- வங்கி சொத்தின் அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் மாற்றாது அல்லது தக்க வைக்காமல் இருத்தல். ஆயின், சொத்தினுடைய கட்டுப்பாடை மாற்றியிருத்தல்.

கைமாற்றிப் பெறுபவர் குறிப்பிட்ட சொத்தை முழுமையாக தொடர்புபடாத மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கான நடைமுறை ரீதியான தகைமை உள்ள போதும், அந்த தகைமையை ஒரு பக்கமாக பிரயோகிப்பதற்கு இயலுமாக இருக்கும் போதும் குறிப்பிட்ட கைமாற்றத்தின் மீது எவ்வித மேலதிக மட்டுப்பாடுகளையும் விதிக்காமல் விற்பனை செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ள போது மாத்திரமே வங்கி கட்டுப்பாட்டு மாற்றம் பற்றிக் கருத்திற் கொள்ளும்.

வங்கி சொத்து ஒன்றின் அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றாமல் அல்லது தக்க வைக்காமல் அத்துடன், சொத்தின் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து வைத்திருக்கும் போது, வங்கியின் தொடர்ச்சியான தலையீட்டின் அளவு வரை மாத்திரமே சொத்து தொடர்ந்து அங்கீகரிக்கப்படும். இத்தகைய சூழ்நிலையில் வங்கி அதனுடன் தொடர்புபட்ட பொறுப்பையும் அங்கீகரிக்கும். கைமாற்றப்பட்ட சொத்து மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பொறுப்பு என்பன, வங்கி தக்க வைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய அடிப்படையில் அளவிடப்படும்.

கைமாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாத அடிப்படையிலான வங்கியின் தொடர்ச்சியான தலையீடு, சொத்தின் ஆரம்ப எடுத்துச் செல்லும் தொகையைவிடக் குறைந்த தொகையில் அளவிடப்படும். அத்துடன், பிரதிபயனின் அதிகூடிய தொகையை மீளச் செலுத்துமாறு வங்கி தேவைப்படுத்தப்படலாம்.

கைமாற்றப்பட்ட சொத்தின் தொடர்ச்சியான தலையீடு ஒரு எழுதப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட தெரிவு (அல்லது இரண்டும்) அடிப்படையில் இருக்கும் போது, மீள் கொள்வனவு மீது வங்கி செலுத்த தேவைப்படுத்தப்படும் தொகையில் சொத்தின் தொடர்ச்சியான தலையீடு அளவிடப்படும். சொத்தின் மீது ஒரு எழுதப்பட்ட தெரிவு அடிப்படையிலான சந்தர்ப்பத்தில் அது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், நிறுவனத்தின் தொடர்ச்சியான தலையீட்டின் அளவு கைமாற்றப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதிக்கும் தெரிவு பிரயோக விலைக்கும் மட்டுப்படுத்தப்படும்.

3.1.1.6.2**(B)** நிதிப் பொறுப்புகள்

நிதிப் பொறுப்பு ஒன்றின் கடப்பாடு பூர்த்தி செய்யப்படுகின்ற போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகின்ற போது அந்நிதிப் பொறுப்பு அங்கீகாரம் அற்றதாக்கப்படும். தற்போதுள்ள நிதிப் பொறுப்பு ஒன்று அதே கடன் தருநரிடம் இருந்து கணிசமான அளவில் மாறுபட்ட நியதிகளுடன் இன்னுமொரு பொறுப்பினால் பதிலீடு செய்யப்படும் போது அல்லது தற்போதுள்ள பொறுப்பின் நியதிகள் கணிசமான அளவு திருத்தப்படும் போது அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பினுடைய ஒரு அங்கீகாரமற்றதாக்குதலாக கருதப்படுவதுடன், ஒரு புதிய பொறுப்பாக அங்கீகரிக்கப்படும். ஆரம்ப நிதிப் பொறுப்புனுடைய கொண்டு செல்லும் பெறுமதிக்கும், செலுத்தப்பட்ட பிரதிபயனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

3.1.1.7 **ECL** எண்ணக்கருக்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

வங்கி FVPL இல் வைத்திருக்கின்ற அனைத்துக் கடன்கள் மற்றும் ஏனைய கடன் நிதிச் சொத்துக்கள் என்பவற்றை இந்தப் பகுதியில் "நிதிக் கருவிகள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கடப்பாடுகள் மற்றும் நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் என்பவற்றுடன் வருகின்ற அனைத்து விடயங்களுக்கும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான கொடுப்பனவைப் பதிவு செய்து வருகின்றது. பங்குரிமைக் கருவிகள் SLFRS 9 இன் கீழ் வலுக்குறைப்புக்கு உட்பட்டவை அல்ல.

12 மாதகால ECL, LTECLகளின் ஒரு பகுதியாக அமைவதோடு, அவை அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் எழ சாத்தியமான நிதிக் கருவி ஒன்றின் மீது தவறுகை நிகழ்வுகளில் இருந்து எழுகின்ற ECL களை பிரதிபலிக்கும்.

LTECL மற்றும் 12 MECL என்பன நிதிக் கருவிகளின் அடிப்படையாக அமைகின்ற போட்போட்போலியோவின் இயல்பின் அடிப்படையில் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ கணக்கிடப்படும். வங்கியினுடைய நிதிச் சொத்துக்களை குழுமப்படுத்தி, கூட்டான அடிப்படையில் எவ்வாறு அளவிடுவது என்பது பற்றி கீழே விளக்கமளிக்கப்பட்டுள்ளது. நிதிக்கருவி ஒன்றின் எஞ்சிய வாழ்காலத்தில் இடர் தவறுகை மீது ஏற்படுகின்ற மாற்றத்தைக் கருத்திற் கொள்வதன் மூலம், நிதிக் கருவி ஒன்றின் கடன் இடர் அதன் ஆரம்ப அங்கீகரிப்பில் இருந்து கணிசமான அளவு அதிகரித்துள்ளதா என்பதை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கான கொள்கை ஒன்றை வங்கி ஸ்தாபித்துள்ளது.

மேலே குறிப்பிட்ட செயன்முறையின் அடிப்படையில், வங்கி அதன் கடன்களை கீழே விபரிக்கப்பட்டவாறு கட்டம் 1, கட்டம் 2, கட்டம் 3, POCI என குழுமப்படுத்தியுள்ளது.

கட்டம் 1 : கடன்கள் முதல் முறையாக அங்கீகரிக்கப்படும் போது, வங்கி, அதற்கான கொடுப்பனவை 12M ECL அடிப்படையில் அங்கீகரிக்கும். கட்டம் 1 க்குள் வருகின்ற கடன்கள், கடன் இடர் மேம்பட்டுள்ள வசதிகளும், கட்டம் 2 இல் இருந்து மறுவகுப்பாக்கம் செய்யப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

கட்டம் 2 : அதன் தோற்றத்தில் இருந்து கடன் ஒன்று அதன் கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காட்டினால் வங்கி LTECL க்காகக் கொடுப்பனவைப் பதிவு செய்யும். கட்டம் 2 வருகின்ற கடன்கள், கடன் இடர் மேம்பட்டுள்ள வசதிகளும் கட்டம் 3 இல் இருந்து மறுவகுப்பாக்கம் செய்யப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

கட்டம் 3 : கடன் வலுக் குறைக்கப்பட்ட கடன்கள், வங்கி, LTECL க்காக கொடுப்பனவைப் பதிவு செய்யும்.

POCI : கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கடன் வலுக்குறைப்பில் இருந்து தோன்றிய சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின் மீது கடனுக்காக வலுக்குறைப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் ஆகும். POCI சொத்துக்கள் அதன் ஆரம்ப அங்கீகாரத்தின் போது நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதுடன், அதனை அடுத்து அதனுடைய வட்டி வருமானம் ECL க்கு சீராக்கப்பட்ட கடன் அடிப்படை மீது அங்கீகரிக்கப்படும். எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களில் உடனடுத்த மாற்றம் ஒன்று ஏற்படும் அளவுக்கு மாத்திரமே ECLகள் அங்கீகரிக்கப்படும் அல்லது விடுவிக்கப்படும். அறிக்கையிடும் திகதியில் வங்கி எந்தவொரு POCI சொத்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

நிதிச் சொத்துக்கள் ஒன்றினுடைய முழுமையான நிலுவைத் தொகையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ மீட்பதற்கு வங்கிக்கு நியாயமான எதிர்பார்ப்புகள் இல்லாத நிதிச் சொத்துக்களுக்காக அந்த நிதிச் சொத்தின் மொத்த கொண்டு செல்லும் தொகை குறைக்கப்படும். இது, நிதிச் சொத்து ஒன்றினை (பகுதியளவில்) அங்கீகாரமற்றதாக்குதலாக கருதப்படும்.

3.1.1.7.1 **ECLS**களை கணக்கிடுதல்

EIR க்குக் கிட்டிய வகையில் தள்ளுபடி செய்யப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நிதிப் பற்றாக்குறைகளை அளவிடுவதற்கு வங்கி ஒரு நான்கு நிகழ்தகவு எடையுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் கணக்கிடும். ஒரு நிதிப் பற்றாக்குறை என்பது நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் ஒன்றுக்கு அமைவாக வரவேண்டிய நிதிப் பாய்ச்சலுக்கும் நிறுவனம் ஒன்று பெற எதிர்பார்க்கும் நிதிப் பாய்ச்சலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஆகும்.

ECL கணக்கீடுகளின் பொறிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் முக்கியமான கூறுகள் பின்வருமாறு:

PD : தவறுகைகளின் நிகழ்தகவு என்பது, ஒரு தரப்பட்ட கால எல்லைக்குள் தவறுகை ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியத்தன்மையின் ஒரு மதிப்பீடாகும். குறிப்பிட்ட வசதி ஒன்று ஏற்கனவே அங்கீகரிக்கப்படாமல் இன்னும் போட்போலியோவில் இருக்குமாயின், ஒரு தவறுகையானது, மதிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் ஏற்படலாம்.

EAD : தவறுகையின் வெளிப்பாடு என்பது, அறிக்கையிடும் திகதியின் பின்னர் வெளிப்படுத்தலில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களைக் கருத்திற் கொள்வதோடு, முதல் மற்றும் வட்டியை மீளச் செலுத்தல் உள்ளடங்கலாக ஒரு எதிர்கால தவறுகை திகதியில் ஏற்படும் வெளிப்பாட்டின் ஒரு மதிப்பீடு ஆகும். இது, ஒப்பந்தம் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ திட்டமிடப்பட்டு செலுத்த உத்தரவாதமளிக்கப்பட்ட வசதிகளில் எதிர்பார்க்கப்பட்ட இறக்கங்கள் மற்றும் தவறவிடப்பட்ட செலுத்துகையில் இருந்து பெறுகின்ற சிறந்த வட்டியையும் உள்ளடக்கும்.

LGD : இழப்பு தரப்பட்ட தவறுகை என்பது, தவறுகை ஒன்று குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறுகின்ற போது, அதிலிருந்து ஏற்படுகின்ற நட்டத்தை மதிப்பிடுதல் ஆகும். இது, ஏதேனும் பிணையம் ஒன்றின் மதிப்பு பெறுதலில் இருந்து பெறப்படும் தொகை உள்ளடங்கலாக நிலுவையான ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சலுக்கும், கடன் வழங்குநர் பெற எதிர்பார்க்கும் தொகைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். இது வழமையாக EAD உடைய விகிதாசாரமாக வெளிப்படுத்தப்படுகிறது.

ECLகளை மதிப்பிடும் போது வங்கி மூன்று சூழ்நிலைகளைக் கருத்திற் கொள்ளும். அவையாவன, அடிப்படை சம்பவம், சிறந்த சம்பவம் மற்றும் மோசமான சம்பவம் என்பனவாகும். இந்த ஒவ்வொரு சூழ்நிலையின் பல்வேறுபட்ட PD க்கள் EADக்கள் மற்றும் LGDக்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டன. பொருத்தமான இடங்களில் பலதரப்பட்ட சூழ்நிலைகளின் மதிப்பீடு தவறவிடப்பட்ட கடன்கள் எவ்வாறு மீளப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் கூட்டிணைத்துக் கொள்ளும். மேலும், இது, கடன்களை எவ்வாறு செலுத்தித் தீர்க்கலாம் என்பதையும், பிணையத்தை, மதிப்பை அல்லது சொத்து ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் பெற வேண்டிய தொகை என்பவற்றையும் உள்ளடக்கும்.

நிதிச் சொத்துக்கான கொண்டு செல்லும் பெறுமதிக்கு ஒரு சீராக்கமாக, கணக்குக் காட்டப்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்களில் இருந்து ஏற்படுகின்ற திருத்தங்களில் இருந்து வேறாக வலுக்குறைப்பு நட்டங்கள் மற்றும் விடுபாடுகள் கணக்கில் காட்டப்பட்டு பிரத்தியேகமாக வெளிப்படுத்தப்படும்.

ECL முறையின் பொறிமுறைகள் கீழே சாராம்சமாகத் தரப்பட்டுள்ளன:

கட்டம் 1 : 12 மாதகால ECL, LTECL களின் ஒரு பகுதியாகும். அவை, அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் எழ சாத்தியமான நிதிக் கருவி ஒன்றின் மீது தவறுகை நிகழ்வுகளில் இருந்து எழுகின்ற ECL களைப் பிரதிபலிக்கும். வங்கி 12mECL க்கான கொடுப்பனவை அறிக்கையிடும் திகதியைத் தொடர்ந்து 12 மாதகாலப் பகுதிக்குள் நடைபெறும் ஒரு தவறுகையின் எதிர்பார்ப்பு மீது தங்கி நின்று கணக்கிடும். இந்த எதிர்பார்க்கப்பட்ட 12 மாத தவறுகை நிகழ்தகவுகள், ஒரு எதிர்வுகூறப்படும் EAD க்குப் பிரயோகப்படுவதுடன், எதிர்பார்க்கப்பட்டு LGD ஆல் பெருக்கப்பட்டு ஆரம்ப EIR உடைய ஒரு அண்ணளவான தொகையினால் தள்ளுபடி செய்யப்படும். இந்தக் கணக்கீடானது, மேலே விளக்கப்பட்ட மூன்று சூழ்நிலைகளில் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் மேற்கொள்ளப்படும்.

கட்டம் 2 : கடன் ஒன்று அதன் தோற்றத்தில் இருந்து கடன் இடரில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்ற போது, வங்கி LTECLக்காக கொடுப்பனவு ஒன்றைப் பதிவிடும். இதன் பொறிமுறைகளும் மேலே கூறப்பட்ட பொறிமுறைகளை ஒத்தவைகளாகும். இது, பலதரப்பட்ட சூழ்நிலைகளின் பயன்பாட்டையும் உள்ளடக்கும். ஆயின், PDக்கள் மற்றும் LGDக்கள் கருவியின் ஆயுள்காலத்தின் மீது மதிப்பிடப்படும். எதிர்பார்க்கப்பட்ட நிதிப் பற்றாக்குறைகள் ஆரம்ப EIR உடைய ஒரு அண்ணளவிற்குத் தள்ளுபடி செய்யப்படும்.

கட்டம் 3 : கடன் வலுக்குறைப்பாகக் கருதப்பட்ட கடன்களுக்காக, வங்கி ஆயுள் காலம் முழுவதும் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளை அங்கீகரிக்கும். இதற்குரிய முறைமை கட்டம் 2 இனுடைய சொத்துக்களுக்கான முறைமையை ஒத்தது. இது PD 100% அமைக்கப்பட்டுள்ளது.

POCI : POCI சொத்துக்கள் என்பது, ஆரம்ப அங்கீகாரத்தின் மீது கடன் வலுக்குறைப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களாகும். வங்கி, ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து ஆயுள் கால ECLகளில் திரண்ட மாற்றங்களை மாத்திரமே அங்கீகரிக்கும். இது, EIRக்கு சீராக்கப்பட்ட கடனில் இருந்து தள்ளுபடி செய்யப்பட்டு நான்கு சூழ்நிலைகளின் நிகழ்தகவு எடை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அறிக்கையிடும் திகதியில் வங்கி எந்தவித POCI சொத்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்:

கடன் மற்றும் மீட்கப்படாத கடப்பாட்டை உள்ளடக்கிய கடன் அட்டைகள் மற்றும் சுழற்சி வசதிகள் என்பவற்றுக்க ECLகள் கணக்கிடப்படுவதுடன், கடன்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படும். கடன் கடப்பாடுகளுக்கு ECLகள் ஏற்பாட்டுக்குள்ளேயே அங்கீகரிக்கப்படும்.

### 3.1.1.7.2 தனித்தனியாக முக்கியம் பெறும் கடன்களுக்கான ECL கணக்கிடுகள்

வங்கி அதற்குத் தனித்தனியாக முக்கியத்துவம் பெறும் நிதிச் சொத்துக்களுக்காக, தனித்தனியாக ECLகளை முதலில் கணக்கிடும். இத்தகைய சொத்துக்கள் வலுக்குறைப்புச் செய்யப்படவில்லை எனத் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில் (கட்டம் 3 இல் இல்லாத) வங்கி, குறிப்பிட்ட சொத்தை ஒத்த கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுமம் ஒன்றில் உள்ளடக்குவதுடன், வலுக்குறைப்புக்காக அவற்றைக் கூட்டாக மதிப்பீடு செய்யும். எனினும், வலுக்குறைப்புக்காக தனித்தனியாக மதிப்பிடப்பட்ட சொத்துக்களுக்கு, வலுக்குறைப்பு நட்டம் இருப்பின் அல்லது தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வரின் அவை, வலுக்குறைப்புக்கான கூட்டு மதிப்பீட்டில் உள்ளளடக்கப்பட மாட்டாது.

சொத்து ஒன்று வலுக்குறைப்புச் செய்யப்பட்டு, நிதிச் சொத்து ஒன்றின் ஆரம்பப் பயனுள்ள வட்டி விகிதத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சலைத் தள்ளுபடி செய்வதன் மூலம், நட்டமடைகின்ற தொகை மதிப்பிடப்பட்டால், அதிலிருந்து பெறப்படுகின்ற தற்போதைய பெறுமதி நிதிச் சொத்தினுடைய கொண்டு செல்லும் தற்போதைய பெறுமதியுடன் ஒப்பிடப்படும். தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த கணக்குகள் மீதான வலுக்குறைப்பு சூழ்நிலைகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அடிக்கடி மீளாய்வு செய்யப்படும். இது, சாதாரணமாக, ஏதேனும் வைத்திருக்கப்படும் பிணையத்தில் அமுல்படுத்துகையின் மீள் மதிப்பீடு, நேரம், உண்மையான மற்றும் எதிர்பார்க்கப்படும் வரவுகளின் தொகை என்பவற்றை உள்ளடக்கியது. தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட வலுக்குறைப்புகள், ஸ்தாபிக்கப்பட்ட நட்ட மதிப்பீட்டில் குறைவு ஏற்படுவதற்கான நியாயமான மற்றும் புறநிலைத்தன்மையுடைய சான்று ஒன்று உள்ளபோது மட்டுமே வெளியிடப்படும். வலுக்குறைப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான வட்டி தள்ளுபடி விலக்கப்படுவதன் மூலம் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

தனித்தனியாக முக்கியத்துவம் பெறும் நிதிச் சொத்துக்களுக்கு ECLகள் தீர்மானிக்கப்படும் போது, பின்வரும் காரணிகள் கருத்திற் கொள்ளப்படும்:

- ஏதேனும் மீட்கப்படாத வெளிப்பாடுகளை உள்ளடக்கிய வாடிக்கையாளருக்கான மொத்த வெளிப்பாடு.
- வாடிக்கையாளரின் வணிக மாதிரியின் சாத்தியத்தன்மை மற்றும் நிதிச் சிரமங்களுக்கு அப்பால் வியாபாரத்தைக் கொண்டு நடத்தக்கூடிய அவர்களின் தகைமை மற்றும் சேவைக் கடன் கடப்பாடுகளுக்கு போதுமான நிதிப் பாய்ச்சல்களை ஈட்டுதல்.
- எதிர்பார்க்கப்படும் வரவுகள் மற்றும் மீட்புகளின் தொகையும் காலமும்
- ஏனைய கடன் வழங்குநர்களின் முன்னால் வருகின்ற கடமைகளின் தர வரிசை அல்லது ஒரே நேரத்தில் வங்கியுடன் இணையாக மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களின் வங்கிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்காக சந்தர்ப்பம்.
- மொத்தத் தொகையைத் தீர்மானிப்பதில் ஏற்படும் சிக்கல் மற்றும் அனைத்து கடன் கோரிக்கைகளையும் தர வரிசைப்படுத்துதல் மற்றும் எந்தளவிற்கு சட்ட மற்றும் காப்புறுதி நிச்சயமற்ற தன்மைகள் தெளிவாக உள்ளன.
- பாதுகாப்பின் மதிப்புப் பெறக்கூடிய பெறுமதி (அல்லது ஏனைய கடன் தணிப்புகள்) மற்றும் வெற்றிகரமான மீள் உடமை கொள்வதற்கான சாத்தியம்.
- நிலுவையாக உள்ள தொகைகளை மீட்டெடுப்பதில் தொடர்புபட்ட ஏதேனும் செலவுகளைக் கழித்தல்.
- உள்நாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்படா விட்டால், கடன் பெறப்பட்ட நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் செலுத்துவதற்குமான கடன் பெறுநரின் திறமை மற்றும்
- கம்பனி கலைப்பு அல்லது நொடிப்பு நிலையில் கிடைக்கும் பங்கிலாபம்.

### 3.1.1.7.3 OCI ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்

FVOCI இல் கடன் கருவிகளுக்காக அளவிடப்பட்ட ECLகள் இந்நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் குறைக்காது, அதன் நியாயப் பெறுமதியிலேயே தொடர்ந்து இருக்கும். இதற்குப் பதிலாக குறிப்பிட்ட சொத்துக்கள், அதன் பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்டால், அதிலிருந்து பெறப்படும் கொடுப்பனவுக்கு ஒரு சமமான தொகை OCI இல் ஒரு திரண்ட வலுக்குறைப்புத் தொகையாக வருமானக் கூற்றில் அதனுடன் தொடர்புபட்ட ஒரு கட்டணமாகப் பதியப்படும். OCI இல் அங்கீகரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நட்டம் சொத்துக்களை அங்கீகாரமற்றதாக்குதல் மூலம் பெறப்படும் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் சுழற்சி செய்யப்படும்.

### 3.1.1.7.4 கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கடன் வலுக்குறைப்புத் தோன்றிய நிதிச் சொத்துக்கள் (POCI)

POCI நிதிச் சொத்துக்களுக்கு வங்கி நட்டக் கொடுப்பனவுக்கான ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து LTECL இல் திரண்ட மாற்றங்களை மாத்திரமே அங்கீகரிக்கும்.

### 3.1.1.7.5 முன்னோக்கிப் பார்க்கும் தகவல்

வங்கி அதன் ECL மாதிரிகளில் பின்வரும் காரணிகள் போன்ற பொருளாதார உள்ளீடுகளுடன் தொடர்புடைய பலதரப்பட்ட முன்னோக்கிப் பார்க்கும் தகவல்களில் தங்கியுள்ளது.

- GDP வளர்ச்சி
- பணவீக்க விகிதம்
- வட்டி விகிதங்கள்
- நாணயமாற்று விகிதம் US$:ரூபா
- தொழிலின்மை விகிதங்கள்

ECLகளைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளும், மாதிரிகளும் நிதிக் கூற்றுக்களின் திகதியன்று உள்ள சந்தையின் அனைத்துப் பண்புகளையும் எப்போதும் உள்ளடக்காது. இதனைப் பிரதிபலிக்க அத்தகைய வேறுபாடுகள் முக்கியமாக இருக்கும் போது தற்காலிகச் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தர அடிப்படையிலான சீராக்கங்கள் சில தறுவாய்களில் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, வங்கி பின்வரும் தர அடிப்படையிலான காரணிகளையும் கருத்திற் கொள்கின்றன.

- சராசரி LTV
- அரசாங்கக் கொள்கைகள்
- கைத்தொழில் வணிக அந்தஸ்து
- ஒழுங்குபடுத்தல் தாக்கம்

### 3.1.1.7.6 பிணைய மதிப்பீடு

நிதிச் சொத்துக்கள் மீதான கடன் இடர்களைத் தணிப்பதற்கு, வங்கி சாத்தியமான இடங்களில் பிணையங்களைப் பயன்படுத்துகிறது. பிணையங்கள் காசு, கடன் பத்திரங்கள், கடன் கடிதங்கள்/ உத்தரவாதங்கள், மெய்சொத்து வரவுகள், இருப்புப் பட்டியல்கள், ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் கடன் மேம்படுத்தல்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் இருந்து வருகிறது. பிணையத்திற்கான வங்கியின் கணக்கியல் கொள்கை LKAS 39 இன் கீழ் இருந்த அதனை ஒத்த SLFRS 9 இன் கீழ் உள்ள கடன் ஏற்பாடுகள் ஊடாக ஒதுக்கப்படுகிறது.

### 3.1.1.7.7 மீள் உடைமை கொள்ளப்பட்ட பிணையம்

மீள் உடமை கொள்ளப்பட்ட சொத்து ஒன்றினை வங்கி அதன் உள்ளக செயற்பாடுகளுக்காக சிறந்த வகையில் பயன்படுத்த முடியுமா அல்லது அச்சொத்து விற்பனை செய்யப்பட வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்கும் கொள்கையை வங்கி கொண்டுள்ளது. உள்ளக செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட சொத்துக்கள், அவற்றின் மீள் உடைமை கொள்ளப்பட்ட பெறுமதியை விடக் குறைவாக அல்லது ஆரம்பப் பாதுகாக்கப்பட்ட சொத்தினுடைய கொண்டு செல்லும் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதியில் அச்சொத்துக்களின் பொருத்தமான சொத்து வகுதிக்குள் மாற்றப்படும். விற்பனை செய்யப்படுவது சிறந்த தெரிவு எனத் தீர்மானிக்கப்படும் சொத்துக்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் (நிதிச் சொத்துக்களாக இருந்தால்) விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் என்ற வகைக்குள் மாற்றப்படுவதுடன், வங்கியின் கொள்கைக்கு அமைவாக மீள் உடைமை கொள்ளப்படும் திகதியில் நிதி அல்லாத சொத்துக்களை விற்பனை செய்வதற்கான செலவு நியாயப் பெறுமதியில் இருந்து குறைக்கப்படும்.

வங்கி அதன் சாதாரண வியாபார நடவடிக்கைகளில் பௌதீக அடிப்படையில் ஆதனங்களையோ அல்லது ஏனைய சொத்துக்களையோ அதன் சில்லறை போட்போலியோவுக்குள் மீள் உடைமை கொள்ளாது. ஆயின், நிலுவைக் கடன்களைச் செலுத்தித் தீர்ப்பதற்காக பொதுவாக ஏல விற்பனைகளில் நிதிகளை மீளப் பெறுவதற்காக வெளியக முகவர்களை ஈடுபடுத்தும். எந்தவொரு மிகை நிதியும் வாடிக்கையாளர்களுக்கு அல்லது கடப்பாட்டாளர்களுக்கு திருப்பிச் செலுத்தப்படும். இந்த நடைமுறை காரணமாக, சட்ட மீள் உடைமை கொள்ளல் செயன்முறையின் கீழ் உள்ள குடியிருப்புச் சொத்துக்கள் ஐந்தொகையில் பதிவு செய்யப்பட மாட்டாது.

### 3.1.1.7.8 தள்ளுபடி செய்தல்

வங்கி, மீட்பு நடவடிக்கையை நிறுத்துகின்ற போது, நிதிச் சொத்துக்கள் பகுதியளவாகவோ அல்லது முழுமையாகவோ தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்பட வேண்டிய தொகை, திரண்ட நட்டக் கொடுப்பனவை விட அதிகமாக இருக்கும் போது, அவற்றுக்கிடையிலான வேறுபாடு மொத்த எடுத்துச் செல்லும் தொகைக்கு எதிராக அப்போது பிரயோகமாகும் கொடுப்பனவுக்கு ஒரு சேர்க்கையாக முதலில் கருதப்படும். அதனை அடுத்து வரும் ஏதேனும் மீட்புகள் கடன் நட்டச் செலவில் வரவு வைக்கப்படும்.

### 3.1.1.7.9 சகிப்புக் கடன்கள் மற்றும் திருத்தப்பட்ட கடன்கள்

வங்கி, சில வேளைகளில் கடன் பெறுநரின் நிதிச் சிரமங்களுக்குப் பதிலளிக்கும் முகமாக, பிணையங்களை உடைமை கொள்ளாது அல்லது வேறு வகையில் பிணையங்களைச் சேகரிப்பதை அமுல்படுத்தாது, கடன்களின் ஆரம்ப நியதிகளில் சில சலுகைகளை வழங்கும் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளும். வங்கி, கடன் பெறுநரின் தற்போதைய அல்லது எதிர்பார்க்கப்படும் நிதிச் சிரமங்களின் விளைவாக, அத்தகைய சலுகைகளை அல்லது திருத்தங்களை ஒரு "சகிப்புக் கடனாகக்" கருதுவதுடன், கடன் பெறுநர் நிதி வலிமை உடையவராக இருப்பின், அவ்வாறு மேற்கொள்வதற்கு இணங்கியிருக்காது. கடன் இடர் திணைக்களத்தினால் குறிப்பான கவனம் எடுக்கும் சந்தர்ப்பங்கள் அல்லது கடப்பாட்டில் தவறுகை ஏற்படுகின்ற போது, அவை நிதி சிரமங்களின் குறிகாட்டிகளாக அமையும். "சகிப்பு" என்பது, கடன் ஏற்பாடுகளை நீடித்தல் மற்றும் புதிய கடன் நிபந்தனைகளுக்கு உட்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். புதிய நியதிகள் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்பட்ட பின்னர், நிபந்தனைகளைத் திருத்துவதற்கு முன்னர் இருந்த நிலையில் ஆரம்ப EIR ஐ பயன்படுத்தி ஏதேனும் வலுக்குறைப்பு அளவிடப்படும். வங்கி எதிர்காலக் கொடுப்பனவுகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சகிப்புக் கடன்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. கட்டம் 2 மற்றும் கட்டம் 3 என்பவற்றுக்கு இடையிலான அங்கீகாரமற்றவை களுக்கான தீர்மானங்கள் மற்றும் வகுப்பாக்கம் என்பன ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படும். இந்த நடைமுறைகள் கடனுடன் தொடர்புடைய நட்டம் ஒன்றாகக் கண்டறியப்படின், அத்தொகை சேகரிக்கப்படும் வரை அல்லது தள்ளுபடி செய்யப்படும் வரை கட்டம் 3 இல் உள்ள ஒரு வலுக்குறைப்பாக வெளிப்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படும்.

கடன் ஒன்று மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படும் போது அல்லது திருத்தப்படும் போது, ஆயின், அங்கீகாரமற்றதாக்கப்படாத போது வங்கி, குறிப்பு 46.2 இல் குறிப்பிடப்பட்டவாறு, கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளதா என்பதை மீள் மதிப்பீடு செய்யும். மேலும், வங்கி, குறிப்பிட்ட சொத்து கட்டம் 3 ஆக வகைப்படுத்த வேண்டுமா என்பதையும் தீர்மானிக்கும்.

### 3.1.1.7.10 முன்கூட்டிய சொத்துக்கள்

முன்கூட்டிய சொத்துக்கள், கடன்களை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்துவதற்காக, கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களைப் பிரதிபலிக்கும், முன்கூட்டிய சொத்துக்களில் நிலவுகின்ற சந்தைப் பெறுமதிக்கும், தொடர்புபட்ட நிலுவைக் கடனுக்கும் இடையிலான பற்றாக்குறை, கடனைத் திருப்திப்படுத்துவதற்காக குறிப்பிடப்பட்ட சொத்தைக் கையகப்படுத்தும் வருடத்தின் போது வருமானக் கூற்றில் கடன் நட்டங்களுக்கான ஒரு ஏற்பாடாக அகீகரிக்கப்படும்.

### 3.1.1.7.11 நிதிக்கருவிகளை ஈடுகட்டுதல்

நிதிச் சொத்துக்களும், நிதிப் பொறுப்புக்களும் ஈடுகட்டப்படுவதுடன், தேறிய தொகை அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கு தற்போது அமுலாக்கக்கூடிய சட்ட உரிமை ஒன்று உள்ள போது மற்றும் அதனை நிகர அடிப்படையில் தீர்த்துக் கட்டுவதற்கு ஒரு மன எண்ணம் உள்ள போது அல்லது சொத்து மதிப்புப் பெறுகின்ற போது மற்றும் பொறுப்பையும் ஒரே நேரத்தில் தீர்த்துக்கட்டும் போது மாத்திரமே நிதிநிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும். இத்தகைய சூழ்நிலை, முதன்மை நிகர அளவு உடன்படிக்கைகளில் பொதுவாக எழுவதில்லை. எனவே, தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதிநிலைக் கூற்றில் மொத்தமாகப் பதியப்படும்.

### 3.1.1.8 நியாயப் பெறுமதியைத் தீர்மானித்தல்

நியாயப் பெறுமதி என்பது, அளவீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்கள் இடையே ஒரு முறையான பரிவர்த்தனையில் சொத்து ஒன்றை விற்பதன் மூலம் பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினைக் கைமாற்றுவதற்காக செலுத்தப்படும் தொகை ஆகும். நியாயப் பெறுமதி அளவீடானது, குறிப்பிட்ட சொத்தை விற்பனை செய்வதற்கான அல்லது குறிப்பிட்ட பொறுப்பைக் கைமாற்றுவதற்கான விடயம் பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நிகழும் என்ற அனுமானத்தில் தங்கியுள்ளது.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது,
- முதன்மை சந்தை ஒன்று இல்லாதவிடத்து சொத்து அல்லது பொறுப்புக்கு அதிக நன்மை பயக்கும் சந்தையில்

முதன்மை அல்லது அதிக பயன்தரும் சந்தையை வங்கி அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் நியாயப் பெறுமதி, சந்தைப் பங்குபற்றுனர்கள் சொத்து அல்லது பொறுப்புக்கு விலையிடுகின்ற போது அவர்களுடைய பொருளாதார சிறந்த அக்கறையின் அடிப்படையில் விலையைத் தீர்மானிப்பர் என்ற அனுமானங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது.

நிதி அல்லாத சொத்து ஒன்றின் நியாயப் பெறுமதி மதிப்பீடானது, சந்தைப் பங்குபற்றுநர் ஒருவருடைய குறிப்பிட்ட சொத்தை உயர்ந்த அல்லது சிறந்த பயன்பாட்டின் அடிப்படையில் பொருளாதார அனுகூலங்களைப் பெறுவார் அல்லது அவர் இன்னுமொரு சந்தைப் பங்குபற்றுனருக்கு விற்பனை செய்யப்படுவதன் மூலம் குறிப்பிட்ட சொத்து அதன் உயர்ந்த அல்லது சிறந்த பயன்பாட்டைப் பெறும் என்ற விடயம் கருத்தில் எடுக்கப்படுகிறது.

வங்கி, குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தும். அதற்காக, நியாயப் பெறுமதியை அளவிடுவதற்கு, போதுமான தரவுகள் உள்ளன, மேலும், வங்கி பொருத்தமான அனுமானிக்கக்கூடிய உள்ளீடுகளை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதோடு, அவதானிக்கப்படாத உள்ளீடுகளின் பயன்பாட்டை இயன்றளவு குறைக்கும்.

நியாயப் பெறுமதி அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட அனைத்துச் சொத்துக்களும், பொறுப்புகளும், நிதிக் கூற்றுகளில் நியாயப் பெறுமதி பதவணிக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன, அவை, பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன. இந்த வகைப்படுத்தலானது, ஒட்டு மொத்த அடிப்படையில் நியாயப் பெறுமதி மதிப்பீட்டுக்கு முக்கியமான குறைந்தமட்ட உள்ளீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் இயங்கும் சந்தைகளில் மதிப்பிடப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய நியாயப் பெறுமதி அளவீட்டுக்கு உரிய முக்கியமான குறைந்தமட்ட உள்ளீடுகளுக்கான மதிப்பீட்டு நுட்பங்கள்.

மட்டம் 3 - அவதானிக்கப்பட முடியாத நியாயப் பெறுமதி அளவீட்டுக்கு உரிய முக்கியமான குறைந்தமட்ட உள்ளீடுகளுக்கான மதிப்பீட்டு நுட்பங்கள்.

தொடர்ச்சியான அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்காக வங்கி, ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியின் இறுதியிலும், வகைப்படுத்தலை மறுமதிப்பீடு செய்வதன் மூலம் பதவணிகளிலுள்ள மட்டங்களுக்கு இடையில் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளனவா என்பதை தீர்மானிக்கும்.

நிதிக்கருவிகளின் நியாயப் பெறுமதியின் வெளிப்படுத்தல் குறிப்பு இல. 44 இல் தரப்பட்டுள்ளது.

### 3.1.2 ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்

ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் (PPE) என்பன குறிப்பிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கிக்கு வருவதற்கான சாத்தியம் உள்ள போதும், குறிப்பிட்ட சொத்தின் செலவை உண்மையாக அளவிடப்படக்கூடியாக இருக்கும் போது அங்கீகரிக்கப்படும்.

PPE யின் கீழ் வரும் விடயங்கள், அன்றாட சேவைச் செலவுகளை நீக்கி, திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட வலுக்குறைப்பு என்பனவற்றின் பெறுமதியைக் கழித்து, அதன் விலையில் குறிப்பிடப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்தில் ஏற்படும் மாற்றங்கள், பொருத்தமான வகையில் தேய்மான காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படும். அத்துடன், அம்மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். தேய்மானமானது. குறிப்பிட்ட சொத்துக்கள் பயன்பாட்டுக்காக எப்போது தயாராக இருக்கின்றதோ, அக்காலப் பகுதியில் இருந்த அச்சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் தேய்மானம் நேர்கோட்டு முறையின் மீது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். காணி தேய்மானத்திற்கு உட்பட்டதல்ல. மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டடம் | வருடத்திற்கு 5% |
| கணனி உபகரணங்கள் | வருடத்திற்கு 20% |
| அலுவலக உபகரணங்கள் | வருடத்திற்கு 20% |
| மோட்டார் வாகனங்கள் | வருடத்திற்கு 20% |
| பொருத்திகள் | வருடத்திற்கு 15% |
| இரும்புப் பெட்டகங்கள் | வருடத்திற்கு 10% |
| பிரிவிடல் மற்றும் பொருத்துக்கள் | வருடத்திற்கு 20% |

குறிப்பிட்ட செலவின் எதிர்கால பொருளாதார நலன்கள் வங்கிக்கு கிடைக்கும் சாத்தியம் இருக்கும் போது மாத்திரமே உடனடுத்த செலவு மூலதனமாக்கப்படும்.

PPE யின் கீழ் ஒரு விடயத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அவ்விடயம் நீக்கப்படும் போது அல்லது அந்தச் சொத்தின் பயன்பாட்டில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்காத போது அங்கீகாரமற்றதாக்கப்படும். சொத்து ஒன்றின் அங்கீகாரமற்றதாக்குதலில் இருந்து கிடைக்கப்பெறும் ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம் (குறிப்பிட்ட சொத்தை நீக்குவதில் இருந்து கிடைக்கப் பெறும் தேறிய வருவாய்களுக்கும், குறிப்பிட்ட சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதிக்கும் இடையிலள்ள வேறுபாடு கணக்கிடப்படும்) குறிப்பிட்ட சொத்து அங்கீகாரமற்றதாக்கப்படுகின்ற வருடத்தில் வருமானக் கூற்றில் ஏனைய தொழிற்பாட்ட வருமானம் / செலவு என்பதன் கீழ் அங்கீகரிக்கப்படும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மூலதனம் தொடர்பான தொழிற்பாடு செலவில் குறிப்பிடப்படும். இது, கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக நேரடியாக ஏற்படும் ஒரு மூலதன தன்மையைக் கொண்ட செலவுகளாகும்.

### 3.1.3 குத்தகை

குறிப்பிட்ட ஏற்பாடு ஒன்று குத்தகையா அல்லது அல்லது குத்தகை ஒன்றை உள்ளடக்கியுள்ளதா என்பதைத் தீர்மானிப்பது, குறிப்பிட்ட ஏற்பாட்டின் சாராம்சத்தில் தங்கியுள்ளது. மேலும், தீர்மானம் ஏற்பாட்டைப் பூரணப்படுத்துவது, குறிப்பட்ட சொத்து ஒன்றின் அல்லது சொத்துக்களின் பயன்பாடு மீது தங்கியுள்ளதா என்ற மதிப்பீட்டையும், குறிப்பிட்ட ஏற்பாடு சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையைத் தருகிறதா என்ற வியடத்தையும் தேவைப்படுத்துகிறது.

#### 3.1.3.1 நிதிக் குத்தகைகள் - வங்கி ஒரு குத்தகைதாரராக

குத்தகைக்கு விடப்பட்ட ஆதனத்தின் உரிமையோடு தொடர்புடைய அனைத்து இடர்கள் மற்றும் அனுகூலங்களையும் கணிசமான அளவுக்கு வங்கிக்கு மாற்றுகின்ற நிதிக் குத்தகைகள், குத்தகைக்கு விடப்பட்ட ஆதனத்தின் நியாயப் பெறுமதியில் குத்தகையின் ஆரம்பத்தில் மூலதனமாக்கப்படுகிறது அல்லது தொகை குறைவாக இருப்பின் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் மூலதனமாக்கப்படுகிறது. பொறுப்பினுடைய எஞ்சிய மீதித் தொகையின் மீது தொடர்ந்து ஒரு வட்டி விகிதத்தைப் பெறுவதற்காக குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் கட்டணங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பினுடைய குறைப்புக்கும் இடையில் பிரிக்கப்படுகிறது. அறவிடப்பட்ட நிதிக் கட்டணங்கள் வருமானக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

குத்தகைத் தவணைக்கால முடிவின் போது, வங்கி உரிமையைப் பெறுவதற்கு ஒரு நியாயமான நிச்சயத்தன்மை இல்லாத போது, மூலதனமாக்கப்பட்ட குத்தகைச் சொத்துக்கள் குறிப்பிட்ட சொத்து ஒன்றினுடைய மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் குறுகிய காலத்திற்கும் மற்றும் குத்தகைக் காலத்திற்கும் தேய்மானம் செய்யப்படுகின்றன. குறிப்பு 3.1.2 இல் விபரிக்கப்பட்டவாறு, உரிமை கொள்ளப்பட்ட தேய்மானம் அடையக்கூடிய சொத்துக்களோடு, தேய்மானம் அடையப் பெறுகின்ற குத்தகைக்கு விடப்படும் சொத்துக்களின் தேய்மானக் கொள்கை ஒத்துப் போகின்றது.

#### 3.1.3.2 செயற்பாட்டுக் குத்தகைகள் (2019 ஜனவரி 01 க்கு முன்)

வங்கி ஒரு குத்தகை வழங்குநராக

சொத்து ஒன்றின் உரிமையின் நலன்கள் மற்றும் அனைத்து இடர்களையும் கணிசமான அளவில் மாற்றாத குத்தகைகள், செயற்பாட்டுக் குத்தகைகள் என வகைப்படுத்தப்படும். செயற்பாட்டுக் குத்தகைகளை பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தும் போது, ஏற்படுகின்ற ஆரம்ப நேரடி செலவுகள் குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்தினுடைய கொண்டு செல்லும் தொகையோடு சேர்க்கப்பட்டு, குத்தகைக் காலப்பகுதியின் போது வாடகை வருமானமாக அங்கீகரிக்கப்படும். எதிர்பாராத வாடகைகள், அவ்வாடகைகள் பெறப்பட்ட காலப்பகுதியில் வருவாயாக அங்கீகரிக்கப்படும்.

### 3.1.4 அருவச் சொத்துக்கள்

வங்கியின் ஏனைய அருவச் சொத்துக்கள் கணனி மென்பொருளின் பெறுமதியை உள்ளடக்கும்.

ஒரு அருவச் சொத்தின் செலவுகள், உண்மையாக அளவிடக்கூடியதாக இருக்கின்ற சந்தர்ப்பத்திலும், அந்தச் சொத்துடன் இணைக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கியை நோக்கி வரும் என்ற சாத்தியப்பாடு உள்ள போது மாத்திரமே அருவச் சொத்து ஒன்று அங்கீகரிக்கப்படும்.

தனியாக கையகப்படுத்துகின்ற அருவச் சொத்துக்கள், ஆரம்ப அங்கீகாரத்தின் மீது அதன் விலையில் அளவிடப்படும். ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துக்கள், அதன் விலையில் தொடர்ந்து கொண்டு செல்லப்படுவதோடு, ஏதேனும், திரண்ட பதிவழிப்பு மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குறைப்பு நட்டங்கள் இருப்பின் அவை கழிக்கப்படும்.

அருவச் சொத்துக்களின் பயன்பாட்டு வாழ் காலம் வரையறுக்கப்பட்டு அல்லது வரையறுக்கப்படாத காலப்பகுதிக்கு மதிப்பிடப்படும். வரையறுக்கப்பட்ட காலப் பகுதியைக் கொண்ட அருவச் சொத்துக்கள், அதன் பயன்பாட்டுப் பொருளாதார காலத்தின் மீது பதிவழிப்புச் செய்யப்படும். வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்தைக் கொண்ட அருவச் சொத்து ஒன்றுக்கான பதிவழிப்புக் காலப்பகுதியும், பதிவழிப்பு முறையும், குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்படும். சொத்தினுடைய எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அல்லது அச்சொத்துக்களுடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறை என்பன பொருத்தமான வகையில் பதிவழிப்புக் காலப்பகுதி அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுகிறது. அத்துடன், அவை, கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன. வரையறை செய்யப்பட்ட பயன்பாட்டுக் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான பதிவழிப்புச் செலவு வருமானக் கூற்றில் பிரத்தியேகமான ஒரு விடயமாகப் பதிவிடப்படும்.

பின்வரும் அடிப்படையில் அருவச் சொத்துக்களுடைய மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் மீது உள்ள அவற்றின் எஞ்சிய பெறுமதிகளுக்கு அச் சொத்துக்களின் விலையைக் குறிப்பதற்காக பதிவழிப்பு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணக்கிடப்படுகிறது.

- கணனி மென்பொருள் 3 வருடங்கள்

### 3.1.5 நிதி அல்லாத சொத்துக்களின் வலுக்குறைப்பு

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், குறிப்பிட்ட சொத்து ஒன்று வலுக்குன்றுமா என்பதற்கான அறிகுறி உள்ளதா என்பதை மதிப்பீடு செய்யும். ஏதேனும் அறிகுறி தென்பட்டால் அல்லது குறிப்பிட்ட சொத்து ஒன்றுக்கு வருடாந்த வலுக்குறைப்புப் பரீட்சை தேவைப்படுத்தப்பட்டால் வங்கி சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகையை மதிப்பீடு செய்யும்.

சொத்து ஒன்றினுடைய மீட்புத் தொகை, கொண்டு செல்லும் தொகையை விட உயர்வாக இருப்பின், வலுக்குறைப்பு நட்டம் ஒன்று அங்கீகரிக்கப்படும். வலுக்குறைப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 3.1.6 நிதி உத்தரவாதங்கள்

கடன் கருவி ஒன்றின் நியதிகளுக்கு அமைய, கொடுப்பனவு ஒன்று நிலுவையாக இருந்து, குறிப்பிட்ட கடன் பெறுநர் அதனைச் செலுத்தத் தவறுகின்ற போது, அந்தக் கொடுப்பனவை மீளப் பெறுவதற்கு வங்கியால் ஏற்படுத்தப்படுகின்ற செலவின் காரணமாக, ஏற்படும் நட்டத்தைச் சீர்செய்ய, வங்கியினால் மேற்கொள்ளப்படும் குறிப்பான கொடுப்பனவுகளைத் தேவைப்படுத்துகின்ற ஒப்பந்தங்கள் "நிதி உத்தரவாதங்கள்" எனப்படும். "கடன் கடப்பாடுகள்" என்பது, முன்னரே குறிப்பிடப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் உள்ள கடன்களை வழங்குவதற்கான உறுதியான கடப்பாடு ஆகும்.

நிதி உத்தரவாதங்கள் அல்லது நிதிக் கடப்பாடுகளில் இருந்து சந்தை வட்டியை விடக் குறைந்த வட்டியில் கடன் ஒன்றை வழங்குவதன் மூலம் எழுகின்ற பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், ஆரம்ப நியாயப் பெறுமதி குறிப்பிட்ட உத்தரவாதம் அல்லது கடப்பாட்டின் ஆயுள் காலத்தின் மீது பதிவழிப்புச் செய்யப்படும். அதனை அடுத்து, குறிப்பிட்ட கடப்பாடானது, பதிவழிப்புத் தொகையை விட உயர் தொகையில் கொண்டு செல்லப்படுவதுடன், குறிப்பிட்ட கடப்பாட்டைச் செலுத்தித் தீர்ப்பதற்கு உள்ள ஏதேனும் எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதி குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் கீழ் கொடுப்பனவு ஒன்று வருகின்ற போது சாத்தியமாக அமையும். சந்தை விலையை விட குறைந்த வட்டி விகிதத்தில் கடனை வழங்குகின்ற நிதி உத்தரவாதங்கள் மற்றும் கடப்பாடுகள் ஏனைய பொறுப்புகள் என்பதற்குள் உள்ளடக்கப்படும்.

### 3.1.7 ஓய்வூதிய நலன்

#### 3.1.7.1 வரையறுக்கப்பட்ட அனுகூல ஓய்வூதியத் திட்டம் - பணிக்கொடை

இலங்கை கணக்கியல் நியமம் ஒன்றான LKAS 19 - பணியாளர் நலன்கள் என்பதன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஒரு வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பதற்கு அப்பால் பணியாளரின் பணிக்குப் பின்னரான ஒரு வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டமாகும்.

3.1.7.2 பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு இணங்க இதற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிதியத்தின் கீழ் இருக்கக்கூடிய முழுமையான பொறுப்பை உதிப்படுத்துவதற்கு, ஒவ்வொரு வருட இறுதியிலும் ஒரு காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட மதிப்பீடானது, திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி, ஒரு தகுதிவாய்ந்த காப்பீட்டுக் கணிப்பு நிறுவனமான Actuarial and Management Consultants (Pvt) Ltd என்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

காப்பீட்டுக் கணிப்பு ஆதாயங்களையும் நட்டங்களையும் அங்கீகரித்தல்: வங்கி இக்குறிப்பிட்ட திட்டம் தொடர்பாக வங்கியின் கடப்பாட்டை கணக்கிடுவதிலிருந்து எழுகின்ற மொத்த காப்பீட்டுக் கணிப்பு ஆதாயங்களையும், நட்டங்களையும், ஏனைய விரிவான வருமானக் கணக்கில் இக்காப்பீட்டுக் கணிப்பு நடைபெறும் காலப்பகுதியில் அங்கீகரிக்கும்.

நிதி ஏற்பாடுகள்: பணிக்கொடைப் பொறுப்புக்கு நிறுவனத்திற்கு வெளியே இருந்து எவ்வித நிதியும் கிடைப்பதில்லை.

3.1.7.3 வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

“வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது, பணியாளர் ஒருவரின் பணிக்குப் பின்னரான ஒரு திட்டமாக இருப்பதுடன், இத்திட்டத்தின் கீழ் நிறுவனம் ஒரு நிலையான பங்களிப்புகளை இன்னுமொரு பிரத்தியேகமான நிறுவனத்திற்கு (நிதியம் ஒன்று) செலுத்தும். இலங்கை கணக்கியல் நியமமான LKAS 19 - “பணியாளர் நலன்கள்” என வரையறை செய்யப்பட்டதன் அடிப்படையில், நடப்பு மற்றும் கடந்த காலப்பகுதிகளில் பணியாளர்கள் ஆற்றிய சேவைகள் தொடர்பாக, அனைத்துப் பணியாளர் நலன்களையும் செலுத்துவதற்கு குறிப்பிட்ட நிதியம் போதுமான சொத்துக்களைக் கொண்டிருக்காத போது, இத்திட்டத்தின்படி குறிப்பிட்ட நிறுவனம், மேலதிகப் பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு எவ்விதமான சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளையும் கொண்டிருக்காது.

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்பானது, பணியாட்களினால் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட சேவைகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அமைவதுடன், இத்தொகை எப்போது செலுத்தப்படுகின்றதோ அச்சந்தர்ப்பத்தில் “தனிப்பட்ட செலவுகள்” என்பதன் கீழ் பதியப்படும். செலுத்தப்படாத பங்களிப்புகள், பொறுப்பு ஒன்றாகப் பதியப்படும். “தனிப்பட்ட செலவுகள்” என்பதன் கீழ் ஒரு செலவாக பதியப்படும்.

1. ஊழியர் சேமலாப நிதியம்

   வங்கி மற்றும் பணியாட்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையே 15% மற்றும் 10% ஐ பங்களிப்புச் செய்வர்.

2. ஊழியர் நம்பிக்கை நிதியம்

   வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பை செய்யும்.

### 3.1.8 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வு ஒன்றின் விளைவாக, வங்கிக்கு தற்போது கடப்பாடு (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) ஒன்று எழுகின்ற போது மற்றும் குறிப்பிட்ட கடப்பாட்டைச் செலுத்தித் தீர்ப்பதற்கு, பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல் ஒன்று சாத்தியமாக உள்ள போது மற்றும் குறிப்பிட்ட கடப்பாட்டின் தொகை மீது உண்மையான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தில் வங்கி ஏற்பாடுகளை அங்கீகரிக்கும். குறிப்பிட்ட ஏதேனும் ஏற்பாடு தொடர்பாக ஏற்படும் செலவு வருமானக் கூற்றில் ஏதேனும் திரும்பப் பெறுதல் தொகையில் “தேறிய தொகையாக”ப் பதியப்படும்.

### 3.1.9 வருமானம் மற்றும் செலவுகளை அங்கீகரித்தல்

வங்கிக்கு பொருளாதார நன்மைகள் எந்தளவு வருவதற்கு சாத்தியம் உள்ளதோ, அந்த அளவிற்கும் குறிப்பிட்ட வருவாய் ஆனது உண்மையாக மதிப்பிடக்கூடியதாக உள்ள போதும் வருவாய் அங்கீகரிக்கப்படும். வருவாய் ஒன்றை அங்கீகரிக்க முன்னர், கீழே தரப்பட்டுள்ள குறிப்பான அங்கீகார அளவு கோல் பின்பற்றப்பட வேண்டும்.

**3.1.9.1** வட்டி மற்றும் ஒரே மாதிரியான வருமானம் மற்றும் செலவு

பதிவழிப்புச் செலவில் மதிப்பிடப்பட்ட அனைத்து நிதிக் கருவிகள், விற்பனைக்காக வைத்திருக்கின்ற என வகைப்படுத்தப்பட்ட வட்டியைப் பொறுத்துக் கொள்ளும் நிதிச் சொத்துக்கள், இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்படும் நிதிக் கருவிகள், வட்டி வருமானம் அல்லது செலவு என்பன EIR ஐப் பயன்படுத்தி பதிவு செய்யப்படும். EIR விகிதம் என்பது, நிதிக் கருவி ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலம் அல்லது ஒரு குறுகிய காலம் ஊடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதிக் கொடுப்பனவுகளை அல்லது வரவுகளை சரியாக தள்ளுபடி செய்து, நிதிக் கருவி அல்லது நிதிச் சொத்து ஒன்றின் கொண்டு செல்லும் தேறிய தொகைக்கு வருகின்ற விகிதமாகும். குறிப்பிட்ட கணக்கீடானது, நிதிக் கருவி ஒன்றின் அனைத்து ஒப்பந்தம்சார் நியதிகளையும் கருத்திற் கொள்வதோடு, குறிப்பிட்ட கருவியுடன் நேரடியாக இணைந்து கொண்டுள்ள ஏதேனும் கட்டணங்கள் அல்லது அதிகரிக்கும் செலவுகளை உள்ளடக்குவதுடன், EIR இன் முக்கிய ஒரு பகுதியாக அமையும், ஆயின், எதிர்காலக் கடன் நட்டங்களின் ஒரு பகுதியாக அமையாது.

வங்கி, கொடுப்பனவுகள் அல்லது வரவுகளின் மதிப்பீடுகளைத் திருத்துமாயின், நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பு ஒன்றின் கொண்டு செல்லும் தொகை சீராக்கப்படும். சீராக்கப்பட்ட கொண்டு செல்லும் தொகை, ஆரம்ப EIR இன் அடிப்படையில் கணக்கிடப்படும். அத்துடன், கொண்டு செல்லும் தொகையில் ஏற்படும் மாற்றம், நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளுக்கான வட்டி அல்லது அதையொத்த செலவுகள் போன்றவற்றுக்காக “வட்டி அல்லது ஒரே மாதிரியான வருமானம்” என்பதன் கீழ் பதிவு செய்யப்படும். எனினும், நிதி வரவுகளின் அதிகரித்த மீட்பு காரணமாக, வங்கி, எதிர்கால நிதி வரவுகளின் மதிப்பீடுகளை உடனடுத்து அதிகரிக்குமாயின் மறு வகுப்பாக்கம் செய்யப்பட்ட நிதிச் சொத்து (குறிப்பு 3.1.1.5 ஐப் பார்க்க) ஒன்றுக்காக அத்தகைய அதிகரிப்பின் விளைவு, குறிப்பிட்ட மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட்ட திகதியில் இருந்து EIR க்கான ஒரு சீராக்கமாக அங்கீகரிக்கப்படும்.

வலுக்குறைப்பு நட்டம் ஒன்றின் காரணமாக, நிதிச் சொத்து ஒன்றின் அல்லது ஒரே மாதிரியான நிதிச் சொத்துக்களின் குழுமம் ஒன்றின் பதிவு செய்யப்பட்ட பெறுமதி குறைக்கப்படுமாயின், வலுக்குறைப்பு நட்டத்தை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால நிதிப் பாய்ச்சல்களுக்கு தள்ளுபடி செய்யப்படும் வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி, வட்டி வருமானம் தொடர்ந்து அங்கீகரிக்கப்படும்.

3.1.9.2 கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்

வங்கி, அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற பலதரப்பட்ட சேவைகள் மூலமாக, கட்டணம் மற்றும் தரகு வருமானத்தைப் பெறுகிறது. கட்டண வருமானம், கீழே தரப்பட்ட வகுதிகளுக்குள் வகுப்பாக்கம் செய்யப்படலாம்.

3.1.9.3 குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக பெறப்பட்ட கட்டண வருமானம்

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான ஏற்பாட்டின் மூலம் பெறப்படுகின்ற கட்டணங்கள், அக்காலப்பகுதியில் திரட்டப்படுகின்றன. இந்தக் கட்டணங்கள், தரகு வருமானம், கடன் சேவைக் கட்டணங்கள், மேற்பார்வைக் கட்டணங்கள் மற்றும் வாடிக்கையாளரிடம் இருந்து மீளப் பெறும் காகிதாதிக் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

குறைவதற்கு சாத்தியமாக உள்ள கடன்களுக்கான கடன் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கடனுடன் தொடர்புடைய கட்டணங்கள் என்பன ஒத்தி வைக்கப்படுவதுடன், (ஏதேனும் அதிகரிக்கும் செலவுகள் இருப்பின் அதனுடன் சேர்த்து) கடன் மீதான EIR க்கு ஒரு சீராக்கமாக அங்கீகரிக்கப்படும். கடன் ஒன்று குறைவதற்கு சாத்தியம் இல்லாத போது, கடன் கடப்பாட்டுக் கட்டணங்கள் நேர்கோட்டு அடிப்படையின் மீது கடப்பாட்டுக் காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்படும்.

3.1.9.4 வரி விதிப்பு

LKAS 12 - "வருமான வரிகள்" என்ற இலக்கை இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக வரி செலவு என்பது, தற்போதைய மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இலாபம் மற்றும் நட்டத்தைத் தீர்மானிப்பதில் உள்ளடக்கப்படும் மொத்தத் தொகையாகும். வருமான வரி செலவானது, அச்செலவு எந்தளவு தூரத்திற்கு "பங்குரிமை" அல்லது "ஏனைய விரிவான வருமானம்" ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் நேரடியாகத் தொடர்புபடுகிறதோ அச் சந்தர்ப்பம் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். பங்குரிமை அல்லது ஏனைய விரிவான வருமானத்தோடு தொடர்புபடுகின்ற போது, வருமான வரி ஒப்புரவு அல்லது ஏனைய விரிவான வருமானத்தில் (OCI) உள்ளடக்கப்படும்.

3.1.9.5 நடைமுறை வரி

நடைமுறை மற்றும் கடந்த வருடங்களுக்கான நடைமுறை வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், வரி விதிப்பு அதிகார சபைகளிடம் இருந்து பெற எதிர்பார்க்கப்படும் அல்லது அவ்வதிகார சபைகளுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளில் அளவிடப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்ட சட்டங்கள், வரி வீதங்களையும், வரி சட்டங்களையும் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

இதற்கமைய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 14 இல் குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, வரி விதிப்புக்கான ஏற்பாடு, வரி விதிப்பு நோக்கங்களுக்காக குறிப்பிட்ட வருடத்தில் சீராக்கப்பட்ட இலாபத்தை அடிப்படையாக கொண்டது.

3.1.9.6 ஒத்திவைக்கப்பட்ட வரி

அறிக்கையிடும் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான வரி தளங்கள் மற்றும் நிதி அறிக்கையிடும் நோக்கங்களுக்காகக் கொண்டு செல்லும் அவற்றின் தொகை என்பவற்றுக்கு இடையில் உள்ள தற்காலிக வேறுபாடுகள் மீது, ஒத்தி வைக்கப்பட்ட வரி அங்கீகரிக்கப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புகள் பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர அனைத்து வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கும் அங்கீகரிக்கப்படும்.

- வியாபாரக் கலவை அல்லாத நன்மதிப்பு அல்லது ஒரு சொத்து அல்லது பொறுப்பு தொடர்பான பரிவர்த்தனையின் ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்பு எழுகின்ற போதும், அத்துடன், குறிப்பிட்ட பரிவர்த்தனை நடைபெறும் போதும் கணக்கியல் இலாபத்தையோ, வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தையோ அது பாதிக்காத போது.
- துணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளுடன் தொடர்புடைய வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் தொடர்பில், அத்தகைய தற்காலிக வேறுபாடுகளின் சூழற்சி நேரம் கட்டுப்படுத்தப்படக்கூடியதாக உள்ள போதும், அத்துடன், தற்காலிக வேறுபாடுகள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வேறுபாது என்ற சாத்தியம் உள்ள போதும்.

பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர, விலக்கி வைக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் முன்னோக்கி எடுத்துச் செல்லும் பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் என்பவற்றுக்கு எதிராக எந்தளவு தூரத்திற்கு வரி விதிக்கக்கூடிய இலாபம் உள்ளதோ அந்தளவிற்கு அனைத்து விலக்கி வைக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் முன்னோக்கி எடுத்துச் செல்லும் பயன்படுத்தப்படாத வரி கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் அங்கீகரிக்கப்படும்.

- வியாபாரக் கலவை அல்லாத ஒரு சொத்து அல்லது பொறுப்பு தொடர்பான பரிவர்த்தனையின் ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்பு எழுகின்ற போதும், அத்துடன், குறிப்பிட்ட பரிவர்த்தனை நடைபெறும் போது கணக்கியல் இலாபத்தையோ, வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தையோ அது பாதிக்காத போது.
- துணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளுடன் தொடர்புடைய வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் தொடர்பில் அத்தகைய தற்காலிக வேறுபாடுகளின் சூழற்சி நேரம் கட்டுப்படுத்தப்படக்கூடியதாக உள்ள போதும், அத்துடன், தற்காலிக வேறுபாடுகள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வேறுபாடு என்ற சாத்தியம் உள்ள போதும். அத்துடன், வரி விதிப்பு இலாபம் எதற்காக தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்த முடியுமோ அதற்கு எதிராக இருக்கும்.

ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகை அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், குறிப்பிட்ட ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்து அனைத்தும் அல்லது ஒரு பகுதி போதுமான வரி விதிப்பு இலாபத்தைப் பெற இனிமேலும் சாத்தியமில்லை என்ற அளவுக்கு குறைக்கப்படும். அங்கீகரிக்கப்படாத ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், மறுமதிப்பு செய்யப்படுவதுடன், ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்தை மீட்பதற்கு எதிர்கால வரி விதிப்பு இலாபம் எந்தளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு அங்கீகரிக்கப்படும்.

அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்ட வரி விகிதங்கள் (மற்றும் வரி சட்டங்கள்) என்பவற்றின் அடிப்படையில் ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களும், பொறுப்புக்களும் குறிப்பிட்ட சொத்து மதிப்பு பெறுகின்ற வருடத்தில் அல்லது பொறுப்பு செலுத்தி தீர்க்கப்படுகின்ற வருடத்தில் பிரயோகிக்க எதிர்பார்க்கப்படும் வரி விகிதங்களில் அறவிடப்படும். பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நடப்பு வரி மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி என்பனவும் ஒப்புரவில் அங்கீகரிக்கப்படுமே தவிர வருமானக் கூற்றில் அல்ல. நடப்பு வரி பொறுப்புகளுக்கு எதிராக நடப்பு வரி சொத்துக்களைத் தீர்த்துக் கட்டுவதற்கு சட்ட ரீதியாக அமுலாக்கக்கூடிய உரிமை ஒன்று உள்ள போது மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி அதே வரி செலுத்தக்கூடிய நிறுவனத்திற்கும் வரி விதிப்பு அதிகார சபைக்கும் தொடர்புபடுகின்ற போது, சொத்துக்களும், ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்புகளும் ஈடுகட்டப்படும்.

3.1.9.7 நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)

VAT on நிதிச் சேவைகள் மீதான VAT 2002 ஆம் ஆண்டில் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்களுக்கு அமைவாகக் கணிக்கப்படும். நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக் கணிப்பீட்டின் அடிப்படையாக அமைவது, VAT க்கு முன்னரான கணக்கியல் இலாபம் மற்றும் பொருளாதாரத் தேய்மானத்திற்காக சீராக்கப்பட்ட வருமான வரி மற்றும் குறித்துரைக்கப்பட்ட விகிதத்தின் மீது கணிப்பிடப்பட்ட பணியாட்களுக்கான ஊதியங்கள் ஆகும்.

3.1.9.8 நிதிச் சேவைகள் மீதான தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி **(NBT)**

2014 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்களுக்கு அமைவாக, நிதிச் சேவைகள் மீதான NBT கணப்பிடுப்படுகிறது. நிதிச் சேவைகள் மீதான NBT நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கையில் 2% என்ற அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது. இந்த வரி 2019 டிசம்பர் 01 ஆம் திகதியில் இருந்து அரசாங்கத்தினால் இல்லாதொழிக்கப்பட்டது.

3.1.9.9 பங்கிலாபங்கள் மீதான நிறுத்தி வைக்கப்பட்ட வரி **(WHT)**

உள்நாட்டுத் துணைக் கம்பனிகளின் வரி விதிக்கத்தகு இலாபத்தில் இருந்து பங்கிடப்படும் பங்கிலாபம், அதன் மூலதனத்தில் 10% குறைப்பைக் கவர்வதோடு, இத்தொகை வங்கியின் வரிப் பொறுப்புக்கு எதிராகத் தீர்த்துக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட மாட்டாது.

வங்கியினால் பகிரப்படும் பங்கிலாபத்தில் இருந்து எழுகின்ற WHT தொடர்டைய பங்கிலாபத்தைச் செலுத்துவதற்கான பொறுப்பு அங்கீகரிக்கப்படும் அதேநேரத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

3.1.9.10 பொருளாதார சேவைக் கட்டணம் **(ESC)**

2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண சட்டம் மற்றும் அதனை அடுத்து வந்த திருத்தங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைய, ESC பொறுப்பு விற்ற முதல் மீது கணிப்பிடப்படுகிறது. தற்போது 0.5% இல் ESC செலுத்தக்கூடியதாக இருப்பதோடு, செலுத்தப்பட வேண்டிய வருமான வரியில் இருந்து நீக்கப்படுகிறது. கோரப்படாத ESC ஏதேனும் இருப்பின், அதனை முன்னோக்கி எடுத்துச் செல்லலாம். அத்துடன், அடுத்து வருடம் இரண்டு வருடங்களில் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக தீர்த்துக் கட்டலாம். இந்த வரி 2020 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அரசாங்கத்தினால் இல்லாதொழிக்கப்பட்டது.

3.1.9.11 கடன்களை மீளச் செலுத்துதல் தொடர்பான தீர்வை **(DRL)**

2018 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் இருந்து 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைவாக, நிதிச் சேவைகள் மீது VAT நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் மொத்தப் பெறுமதி சேர்க்கையின் மீது நிதிச் சேவைகள் மீதான DRL கணிப்பிடப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட DRL 7% ஆகும். (2018 - 7%) இந்த வரி 2020 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அரசாங்கத்தினால் இல்லாதொழிக்கப்பட்டது.

3.1.9.12 பயிர் காப்புறுதித் தீர்வை **(CIL)**

2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 இல் உள்ள ஏற்பாடுகளின் படி CIL 2013 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தீர்வை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். தற்போது வரிக்குப் பின்னரான இலாபத்தில் 1% CIL ஆக செலுத்தப்படுகிறது.

### 3.1.10 சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபம்

சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபங்கள் பொறுப்பு ஒன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன. இவை, வங்கியின் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்படும் போது, பங்குரிமையில் இருந்து கழிக்கப்படும். இடைக்காலப் பங்கிலாபங்கள் பிரகடனப்படுத்தப்படுகின்ற போதும், வங்கியின் தற்றுணிபின் கீழ் வராத போதும், பங்குரிமையில் இருந்து கழிக்கப்படும்.

### 3.1.11 ஒரு பங்கிற்குரிய சம்பாத்தியங்கள் **(EPS)**

வங்கி அதன் சாதாரண பங்குகளுக்கு ஒரு பங்கிற்குரிய அடிப்படையச் சம்பாத்தியத் தரவுகளைச் சமர்ப்பிக்கும். அடிப்படை EPS குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் மொத்த சராசரி தொகையின் எண்ணிக்கையினால் வங்கியின் சாதாரண பங்குதாரர்களுக்கு சேர்க்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தினால் வகுக்கப்பட்டு கணிப்பிடப்படும். நீர்த்த EPS சாதாரண பங்குதாரர்களுக்கு சேர்க்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தையும், அனைத்து நீர்த்த சாத்தியமான சாதாரண பங்குகளுக்கு விளைவு தரக்கூடிய நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் மொத்த சராசரி எண்ணிக்கை என்பவற்றை சீராக்குவதன் மூலம் தீர்மானிக்கப்படும்.

### 3.1.12 SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்தில் இருந்து பெறப்படும் வருவாய்

2018 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதன் பின்னரோ ஆரம்பிக்கின்ற நிதிக் காலப்பகுதியில் இருந்து SLFRS 15 அமுலுக்கு வந்தது. SLFRS 15 இன் முக்கியமான எண்ணக்கரு யாதெனில், நிறுவனம் ஒன்று வாடிக்கையாளர்களுக்கு வாக்குறுதியளித்த பொருள்கள் அல்லது சேவைகளின் மாற்றங்களைச் சித்தரித்துக் காட்டுவதற்காக வருமானத்தை அங்கீகரிக்க வேண்டும். இந்த முக்கியமான எண்ணக்கரு கீழே தரப்பட்டவாறு ஐந்து கட்ட மாதிரிக் கட்டமைப்பில் வெளிப்படுத்தப்படுகிறது.

- வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் / ஒப்பந்தங்களை இனங்காணுதல்.
- ஒப்பந்தத்தின் செயற்திறன் கடப்பாடுகளை இனங்காணுதல்.
- பரிவர்த்தனை விலையைத் தீர்மானித்தல்.
- பரிவர்த்தனை விலையை ஒப்பந்த செயற்திறன் கடப்பாட்டிற்கு ஒதுக்குதல்.
- நிறுவனம் செயற்திறன் கடப்பாடு ஒன்றை திருப்திப்படுத்துகின்ற போது (அல்லது என) வருமானத்தை அங்கீகரித்தல்.

இந்த வழிகாட்டியின் பிரயோகமானது, வாடிக்கையாளருடனான ஒப்பந்தம் ஒன்றில் தரப்பட்டுள்ள நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளில் தங்கியுள்ளது.. இது, தீர்ப்பு ஒன்றைப் பிரயோகித்தலையும் தேவைப்படுத்துகின்றது.

## 4. இலங்கை கணக்கியல் நியமங்கள் 2019 டிசம்பர் 31 வரை அமுலில் வரவில்லை

கீழே தரப்பட்டுள்ள கணக்கியல் நிமங்களும், பொருள் விளக்கங்களும், இலங்கை கணக்கியலாளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளவைகளாகும். அவை, 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் அமுலுக்கு வரவில்லை. வங்கி, இந்தப் புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்களை அவை அமுலுக்கு வருகின்ற போது ஏற்க விரும்புகிறது.

### SLFRS 17 - காப்புறுதி ஒப்பந்தங்கள்

SLFRS 17 "காப்புறுதி ஒப்பந்தங்கள்" என்ற நியமம், அங்கீகாரம், அளவீடு, சமர்ப்பணம் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான ஒரு விரிவான கணக்கியல் நியமம் ஆகும். SLFRS 17 அமுலுக்கு வந்தவுடன், காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பாக தற்போதுள்ள SLFRS 04 பயனற்றதாகி விடும். காப்புறுதிதாரர்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றும் ஒருசீரான பயன்பாட்டைத் தரக்கூடிய காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான ஒரு கணக்கியல் மாதிரியை வழங்குவதே SLFRS 17 இன் ஒட்டுமொத்த குறிக்கோளாகும்.

SLFRS 17, 2021 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதன் பின்னரோ வரும் அறிக்கையிடும் காலப் பகுதிகளுக்கு விளைவுப் பயன்தரும். SLFRS 17 இனை முதலாவதாகப் பிரயோகிக்கும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஒரு நிறுவனம் SLFRS 16 மற்றும் SLFRS 15 பிரயோகிக்குமாயின், SLFRS 17 இன் முன்னரான பிரயோகம் அனுமதிக்கப்படுகின்றது. இந்த நியமம் வங்கிக்குப் பொருந்தாது.

### LKAS 1 மற்றும் LKAS 8 க்கான திருத்தங்கள் : பொருள் என்பதற்கான வரைவிலக்கணம்

LKAS 1 - "நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்" LKAS 8 - "கணக்கியல் கொள்கைகள், கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் தவறுகைகளில் மாற்றங்கள்" என்பவற்றுக்கான திருத்தங்கள் "பொருள்" என்பதற்கான வரைவிலக்கணத்தோடு இணங்கிச் செல்லக்கூடிய வகையிலும், குறிப்பிட்ட வரைவிலக்கணத்தில் சில அம்சங்கள் பற்றி தெளிவு பெறவும் மேற்கொள்ளப்பட்டன. புதிய வரைவிலக்கணத்தின்படி, "ஒரு குறிப்பான அறிக்கையிடும் நிறுவனம் பற்றி நிதித் தகவல்களைத் தருகின்ற போது, நோக்க நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் தங்கியிருந்து அந்த நிதிக் கூற்றை முதன்மையாகப் பயன்படுத்தும் பயனாளிகள் மேற்கொள்ளும் தீர்மானங்களில் நியாயமான அளவில் செல்வாக்குச் செலுத்துமாயின், தகவல் ஒன்றைத் தவிர்ப்பது அல்லது தடுப்பது முக்கியமாக வரின் அத்தகவல் முக்கியமான தகவலாகக் கருதப்படும்.

இத்திருத்தங்கள், 2020 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதன் பின்னரோ இருந்து ஆரம்பிக்கின்ற வருடாந்த காலப்பகுதிகளுக்கு முன்னோக்கிப் பிரயோகிக்கப்படும். அத்துடன், முன்னரான பிரயோகமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொருள், என்பதற்கு வழங்கப்பட்ட வரைவிலக்கணத்திற்கு ஏற்படுத்தப்பட்ட திருத்தங்கள், வங்கியின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கவில்லை.

### SLFRS 3 க்கான திருத்தங்கள் : ஒரு வணிகம் என்பதற்கான வரைவிலக்கணம்

SLFRS 3 இன் கீழ் வணிகம் என்பதற்கான வரைவிலக்கணத்தின் திருத்தங்கள், "வணிகக் கலவைகள்" எனத் திருத்தப்பட்டுள்ளது. இத்தகைய திருத்ததிற்குரிய காரணம் யாதெனில், இதன் மூலம் நிறுவனங்கள் கையகப்படுத்தப்பட்ட ஒரு தொகையான நடவடிக்கைகள் மற்றும் சொத்துக்கள், ஒரு வணிகமா, அல்லவா என்பதைத் தீர்மானிக்க உதவுகிறது. அவை ஒரு வணிகத்திற்குரிய குறைந்தபட்ச தேவைப்பாடுகள் பற்றிய தெளிவுகளை வழங்குவதுடன், சந்தைப் பங்குபற்றுநர்கள் ஏதேனும் தவறவிடப்பட்ட கூறுகளைப் பதிலீடு செய்ய தகைமை உள்ளவர்களா என்ற மதிப்பீட்டை நீக்குவதோடு, நிறுவனம் ஒன்று, ஒரு கையகப்படுத்தப்பட்ட செயன்முறை கணிசமான அளவு உள்ளதா என்பதை மதிப்பிட ஒரு வழிகாட்டியை வழங்குவதோடு, வணிகம் மற்றும் வெளியீடுகள் என்ற வரைவிலக்கணத்தைக் குறுக்குவதோடு, ஒரு தெரிவு, நியாயப் பெறுமதி கவனப் பரீட்சையையும் அறிமுகப்படுத்துகிறது.

இத்திருத்தங்கள், 2020 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதன் பின்னரோ ஆரம்பிக்கின்ற முதலாவது வருடாந்த அறிக்கையிடும் திகதியில் இருந்து முன்னோக்கிப் பிரயோகமாகும். எனவே, இத்திகதியின் பின்னர் ஆரம்பிக்கின்ற அனைத்து வியாபாரக் கலவைகளுக்கும், சொத்து கையகப்படுத்தல்களுக்கும் இது பொருந்தும். முன்னரான பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### SLFRS நியமங்களின் கோட்பாட்டுக் கட்டமைப்புக் குறிப்புகளுக்கான திருத்தங்கள்

கோட்பாட்டுக் கட்டமைப்புகளுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏனெனில், சில முக்கியமான விடயங்கள் உள்வாங்கப் பட்டிருக்கவில்லை. அத்துடன், சில வழிகாட்டல்கள் தெளிவற்றதாக இருந்ததோடு, காலாவதியாகியும் இருந்தன. திருத்தப்பட்ட கோட்பாட்டுக் கட்டமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

- அளவீடு தொடர்பான ஒரு புதிய அத்தியாயம்,
- நிதிச் செயற்திறன் அறிக்கையிடல் தொடர்பான வழிகாட்டி,
- ஒரு சொத்து மற்றும் ஒரு பொறுப்பு என்பதற்கான மேம்படுத்தப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் இவ் வரைவிலக்கணங்களுக்கு ஆதரவளிக்கும் வழிகாட்டிகள். மற்றும்,
- பணியாட்கள், விவேகம் ஆகியவற்றின் வகிபங்குகள் மற்றும் நிதி அறிக்கையிடலில் அளவீட்டு நிச்சயமற்ற போன்ற முக்கியமான துறைகளில் தெளிவுபடுத்தல்கள்.

இந்த திருத்தங்கள், 2020 ஜனவரி 01 அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலப்பகுதிகளில் இருந்து அமுலுக்கு வருவதால், அறிக்கையிடும் திகதியில் திருத்தங்களினால் வங்கி பாதிக்கப்பட மாட்டாது. மேலும், SLFRS நியமங்களின் கோட்பாட்டுக் கட்டமைப்புக்கான குறிப்புகளுக்கான திருத்தங்கள், வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மீது ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படவில்லை..

## 5. மொத்த வருமானம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| வட்டி வருமானம் (குறிப்பு 6.1) | **26,357,071,298** | 24,865,108,981 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் (குறிப்பு 7) | **1,134,421,656** | 1,186,795,173 |
| நிகர வர்த்தக இலாபம்/(நட்டம்) (குறிப்பு 8) | **4,757,039** | 1,215,762 |
| ஏனைய செயற்படு வருமானம் (குறிப்பு 9) | **11,571,062** | 17,490,689 |
| முழுமையான மொத்த வருமானம் | **27,507,821,054** | 26,070,610,605 |

## 6. நிகர வட்டி வருமானம்

### 6.1 வட்டி வருமானம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| வங்கிகளுடனான வைப்புக்கள் | **735,270,427** | 494,336,946 |
| கடன் செலவில் நிதிச் சொத்துக்கள் | | |
| ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் பெறுகைகள் | **21,735,964,322** | 21,016,590,253 |
| கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள் | **3,885,836,549** | 3,354,181,783 |
| மொத்த வட்டி வருமானம் | **26,357,071,298** | 24,865,108,981 |

### 6.2 வட்டி செலவினம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| வங்கிகளுக்கானவை | **(1,308,319,793)** | (1,000,002,236) |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கானவை | **(12,493,387,754)** | (11,959,524,473) |
| குத்தகைப் பொறுப்புகளுக்கான வட்டி செலவினம் | **(102,173,728)** | - |
| மொத்த வட்டி செலவுகள் | **(13,903,881,276)** | (12,959,526,709) |
| நிகர வட்டி வருமானம் | **12,453,190,022** | 11,905,582,272 |

## 7. நிகர கட்டண மற்றும் தரகு வருமானம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| கட்டண மற்றும் தரகு வருமானம் | **1,134,421,656** | 1,186,795,173 |
| கட்டண மற்றும் தரகுச் செலவுகள் | **(278,304,299)** | (259,105,166) |
| நிகர கட்டண மற்றும் தரகு வருமானம் | **856,117,357** | 927,690,007 |
| உள்ளடக்கம் | | |
| கடன்கள் | **852,512,689** | 905,397,905 |
| வர்த்தக மற்றும் பணம் அனுப்புதல் | **7,630,593** | 6,582,445 |
| வைப்புக்கள் | **(253,121,115)** | (239,902,296) |
| ஏனையவை | **249,095,191** | 255,611,952 |
| நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் | **856,117,357** | 927,690,007 |

## 8. நிகர வர்த்தக இலாபம்/(நட்டம்)

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| தேறிய சந்தையிலிருந்து - சந்தை நட்டம் - பங்குரிமைப் பிணையங்கள் | **(7,400)** | (30,900) |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள் | **370,699** | - |
| பங்கிலாப வருமானம் | **4,393,740** | 1,246,662 |
| மொத்தம் | **4,757,039** | 1,215,762 |

## 9. ஏனைய செயற்படு வருமானம் (நிகர)

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்களின் விற்பனை மூலம் இலாபம்/(நட்டம்) | **3,811,675** | 11,206,047 |
| ATM வருமானம் | **7,433,448** | 4,551,002 |
| NPL கடன்களின் மீட்பு (பதிவழிக்கப்பட்டவை) | **325,939** | 1,733,639 |
| ஏனைய செயற்படு வருமானம் (நிகர) | **11,571,062** | 17,490,689 |

## 10. பெறுமதி குறைப்புக் கட்டணங்கள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| வங்கிகளுடனான வைப்புக்கள் (குறிப்பு 18.1) | **32,429** | 12,653 |
| ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்களும் பெறவேண்டியவைகளும் | | |
| திரண்ட பெறுமதி குறைப்பு (குறிப்பு 20.2) | **(1,076,946,691)** | (1,265,040,780) |
| தனித்த பெறுமதி குறைப்பு (குறிப்பு 20.2) | **(1,324,690,485)** | (144,614,042) |
| கடனளிக்கப்பட்ட செலவில் நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள் | | |
| தொதிக்கடன்கள் (குறிப்பு 21.1.2) | **(1,200)** | 2,840 |
| நிலையான வைப்புத் தொகையில் முதலீடு (குறிப்பு 21.2.2) | **(6,668,755)** | 342,187 |
| கடன் தொடர்பான பொறுப்பு மற்றும் தற்செயல்கள் | **(474,152)** | (486,954) |
| நிகர பெறுமதி குறைப்பு (கட்டணம்)/கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான தள்ளுபடி | **(2,408,748,853)** | (1,409,784,095) |

## 11. ஆளணிச் செலவுகள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | **3,670,368,673** | 3,612,325,825 |
| ஊ.சே.நி / ஊ.ந.நி க்கான பங்களிப்பு | **587,605,614** | 546,973,585 |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களுக்கான பங்களிப்பு | **323,313,062** | 265,384,959 |
| ஏனையவை | **1,350,338,623** | 1,453,262,423 |
| மொத்தம் | **5,931,625,972** | 5,877,946,793 |

## 12. ஏனைய செலவுகள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| பணிப்பாளர்களின் ஊதியம் | **3,683,748** | 3,200,919 |
| கணக்காய்வாளர்களின் ஊதியம் | **4,693,515** | 2,455,250 |
| தொழில் நிபுணர்கள் மற்றும் சட்டச் செலவுகள் | **14,954,312** | 24,893,448 |
| அலுவலக நிர்வாகம் மற்றும் நிறுவனச் செலவுகள் | **1,104,581,162** | 1,331,786,648 |
| கணனி மயமாக்கல் செலவுகள் | **122,361,980** | 128,432,876 |
| வர்த்தக வரிச் செலவுகள் | **2,715,109** | 1,045,833 |
| செலுத்தப்பட்ட ஏனைய தரகுகள் | **74,325** | 185,670 |
| காப்பீட்டுக் கட்டுப்பண வைப்பு | **145,699,228** | 132,813,463 |
| பயிர் காப்பீட்டு வரி | **4,893,954** | 10,332,117 |
| ஊழியர் பாதுகாப்பு வைப்புக்கான வட்டி | **4,010,435** | 3,750,542 |
| அடகு முற்பண மூலதன இழப்பு | **12,501** | - |
| மொத்தம் | **1,407,680,268** | 1,638,896,765 |

## 13. நிதிச் சேவைகள் மற்றும் கடன் மீளச் செலுத்தல் (திரட்டுக்கள்) மீதான வரி

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக வரி | **123,625,704** | 154,490,412 |
| பெறுமதி சேர் வரிகள் | **1,012,948,950** | 1,158,678,090 |
| கடன் மீள் செலுத்தலுக்கான வரி | **601,522,646** | 190,079,946 |
| மொத்தம் | **1,738,097,299** | 1,503,248,448 |

## 14. வரிச் செலவுகள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| வருமான வரி விதிப்பு | | |
| வருட இலாபத்தின் அடிப்படையிலான வரி விதிப்பு (குறிப்பு 14.1) | **890,648,620** | 1,072,147,126 |
| 2018/2019 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டின் கீழ் (அதிகம்)/குறைவு | **-** | (5,503,331) |
| தற்காலிக வேறுபாடுகள் கட்டணம்/(தள்ளுபடி) (குறிப்பு 26.2) | **(167,082,742)** | (37,148,265) |
| மொத்தம் | **723,565,878** | 1,029,495,530 |

### 14.1 வரிச் செலவினங்கள் மீதான இணக்கம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்) | **1,222,160,409** | 2,103,081,891 |
| (கழி): பங்கிலாபம் | **(4,393,740)** | - |
| கூட்டு: வரி நோக்கங்களுக்காக விலக்களிக்கப்படாத செலவுகளுக்கான வரி விளைவு | **5,158,223,496** | 3,396,456,057 |
| (கழி): வரி நோக்கங்களுக்காக விலக்களிக்கப்படும் செலவுகளுக்கான வரி விளைவு | **(3,195,102,236)** | (1,670,441,068) |
| வரி விதிக்கத்தக்க இலாபம் | **3,180,887,929** | 3,829,096,880 |
| காலத்திற்கான வருமான வரி (வரி விதிக்கத்தக்க இலாபம் @ பொருத்தமான வரி விகிதம்) | **28%** | 28% |
| காலத்திற்கான தற்போதைய வரிச் செலவு | **890,648,620** | 1,072,147,126 |
| ஒத்தி வைக்கப்பட்ட வரி கட்டணம்/(தள்ளுபடி) (குறிப்பு 26.2) | **(167,082,742)** | (37,148,264) |
| வருமான வரிச் செலவு | **723,565,878** | 1,034,998,862 |
| 2017/2018 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டின் கீழ் (அதிகம்)/குறைவு | **-** | (5,503,331) |
| வருமான வரிச் செலவு | **723,565,878** | 1,029,495,531 |
| பயனுள்ள வரி விகிதம் | **59%** | 49% |

## 15. ஒரு பங்கிற்குரிய சம்பாத்தியங்கள்

15.1 LKAS 33 - ஒரு பங்கிற்கான சம்பாத்தியங்கள் என்ற கணக்கியல் நியமங்களுக்கு அமைய, வங்கி (தொகுதி) அதன் சாதாரண பங்குகளுக்கு (வகுக்கும் எண்) ஒரு பங்கிற்குரிய அடிப்படைச் சம்பாத்தியத் தரவுகளைச் சமர்ப்பிக்கும். அடிப்படை "ஒரு பங்கிற்கான சம்பாத்தியங்கள்" (EPS) குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் மொத்த சராசரி தொகையின் எண்ணிக்கையினால் வங்கியின் சாதாரண பங்குதாரர்களுக்குச் சேர்க்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தினால் வகுக்கப்பட்டு கணிப்பிடப்படும்.

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வங்கியின் பங்குரிமையாளர்களுக்கு சேர்க்கப்பட வேண்டிய தேறிய இலாபம் | **498,594,531** | 1,073,586,361 |
| சாதாரண பங்குரிமையாளர்களுக்கு சேர்க்கப்பட வேண்டிய தேறிய இலாபம் | **498,594,531** | 1,073,586,361 |

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019 | 2018 |
|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| வழங்கப்பட்ட சாதரண பங்குகளின் மொத்த சராசரி எண்ணிக்கை | **545,107,049** | 389,575,772 |
| ஒரு சாதாரண பங்கிற்குரிய அடிப்படை சம்பாத்தியங்கள் | **0.91** | 2.76 |

## 16. அளவீட்டு அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு

A. வங்கி - நடைமுறை வருடம் - (2019)

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | FVTPL | AC | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்துக்கள் | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 17 | - | 2,750,187,219 | - | 2,750,187,219 |
| வங்கிகளுடனான வைப்புகள் | 18 | - | 9,798,242,492 | - | 9,798,242,492 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள் | 19 | 123,000 | - | - | 123,000 |
| பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும் | 20 | - | 136,205,641,441 | - | 136,205,641,441 |
| பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள் | 21 | - | 45,664,745,400 | - | 45,664,745,400 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள் | 22 | - | - | 2,289,919 | 2,289,919 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 27 | - | 1,633,841,628 | - | 1,633,841,628 |
| மொத்த நிதிச் சொத்துக்கள் | | 123,000 | 196,052,658,180 | 2,289,919 | 196,055,071,099 |

B. வங்கி - நடைமுறை வருடம் - (2019)

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | இலதாக்கப்பட்ட செலவு | மொத்தம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 28 | **22,050,009,005** | **22,050,009,005** |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 29 | **149,599,829,047** | **149,599,829,047** |
| வழங்கப்பட்ட கடன்பத்திரம் மற்றும் ஏனைய பெறப்பட்ட நிதிகள் | 30 | **4,707,852,534** | **4,707,852,534** |
| ஏனைய பொறுப்புகள் | 32 | **4,954,270,654** | **4,954,270,654** |
| மொத்த நிதிப் பொறுப்புகள் | | **181,311,961,240** | **181,311,961,240** |

A. வங்கி - கடந்த வருடம் (2018)

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | FVTPL | AC | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 17 | - | 689,184,136 | - | 689,184,136 |
| வங்கிகளுடனான வைப்புகள் | 18 | - | 6,496,628,053 | - | 6,496,628,053 |
| வியாபாரத்திற்காக / பங்குரிமைக்காக வைத்திருக் கப்படும் நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் கருவிகள் | 19 | 115,600 | - | - | 115,600 |
| பதிவழிப்பு செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும் | 20 | - | 133,432,804,004 | - | 133,432,804,004 |
| பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள் | 21 | - | 27,920,326,465 | - | 27,920,326,465 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள் | 22 | - | - | 4,176,342,999 | 4,176,342,999 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 27 | | 1,285,360,602 | - | 1,285,360,602 |
| மொத்த நிதிச் சொத்துக்கள் | | 115,600 | 168,538,942,658 | 4,176,342,999 | 172,715,401,258 |

B. வங்கி - கடந்த வருடம் (2018)

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | இலதாக்கப்பட்ட செலவு | மொத்தம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 28 | 11,098,334,822 | 11,098,334,822 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 29 | 141,559,973,557 | 141,559,973,557 |
| வழங்கப்பட்ட கடன்பத்திரம் மற்றும் ஏனைய பெறப்பட்ட நிதிகள் | 30 | 4,707,852,534 | 4,707,852,534 |
| ஏனைய பொறுப்புகள் | 32 | 1,797,328,111 | 1,797,328,111 |
| மொத்த நிதிப் பொறுப்புக்கள் | | 159,163,489,025 | 159,163,489,025 |

## 17. காசு மற்றும் காசுக்குச் சமமானவை

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கையிலுள்ள காசு | **627,224,228** | 539,995,648 |
| ஏனைய வங்கி மீதிகள் | **2,122,962,990** | 149,188,488 |
| மொத்தம் | **2,750,187,219** | 689,184,136 |

## 18. வங்கிகளிலுள்ள வைப்புகள்

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நிதிச் சந்தை வைப்புகள் | **9,798,274,942** | 6,496,692,932 |
| கழி: எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (குறிப்பு 18.1) | **(32,450)** | (64,879) |
| மொத்தம் | **9,798,242,492** | 6,496,628,053 |

### 18.1 கடன் இடருக்கான வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளுடனான வைப்புகளின் பகுப்பாய்வு

| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிதிச் சந்தை வைப்புகள் | **9,798,274,942** | **-** | **-** | **9,798,274,942** |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (18.2) | **(32,450)** | **-** | **-** | **(32,450)** |
| | **9,798,242,492** | **-** | **-** | **9,798,242,492** |

| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிதிச் சந்தை வாய்ப்புகள் | 6,496,692,932 | - | - | 6,496,692,932 |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (18.2) | (64,879) | - | - | (64,879) |
| | 6,496,628,053 | - | - | 6,496,628,053 |

18.2 எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டத்திற்கான வலுக்குறைப்பு - வங்கிகளுடனான வைப்புகள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | **64,879** | 77,532 |
| வருடத்திற்கான தேறிய சுழற்சி (குறிப்பு 10) | **(32,429)** | (12,653) |
| | **32,450** | 64,879 |

## 19. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்

| | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுச் செலவு<br>ரூபா | சந்தைப் பெறுமதி<br>ரூபா | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுச் செலவு<br>ரூபா | சந்தைப் பெறுமதி<br>ரூபா |
| பீப்பிள்ஸ் மேச்சன்ட் வங்கி பிஎல்சி | **600** | **6,600** | **6,000** | 600 | 12,000 | 6,600 |
| செலான் அபிவிருத்தி பிஎல்சி | **10,000** | **109,000** | **117,000** | 10,000 | 150,000 | 109,000 |
| | **10,600** | **115,600** | **123,000** | 10,600 | 162,000 | 115,600 |

19.1 இவ்வருடத்தின் போதான நகர்வு

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | **115,600** | 146,500 |
| இவ்வருடத்தின் போது நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் | **7,400** | (30,900) |
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | **123,000** | 115,600 |

## 20. ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து வரவேண்டிய கடன்களும் ஏனைய பெறுகைகளும்

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| மொத்தக் கடன்கள் மற்றும் வருமதிகள் | **144,693,550,841** | 137,769,683,363 |
| (கழி:) பூச்சிய விகித கடன் நியாயப் பெறுமதி சீராக்கம் | **-** | (8,596,304) |
| | **144,693,550,841** | 137,761,087,059 |
| (கழி:) ஊழியர் கடன் நியாயப் பெறுமதி சீராக்கம் | **(820,595,233)** | (830,165,393) |
| | **143,872,955,608** | 136,930,921,667 |
| (கழி:) கூட்டு வலுக்குறைப்புக் கட்டணங்கள் (குறிப்ப 20.2) | **(6,024,186,378)** | (3,179,680,359) |
| (கழி:) தனிப்பட்ட வலுக்குறைப்புக் கட்டணங்கள் (குறிப்ப 20.2) | **(1,643,127,789)** | (318,437,304) |
| ஏனைய வாடிக்கையாளரிடம் இருந்து வரவேண்டிய தேறிய கடன்களும் பெறுகைகளும் | **136,205,641,441** | 133,432,804,004 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 20.1 பகுப்பாய்வு

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| தயாரிப்பு வாரியாக | | |
| அடகு | 13,746,633,225 | 11,454,807,949 |
| ஊழியர் கடன்கள் | 3,560,904,130 | 3,478,770,159 |
| குறுங் கால | 10,200,684,495 | 9,181,224,723 |
| நீண்ட கால | 117,185,328,990 | 113,654,880,532 |
| மொத்தம் | 144,693,550,841 | 137,769,683,363 |
| நாணய வாரியாக | | |
| இலங்கை ரூபா | 144,693,550,841 | 137,769,683,363 |
| மொத்தம் | 144,693,550,841 | 137,769,683,363 |
| கைத்தொழில் வாரியாக | | |
| விவாயம் மற்றும் மீன்பிடி | 29,289,222,632 | 36,860,350,948 |
| உற்பத்தி | 22,724,128,191 | 22,906,922,131 |
| போக்குவரத்து | 165,435,909 | 244,473,642 |
| நிர்மாணம் / வீடமைப்பு | 23,617,507,238 | 28,086,234,943 |
| வியாபாரிகள் | 24,260,590,030 | 22,819,454,960 |
| ஏனைய (நுகர்வுகள்/வைப்புக்கு எதிரான/ஊழியர்/சுற்றுலா) | 44,636,666,841 | 26,852,246,739 |
| மொத்தம் | 144,693,550,841 | 137,769,683,363 |

## 20.2 கடன் நட்டங்களுக்கான வலுக் குறைப்பு - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான /வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் வரவுகள்

| | தனிப்பட்ட | கூட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு (SLFRS 9) | | | |
| இலாபம் அல்லது நட்டத்திற்கான தேறிய கட்டணம் | 173,823,262 | 1,790,452,774 | 1,964,276,036 |
| 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு SLFRS 9 இன் ஏற்புகை காரணமாக ஏற்பட்ட தாக்கம் | - | 124,902,103 | 124,902,103 |
| 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி (SLFRS 9) | 173,823,262 | 1,915,354,877 | 2,089,178,139 |
| இலாபம் அல்லது நட்டத்திற்கான தேறிய கட்டணம் | 144,614,042 | 1,265,040,780 | 1,409,654,822 |
| காலப்பகுதியின் போதான பதிவழிக்கப்பட்ட தொகை | - | (860,361) | (860,361) |
| ஏனைய நகர்வுகள் | - | 145,063 | 145,063 |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 318,437,304 | 3,179,680,360 | 3,498,117,664 |
| இலாபம் அல்லது நட்டத்திற்கான தேறிய கட்டணம் | 1,324,690,485 | 1,076,946,691 | 2,401,637,175 |
| ஏனைய நகர்வுகள் / பதிவழிக்கப்பட்ட | - | (33,815,719) | (33,815,719) |
| 01.04.2019 இல் LDB இணைப்பின் மீதான மீதிகள் | - | 1,801,375,047 | 1,801,375,047 |
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 1,643,127,789 | 6,024,186,378 | 7,667,314,167 |

### 20.3 கடன் இடருக்கான வெளிப்பாட்டை அடிப்படையாக கொண்ட எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு நகர்வு

எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான அடிப்படையான கடன்களின் மீது மேற்கொள்ளப்பட்ட மேலதிகப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2019 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 1,016,251,838 | 928,793,193 | 1,553,072,633 | 3,498,117,664 |
| ஏனைய நகர்வுகள் / பதிவழிக்கப்பட்ட | - | - | (33,815,719) | (33,815,719) |
| 01.04.2019 இல் LDB யுடன் இணைக்கப்பட்ட போது மீதி | - | - | 1,801,375,047 | 1,801,375,047 |
| இலாபம் அல்லது நட்டத்திற்கான தேறிய கட்டணம் | 532,168,933 | 399,311,287 | 1,470,156,955 | 2,401,637,175 |
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 1,548,420,771 | 1,328,104,480 | 4,790,788,916 | 7,667,314,167 |

| | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | Total |
|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 734,045,039 | 1,029,494,477 | 843,681,100 | 2,607,220,617 |
| காலப்பகுதியின் போது பதிவழிக்கப்பட்ட தொகை | - | - | (860,361) | (860,361) |
| ஏனைய நகர்வுகள் | - | - | 145,063 | 145,063 |
| இலாபம் அல்லது நட்டத்திற்கான தேறிய கட்டணம் | 282,206,799 | (100,701,284) | 710,106,830 | 891,612,344 |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 1,016,251,838 | 928,793,193 | 1,553,072,633 | 3,498,117,664 |

### 20.4 கடன் இடருக்கான வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து பெற வேண்டிய கடன்கள் மற்றும் வரவுகள் மீதான பகுப்பாய்வு

| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| தனிப்பட்ட ரீதியிலான வலுக்குறைப்புக் கடன்கள் | - | - | 2,167,069,767 | 2,167,069,767 |
| கூட்டு வலுக்குறைப்புக்கு உட்பட்ட கடன்கள் | | | | |
| ஏனைய தவணைக் கடன் | 2,244,069,768 | 163,572,465 | 150,428,444 | 2,558,070,676 |
| கைத்தொழில் தவணைக் கடன் | 8,648,858,829 | 4,781,267,666 | 2,263,175,309 | 15,693,301,803 |
| வர்த்தகத் தவணைக் கடன் | 13,170,138,143 | 5,630,911,781 | 2,679,471,299 | 21,480,521,223 |
| விவசாய தவணைக் கடன் | 13,484,326,089 | 4,260,136,830 | 1,982,276,556 | 19,726,739,475 |
| வீடமைப்பு தவணைக் கடன் | 29,413,240,500 | 5,202,725,506 | 3,081,110,334 | 37,697,076,341 |
| மீள் நிதியாக்கல் | 13,449,431,399 | 5,479,756,564 | 1,460,699,739 | 20,389,887,703 |
| லிய சுர | 176,702 | 241,926 | 44,670,618 | 45,089,246 |
| அடகு | 12,994,119,322 | 613,994,426 | 36,323,732 | 13,644,437,480 |
| குத்தகை | 614,413,902 | 125,161,486 | 149,258,704 | 888,834,092 |
| ஊழியர் கடன் | 3,699,555,923 | - | - | 3,699,555,923 |
| வைப்புகளுக்கு எதிரான கடன் | 6,564,153,380 | - | - | 6,564,153,380 |
| சிறிய மற்றும் நடுத்தர (SME) | - | - | 138,813,731 | 138,813,731 |
| ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தக் கடன்களும் பெறுகைகளும் | 104,282,483,958 | 26,257,768,650 | 14,153,298,234 | 144,693,550,841 |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (20.3) | (1,548,420,771) | (1,328,104,480) | (4,790,788,916) | (7,667,314,167) |
| ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து வரவேண்டிய தேறிய கடன்களும் வருமதிகளும் (பூச்சிய விகிதமாக்கப்பட்ட கடன்களுக்கு முன்னரான மற்றும் ஊழியர் கடன் சீராக்கங்கள் | 102,734,063,186 | 24,929,664,170 | 9,362,509,318 | 137,026,236,674 |

| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| தனிப்பட்ட ரீதியிலான வலுக்குறைப்புக் கடன்கள் | - | - | 1,098,887,753 | 1,098,887,753 |
| கூட்டு வலுக்குறைப்புக்கு உட்பட்ட கடன்கள் | | | | |
| ஏனைய தவணைக் கடன் | 2,599,981,983 | 183,427,854 | 75,641,719 | 2,859,051,556 |
| கைத்தொழில் தவணைக் கடன் | 10,178,305,534 | 4,645,631,063 | 1,017,755,408 | 15,841,692,004 |
| வர்த்தகத் தவணைக் கடன் | 13,095,235,907 | 5,305,816,655 | 1,370,300,662 | 19,771,353,224 |
| விவசாய தவணைக் கடன் | 14,101,252,990 | 3,590,833,248 | 885,285,221 | 18,577,371,459 |
| வீடமைப்பு தவணைக் கடன் | 31,230,665,579 | 4,699,457,789 | 1,584,128,691 | 37,514,252,058 |
| மீள் நிதியாக்கல் | 13,247,616,246 | 6,570,833,704 | 1,483,099,007 | 21,301,548,956 |
| லிய சுர | 38,792,404 | 12,713,935 | 50,885,732 | 102,392,072 |
| அடகு | 10,640,356,600 | 701,464,586 | 39,613,861 | 11,381,435,047 |
| ஊழியர் கடன் | 3,533,757,648 | - | - | 3,533,757,648 |
| வைப்புகளுக்கு எதிரான கடன் | 5,787,941,585 | - | - | 5,787,941,585 |
| ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தக் கடன்களும் வருமதிகளும் | 104,453,906,475 | 25,710,178,835 | 7,605,598,053 | 137,769,683,363 |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (20.3) | (1,016,251,838) | (928,793,193) | (1,553,072,633) | (3,498,117,664) |
| ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து வரவேண்டிய தேறிய கடன்களும் வருமதிகளும் (பூச்சிய விகிதமாக்கப்பட்ட கடன்களுக்கு முன்னரான மற்றும் ஊழியர் கடன் சீராக்கங்கள் | 103,437,654,637 | 24,781,385,642 | 6,052,525,420 | 134,271,565,699 |

## 21. பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| தொகுதிக் கடன்கள் - மதிப்பிடப்பட்ட (குறிப்பு 21.1) | **516,934,932** | 516,934,932 |
| அரசாங்க கடன் பிணையங்கள் - திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | **2,663,205,000** | 2,675,175,000 |
| நிலையான வைப்புகளில் முதலீடு (குறிப்பு 21.2) | **42,492,391,559** | 24,729,332,669 |
| உப மொத்தம் | **45,672,531,491** | 27,921,442,601 |
| கழி: எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு - தொகுதிக்கடன் (குறிப்பு 21.1.1) | **(10,020)** | (8,820) |
| கழி: எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு - நிலையான வைப்புகள் (குறிப்பு 21.2.1) | **(7,776,071)** | (1,107,316) |
| மொத்தம் | **45,664,745,400** | 27,920,326,465 |

### 21.1 தொகுதிக்கடன்கள் - மதிப்பிடப்பட்ட

| | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகுதிக் கடன்களின் எண்ணிக்கை | முதலீட்டுச் செலவு | பதிவழிப்புச் செலவு | தொகுதிக் கடன்களின் எண்ணிக்கை | முதலீட்டுச் செலவு | பதிவழிப்புச் செலவு |
| | | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| கொமர்ஷியல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி | **5,000,000** | **500,000,000** | **516,934,932** | 5,000,000 | 500,000,000 | 516,934,932 |
| மொத்தம் | **5,000,000** | **500,000,000** | **516,934,932** | 5,000,000 | 500,000,000 | 516,934,932 |

21.1.1 கடன் இடருக்கான வெளிப்பாட்டின் அடிப்படையில் தொகுதிக்கடன்களின் பகுப்பாய்வு

| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொகுதிக்கடன்கள் - மதிப்பிடப்பட்ட | **516,934,932** | **-** | **-** | **516,934,932** |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (21.1.2) | **(10,020)** | **-** | **-** | **(10,020)** |
| | **516,924,912** | **-** | **-** | **516,924,912** |

| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொகுதிக்கடன்கள் - மதிப்பிடப்பட்ட | 516,934,932 | - | - | 516,934,932 |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (21.1.2) | (8,820) | - | - | (8,820) |
| | 516,926,112 | - | - | 516,926,112 |

21.1.2 எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு - மதிப்பிடப்பட்ட தொகுதிக்கடன்கள்

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி | **8,820** | 11,660 |
| வருடத்திற்கான தேறிய (சுழற்சி) கட்டணம் | **1,200** | (2,840) |
| | **10,020** | 8,820 |

## 21.2 நிலையான வைப்புகளில் முதலீடு

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| மூன்று மாதங்களுக்குக் குறைந்த நிலையான வைப்புகள் | **22,571,266,384** | 2,520,602,739 |
| மூன்று மாதங்களுக்குக் கூடிய நிலையான வைப்புகள் | **19,921,125,175** | 22,208,729,930 |
| மொத்தம் | **42,492,391,559** | 24,729,332,669 |

21.2.1 கடன் இடருக்கான வெளிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட நிலையான வைப்புகளில் உள்ள முதலீடு பற்றிய பகுப்பாய்வு

| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகளில் முதலீடு | **42,492,391,559** | **-** | **-** | **42,492,391,559** |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (குறிப்பு 21.2.2) | **(7,776,071)** | **-** | **-** | **(7,776,071)** |
| | **42,484,615,488** | **-** | **-** | **42,484,615,488** |

| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகளில் முதலீடு | 24,729,332,669 | - | - | 24,729,332,669 |
| எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு (குறிப்பு 21.2.2) | (1,107,316) | - | - | (1,107,316) |
| | 24,728,225,353 | - | - | 24,728,225,353 |

21.2.2 எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான வலுக்குறைப்பு - நிலையான வைப்புகளில் முதலீடு

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி | **1,107,316** | 1,449,503 |
| வருடத்திற்கான தேறிய (சுழற்சி) கட்டணம் | **6,668,755** | (342,187) |
| | **7,776,071** | 1,107,316 |

